# அபத்தம்

ஐப்பசி 2023 10

## சாத்தானின் வேதங்கள்

satanic Verses



## இலக்கியமும் அறமும்

# சாத்தானின் வேதங்கள்:

## Satanic Verses

## இலக்கியமும் அறமும்

இம்முறை வெனிஸ் திரைப்பட விழா பெரும் சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருந்தது. பாலியல் முறைகேடுகள் குறித்து குற்றம் சாட்டப்பட்ட இயக்குனர்களான Woody Allen, Roman Polanski, Luc Besson ஆகிய மூன்று பேருடைய படங்களும் திரையிடப்பட்டிருந்தமை குறித்து ஆர்ப்பாட்டங்கள் கூட நடைபெற்றிருக்கின்றன.

இதில் வூடி அலன் தன்னுடன் வாழ்ந்த காதலியான Mia Farrow தத்தெடுத்து வளர்த்த, மிகவும் வயது குறைந்த, கொரிய வம்சாவளி மகளோடு உறவு வைத்து, அவரைத் தற்போது திருமணம் செய்து அவருடன் வாழ்கிறார். ஜோடி பிள்ளைகளுடன் குடும்பமாக வெனிஸில் செங்கம்பள வரவேற்புப் பெற்றது.

மியாவின் இன்னொரு தத்தெடுத்த மகளை ஏழு வயதில் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் வூடி நீதிமன்றத்தினால் நிரபராதியாக விடுவிக்கப்பட்டிருந்தார்.

‘சில நேரம் பிராங் சினாட்ராவுக்குப் பிறந்திருக்கக் கூடியவர்’ என்று மியா பரோ சொன்ன மகன் றோனான் பரோ தான், எவராலும் நெருங்க முடியாமல் இருந்த, ஹார்வி வைன்ஸ்டைன் என்ற நிர்வாணச் சக்கரவர்த்தியின் சாம்ராஜ்யத்தை, நியூ யோர்க்கர் சஞ்சிகையில் வெளியில் கொண்டு வந்து தகர்த்தவர்.

போலன்ஸ்கி வயது குறைந்த பதின்ம வயதுப் பெண்ணோடு உறவு வைத்துக் கொண்டார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்காவில் குற்றவாளியாகக் காணப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட முன்னால் தப்பியோடியவர்.

பிரெஞ்சு இயக்குநரான லுக் பெசோ தன் படத்தில் நடித்த நடிகை ஒருவரால் வல்லுறவுக் குற்றம் சாட்டப்பட்டு, நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டவர். பின்னர் வேறு சில பெண்களும் இவரது பாலியல் முறைகேடுகள் பற்றி பகிரங்கமாக குற்றம் சுமத்தியிருந்தனர்.

இன்றைய #MeToo யுகத்தில், படைப்பாளிகளின் ஒழுக்கமும் அறமும் குறித்த கேள்விகள் முன்னெப்போதும் இல்லாமல் தற்போதைய காலங்களில் அடிக்கடி ஓங்கிய குரல்களில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

Judge the art, not the artist என்று ஒரு புறமும், படைப்பாளிக்கு அறம் இருக்க வேண்டும், அறத்தை மீறுகின்ற படைப்பாளிகள் சமூகத்தில் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற வாதம் ஒரு புறமுமாக தற்போது பொதுவெளியில் பலத்த விவாதங்கள் முன்நடத்தப்படுகின்றன.

படைப்புகளுடன் படைப்பாளிகளின் நடத்தைகளையும் வாழ்வையும் இணைத்துப் பார்ப்பது முற்காலங்களில் இருந்திருக்கக் கூடுமோ யாருக்குத் தெரியும்? அதற்கான வரலாறுகள் எங்களுக்கு இல்லை. அவர்களின் படைப்புகள் தான் மிஞ்சியிருக்கின்றன. படைப்புகள் பற்றிய விமர்சனங்கள் பதிவாக்கப்பட்டிருந்ததாகக் கூட பரவலாக அறியப்பட்டதும் இல்லை.

ஒருபுறத்தில் அரச மான்ய புண்ணியத்தில் முழுநேர இலக்கியக் குடிசைக் கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டு இருந்த படைப்பாளிகளும், மறுபுறத்தில் பொதுமக்களான நுகர்வோரும் இருந்து, எதற்காக அனாவசியமான இந்த இடைத்தரகர்கள் என்று சமூகமே விமர்சகர்களைத் தவிர்த்திருந்திருக்கலாம்.

அல்லது,'சங்கத்தின் அங்கத்தவர்களே' இன்றைய இலக்கிய முகாம் கும்பலின் அதே மனோபாவத்துடன், எவரையும் விமர்சனத்திற்கு உள்ளாக்காது, ஆளுக்காள் முதுகு சொறிந்து பரஸ்பர விருது கொடுக்கிற, அல்லது ஒன்றாகவே மன்னனுக்கு கோரஸ் பாடி பொற்கிழி வாங்குகிற, ஒட்டுமொத்த கூட்டுக்களவாணி அயோக்கியர் களாகவும் இருந்திருக்கலாம்.

கடவுளே சாம்பலாக்கிய பின்னால், எந்த நக்கீரனுக்குத் தான் விமர்சனம் செய்ய தில் இருந்திருக்கும்?

தலை கொய்யப்பட்ட பின்னால், இளவரசிக்கு 'உட்பெட்டிக்' கடலை போட எந்த அம்பிகாபதி தான் முயன்றிருப்பான்?

எங்காவது ஒரு காளமேகம் ஊரோடி ஒத்தோடிப் பிழைப்பு நடத்தாமல், அனாவசியமாகத் தன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருந்திருக்கக் கூடும்.

என்னைப் போல!

இப்படி விமர்சனம் என்பதே அனாவசியமான காலத்தில், படைப்பாளிகளின் சொந்த வாழ்க்கையின் அறம் பற்றி யார் கருத்துத் தெரிவித்திருக்க முடியும்?

> **கிரேக்க தத்துவவியலாளர்களும், இத்தாலிய சிற்ப, ஓவியக் கலைஞர்களும் இன்றைய அளவீடுகளின்படி, சிறுவர் மீதான பாலியல் குற்றங்களுக்காக உள்ளே தள்ளப்பட்டு, கொலைக் குற்றம் சாட்டப்பட்டு உள்ளே இருக்கும் மற்றக் குற்றவாளிகளால் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடியவர்கள்.**

கிரேக்க தத்துவவியலாளர்களும், இத்தாலிய சிற்ப, ஓவியக் கலைஞர்களும் இன்றைய அளவீடுகளின்படி, சிறுவர் மீதான பாலியல் குற்றங்களுக்காக உள்ளே தள்ளப்பட்டு, கொலைக் குற்றம் சாட்டப்பட்டு உள்ளே இருக்கும் மற்றக் குற்றவாளிகளால் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடியவர்கள்.

ஆனால், அன்றைய வாழ்க்கை முறையும், சமூகத்தின் அறம் பற்றிய சிந்தனைகளும் வேறாக இருந்தன. இந்தச் சமூகங்களில் அந்தக் காலங்களில் வயதானவர்கள் சிறுவர்களை பாலியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக நடைமுறையாகத் தான் இருந்தது. சிறுவர்களுக்குக் கூட அது ஒரு 'சிறுவன் என்பதிலிருந்து வளர்ந்தவன்' என்பதற்கான coming of age நிகழ்வாகத் தான் அந்தச் சமூகங்களில் பார்க்கப்பட்டிருந்தது.



facebook: George RC

கால மாற்றம் ஏற்படுத்திய சிந்தனை மாற்றங்களால் அந்த நாடுகளில் இன்றைக்கு இவை எல்லாம் குற்றங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன.

இருந்தாலும், இன்றைக்கும் ஆப்கானிஸ்தான் உட்பட்ட இஸ்லாமிய நாடுகளில் இத்தனை பகிரங்கத் தண்டனைகள் இருந்தும், இந்த சிறுவர் துஷ்பிரயோக நடைமுறைகள் வழக்கத்தில் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

எங்களுடைய காப்பியங்களையும், காவியங்களையும் தந்தவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அறநெறிகளோடு தான் வாழ்ந்தார்களா என்பது எங்களுக்குத் தெரியாது.

அவர்கள் ஏகபத்தினி விரதர்கள், அவர்களுடைய தர்மபத்தினிகள் அவர்களைத் தொழுது வணங்கினார்கள் என்ற கதை கட்டல் ஐதீகங்கள் தவிர, எங்களுக்கு எந்த

**படைப்பாளிகளுக்கு தங்களின் படைப்புகளால் கிடைக்கும் பிரபலம், தலையை வீங்க வைத்து, அவர்களுக்கு எப்போதும் ஒரு sense of entitlement ஐ கொடுத்துக் கொண்டே இருக்கும்.**

**அதிலும் ஆண் படைப்பாளிகளுக்கு எதிர்பாலார் ரசிகர்களாக இருந்து விட்டால், அது கேட்கவும் தேவையில்லை.**

**ரசிகைகள், with questionable talent and self-esteem, ஐ, கவிஞையாக ஆக்கி விடுகிறேன் என்று உறுதி வழங்கி, படுக்கை வரைக்கும் அழைக்கலாம், மறுத்தால் கையைப் பிடித்து இழுக்கலாம், வாழ்வை அழித்து விடுவதாக மிரட்டலாம், துண்டை அவிழ்த்து காட்டலாம் என்ற சிந்தனை வரைக்கும் அந்த sense of entitlement கொடுக்கிறது.**

**பழுத்து கொட்டை விழுந்த... சே.. பழம் தின்று கொட்டை போட்ட 'மூத்த' படைப்பாளிகளுக்கும், முற்போக்குக் கவிஞர்களுக்கும், குட்டித் தோழிகளுக்குக் காலை வணக்கமும், 'வளரும்' எழுத்தாளினிகளிடம் தங்கள் படைப்புகள் பற்றி விமர்சனம் கேட்கவும், உட்பெட்டிகளுக்குள் ஜொள்ளு விடத் தோன்றுகிறது.**

**போதாக்குறைக்கு, ஆண், பெண் பேதமோ, எண்ணிக்கையோ பிரச்சனையாகவும் இல்லாமல்!**

*பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களும் இல்லை.*

*எங்களுடைய கஷ்ட காலம். யூடியூப் எங்கள் காலத்தில் தான் வர முடிந்திருக்கிறது.*

*இல்லாவிட்டால், 'காட்டில் பூப் பறிக்கச் சென்ற பெண்ணுக்கு வள்ளுவர் செய்த காரியத்தைப் பார்த்தீர்களா?' வைப் பார்த்து நாங்களும் கிளுகிளுத்திருக்கலாம்.*

*அப்படி ஒன்றும் நாங்கள் எதிர்பார்த்த மாதிரி இருந்திருக்காது. உயரத்தில் இருந்த பூவை மரத்தில் ஏறிப் பிடுங்கிக் கொடுத்திருப்பார். அவ்வளவு தான்.*

*விட்டால், அந்தக் காலத்துச் சாருவோ, சாருவின் பிரதம சீடனோ, மரத்தில் ஏறிய வள்ளுவரின் 'காணாததைக் கண்டு உடம்பு நூலானது' பற்றி, பற்றி ஒரு erotic நாவல் கூட எழுதியிருக்க முடியும்.*

*எல்லாச் சமூகங்களிலும் அந்தச் சமூகங்கள் கொண்டிருக்கும் அற நெறிகளை மீறுகின்ற மனிதர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். வெறுமனே அறங்களைப் போதித்து விடுவதாலோ, அந்த அறங்களைப் போதிக்கும் மதங்களை ஏற்றுக் கொள்வதாலோ ஒரு சமூகம் அந்த அறங்களின்படி ஒழுகுவதில்லை.*

*அவ்வாறு ஒழுகுவதாயிருந்தால், சட்டங்களும், சட்ட அமுலாக்கலும், நீதிமன்றங்களும், சிறைச் சாலைகளும் தேவைப்பட்டிருக்காது.*

*சட்டங்களையும் ஒழுங்குகளையும் மீறுகின்றவர்களால் சமூகத்திற்கு ஏற்படக்கூடியபாதிப்புகளைத்தடுக்க, அவற்றை நிலை நாட்டுவதற்கான இந்தக் கட்டமைப்புகள் தேவைப்படுகின்றன.*

*எல்லா சமூகங்களுக்கும் அறநெறிகள் இருப்பது போலவே, அவற்றை மீறுகின்ற குற்றங்களும் எந்த ஒரு சமூகத்திலும் சாதாரணமான நடைமுறைகளே.*

*அந்த அறநெறிகளும் காலப் போக்கில் மாற்றங்களைக் கொண்டிருப்பவையே. சில தசாப்தங்களுக்கு முன்னர் மேற்குலகில் குற்றமாகக் கருதப்பட்ட ஒரு பால் உறவு, தற்போது அங்கீகரிக்கப் பட்டிருப்பதும் அவ்வாறே.*

*விதிகளையும் சட்டங்களையும் மீறுவதைப் பெருமையாகவும், தனது புத்திசாலித்தனத்தை உறுதிப்படுத்துவதாகவும் நினைக்கும் யாழ்ப்பாணிச் சமூகம் போன்ற ஒரு சுயநலச் சமூகம், சமூக நீதி சார்ந்த அறநெறிகளைக் கொண்டிருப்பதில்லை.*

*ஆனால், அவ்வாறான ஒரு பாசாங்குத் தனமான போலிச் சமூகம் தான் தன்னுடைய அறநெறிகள் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ளும்.*

*இன்றைக்கு உலகில் பரவி வரும் மதவெறி கொலைவெறியாக இருப்பதன் அடிப்படைக் காரணமே, அவற்றைப் பின்பற்றுவோர் தங்களுக்கு இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் அறநெறிகள் தான். அந்த அறநெறிகள் கொலைகளைக் கூட நியாயப்படுத்துகின்றன.*

*ஒரு சாதாரண மக்கள் தொகுதியிலேயே இவ்வாறானதொரு பாசாங்குத் தனம் (hypocrisy) இருக்கும்போது, சிந்திப்பவர்களாக தங்களை நினைத்துக் கொள்வதால், தங்களை மேலானவர்களாக நினைக்கும் படைப்பாளிகளுக்கு அந்த இயல்பு இல்லாமலா போய் விடும்?*

*படைப்பாளிகளுக்கு தங்களின் படைப்புகளால் கிடைக்கும் பிரபலம், தலையை வீங்க வைத்து, அவர்களுக்கு எப்போதும் ஒரு sense of entitlement ஐ கொடுத்துக் கொண்டே இருக்கும். அதிலும் ஆண் படைப்பாளிகளுக்கு எதிர்பாலார் ரசிகர்களாக இருந்து விட்டால், அது*

கேட்கவும் தேவையில்லை.

ரசிகைகள், with questionable talent and self-esteem, ஐ, கவிஞையாக ஆக்கி விடுகிறேன் என்று உறுதி வழங்கி, படுக்கை வரைக்கும் அழைக்கலாம், மறுத்தால் கையைப் பிடித்து இழுக்கலாம், வாழ்வை அழித்து விடுவதாக மிரட்டலாம், துண்டை அவிழ்த்து காட்டலாம் என்ற சிந்தனை வரைக்கும் அந்த sense of entitlement கொடுக்கிறது.

பழுத்து கொட்டை விழுந்த... சே.. பழம் தின்று கொட்டை போட்ட 'மூத்த' படைப்பாளிகளுக்கும், முற்போக்குக் கவிஞர்களுக்கும், குட்டித் தோழிகளுகக்குக் காலை வணக்கமும், 'வளரும்' எழுத்தாளினிகளிடம் தங்கள் படைப்புகள் பற்றி விமர்சனம் கேட்கவும், உட்பெட்டிகளுக்குள் ஜொள்ளு விடத் தோன்றுகிறது.

போதாக்குறைக்கு, ஆண், பெண் பேதமோ, எண்ணிக்கையோ பிரச்சனையாகவும் இல்லாமல்!

சிந்திப்பதாலோ, படைப்புகள் மூலமாக பிரபலம் ஆகி விடுவதாலோ இவர்கள் எல்லாம் பண்புகளிலோ, அறங்களிலோ மேலானவர்களாகி விடுகிறார்களா?
ஆணும் பெண்ணும் காதலர் தினம் கொண்டாடினால், கொலை வெறிக்குள்ளாகும் சமூகங்களிலிருந்து வந்தவர்கள் நாங்கள்.

திருமணம் முடிந்த தம்பதிகளே கைகளைப் பற்றிக் கொண்டு நடப்பதைப் பண்பாட்டுச் சீரழிவாகக் கருதும் சமூகங்கள் இவை.

அடுத்தவர் வாழ்வுக்குள் மூக்கை நுழைப்பதே, 'மற்றவே என்ன நினைப்பினம்?' என்று தன்னுடைய வாழ்வை மற்றவர்களுக்காக பாசாங்கு ஆக்குவதிலிருந்து தான் ஆரம்பிக்கிறது. இப்போது மேலதிகமாக, குரானில் தொடங்கி மனுதர்மம் வரைக்கும் (அவற்றின் காவலர்கள்!) மூக்கை நுழைக்கத் தொடங்கியிருக்கின்றன(ர்).

**மேற்குலகில் பால் உறவு பற்றிய திறந்த தன்மை இவை பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ள இடம் அளிப்பதில்லை. இரு வயதானவர்களுக்கு இடையிலான மனம் சம்மதித்த உறவுகளில் (ஊழளநெயெட ளநஒ) அடுத்தவர்கள் மூக்கை நுழைப்பதில்லை.**

**அவை நியூ யோர்க் போஸ்டின் ஆறாம் பக்கத்திலோ, பீப்பிள் சஞ்சிகையில் பாப்பராஸிகளால் படம் பிடிக்கப்பட்டு அட்டைப்படமாகவோ வருவதேயன்றி, சம்பந்தப் பட்டவர்களுக்கு அறநெறிகள் பற்றி யாரும் வகுப்பு எடுப்பதில்லை.**

**இதனால், இங்கே சினிமா, இசையுலகப் பிரபலங்கள் தவிர்த்து, இலக்கியப் படைப்பாளிகளின் தனிப்பட்ட வாழ்வு பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. பிரபலங்கள் பற்றிய கிசுகிசுக்களாக, அது குறித்து ஆர்வம் காட்டுவோரால் அக்கறை காட்டப்பட்டது அன்றி, பெரும் சர்ச்சைகளாக இழுபட்டதில்லை.**

மேற்குலகில் பால் உறவு பற்றிய திறந்த தன்மை இவை பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ள இடம் அளிப்பதில்லை. இரு வயதானவர்களுக்கு இடையிலான மனம் சம்மதித்த உறவுகளில் (Consenual sex) அடுத்தவர்கள் மூக்கை நுழைப்பதில்லை.

அவை நியூ யோர்க் போஸ்டின் ஆறாம் பக்கத்திலோ, பீப்பிள் சஞ்சிகையில் பாப்பராஸிகளால் படம் பிடிக்கப்பட்டு அட்டைப்படமாகவோ வருவதேயன்றி, சம்பந்தப் பட்டவர்களுக்கு அறநெறிகள் பற்றி யாரும் வகுப்பு எடுப்பதில்லை.

இதனால், இங்கே சினிமா, இசையுலகப் பிரபலங்கள் தவிர்த்து, இலக்கியப் படைப்பாளிகளின் தனிப்பட்ட வாழ்வு பற்றி யாரும் அலட்டிக் கொள்வதில்லை. பிரபலங்கள் பற்றிய கிசுகிசுக்களாக, அது குறித்து ஆர்வம் காட்டுவோரால் அக்கறை காட்டப்பட்டது அன்றி, பெரும் சர்ச்சைகளாக இழுபட்டதில்லை.

சல்மான் ருஷ்டிக்கும் தமிழ் பாரம்பரியம் கொண்ட பத்மா லட்சுமிக்குமான உறவின் தன்மைகள் குறித்து, பத்மா லட்சுமி பேட்டிகளில் சொல்லும் வரைக்கும் வெளியில் பெரிதாக தெரிந்ததில்லை.

நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்ட பின்னால், தனக்கு கிடைக்கவில்லையே என்று ருஷ்டி புலம்புவது பற்றியும், தான் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்த போது, தன்னை தனியே விட்டு, The show must go on என்று எந்த உணர்ச்சியும் இல்லாமல் வெளியே போனது பற்றியும் லட்சுமி எழுதியிருந்தார்.

மனிதம் மறந்த அயோக்கியத்தனம் தமிழ் இலக்கியவாதிகளுக்கு மட்டும் உரித்தானது இல்லையே!?

இங்கே, திருமணத்திற்கு அப்பாலான உறவுகளும் வழமையான பரபரப்புகளை ஏற்படுத்தினாலும், அதெல்லாம் பண்பாட்டுக்கு இழுக்கு, இனத்திற்கு அவமானம், மதத்திற்கு ஹராம் என்று சமூகமாக வரிந்து கட்டிக் கொண்டு வருவதில்லை.

ஆனால், இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் பின்னால், பொதுவெளிக்கு வரும்போது, தங்களுக்குள் ஏதோ பிரிக்க முடியாத அன்பு இருப்பதாகக் காட்டிக் கொள்ள, தங்கள் துணைவியரின் கைககளை இறுகப் பிணைத்து வரும் போது எனக்குச் சிரிப்பாக இருக்கும்.

கிளின்டன் தம்பதிகள் கூட இந்த நடிப்புக்கு விதிவிலக்காகவில்லை.

கனடாவின் பிரதமராக இருந்த, தற்போதைய பிரதமரின் தந்தையான பியர் ரூடோ பிரமச்சாரியாக இருந்த காலங்களில் கொண்டிருந்த பெண் தொடர்புகள் பகிரங்க ரகசியம்.

ஆனால், அதை அறநெறியாகக் காரணம் காட்டி, பெரும் scandals ஆக்கி, அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை எல்லாம் இங்கே எழுந்ததில்லை.

அரசியலில் இருந்து ஒதுங்கி, தன் அந்திம காலத்திலும் தன்னிலும் பாதிவயதான பெண்ணுடன் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டபோதும், ஒரு வாரப் பேஸ்புக் பரபரப்பு மாதிரி நாடு கடந்து போனது. அவர் அதை இரகசியமாக வைக்கவும் முயன்றதில்லை.

ரூடோவின் மரணச் சடங்கில் அந்தப் பிள்ளையும் பகிரங்கமாக கலந்து கொண்டதுடன், அங்கு கலந்து கொள்ள வந்த ஜிம்மி கார்ட்டர் அவளை அன்போடு விசாரித்ததும் செய்தியாக வந்திருந்தன.

ஆனால், இத்தனை சுதந்திரங்கள் இருந்தும் வயதுக்குக் குறைவானோருடனும் (underage), அதிகாரத்தில் கீழ்நிலையில் இருப்போருடனும் (people in a position of trust or authority) பாலியல் தொடர்புகளைக் கொண்டிருப்பதை சட்டமும் சமூகமும் அங்கீகரிப்பதில்லை.

இதனால் தான் மேலதிகாரிகள் தங்கள் கீழுள்ளவர்களுடன் தொடர்புகளை வைத்திருப்பதை தனியார் நிறுவனங்கள் கூட அனுமதிப்பதில்லை.

அரசியலில் கூட சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய உறவுகள் பலரும் பதவி விலக வேண்டிய நிர்ப்பந்தங்களைக் கொடுத்திருக்கின்றன.

அறுபதுகளில் இங்கிலாந்தில் பாலியல் தொழிலாளியான கிறிஸ்டின் கீலருடனான தொடர்பு காரணமாக அமைச்சர் புறோபியூமோ பதவி இழக்க நேரிட்டது. எழுபதுகளில் மித்திரன் வாரமலரின் அதுபற்றி வாசித்து, பின்னர் 90களில் Scandal என்ற படமாகக் கூட வெளிவந்து நான் பார்த்திருந்தேன்.

சமீபத்தில் இங்கே ரொறன்ரோ நகர மேயர் தன் கீழ் பணிபுரிந்த பெண் ஒருவருடன் தகாத தொடர்புகள் கொண்டிருந்தார் என்ற விபரம் பத்திரிகையில் வெளிவரப் போவதை அறிந்து தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

(தங்களைச் சமூகத் தலைவர்களாகக் காட்டிக் கொண்டு, கனடிய அரசியல் வாதிகளுடன் தொடர்புகளைப் பேணி, தங்கள் சுயநலன்களை முன்னெடுக்கும் புலிப் பிரமுகர்களில் ஒருவரின் மகளும் அந்த அலுவலகத்தில் பணிபுரிந்ததால், அந்தச் சர்ச்சையில் அவர் தான் சம்பந்தப்பட்டதான தவறான தகவல் கனடா ரமில்ஸ்ஸை ஒரு உலுக்கு உலுக்கியது சம்பந்தமில்லாத ஒரு கொசுறு!)

மேற்குலக சமூகத்தில் பால் சார்ந்த அறநெறிகள் இவ்வாறாகத் தான் பார்க்கப்படுகின்றன.

பண்பாடு, கலாசாரம் பற்றி பாசாங்கு காட்டும் எங்களுடைய சமூகத்தில் பெரும் முரண்நகைகள் எல்லாம் உண்டு.

கற்பொழுக்கம் பேசும் சமூகத்தில் பணமும் அதிகாரமும் கொண்டிருப்போர், மனைவி, துணைவி, இணைவி எல்லாம் வைத்திருக்க முடியும்.

நாக்கைத் தொங்கப் போட்டபடி திரிந்தும், தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்காததால் அடக்கி வாசிக்கும் (அல்லது அது பற்றி வெளியே தெரியாத!) எவரும் அறநெறி, பண்பாடு, கலாசாரம் பற்றி நீதி வழங்கி தண்டிக்க முடியும்.

யாழ்ப்பாணிச் சமூகத்தில் அவதூறு என்பதே பாலியல் முறைகேடு பற்றியதாகத் தான் இருக்கும்.

புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்த தலைவர்கள் பற்றி யாழ்ப்பாணிகள் சொல்லும் முதல் குற்றச்சாட்டே 'பொம்பிளைப் பிரச்சனை' தான். அது உண்மையா, பொய்யா என்பது பற்றி அவர்களுக்குப் பிரச்சனை இருப்பதில்லை.

அந்தப் 'பொம்பிளைப் பிரச்சனை' பற்றி இவர்களுக்கு முன்பு தெரிந்திருந்தாலும் எந்தப் பிரச்சனையாகவும் இல்லாதிருந்திருக்கும்.

அவ்வாறான பிரச்சனை இல்லாதவர்களைக் கூட இப்படியான குற்றச்சாட்டுகள் மூலம் அவதூறு செய்வது என்பதில் இந்தச் சமூகம் எந்தத் தயக்கமும் வெட்கமும்

**இதில் தங்களைப் படைப்பாளிகள் என்று சொல்லிக் கொள்வோர் எந்த விதத்தில் மேலானவர்களாக இருக்கிறார்கள்?**

**இந்த மட்டைகளும் அதே குட்டைகளுக்குள் ஊறித் தானே வந்திருக்கின்றன. அதே பிற்போக்குத் தனமான சிந்தனைகளுக்குள் வளர்ந்து, வளர்ந்த பின்னாலும் வளர்ச்சி அடையாமல், அவற்றைக் கை விட முடியாத நிலையில் தானே இருக்கிறார்கள்.**

**சிந்திப்பவர்களாக தங்களை நினைத்துக் கொள்வதால் தங்களைச் சாதாரண மக்களை விட மேன்மையானவர்களாகவும், உலக இலக்கியம் படிப்பதால் உலகம் தெரிந்தவர்களாகவும், பிரபலமானவர்களாக இருப்பதால் மேலானவர்களாகவும் தங்களைத் தாங்களே நினைத்துக் கொள்வதைத் தவிர, மேற்குலகு போன்று சமூகமோ, ஊடகங்களோ இவர்கள் நினைக்கும் அளவுக்கு இவர்களைப் பெரியவர்களாக நினைப்பதில்லை.**

**ஆனால், தமிழில் இலக்கியவாதிகள் அதிகமாக அடிக்கடி உச்சரிக்கும் சொல்லாக 'அறம்' இருக்கிறது.**

காட்டுவதில்லை.

தமிழ்நாடும் சேர்ந்த தமிழ்ச் சமூகத்தில், எந்தக் கருத்துக்கள், மனிதர்கள் பற்றிய அபிப்பிராயங்களும், சம்பந்தப்பட்டோர் தன்னைச் சார்ந்தவர்களா என்பதிலிருந்தே ஆரம்பிக்கும் அளவுக்கு சுயசாதிப்பற்று ஆழ்மனதில் ஊன்றிக் கிடக்கிறது. அதிலும் வேண்டப்படாதவர் இன்னொரு சாதியினராக இருந்தால், அந்த சாதி வெறியோடு கூடிய வன்மம் எந்த அவதூறையும் ஆதாரங்களின்றி பொதுவெளியில் வைக்க அனுமதிக்கிறது.

இதில் தங்களைப் படைப்பாளிகள் என்று சொல்லிக் கொள்வோர் எந்த விதத்தில் மேலானவர்களாக இருக்கிறார்கள்?

இந்த மட்டைகளும் அதே குட்டைகளுக்குள் ஊறித் தானே வந்திருக்கின்றன. அதே பிற்போக்குத் தனமான சிந்தனைகளுக்குள் வளர்ந்து, வளர்ந்த பின்னாலும் வளர்ச்சி அடையாமல், அவற்றைக் கை விட முடியாத நிலையில் தானே இருக்கிறார்கள்.

சிந்திப்பவர்களாக தங்களை நினைத்துக் கொள்வதால் தங்களைச் சாதாரண மக்களை விட மேன்மையானவர்களாகவும், உலக இலக்கியம் படிப்பதால் உலகம் தெரிந்தவர்களாகவும், பிரபலமானவர்களாக இருப்பதால் மேலானவர்களாகவும் தங்களைத் தாங்களே நினைத்துக் கொள்வதைத் தவிர, மேற்குலகு போன்று சமூகமோ, ஊடகங்களோ இவர்கள் நினைக்கும் அளவுக்கு இவர்களைப் பெரியவர்களாக நினைப்பதில்லை.

ஆனால், தமிழில் இலக்கியவாதிகள் அதிகமாக அடிக்கடி உச்சரிக்கும் சொல்லாக 'அறம்' இருக்கிறது.

அதிலும் குறைந்த பட்சம், தன்னை அங்கீகரிக்கவில்லையே என்று 'அறச்சீற்றம்' அடையாத எந்தப் படைப்பாளியையும் காண முடியாது என்றளவில் தான் மார்க்கட் நிலவரம் இருக்கிறது.

நான் அடிக்கடி சொல்வது போல, அயோக்கியர்களே அறம் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்கிறார்கள்.

எங்கள் இலக்கியவாதிகளின் தனிப்பட்ட அறம் பற்றிய ஆர்வங்கள் எல்லாம் ஜெயகாந்தனின் பின்னால் தான் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு வணிக வார இதழ்களால் அவர் புகழ் பெற்றிருந்ததும் காரணம்.
ஜி.நாகராஜன் பற்றி எத்தனை பேர் அறிந்திருப்பார்கள்?

ஜெயகாந்தன் வாயைத் திறக்கும் வரைக்கும், எழுதிய எல்லாருமே சமூகம் பற்றி எழுதியவர்களே அன்றி, அது பற்றி வாயைத் திறந்தவர்கள் இல்லை. அவர்கள் சமூகம் பற்றிச் சொன்ன கருத்துக்கள் என்று, சிறு வெளியீடுகளில் இருந்தால் ஒழிய, பொதுவெளியில் இல்லை.

ஒரு சமூகத்தின் போலித்தனங்கள் பற்றி அதிகமாக பேசிக் கொண்ட அவரும் கடைசியில் இறுதிப்புகலிட ஜோதியில் சங்கமித்து விட்டார்.

அதன் பின்னால், இன்றைக்கு வரைக்கும் இந்த இலக்கியவாதிகள் பொதுவெளியில் இந்த சமூகம் பற்றிய கருத்துக்களை, தங்கள் படைப்பு எழுத்துக்களுக்கு அப்பால், முன்வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

**இவர்களையும் விட, கலை கலைக்காகவே என்று யாரையும் நோகாமல் கிடைக்கிற இடைவெளிக்குள்ளால் வண்டி ஓட்டுகிற சாதுரியத்தோடு பிழைப்பு நடத்துகிறவர்கள் ஒருபுறம். சமகால நிலைமைகள் குறித்து, குறிப்பாக அரசியல் குறித்து, எந்தக் கருத்துக்களையும் இவர்கள் முன்வைப்பதில்லை. அதற்கு 'யாரையும் பகைத்துக் கொண்டு, பிழைப்பைக் கெடுக்கக் கூடாது என்ற எண்ணம் மட்டும் தான் முக்கியமானதாக இருக்கும்.**

**அவர்களும் தப்பாமல் அறம் பற்றிப் பேசத் தான் செய்கிறார்கள்.**

கவனமாகவும், சாமர்த்தியமாகவும் அந்தந்த நேரத்தில் ஆளும் கட்சியை விமர்சிப்பதைத் தவிர்த்து!

பல்கிப் பெருகிய ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் இன்றைக்கு அவர்களின் கருத்துக்கள் பரவலாகச் செல்லக் காரணமாகியிருக்கின்றன.
கிசுகிசுக்கள் கூட பரபரப்பாக்கப்படுகின்றன.

இவர்கள் எல்லாருமே சமூகத்தின் நடவடிக்கைகளைப் பற்றி கருத்துச் சொல்லி, விமர்சிக்கும்போது, அந்தச் சமூகத்தின் அறம் பற்றிப் பேசும் போது, நாங்கள் கவனக்குறைவாக இருப்போம் என்ற எண்ணத்தில், போகிற போக்கில் தங்களுடைய அப்பழுக்கற்ற அறம் பற்றி அடித்து விட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

இவர்களையும் விட, கலை கலைக்காகவே என்று யாரையும் நோகாமல் கிடைக்கிற இடைவெளிக்குள்ளால் வண்டி ஓட்டுகிற சாதுரியத்தோடு பிழைப்பு நடத்துகிறவர்கள் ஒருபுறம். சமகால நிலைமைகள் குறித்து, குறிப்பாக அரசியல் குறித்து, எந்தக் கருத்துக்களையும் இவர்கள் முன்வைப்பதில்லை. அதற்கு 'யாரையும் பகைத்துக் கொண்டு, பிழைப்பைக் கெடுக்கக் கூடாது என்ற எண்ணம் மட்டும் தான் முக்கியமானதாக இருக்கும்.

அவர்களும் தப்பாமல் அறம் பற்றிப் பேசத் தான் செய்கிறார்கள்.

எங்கள் உள்ளூர் புலன் பெயர்ந்த லோக்கல் சிற்றிலக்கியவாதிகளின் சின்னத்தனங்களையும், சில்லறைத் தனங்களையும் நான் நேரில் கண்டுதானே வந்திருக்கிறேன்.

அவர்களின் அறம் எல்லாம் தனி அனுபவங்கள்.

அப்படி இவர்கள் எல்லாம் பீற்றிக் கொள்கிற அந்த ‘அறம்’ என்பது தான் என்ன?

அறம் என்பது வெறுமனே பாலியல் சார்ந்த ஒழுக்கம் மட்டுமானது இல்லை.

அது தத்துவங்கள், கொள்கைகள், மதங்கள் சொல்லும் வழிகளையும் விதிமுறைகளையும் அட்சரம் பிசகாமல் பின்பற்றுவதும் இல்லை.

தத்துவங்களையும் கொள்கை களையும் விஞ்ஞான உண்மைகள் மாதிரி, அல்லேலூயா ரேஞ்சில் கொண்டெழுப்பி உச்சரிப்போர் சொந்த வாழ்வில் எவ்வாறான பாசாங்குக்காரர்களாக இருப்பார்கள் என்பதற்கான உதாரணங்களை நான் சொல்லத் தேவையில்லை.

மதங்கள் சொல்லும் சம்பிரதாயங் களையும் ஆசாரங்களையும் சடங்குகளையும், உபவிதிகள் கூடத் தவறாமல் கடைப்பிடிப்பதாக, மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக பகிரங்கமாக சீன் காட்டுகிற வேடதாரிகளுக்கு, அந்த மதங்கள் சொல்லும் ஒழுக்கங்களை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்பது முக்கியமானதாகப் படுவதில்லை.

ஆஸ்திகர்களே உண்மையான நாத்திகர்கள்.

தங்கள் மதம் சொல்லும் கடவுள் உண்மையாகவே இருக்கிறார் என்று அவர்கள் நம்பினால், தங்கள் மதம் சொல்கிறபடி மதவிதிகளை மீறி மற்றவர்களுக்கு துன்பம் விளைவித்தால் தண்டனை கிடைக்கும் என்று நம்பினால், இவர்கள் யாருக்காவது துன்பம் விளைவிப்பார்களா?

இவர்கள் மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்று மதம் சார்ந்து செய்கின்ற எல்லாமே பாசாங்குகள் தான்.

அறம் என்பது வெளிப்பாசாங்குகளால் ஆனதில்லை.
அது ஒரு வாழ்வு முறையாக இருக்க வேண்டியது.

அறம் என்பது மனிதர்கள் கீழே இருக்க, மலை மேலிருந்து போதிப்பதோ, நீதி வழங்குவதோ இல்லை.

அறம் தனிமனிதர்கள் பற்றியதில்லை. சமூகம் பற்றியது.

பிறப்பினாலோ, சந்தர்ப்ப வசத்தாலோ ஒடுக்கப்பட்டவர் களையும் ஒடுங்கிப் போனவர் களையும், சமமாக மதித்து, அவர்களுக்கான சமூக நீதி வழங்கப்பட வேண்டியதை உறுதி செய்வது.

அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் அடக்குமுறைகளையும் கண்டு கொதித்தெழச் செய்ய வேண்டியது.

**அறம் என்பது வெளிப்பாசாங்குகளால் ஆனதில்லை.
அது ஒரு வாழ்வு முறையாக இருக்க வேண்டியது.**

**அறம் என்பது மனிதர்கள் கீழே இருக்க, மலை மேலிருந்து போதிப்பதோ, நீதி வழங்குவதோ இல்லை.**

**அறம் தனிமனிதர்கள் பற்றியதில்லை. சமூகம் பற்றியது.**

**பிறப்பினாலோ, சந்தர்ப்ப வசத்தாலோ ஒடுக்கப்பட்டவர் களையும் ஒடுங்கிப் போனவர் களையும், சமமாக மதித்து, அவர்களுக்கான சமூக நீதி வழங்கப்பட வேண்டியதை உறுதி செய்வது.**

**அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் அடக்குமுறைகளையும் கண்டு கொதித்தெழச் செய்ய வேண்டியது.**

மற்ற உயிர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாதவரைக்கும் ஒரு மனிதனின் தனிமனித இயல்பால் யாருக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடும்?

அவனைத் தவிர!

அவனது உடல், உள நலன்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடும்.

வெளி உலகோடு தொடர்புகளைத் துண்டித்துக் கொண்ட ஒருவன் எப்படி வாழ்ந்து விட்டுப் போனால் என்ன?

அவன் ஒரு சமூகத்திற்குள் வாழும்போது, அவனது ஒவ்வொரு நடவடிக்கையும் மற்றவர்கள் மீது பாதிப்புகளை ஏற்படுத்தத் தானே செய்யும்?

அந்தப் பாதிப்புகள் எதையும் ஏற்படுத்தி விடாதபடிக்கு, அவன் ஒரு சமூகப் பிராணியாக தன் கடமைகளை உணர்ந்து கொள்வது தான் அறம்.

அறம் சுயநலம் கடந்த பொதுநலம் சார்ந்தது.

அறம் என்பது உண்மையாக இருப்பது.

அந்த சமூகத்திற்கு உண்மையாக இருப்பது.

அதை விட மேலாக, தனக்கு உண்மையாக இருப்பது.

தான் அறம் என்று சொல்வதை, தன் வாழ்வாகக் கொண்டிருப்பது தான் தனக்கு உண்மையாக இருத்தல் என்பது.

தன்னைப் படைப்பாளி என்கிற மனிதன் தன் வாழ்வுக்கு மட்டுமன்றி, தன் எழுத்துக்களுக்கும் படைப்புக்கும் உண்மையாக இருக்க வேண்டும்.

வாழ்வில் அயோக்கியனாக இருந்து கொண்டு, படைப்பில் அறத்தைப் போதிப்பவன் எப்படி தனக்கோ, தன்

படைப்புக்கோ உண்மையானவனாக இருக்க முடியும்?

இலக்கியத்தின் நோக்கம் அறத்தைப் போதிப்பதல்ல.
அது மதநூல்களின் வேலை.

அல்லது நீதிக்கதைகளின் வேலை.

கற்பனாவாத உலகுகளைக் காட்டும் படைப்புகள் போலன்றி, மனித வாழ்வைச் சொல்லும் இலக்கியங்கள் அறத்தைப் போதிக்கும் நீதிக்கதைகளாகி விட முடியாது.

மனித வாழ்வினதும் சமூகத்தினதும் ஒரு காலத்தின் வரலாற்றுப் பதிவாக இருக்கும் உன்னத இலக்கியம், அதன் வக்கிரங்களையும், கேவலங்களையும் தான் பதிவு செய்யும்.

அதில் பெருமை கொள்வதற்காகவோ, அதுவே ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக நடைமுறையாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்காகவோ அல்லாமல், அந்தக் கேவலங்களில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் மனநிலைகள், நியாய, அநியாயங்களைப் படம் பிடித்துக் காட்டுவதாகவே இருக்க வேண்டும்.

சாரு மாதிரி, தனது வக்கிர எண்ணங்களை ஏற்றுக் கொள்ளாத சமூகத்தை philstines என்று திட்டுவதாக இருப்பதில்லை. சாரு தனக்கு முன்னுதாரணங்களாகக் காட்டுகிறவர்கள் எல்லாம் தங்கள் வக்கிர வாழ்வை சமூகத்தின் நடைமுறையாக்க வேண்டும் என்றில்லாமல், தங்கள் வாழ்வுக்கான நியாயங்களையும், தங்கள் மேல் தீர்ப்பு வழங்குகிற அந்தச் சமூகத்தின் நகைமுரண்பாடுகளையும் தானே, ‘உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் கல்லை எறியட்டும்’ என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் இந்த இலக்கிய உலகின் ‘மகத்தான சல்லிப்பயல்கள்’ எல்லாம் செய்வது என்ன?

சோதோமையும் கொமோராவையும் அழிக்கப் போவதாகச் சொல்லும் கடவுள், யாழ்ப்பாணியின் பாணியில் ‘குறைக்க மாட்டியளோ?’ என்று கேட்ட ஆபிரகாமுக்கு, ஐம்பதில் தொடங்கி, கடைசியில் பத்து நீதிமான்களைக் காட்டினால் அழிக்க மாட்டேன் என்றது போல, காரண காரியம் இல்லாமல், கண்டதுக்கெல்லாம் அறச்சீற்றம் கொள்ளும் எங்கள் இலக்கிய உலகில், தாங்கள் பீற்றிக் கொள்ளும் அறத்தை வாழ்வாகக் கொண்ட ஒரு ஐந்து பேரையாவது காட்ட முடியுமா?

எங்கள் இலக்கிய உலகம் ‘எல்லாமே தங்களைப் பற்றியதாகவே’ இருப்போரைத் தானே கொண்டிருக்கிறது?

தாங்கள் தங்கள் முகாமுக்கும் சாதிக்கும் அப்பால் யாரையும் அங்கீகரிக்கும் மனம் இல்லாமல், தங்களை எல்லாரும் அங்கீகரிக்கவில்லையே என்று சதா அந்தரிக்கிற ஆத்துமாக்களைக் கொண்டதாகத் தானே இருக்கிறது?

அதற்காக, தாங்கள் அல்லேலூயா பாடுகின்ற அதே அறங்களுக்கு முரணாக, அந்த அங்கீகாரங்களைத் தேடுகிறவர்களைத் தானே கொண்டிருக்கிறது?

வணிக வார இதழ்கள், தினசரிகளை அங்கீகரிக்காத இலக்கியவாதிகள், அவற்றில் தங்களைப் பற்றிச் செய்தி வருவதைத் தானே தாங்கள் பேசப்படுவதாகவும் அங்கீகாரமாகவும் கருதிக் கொண்டிருக்கும் முரண்நகையை எதற்குள் சேர்க்க முடியும்?

அந்த அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, விஸ்கியைக் கொடுக்கவும், தன்மானத்தை விற்கவும் தயாராகத் தானே இவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்?

தமிழ் திரையுலகை கேவலமாகத் திட்டி, அதை ரசிப்பவர்களை மட்டரகமான ரசனை என்று, உலக சினிமாவிற்குள் இலக்கியம் தேடும் கதை விடும் இந்த இலக்கியர்களின் இறுதிப் புகலிடம், தமிழ்ச்சினிமாவின் பாலூற்றும் கட்டவுட் நாயகனுக்கு ‘பஞ்ச் டயலாக்’ எழுதுவதாகத் தானே இருக்கிறது?

சக படைப்பாளிக்கு பெருமையும் அங்கீகாரமும் கிடைப்பதைக் கண்டு, ‘தனக்கு கிடைத்திருக்க வேண்டியது’ என்று, மனம் பொறுக்காமல் பொறாமை கொண்டு, இலக்கியத்தின் கற்புப் பறி போய் விட்டது என்று சொல்லும் அதே ‘றியலிட்டி’ ஷோவைத் தானே இவர்கள் வைத்த விழி வாங்காமல் பார்த்து, இலக்கிய விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள்?

**சாரு மாதிரி, தனது வக்கிர எண்ணங்களை ஏற்றுக் கொள்ளாத சமூகத்தை philstines என்று திட்டுவதாக இருப்பதில்லை. சாரு தனக்கு முன்னுதாரணங்களாகக் காட்டுகிறவர்கள் எல்லாம் தங்கள் வக்கிர வாழ்வை சமூகத்தின் நடைமுறையாக்க வேண்டும் என்றில்லாமல், தங்கள் வாழ்வுக்கான நியாயங்களையும், தங்கள் மேல் தீர்ப்பு வழங்குகிற அந்தச் சமூகத்தின் நகைமுரண்பாடுகளையும் தானே, ‘உங்களில் பாவம் இல்லாதவன் முதலில் கல்லை எறியட்டும்’ என்று சொல்லியிருக்கிறார்கள்.**

**ஆனால் இந்த இலக்கிய உலகின் ‘மகத்தான சல்லிப்பயல்கள்’ எல்லாம் செய்வது என்ன?**

**சோதோமையும் கொமோராவையும் அழிக்கப் போவதாகச் சொல்லும் கடவுள், யாழ்ப்பாணியின் பாணியில் ‘குறைக்க மாட்டியளோ?’ என்று கேட்ட ஆபிரகாமுக்கு, ஐம்பதில் தொடங்கி, கடைசியில் பத்து நீதிமான்களைக் காட்டினால் அழிக்க மாட்டேன் என்றது போல, காரண காரியம் இல்லாமல், கண்டதுக்கெல்லாம் அறச்சீற்றம் கொள்ளும் எங்கள் இலக்கிய உலகில், தாங்கள் பீற்றிக் கொள்ளும் அறத்தை வாழ்வாகக் கொண்ட ஒரு ஐந்து பேரையாவது காட்ட முடியுமா?**

தாங்களே போலித் தனம் என்று சொன்ன, தெரிந்த புகழுரைகளையும் விருதுகளையும் பெற்றுக் கொள்ளும்போது, வெட்கமில்லாமல் பல்லிளித்து வாங்கும் அளவில் தானே இவர்களின் இவர்களின் தன்மானம் இருக்கிறது?

விருது பெறுவதற்காக வடக்கு நோக்கித் தவம் இருக்கிறவர்கள் எல்லாம் இப்போது கனவு இல்லத்திற்காகக் கோட்டையை நோக்கித் தவம் இருக்கிறார்கள்.

அங்கீகாரம் என்றெதாரு abstract thing க்காக, எந்த பேயிடமும் தங்கள் ஆன்மாக்களை விற்கத் தயாராக இருக்கிறவர்களைத் தானே இந்த இலக்கிய உலகம் கொண்டிருக்கிறது?

இன்றைக்கு இந்த இலக்கிய கும்பல்களுக்குள் கொண்டாடப்படுகிறவர்கள் யார்?

உறவு வைத்துக் கொண்ட பெண்ணின் மகளான வயது குறைந்த பெண்ணோடு தகாத உறவு வைத்துக் கொள்ள முயன்றவரும், அவரைத் திட்டித் தீர்த்து விட்டு, தற்போது விருது கொடுத்தவரும் ஊருக்குள்ளே 'நம்பர் வண்'களாகத் தானே உலவுகிறார்கள்?

தமிழ்நாட்டில் எடுபடும் என்பதற்காக தலித் வேடம் பூண்டவரும் இந்தக் கூட்டத்திற்குள் தானே?

ஒரு இனத்தின் அழிவை வைத்து பிழைப்பு நடத்தலாம் என்று இலக்கியம் செய்கிற கூட்டத்தைத் தானே, ஈழத்து இலக்கியம், புலன் பெயர் இலக்கியம் என்றெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்?

தமிழினியைப் பற்றி, உண்மையைச் சொல்லி விட்டார் என்பதற்காகவே, தெரிந்தும் பொய் அவதூறு செய்தவர் ஈழத்தின் இலக்கியப்பிரதிநிதியாகத் தானே அங்கே 'சுற்றுப்'பயணம் செய்து கொண்டிருக்கிறார்?

தனக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, பயன்படுத்த முடிந்தவர்கள் எல்லாருக்கும் விருதைக் கொடுத்து, வாணீர் ஊற்றியபடி வடக்கு நோக்கித் தவம் இருக்க வைத்தவர் என்ன திறமை அறிந்தா விருது கொடுக்கிறார்? அல்லது அவரது திறமை அறிந்தா அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்?

வைரமுத்து என்ன சமூகப்பிரதிஷ்டமா செய்யப்பட்டிருக்கிறார்? அவர் தன் பெயரில் விருது கொடுத்தாலும் வெட்கமில்லாமல் போய் வாங்கக் கூடியவர்கள் தானே எங்கள் இலக்கியவாதிகள்?

சோபா சக்தியின் புத்தகம் பற்றி அகழ் மின்னிதழில் அருண் அம்பலவாணர் எழுதிய கட்டுரை குறித்து ஆசான் முதல் சாரு வரைக்கும் பொங்கி எழுந்தது, எந்தக் கருத்துச் சுதந்திரம் பற்றிய அறத்தின் அடிப்படையில்?

இந்த இலக்கியவாதிகள் எல்லாம் சொல்கிற அறமும், அவர்களின் அந்த அறச்சீற்றமும் தான் என்ன?

தமிழ்நாட்டில் ஆளும் கட்சிக்கு ஆதரவாளர்களாக இருந்து முண்டு கொடுப்பதும், யாழ்ப்பாணத்தில் புலிகளின் தன் இன அழிப்புக்கு புனிதப் போராட்ட ஞானஸ்நானம் கொடுப்பதும் இந்த இலக்கியவாதிகள் தானே!?

என் போன்றவர்களை வெறும் புலி எதிர்ப்பு என்று கடந்து விட்டுப் போகிற இந்த புலன் பெயர்ந்த இலக்கியர்களும், புலிவால் இலக்கியர்களும், புலிகளைக் கடுமையாக விமர்சித்து, இந்திய நிலைப்பாட்டை ஆதரித்த ஆசானின் அனுக்கிரகத்தில் அங்கீகாரம் பெற்று ஈடேற்றம் அடைய ஆலாய் பறப்பதும், இலக்கியத் தோட்டத்தில் அறுவடைக்காய் அழைப்பதும் எந்த அறத்தின் அடிப்படையில்?

Judge the art, not the artist என்ற ஒப்பற்ற தத்துவத்தின் அடிப்படையிலா?

**இன்றைக்கு இந்த இலக்கிய கும்பல்களுக்குள் கொண்டாடப்படுகிறவர்கள் யார்?**

**உறவு வைத்துக் கொண்ட பெண்ணின் மகளான வயது குறைந்த பெண்ணோடு தகாத உறவு வைத்துக் கொள்ள முயன்றவரும், அவரைத் திட்டித் தீர்த்து விட்டு, தற்போது விருது கொடுத்தவரும் ஊருக்குள்ளே 'நம்பர் வண்'களாகத் தானே உலவுகிறார்கள்?**

**தமிழ்நாட்டில் எடுபடும் என்பதற்காக தலித் வேடம் பூண்டவரும் இந்தக் கூட்டத்திற்குள் தானே?**

**ஒரு இனத்தின் அழிவை வைத்து பிழைப்பு நடத்தலாம் என்று இலக்கியம் செய்கிற கூட்டத்தைத் தானே, ஈழத்து இலக்கியம், புலன் பெயர் இலக்கியம் என்றெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்?**

**தமிழினியைப் பற்றி, உண்மையைச் சொல்லி விட்டார் என்பதற்காகவே, தெரிந்தும் பொய் அவதூறு செய்தவர் ஈழத்தின் இலக்கியப்பிரதிநிதியாகத் தானே அங்கே 'சுற்றுப்'பயணம் செய்து கொண்டிருக்கிறார்?**

**தனக்கு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, பயன்படுத்த முடிந்தவர்கள் எல்லாருக்கும் விருதைக் கொடுத்து, வாணீர் ஊற்றியபடி வடக்கு நோக்கித் தவம் இருக்க வைத்தவர் என்ன திறமை அறிந்தா விருது கொடுக்கிறார்? அல்லது அவரது திறமை அறிந்தா அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்?**

**கோணங்கி விவகாரத்தில் கோணங்கிக்கு முட்டுக் கொடுத்தவர்கள் யார்? படைப்பாளியின் மென்மையானவன் என்று வியாக்கியானம் கொடுத்தவர் யார்?
கவிஞர் இந்திரன் போன்ற அரிதான சிலரே கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருந்தார்கள்.**

**ஆனால், கோணங்கியின் குழு வெளியிட்ட சஞ்சிகையில் எந்த மன உறுத்தலோ, குற்ற உணர்ச்சியோ இல்லாமல் பங்களிப்புச் செய்தவர்கள் இந்த இலக்கிய உலகத்திற்குள் தானே இருக்கிறார்கள்?
இவ்வாறாக தங்களை நியாயப் படுத்துகிறவர்கள் இருப்பதால் தான்** sexual predators **களுக்கு,** 'I can get away with that' **என்ற துணிவு வருகிறது.
இப்படி, இந்த இலக்கியவாதிகளுக்கு எல்லாம் இந்த அறம் என்பது வெறும் அல்லேலூயாக் கோஷம் மட்டும் தான்.**

இதில் அறம் எங்கே இருக்கிறது? சமூக நீதி எங்கே வருகிறது?

நான் சொல்வது போல, இவர்களுக்கு எல்லாமே...

Me, Myself, Master of the world!

It's all about myself.

எல்லாமே 'என்னைப் பற்றியது தான்!

அந்த உலக மகா காவியம் படைக்கும் அந்த 'தான்' என்ற ஒப்பற்ற, உன்னதமான படைப்பாளி பற்றியது தான்.

இது தான் இந்த இலக்கியவாதிகளின் அறம், அறச்சீற்றத்தின் லட்சணங்கள்.

வெனிஸ் திரைப்பட விழாவில் இந்த இயக்குனர்களின் படங்கள் திரையிடப்பட்ட போது, இவ்வாறான ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியிலும் விமர்சகர்கள் இவர்களை முற்றாக நிராகரிக்காமல், அவர்களுடைய படைப்புகள் பற்றி தங்கள் திறனாய்வுகளை பொதுவெளியில் வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களோடு யாரும் சண்டைக்கும் போகவில்லை.

இதில் வூடி அலனின் படத்தைப் பற்றிச் சிலாகித்த பலரும் போலன்ஸ்கியின் படத்தை மிகவும் மோசமானது என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஹார்வி வைன்ஸ்டைனை அவரோடு இணைந்து பணியாற்ற மறுத்து, முற்றாக தேசப் பிரஷ்டம், சாதிப்பிரஷ்டம் செய்தது போல, இவர்களை எல்லா நடிகர்களும் ஒதுக்கி விடவில்லை. ஏற்கனவே சிலர் இனிமேல் சேர்ந்து பணியாற்ற மாட்டோம் என்று சொன்னாலும், இந்தப் பாலியல் குற்றச்சாட்டுகளின் பின்னாலும், அவர்களுடைய இணைந்து பணியாற்றுவதற்கு தயாரானவர்கள் இருக்கிறார்கள்.

இவர்களுடைய அறம் தான் என்ன?

அவர்களும் அங்கீகாரத்துக்கும் பணத்துக்கும் தங்கள் ஆன்மாக்களை எந்தச் சாத்தானுக்கும் விற்று விட தயாராகத் தான் இருக்கிறார்கள்.

அவர்கள் மூலமாக தாங்கள் அடைய வேண்டிய இலட்சியங்களை அடைய முடியும் என்று அவர்கள் நம்பியதால் தானே அவர்களோடு சேர்ந்து கொள்கிறார்கள்.

கோணங்கி விவகாரத்தில் கோணங்கிக்கு முட்டுக் கொடுத்தவர்கள் யார்? படைப்பாளியின் மென்மையானவன் என்று வியாக்கியானம் கொடுத்தவர் யார்?

Alleged crime, not yet proven in court, presumption of innocence, innocent until proven guilty என்றெல்லாம் புத்திசாலித்தனமான சப்பைக்கட்டுகளோடு வந்த எவரையும் நான் காணவில்லை என்றாலும், குறைந்தபட்சம் 'என் நண்பர் என்பதால், I am giving him the benefit of doubt' என்றோ, 'என் நண்பர்தான், ஆனால் இவ்வாறு செய்திருந்தால் தப்பு' என்றோ எவரும் சொன்னதாகக் கண்ட ஞாபகம் இல்லை.

கவிஞர் இந்திரன் போன்ற அரிதான சிலரே கடுமையான கண்டனங்களைத் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால், கோணங்கியின் குழு வெளியிட்ட சஞ்சிகையில் எந்த மன உறுத்தலோ, குற்ற உணர்ச்சியோ இல்லாமல் பங்களிப்புச் செய்தவர்கள் இந்த இலக்கிய உலகத்திற்குள் தானே இருக்கிறார்கள்?

இவ்வாறாக தங்களை நியாயப் படுத்துகிறவர்கள் இருப்பதால் தான் sexual predators களுக்கு, 'I can get away with that' என்ற துணிவு வருகிறது.

இப்படி, இந்த இலக்கியவாதிகளுக்கு எல்லாம் இந்த அறம் என்பது வெறும் அல்லேலூயாக் கோஷம் மட்டும் தான்.

வாழ்வில் கொண்டொழுகத் தேவையில்லாத, வெறும் பாசாங்கு வழிபாடு மட்டுமே.

அந்த ஆவிக்குரிய அல்லேலூயாக் கொண்டெழுப்புதலுக்கு, 'அறத்தைக் கண்டாயா?' என்று 'தண்ணியில்' அமுக்கி முக்குளிக்க வைக்க, ஜோர்தான் நதி கடந்த John the Baptist மாதிரி, சாத்தான்களும் அறம் பற்றி வேதம் ஓத, கடல் கடந்து வரலாம்!

சாத்தான் வருகிறார்.
இலக்கியவாதியே எழுந்து வா!

ஆசான் போற்றப்படுவாராக!

அறத்தின் நாமத்தினாலே,
அல்லேலூயா!

அ

# அபத்தம்

ஐப்பசி 2023










ஆக்கங்களுக்கு
ஆக்கியோர்களே
பொறுப்பு.
ஆயினும் அதைப்
பிரசுரிப்பதற்கான
பொறுப்புகளில் இருந்து
அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
**Editor/Design**
**George R. Ckrhushchev**






























புரட்டாதி மாத அபத்தத்திற்கான வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

வழமை போல, தாமதமாகத் தான்!

கோடை காலம் முடிவடைந்து, விடுமுறை முடிந்து பாடசாலைகள் திரும்ப ஆரம்பமாகும் புரட்டாதி மாத முதல் வாரம், நீண்ட வார இறுதி விடுமுறையைக் கொண்டிருக்கும்.

உலகெங்கும் மே தினம் தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்படுவதைப் போல, இங்கே அந்த வார இறுதி விடுமுறை தினம் தான் தொழிலாளர் தினம்.

கோடையின் கடைசி இரண்டு வாரங்கள், ரொறன்ரோவில் பெரும் களியாட்ட விழா நடைபெறும். அதன் கடைசி வார இறுதியில், ரொறன்ரோவில் உள்ள ஒன்ராறியோ ஏரிக்கரையில் சர்வதேச விமானச் சாகசக் கண்காட்சி நடக்கும்.

கோவிட் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தக் கண்காட்சி மீண்டும் ஆரம்பித்திருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்னர் அங்கு போய் படங்கள் பிடித்திருந்தேன்.

இணையத்தில் இந்த சாகசக் கண்காட்சியில் ரொறன்ரோவில் உள்ள உயரமான சிஎன் கோபுரத்தோடு விமானங்களை எடுத்த படங்கள் இரண்டு என் கண்ணில் பட்டதிலிருந்து, எப்படியாவது அதைப் போன்ற படங்கள் எடுக்க வேண்டும் என்ற முடிவோடு, இம்முறை அபத்தத்தைத் தள்ளிப் போட்டு விட்டு, கனரக ஆயுதங்களுடன் களம் இறங்கியிருந்தேன்.

கோபுரம் இருப்பது நகரின் நடுப்பகுதி. கடந்த முப்பது வருட காலத்தில் அந்தப் பகுதி உயர்ந்த மாடி வீட்டுக் கட்டடங்களால் மூடப்பட்டு விட்டது.

நான் பார்த்த படங்கள் அழகாக வந்ததற்கு காரணம் இருக்கிறது. அவை அருகில் உள்ள மாடிக் கட்டடங்களில் இருந்து எடுக்கப்பட்டவை.

நான் தொலைவில், தரையில், கட்டடங்களுக்கு நடுவில் நின்று எடுக்க வேண்டியதாயிற்று.

போர் விமானங்களின் இரைச்சல் கட்டடங்களில் எதிரொலித்து வரும் போது, விமானங்கள் எந்தப் பக்கம் இருந்து வருகின்றன என்பது தெரியாது.

அவற்றின் ஒலிவேகத்திற்கு ஈடுகொடுத்துப் படம் எடுப்பதும் சுலபம் இல்லை.

இந்த சாசகக் கண்காட்சி மூன்று நாட்கள் நடைபெறுவதால், திரும்பவும் கடைசி நாளன்று, ஏரிக்கரைக்குப் போய் இன்னொரு தடவை சுட்டு வந்தேன்.

நான் எதிர்பார்த்துப் போனது நிறைவேறாவிட்டாலும், நான் எதிர்பாராத விதத்தில் படங்கள் அமைந்ததில் திருப்திதான்.

அதனால்,

அபத்தம் வழமை போல, பிந்தி வந்தது!

அடுத்த முறை மூன்று நாட்களும் போவதாக முடிவு!







U.S. NAVY





# ஆண்கள் பெண்கள்

சமீபத்தில் நான் முதுகு வலியால் அவஸ்தைப்பட்டபோது அக்குபஞ்சர் எனும் குத்தூசி மருத்துவமே கைகொடுத்தது. இது ஊசிகளை உடலின் முக்கிய அக்கு புள்ளிகளில் சொருகி சிகிச்சை செய்யும் சீன வைத்திய முறை ஆகும். ஏற்கனவே நான் மிருகங்களுக்கு அக்குபஞ்சர் வைத்தியம் செய்வதுபற்றி படித்திருந்தேன் என்பதால் வலி நிவாரண மருந்துகளை விட அக்குபஞ்சர் ஊசிகளை நம்புகிறேன். எனக்கு வைத்தியம் செய்த மியா என்ற அந்த சீன இளம்பெண் (30 வயதின் மேல்) பல ஊசிகளை முதுகின் அக்கு புள்ளிகளில் சொருகிவிட்டு இருபது நிமிடங்கள் வரை என்னுடன் பேசிக்கொண்டிருப்பார். ஒரு முள்ளுப் பன்றியின் உருவில் குப்பற ஊசியுடன் தரையைப் பார்த்தபடி கட்டிலில் படுத்திருப்பது இலகுவானதல்ல! கடலாமையைத் தரையில் திருப்பி போட்டது போன்ற நிலை: மியாவின் உதவியின்றி நெளியக்கூட முடியாது! அத்துடன் ஊசிகள் மெதுவான மயக்கம் கலந்த தூக்கத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரு அமைதி நிலையைக் கொடுத்தன.

வைத்தியரான அவளும் நானும் எப்படியும் அந்த நேரத்தில் ஏதாவது பேசியாக வேண்டும். எனக்குக் கொஞ்சம் சீன வைத்தியம் புரியும் என்பதால் எங்கள் உரையாடல் தொடரும். முதுகில் சொருகிய ஊசிகளை அவள் இடையிடையே திருகியபடி, எனது வேலை: திருமணம்: குழந்தைகள் பற்றிக் கேட்டாள். இறுதியில் ஊசிகளை அவள் அகற்றிய பின் நான் அவளிடம் ‘உனக்குத் திருமணமாகிவிட்டதா?’ என்ற கேள்வியை தொடுத்தேன்.

அவள் அதற்கு பதில் சொல்லாது ‘சீன ஆண்களை நம்பமுடியாது... எல்லோரும் கெட்டவர்கள்‘ என்றாள்.

இப்பதில் எனக்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கவேண்டும் அல்லவா? ஆனால் அதற்கு மாறாக அது நான் படித்த பண்டைய ஒரு கிரேக்க துயர நாடகத்தில் (Greek tragedy) வந்த கதாநாயகியைதான் எனக்கு நினைவூட்டியது.

**நோயல் நடேசன்**

யூறிப்பிடிஸ் (Euripides) என்ற கிரேக்க நாடக ஆசிரியர் கிறிஸ்துவிற்கு 430 வருடங்கள் முன் எழுதி அரங்கேற்றிய மீடியா என்ற (Medea) கிரேக்க துயர் நாடகம் அது.

மீடியா என்பவள் கிரேக்க புராணங்களில், சொல்லப்பட்டுள்ள கொல்கிஸ் மன்னன் ஏயெட்ஸின் மகளும், சிர்ஸின் மருமகளும் சூரியக் கடவுளான ஹீலியோஸின் பேத்தியுமாவாள். தெய்வாம்சம் மற்றும் மந்திர சக்தியுள்ள அவள் ஜேசன் (Jason) என்ற இளவரசனை மணம் முடிக்கிறாள். அவள், ஜேசனுக்காக தனது தந்தையை எதிர்த்து அவனுடன் போவது மட்டுமல்லாது போர் செய்த தனது சகோதரனைக் கொலை செய்து, கணவனைப் பாதுகாக்கிறாள். ஜேசனது மற்றொரு எதிரியான மாமனை (சக அரசனை) தனது மந்திர சக்தியாலும் வஞ்சத்தாலும் அழிக்கிறாள். கணவனுக்காக இப்படிப் பல சாகசங்களை செய்த அவளில் சில காலத்தின் பின் ஜேசன் சலிப்படைந்து கொருந்திய நாட்டு (Corinth) இளவரசி கிரூசாவை மணம் முடிப்பதற்கு விரும்புகிறான். அதேவேளையில் மீடியாவை

**'ஆண்களை நாங்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டும். அதை விட வாங்கியவர்கள் நல்லவர்களா என்பது எங்களுக்குத் தெரியாது. எதையும் சகித்தபடி இருக்கவேண்டும். சலிப்படைந்தால் வேறு பெண்ணிடம் போவார்கள். தாங்கள் போருக்குப் போவதாகவும் நாங்கள் வீடுகளில் உல்லாசமாக இருப்பதாகவும் சொல்வார்கள். நாங்களும் பிள்ளை பெறாது மூன்று முறை போர்முனையில் நிற்பதற்குத் தயார்!'.**

நாடு கடத்தவும் ஒரு திட்டம் உருவாகிறது. தன்னை விட்டு விலகி, ஜேசன் இளவரசியைத் திருமணம் செய்ய முனைந்தபோது மீடியா சீறும் பாம்பாகிறாள். இந்த நாடகத்தில் பாடல் இசைக்கும் கொருந்தியப் பெண்களிடம் அவள் பேசும் 'பராசத்தி' வசனங்கள், இக்காலத்திலும் நாங்கள் எதிர்பாராதவை. அவை ஒவ்வொன்றும் ஆண்கள் மீது குத்தீட்டியாகப் பாயும் வார்த்தைகள்.

'ஆண்களை நாங்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டும். அதை விட வாங்கியவர்கள் நல்லவர்களா என்பது எங்களுக்குத் தெரியாது. எதையும் சகித்தபடி இருக்கவேண்டும். சலிப்படைந்தால் வேறு பெண்ணிடம் போவார்கள். தாங்கள் போருக்குப் போவதாகவும் நாங்கள் வீடுகளில் உல்லாசமாக இருப்பதாகவும் சொல்வார்கள். நாங்களும் பிள்ளை பெறாது மூன்று முறை போர்முனையில் நிற்பதற்குத் தயார்!'. இவளது வசைவார்த்தைகள் நாடகத்தில் பாடல் இசைக்கும் கொருந்தியப் பெண்களை வாயடைக்கச் செய்கிறது.

ஜேசனது திருமண நிகழ்வின்போது மீடியா தனது குழந்தைகளை வைத்து கொருந்திய இளவரசியை கொலை செய்யும்போது மீடியாவின் பிள்ளைகளும் இறக்கின்றதாக நாடகம் முடிகிறது. மீடியாவின் பாத்திரம் கிரேக்க நாடகங்களில் மக்கள் மனத்தில் நீங்காத ஒன்றாகும்.

அக்குபஞ்சர் வைத்தியம் செய்யும் மியா எனக்கு யூறிப்பிடிஸ் என்ற கிரேக்க நாடக ஆசிரியரின் கதாநாயகியாகவே என் முன் தோன்றினாள்.

மெல்பேனில் மிருக வைத்தியராக வேலை செய்த காலத்தில் பல சீன பெண்கள், நாய் பூனைகளைக் கொண்டு வருவார்கள். அவர்களில் பலர் தனியாக வாழ்பவர்கள். இது ஆஸ்திரேலியாவிற்கு மட்டும் தனித்துவமானதல்ல. சிங்கப்பூர், அமரிக்கா கனடா போன்ற நாடுகளிலும் இதே நிலை நிலவுகிறது. ஆனால் இந்த வாழ்க்கைமுறை தற்போது சீனாவிற்கும் பரவி பாரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

சீன மொழியில் பெண்களுக்கு முப்பது வயதாகியதும் அவர்களை 'Sheng nu' என்பார்கள். அதைத் தமிழாக்கினால் 'வீணாக்கப்பட்ட பெண்கள்' (Wasted Women) என்று பொருள்படும். இவர்களின் தொகை சிறிது என்றால் இதை கடந்து போய்விடலாம்.

ஆனால் நிலமை அப்படியல்ல. மேலும் இவர்கள் படித்தவர்கள், உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள். இவர்கள் பிள்ளைகள் பெறாது போனால் சமூகம் நலிவடைந்துவிடும் எனச் சீன அரசு எண்ணி இவர்களுக்கு இலகு கடனில் குடியிருப்பு உட்பட பலவிதமான முன்னுரிமைகள் வழங்கி ஆதரிக்கிறது.

மேலும் பிரமசாரிகளாக உள்ள விவசாய இளைஞர்களை திருமணம் செய்யும்படி அறிவுறுத்துகிறது.

ஆனால் நடக்கக்கூடிய விடயமா இது?

சீனாவின் சமூக கட்டமைப்பில் ஒரு குடும்பத்திற்கு 'நாம் இருவர் நமக்கு ஒருவர்' என்ற அரச கட்டுப்பாடு இந்த நிலமைக்கு மேலும் வலுச்சேர்த்தது என்பது உண்மை. தற்போது 'வீணாக்கப்பட்ட பெண்கள்' தாங்கள் அப்படி இருப்பதால் வாழ்க்கையில் வெற்றி அடைந்தவர்கள் என முழக்கமிடுகிறார்கள். தற்போது தாய்வானில் ஜனாதிபதியாக இருக்கும் சாய் இங்:வென் இப்படியான ஒருவர்தான்.

இந்த நிலை சீனாவில் மட்டுமா?

இந்தியாவில் இல்லையா என நீங்கள் கேட்கலாம்.? இதுபற்றிய சமூக ஆய்வுகள் மற்றும் தரவுகள் இந்தியாவில் இல்லாதபடியால் இது பற்றி உறுதியாக குறிப்பிட்டுப் பேசமுடியாத நிலை உள்ளது. மேலும் சீனாவோடு ஒப்பிடும்போது கல்வி, நகரமயமாக்கம், பெண்களின் பொருளாதாரம் இந்தியாவில் குறைவானதால் பிரச்சனைகள் வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் தெற்காசியர்கள் வாழும் மேற்கு நாடுகளில் இந்த பிரச்சனை கண்ணுக்குத் தெளிவாய் தெரிகிறது. எனக்குத் தெரிந்தவரையில் பல பெண்கள் ஆஸ்திரேலியாவிலும் முப்பது வயதின் பின்பும் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளாமல் வாழ்கிறார்கள். இவர்களில் பலர் மிக உயர்ந்த பதவி வகிப்பவர்கள். பெருமளவு பணம் சம்பாதிப்பவர்கள்.

இவர்களின் பெற்றோர் ஆரம்பத்தில் பேசி நடத்தும் திருமணங்களுக்கு முயன்று மாப்பிள்ளை தேடுவார்கள். ஆனால் இந்தப்

பெண்கள் பல நியாயமான காரணங்களைச் சொல்லி வரும் வரனை நிராகரித்துவிடுவார்கள் அல்லது பெற்றோர்களின் மனம் குளிர்வதற்காகத் திருமணம் முடித்து, சொற்ப காலத்தில் மனம் பிரிவடைந்து திருமண பந்தத்தை முறித்து வாழ்கிறார்கள்.

இதை ஒரு குறையாக கணிக்க முடியாது. தொடர்ந்து மாறும் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களாக இவற்றையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேலும் இதை ஆழமாக நோக்கினால், முக்கிய காரணமாகப் படுவது தற்காலத்தில் பெண்கள் உயர் கல்வி கற்பதுடன் பொருளாதார சுதந்திரமும் அடைந்து விடுகிறார்கள். அக்காலத்தைப் போல் ஆண்களில் தங்கியிருக்க வேண்டியதில்லை.

பெண்கள், ஆண்களைவிட வேகமாக மனமுதிர்ச்சி அடைவதுடன் அவர்களது திறமையை வெளி உலகில் பாவிக்கும் தன்மையை பெற்றுவிடுகிறார்கள். ஆண்கள் அந்த விடயத்தில் எப்பொழுதும் பின்தங்கியவர்களே.

எனது வீட்டில் எனது மகளுக்கும் எனக்கும் ஏதாவது கருத்துப்பரிமாற்றம் வரும்போது தனது பக்கத்து நியாயத்தை சாமர்த்தியமாக பேசி மகள் நிலைநிறுத்துவாள். ஆனால் மகனோ அதைப் பொருட்படுத்தாது எதாவது பேசிவிட்டோ அல்லது மறுப்பு சொல்லிவிட்டு விலகிவிடுவான். இருவரும் படித்தவர்கள், நல்ல வேலைகள் செய்பவர்கள்.

ஆனால் ஏன் இந்த வேறுபாடு?

ஆண்கள் காலகாலமாக வாய் பலத்தை விட, உடல் பலத்தை வைத்து வாழ்ந்தவர்கள். வீரம், ஆண்மை, உடற்பலம் எனப் பல்லாயிரம் வருடங்களாக அவர்களுக்குக் கை கொடுத்தது. நமது இதிகாசங்கள் காப்பியங்கள் எல்லாம் இதைப் பற்றியே புகழ் பாடின.

வரலாறு என்பதே ஆண்கள், ஆண்களுக்காக எழுதியதுதானே!



இதைவிட மதங்களும் ஆண்களை மேல் நிறுத்துவதில் அளப்பரிய உதவி செய்தன. பெண்களை சயன சுகம் தரும் போகபொருளாகவும் அடிமைகளாகவும் விபரித்து கடந்து சென்றன.

இவை ஆசியாவில் தற்போது நடந்தாலும் ஐரோப்பிய வரலாற்றை படித்தாலும் இதே கதைதான். ஒவ்வொரு ஆணும் தனது வீட்டில் சர்வாதிகாரி. அவனுக்குக் கீழே குறைந்தது மனைவி என்ற ஒரு அடிமையாவது இருக்க மதங்கள் வழி சமைத்தன. சில மதங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட 'அடிமைகளையும்' வைத்திருக்க உதவி செய்தன. இவை எல்லாம் ஆணின் சிந்தனையை ஒரு சர்வாதிகாரியாகக் கட்டமைக்க வழி கோலியது.

பாடசாலைகள், போர்க்களங்கள் வேலைத்தலங்கள் ஏன் வணக்கத் தலங்கள் கூட இந்த சிந்தனைக்கு உரம் போட்டு வளர்த்தன. இதை விட ஆணின் குருதியில் ஓடும் தெஸ்தஸ்ரோன் என்ற ஹோர்மோன் இதற்கு நீர் பாச்சியது.

இதை விட மத கலாச்சார பாரம்பரியத்தில் வாழ்ந்து வளர்க்கப் பட்ட தாய்மார் ஆண் சிறுவர்களைக் குட்டி சர்வாதிகாரிகளாக வளர்த்தெடுத்தனர்.

அதேவேளை இருபதாம் நூற்றாண்டு முதலாளித்துவம், மற்றும் கைத்தொழில் புரட்சிக்குப் படித்தவர்கள் தேவைப்பட்டனர். அங்கு லாபம் ஈட்ட அவர்களுக்கு தேவைப்பட்ட ஒரே இனம் தொழிலாளிகள் மட்டுமே! இதுவே அவர்களின் இலக்கு. தொழிலாளர்கள் ஆணா பெண்ணா என முதலாளித்துவம் பார்ப்பதில்லை. பெண்கள் வீடுகளைவிட்டு வெளியேறி நகரங்களில் வேலைகளில் ஈடுபடுகிறார்கள். நகரமயமாக்கம் கிராமப்புறத்துப் பெண்களை நகர்களுக்குத் தள்ளியது. கல்வியைச் சகலருக்கு பொதுவாக்கியதால் ஒடுக்கப்பட்ட பெண்கள் விழித்துக்கொண்டார்கள். இன்று மேற்கு நாடுகளில் வேலை செய்யாத பெண்களுக்கும் அரசின் உதவிப்பணம் கிடைக்கிறது. தனியாக வாழ்வதில் எந்த சுமையும் இல்லாத நிலையில் இன்று பெண்களால் வாழமுடியும்.

ஆனால் ஆண்கள் நிலை வேறு. இதுவரை கிடைத்த வசதிகளால் அறிவு

பெற்றாலும் அவர்கள் சிந்தனைகள் ஆமை வேகத்திலேயே நகர்கின்றன. மதங்கள் இன்னமும் பெண்களை, ஆண்களின் உடைமைகளாக பார்க்கச் சொல்கின்றன. 'பெண் உனது வயல்', 'உனது உடமை' என்பது போன்ற பதங்கள் மதங்களில் பாவிக்கப்படுகின்றன. இப்படியான சிந்தனையில் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்தவர்களுக்கு அதை விட்டு வெளியே வருவது இலகுவானதல்ல. இருண்ட குகையில் பல தசாப்தங்கள் வாழ்ந்தவனுக்கு வெளிச்சத்தில் வாழ்வது கடினம்.

சாமானிய மனிதர்களான நாம் வாழ்வின் சின்ன சின்ன சுகங்களைக் கூட களையமுடியாது வாழ்கிறோம்.

யாருக்குத்தான் சிற்றின்பங்களையும் சுகமான வாழ்வையும் இலகுவில் துறக்க முடியும்?

ஜனநாயக அரசியலில் ஆண் அரசியல்வாதிகளை (அவர்களிலும் பலர் மொக்கையானவர்கள்) விட மற்றவர்கள் தங்களது வார்த்தை பிரயோகங்களை கூர் தீட்டவில்லை. ஆனால் சாதாரணமாகவே பெண்கள் மொழி திறமையுள்ளவர்கள். கல்வி, பதவி, அதிகாரம் என்பன மேலும் அவர்களின் வார்த்தைகளின் சாரத்தையும் ஆளுமையையும் (Content) கூர்மைப்படுத்துகிறது என்பது உண்மை.

**ஜனநாயக அரசியலில் ஆண் அரசியல்வாதிகளை (அவர்களிலும் பலர் மொக்கையானவர்கள்) விட மற்றவர்கள் தங்களது வார்த்தை பிரயோகங்களை கூர் தீட்டவில்லை.**

**ஆனால் சாதாரணமாகவே பெண்கள் மொழி திறமையுள்ளவர்கள். கல்வி, பதவி, அதிகாரம் என்பன மேலும் அவர்களின் வார்த்தைகளின் சாரத்தையும் ஆளுமையையும் (Content) கூர்மைப்படுத்துகிறது என்பது உண்மை.**

**இவற்றால் பல பெண்கள், ஆண்கள் புத்திசாலியல்ல (Jerk, Idiot) என நினைகிறார்கள். பல ஆண்கள், பெண்களை கண்டு அஞ்சும் தன்மையும் கொண்டுள்ளனர். ஆரம்பத்தில் கயிற்றில் கட்ட மறுக்கும் குட்டி நாய்போல் எந்த ஆணும் ஆரம்பத்திலே அடிமையாக விரும்புவதில்லை, பல குடும்பங்களில் ஆண்கள் அடிமையாகப் பிற்காலத்திலிருந்தாலும்.**

இவற்றால் பல பெண்கள், ஆண்கள் புத்திசாலியல்ல(Jerk, Idiot) என நினைகிறார்கள். பல ஆண்கள், பெண்களை கண்டு அஞ்சும் தன்மையும் கொண்டுள்ளனர். ஆரம்பத்தில் கயிற்றில் கட்ட மறுக்கும் குட்டி நாய்போல் எந்த ஆணும் ஆரம்பத்திலே அடிமையாக விரும்புவதில்லை, பல குடும்பங்களில் ஆண்கள் அடிமையாகப் பிற்காலத்திலிருந்தாலும்.



இவைகள் பற்றிய ஆய்வுகள் செய்யப்படவில்லை. இயற்கையின் சூட்சுமத்தால் பிறந்த காமத்தால் உருவாகும் ஆண், பெண் உறவு என்பது தவிர்க்க முடியாது.

காலம் காலமாக உடலுறவு, குழந்தை பேறு எனும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. ஆனால் அவை தொடர்ச்சியான குடும்ப உறவின் விளைவாக மட்டும் இருக்கும் என்பது நிச்சயமில்லை. இந்தியா சீனா போன்ற நாடுகள் சுதந்திரமடைந்து 75 வருடங்கள் மட்டுமே. ஆனால் இங்கு நடக்கும் பொருளாதார மாற்றங்கள் ஐரோப்பிய நாடுகளில் பல நூற்றாண்டுகள் நடப்பதை விட வேகமானவை. அதேபோல் கலாச்சார மாற்றங்களும் நடக்கும் என்பது எனது நம்பிக்கை. ஆனால் அவற்றிற்குத் தயாராகாத பெற்றோர்கள், அரசுகள் நிலை தடுமாறுவதும் நடக்கும் என நினைக்கிறேன்.

இந்த விடயத்தை எண்ண வைத்த சீன அக்கியுபங்சர் வைத்திய பெண்ணுக்கு நன்றிகள்.

# No Holds Barred, Nothing Held Back!



# பேராசிரியருடன் பாசாங்குகள் இல்லாத பகிர்வு

**கற்சுறா**: மேற்கின் மேற்கு என்று அமெரிக்காவிற்குள்ளும் கனடாவிற்குள்ளும் பயணப்பட்ட உங்கள் அனுபவங்களை நீங்கள் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறீர்கள்? அதில் நீங்கள் ரொரண்டோவிற்கு வந்து கலந்து கொண்ட இரண்டு இலக்கியக் கூட்டங்களின் அனுபவம் குறித்துச் சொல்லுங்கள்?

**அ.ராமசாமி**: அவை பற்றித்தானே முகநூலில் இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது.

**ஜோர்ஜ்**: ஓம். பரதன் நவரத்தினம் அதுபற்றி எழுதியிருந்தார். முதல் நாள் போனது கள்ளர் கூட்டம். நேற்றுப் போனது காடையர் கூட்டம் என்று எழுதியிருந்தார். நட்சத்திரன் செவ்விந்தியனும் தன் பங்கிற்கு ஆ.சி.கந்தராசா பற்றி விபரமாக எழுதியிருந்தார். பார்த்திருக்கிறீர்களா?

**அ.ராமசாமி**: ஆமாம் பார்த்தேன். நட்சத்திரன் செவ்விந்தியன் அவர்கள் நீண்ட நாட்களாக ஆ. சி.கந்தராசா பற்றி எழுதிக் கொண்டேயிருக்கிறார். இந்த நிகழ்வு நடைபெறுவது குறித்தும் தனது கருத்தை எழுதியிருக்கிறார். நேற்றுக் கூட்டத்திலும் கொஞ்சம் சலசலப்பு. அது தீபச்செல்வனது 'பயங்கரவாதி' நாவல் குறித்த நிகழ்வு. நான் எல்லாம் பேசி முடித்து விட்டேன். அந்த நாவலுக்கான தீபச்செல்வனது 'றோல்' என்னவென்று பேசினேன். கதையின் பாத்திரங்கள் குறித்து என்ன வரைபு செய்திருக்கிறார் என்று பேசினேன். பல்கலைக் கழகத்தில் நடந்தவை எல்லாம் நேரடியான தகவல். அவரது அனுபவம். மாணவர் இயக்கத்திலையும் இருந்திருக்கிறார். அதையெல்லாம் நல்லாத்தான் எழுதியிருக்கிறார். அதிலையும் விடலைப்பருவத்து மனநிலைகளையும் கொண்டு வந்திருக்கிறார். என்றாலும் நன்றாக இருக்கிறது.

அதன் மையப்பாத்திரமான மாறன் இயக்கம் சார்ந்து காம்பஸ் போய் புலிகள் அனுப்பிப் படிப்பிக்க வைத்தவர் என்றமாதிரி இருக்கிறது. ஆனால் அங்கே நடந்த செயற்பாடுகள் சாதாரணமாக ஒரு மாணவன் போனவுடன் என்ன செய்வானோ அதேமாதிரியான செயற்பாடுகள் உள்ள ஒருவனாகக் கதை சொல்லப்படுகிறது. ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் காதலிப்பான். முத்தம் கொடுக்க வேண்டும் என யோசிப்பான். இப்படித்தான் அது சொல்லப்படுகிறது. ஒரு இயக்கம்

**(தீபச்செல்வன் பற்றி...) எந்த எழுத்தாளனுக்கும் கேட்பதை எப்படி எழுதுவது என ஒன்று இருக்கிறது. கேட்பதை எழுதுவதற்கும் அனுபவித்ததை எழுதுவதற்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆனால் இந்த நாவலில் அவர் தான் நம்பின அரசியலுக்கு விசுவாசமாக இருக்கிறார் என்பதை விடவும் அதுகுறித்து ஒரு craft. கலைநுட்பம் :பண்ணியிருக்கிறார்.**

**இதில புலிகள் மீதிருக்கும் சில விமர்சனங்களிற்கு, அதாவது சிறுவர் படை, மற்றும் முஸ்லீம்கள் மீதான வெறுப்பு போன்ற விமர்சனங்களுக்கெல்லாம் அவர் நேரடியாப் பதில் சொல்லாமல் அதற்கெனச் சில கதாபாத்திரங்களை உருவாக்கி இருக்கிறார்.**

சார்ந்து இப்படி இருப்பதற்கான வாய்ப்புக் குறைவு. விதிமுறைகளில் அவன் கவனமாக இருப்பான்.

அதனை விட வெளியில ஒரு போராட்டம் நடக்கிறது. அதற்குப் பல்கலைக்கழக மாணவர்களாக அதற்குக் கொடுக்கும் தார்மீக ஆதரவுப் பகுதிகள் எல்லாம் நன்றாக வந்திருக்கிறது. அதில அவரிடம் ஒரு உண்மை இருக்கிறது. ஆனால் இயக்கம் நடத்தின போர், அங்கே நடத்தின தமிழீழ அரசாங்கம் என்று அதைப் பற்றியெல்லாம் எந்த விமர்சனமும் இல்லாமல் பாராட்டுகிறார். அங்கேயிருந்த அறிவுச் சோலை (இது செஞ்சோலையா) பொங்கு தமிழ், திலீபன் மருத்துவமனை என்று இந்த மாதிரியான விடயங்கள் எல்லாவற்றையும் சொல்லுகிறார். ஆனால் இவற்றை அவர் சொல்லும் பொழுது பல்கலைக்கழக வாழ்வில் சொல்லப்படும் நேரடி அனுபவம் சார்ந்த பங்கேற்பு மனநிலை இங்கே இல்லாமல் போகிறது.

**ஜோர்ஜ்**: செயற்கைத்தனம் என்பது இதனைத்தான்.

**அ.ராமசாமி**: ஆமா. அது நாவலுக்குள்ளேயே இருக்கிறது. அப்படித்தான் எழுதியிருக்கிறார். அப்படித்தான் அவரால் எழுதவும் முடியும்.

**ஜோர்ஜ்**: ஏனென்றால், இவர்கள் குறிவைக்கும் வாசகர்கள் என்பவர்கள் வேறு. அவர்களைக் குறிவைத்தே இவை எழுதப்படுபவை.

**அ.ராமசாமி**: அப்படி ஒன்றும் இருக்கிறது என்றாலும், இவர்களால் முடியவே முடியாது. எந்த எழுத்தாளனுக்கும் கேட்பதை எப்படி எழுதுவது என ஒன்று இருக்கிறது. கேட்பதை எழுதுவதற்கும் அனுபவித்ததை எழுதுவதற்கும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆனால் இந்த நாவலில் அவர் தான் நம்பின அரசியலுக்கு விசுவாசமாக இருக்கிறார் என்பதை விடவும் அதுகுறித்து ஒரு craft, கலைநுட்பம் :பண்ணியிருக்கிறார்.


இதில புலிகள் மீதிருக்கும் சில விமர்சனங்களிற்கு, அதாவது சிறுவர் படை, மற்றும் முஸ்லீம்கள் மீதான வெறுப்பு போன்ற விமர்சனங்களுக்கெல்லாம் அவர் நேரடியாப் பதில் சொல்லாமல் அதற்கெனச் சில கதாபாத்திரங்களை உருவாக்கி இருக்கிறார். முகமாலைப் பிரச்சனைக்குப் பிறகு பல்கலைக்கழகத்திற்கு நேரடியாகப் போகமுடியாது, பொதுவாக கிளிநொச்சியூடாக ஒரு நாளில் பயணிக்கும் பயணத்தை 3 நாட்கள் பயணம் செய்து கப்பலில் போகிறார்கள். திருகோணமலைக் கூடாகச் சுற்றிப் போகும் அந்தப் பயணத்தில் ஒரு முஸ்லீமுடன் நடக்கும் உரையாடலில் அவரும் 'எங்காக்களும் கொஞ்சம் தப்புப் பண்ணிட்டாங்க' என்பது மாதிரி ஒவ்வொரு விடயத்திற்கும் அந்த நாவலுக்குள்ளேயே பதிலிருக்கிறது.

அதேமாதிரி ஆர்மில சந்திம என்று ஒருவர் இருக்கிறார். அவர் மாறனைப் பல நேரங்களில காப்பாற்றுகிறார். பந்துல என்பவர் பிரிகேடியர். அவனுடன் விவாதித்து விவாதித்து இவன் படிக்க வந்திருக்கிறான். இவன் நல்லவன் என்று இவனைக் காப்பாற்றுகிற நல்ல சிங்களச் சிப்பாயும் அந்தக் கதைக்குள் இருக்கிறான். அவன் யாரென்று பார்க்கும் போதுதான் எனக்குச் சந்தேகம் வந்தது. வெலிக்கடைச் சிறைப் படுகொலை முடிந்து 83க் கலவரம் தொடங்கிய போது கொழும்பில் அடிபட்ட தமிழ் மக்களை மனிதாபிமானத்தோடு காப்பாற்றிய ஒருவரின் மகன்தான் இந்த ஆர்மி. இது ஒரு craft தான். இதனைப் பலர் செய்வார்கள்தான். ஒரு வகைமாதிரியான பாத்திரங்களை தமது அரசியலுடன் உருவாக்க வேண்டும் என நினைப்பவர்கள் இதனைத்தான் செய்வார்கள்.

**கற்சுறா**: நம்முடைய கதை சொல்லி சோபாசக்தியும் இந்த விளையாட்டைப் பின் நாட்களில் எழுதி வந்த அதிக கதைகளில் தமிழ் நாட்டு வாசகர்களுக்காக அதிகம் செய்திருப்பார். கதை சொல்வதை விட இவர்களுக்கு 'craft' முக்கியம்.

**அ.ராமசாமி**: ஆமா. அப்படித்தான் இங்கேயும்.

அதனை விட முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இந்த நாவலில் இருக்கின்ற முக்கியமான அடையாளங்கள் எல்லோரும் இயக்கம் சார்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர்களாக இருப்பார்கள். அதாவது மாறன்: மலரினி என்று அர்களுடைய அடையாளம் மட்டுமல்ல அவர்களது குடும்பப் பின்னணியும் அவ்வாறே சொல்லப்படுகிறது. மற்றவர்களைப் பற்றி அந்த நாவலில் ஒன்றுமே கிடையாது. அந்த சமூகம் எப்படி இருந்தது என்று ஒன்றுமே கிடையாது. இதுதான் எனது விமர்சனமாக இருந்தது. இந்த மாதிரி விடயங்களைச் சொல்லிவிட்டு அவருக்கு புனைவாக fiction -ஆக்குவதில் போதாமை இருக்கிறது. பல்கலைக்கழக வளாகத்தின் - Real campus- வாழ்வைச் சொல்லும் இடம் சிறப்பாக இருக்கிறது என்றும் சொல்லி விட்டேன். கூட்டமும் முடிந்து போய்விட்டது. கருத்துரை வழங்கும் போது ஒரு அம்மா



முதலாவதாக கருத்துச் சொல்ல வந்தார்.

**ஜோர்ஜ்**: யார் அது? என்ன பெயர்?

**அ.ராமசாமி**: சிவவதனி பிரபாகரன் என்று சொன்னார்கள்.

**ஜோர்ஜ்**: ஐயோ! பாவம்.

**அ.ராமசாமி**: 'பேராசிரியர் விமர்சனம் செய்யலாம். ஆனால் இந்த நாவலை அவர் புனைவு என்று சொல்லக் கூடாது. இது அனைத்தும் உண்மைச் சம்பவம்' என்றார் அந்த அம்மா.அப்படியாயின் இதில் வருகின்ற மாறன் என்கிறவர் தீபச்செல்வன் தான் என்றால், மாறன் இறந்து போகிறானே இந்த நாவலில்.எப்படி fiction ஆகும் என்ற விடயத்தை யாருமே புரியமாட்டேன் என்கிறார்கள்.

**ஜோர்ஜ்**: என்னவென்று சொன்னால் இந்த யாழ்ப்பாணத்து ஆக்களுக்கு ஒரு narrative ஒன்றிருக்கிறது. நடந்தது ஒரு புனிதப் போராட்டம். இந்தத் துரோகிகள் தங்களைக் காட்டிக் கொடுத்திருக்கா விட்டால் தாங்கள் ஈழத்தைப் பிடித்திருப்போம் என்று கதை சொல்லுகிறார்கள்.

**அ.ராமசாமி**: ஆமா. இதில எல்லாத்துக்கும் ஒரு கதை இருக்கிறது. அதேபோல் துரோகிகளுக்கும் ஒரு கதாபாத்திரமும் கதையும் வருகிறது. அந்த பாத்திரத்தின் பெயர் நிரோஜன். மாணவர் தலைவராக ஆக முடியாததால், ராணுவத்தோடு சேர்ந்து துரோகம் செய்கிறான். பயன்படுத்திய பின் தூ க்கியெறியப்படுகிறான்.

**ஜோர்ஜ்**: இதுவந்து typical யாழ்ப்பாண story.

**கற்சுறா**: மன்னிக்கவேண்டும் இதனை இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவதற்கு. யுத்தம் முடிந்த காலத்தில் கவிஞர் கருணாகரன் அவர்கள் காலச்சுவட்டில் எழுதியதாக ஒரு கட்டுரை திரும்பவும் அண்மைக்காலத்தில் பேசப்பட்டதல்லவா? அந்தக் கட்டுரை குறித்து தீபச்செல்வன் குமுறியெழுந்து கருணாகரன் இப்படித்தான் என்றெல்லாம் பதிவு செய்திருந்ததைக் கவனித்திருப்பீர்கள் தானே? அதற்குக் கருணாகரன் இந்தக் கட்டுரையை எனது கையெழுத்திலிருந்து ரைப் செய்து காலச்சுவட்டிற்கு அனுப்பி வைத்ததே நீதானே என்று கேட்ட போது, வீரரோசம் வீரமானம் எல்லாம் தீபச்செல்வனுக்கு எங்கு போய் ஒழிந்தது என்று தெரியவில்லை.

**ஜோர்ஜ்**: எங்களுடைய பிரச்சனையெல்லாம் இதுதான் பேராசிரியரே! இவர்கள் எல்லோரும் கூட்டுக் களவாணிகள். இவர்கள் ஒரு narrative ஒன்றை வைத்திருக்கிறார்கள். அது வந்து எங்கேயும் விற்கலாம். ஒன்று யாழ்ப்பாணத்தரிட்டயும் விற்கலாம் தமிழ் நாட்டுக்காரர்களிடமும் விற்கலாம். அதனை வைத்து நடக்கின்ற பிழைப்புத்தான் இந்த விடயம்.

**அ.ராமசாமி**: தமிழ் நாட்டிலயும் கொஞ்சப்பேர் வாங்குவார்கள். தமிழ்நாட்டில் புலிகள் தவறானவர்கள் என்று பேசுபவர்கள் குறைவுதான். புலிகளுக்கு இன்றும் அதிக ஆதரவு உண்டு. ஆனால் அரசியல் ரீதியாக ஆதரவு கிடையாது.

**ஜோர்ஜ்**: இலங்கையில் மட்டுமல்ல புலம்பெயர் தேசத்திலையும் புலிகள் என்ற பெயர் பிழைப்புக்காகப் பயன்படும் சொல்லே அன்றி அதனை வைத்து அரசியல் செய்யமுடியாது.

**அ.ராமசாமி**: இலங்கையில் இந்த நிலை, வெளிநாட்டை விட அதிகமாகக் குறைந்திருக்கிறது. திரும்பவும் புலிகள் அமைப்பைக் கட்டுவதோ, ஆயுதப்போரைத் தொடங்குவதோ அங்கு நடக்காது. யாரும் தயாராக இருக்கமாட்டார்கள் என்றே நினைக்கிறேன். நான் இரண்டு தடவை இலங்கை சென்றிருக்கிறேன். அதன் வழியாக உணர்ந்ததைச் சொல்கிறேன் . அங்கே புலிகள் பற்றிப் பேசுவதற்கு ஆட்கள் தயாராக இல்லை.

நான் இரண்டு தடவை சென்ற போதும் நாடகப் பட்டறைகள் நடத்தினேன். ஒவ்வொரு இடத்திலையும் 50 பேர் வரை பையன்களும் பிள்ளைகளும்

**எங்களுடைய பிரச்சனையெல்லாம் இதுதான் பேராசிரியரே! இவர்கள் எல்லோரும் கூட்டுக் களவாணிகள். இவர்கள் ஒரு narrative ஒன்றை வைத்திருக்கிறார்கள். அது வந்து எங்கேயும் விற்கலாம். ஒன்று யாழ்ப்பாணத்தரிட்டயும் விற்கலாம் தமிழ் நாட்டுக்காரர்களிடமும் விற்கலாம். அதனை வைத்து நடக்கின்ற பிழைப்புத்தான் இந்த விடயம்.**

**அவர்களுடைய பழைய வாழ்க்கையும் இப்போதைய நிலையும் ஞாபகம் வாறது மாதிரியான நாடகக் கருக்களையே : அவர்களுக்கு விளக்கிச் சொல்லாமல் கொடுத்துக் கொண்டிருந்தேன். 'வந்த பாதை தெரிகிறது, போகும் பாதை தெரியவில்லை' என்ற ஐடியாவை வைத்து பண்ணுங்கள் என்று சொல்லி எல்லா இடத்திலையும் கொடுத்தேன்.**

**நுவரெலியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்று நான்கு இடங்களிலும் கொடுத்தேன். அவரவர் அரசியலைத் தொடுவார்கள் என்று பார்த்தால் யாருமே தொடவில்லை. நுவரெலியாவில் மலையக வாழ்வு, இந்தியாவிலிருந்து வருகை என்று அவர்கள் அதனைப் பேசினார்கள். ஈழப் பகுதி மாணவர்கள் அதனை அரசியல் சொல்லாடலாகப் பார்க்கவில்லை.**

**அரசியல் தெரியவில்லை என்பதல்ல. எந்த அரசியலை எப்படி முன்வைப்பது என்று தெரியவில்லை. நீண்டகால அரசியல் போராட்டம், போர்களைக் கடந்துள்ளவர்களுக்குள் இப்படியொரு நிலை என்பதுதான் வேதனை.**

இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு நாடகக்கரு theme கொடுத்துக் கொண்டு இருந்தேன். அவர்களுடைய பழைய வாழ்க்கையும் இப்போதைய நிலையும் ஞாபகம் வாறது மாதிரியான நாடகக் கருக்களையே : அவர்களுக்கு விளக்கிச் சொல்லாமல் கொடுத்துக் கொண்டிருந்தேன். 'வந்த பாதை தெரிகிறது, போகும் பாதை தெரியவில்லை' என்ற ஐடியாவை வைத்து பண்ணுங்கள் என்று சொல்லி எல்லா இடத்திலையும் கொடுத்தேன்.

நுவரெலியா, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்று நான்கு இடங்களிலும் கொடுத்தேன். அவரவர் அரசியலைத் தொடுவார்கள் என்று பார்த்தால் யாருமே தொடவில்லை. நுவரெலியாவில் மலையக வாழ்வு, இந்தியாவிலிருந்து வருகை என்று அவர்கள் அதனைப் பேசினார்கள். ஈழப் பகுதி மாணவர்கள் அதனை அரசியல் சொல்லாடலாகப் பார்க்கவில்லை.

அரசியல் தெரியவில்லை என்பதல்ல. எந்த அரசியலை எப்படி முன்வைப்பது என்று தெரியவில்லை. நீண்டகால அரசியல் போராட்டம், போர்களைக் கடந்துள்ளவர்களுக்குள் இப்படியொரு நிலை என்பதுதான் வேதனை.

**ஜோர்ஜ்**: என்னவென்று சொன்னால் இவர்களுக்கு என்ன அரசியல் கற்பிக்கப்பட்டிருக்கிறதோ அது மட்டுந்தான் அரசியல் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

**அ.ராமசாமி**: புலம்பெயர் நாடுகளிலிருந்து செல்லும் மிகப்பெரிய பணவருவாயால் அவற்றை நிவர்த்தி செய்ய முடியாதது. அங்கே மிகப்பெரிய கோயில்கள் கட்டுகிறார்கள். உற்பத்தி சார்ந்த முதலீடுகள் இல்லை. ஆனால் வன்னியில், கிளிநொச்சி போன்ற இடங்களே மிகப் பெரிய பின் தங்கிய நிலையில்தான் இன்னும் இருக்கிறதது. அதே இந்திய முதலாளிகள் முதலீடு செய்ய வருகிறார்கள் என்பதும் தெரிகிறது.

(ஒரு சிறிய இடைவேளையின் பின்னர். பேசத் தொடங்கினோம்.)

**ஜோர்ஜ்**: தமிழ் நாட்டு அரசியல் குறித்துப் பேசும் போது அதற்குள் நிலவும் ஊழல் குறித்து பேசாது தவிர்க்கலாமா?

**அ.ராமசாமி**: தமிழ்நாட்டில் மற்றவர்களுடைய ஊழல்களைச் சொல்லி ஓட்டு வாங்க முடியாது. அங்கே ஊழல் என்பது வழமையானதாக மாறிவிட்டது. இன்று தி.மு.க. காரர்கள் ஊழல் செய்கிறார்கள் என்று சொல்லி, இன்னொருவரை காட்டி ஓட்டுப் போடுங்கள் என்று சொல்ல ஒருவரைக் காட்ட ஆளில்லை.

பா.ஜ.க.வின் மாநிலத்தலைவர் ஊழல் பற்றிப் பேசுகிறார். ஆனால் அவர் காட்டப் போவது எடப்பாடி பழனிச்சாமியை. எடப்பாடி பழனிச்சாமியை விட்டுவிட்டல்லவா ஊழலற்ற ஒருவரைக் காண்பிக்க வேண்டும். அதனால அங்கே ஊழல் என்பது அடிபட்டுப் போய்விடும்.

அதே அண்ணாமலை வாரிசு அரசியல் என்று பேசுகிறார். வாரிசு அரசியல் பேசினால் அ.தி.மு.க.விலும் வாரிசு அரசியல் இருக்கிறதே. மாநில அளவில் வாரிசு அரசியல் இல்லாதது போலத் தோன்றலாம். ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரிசுகள் தான் கட்சியின் பிரபலங்களாக இருக்கிறார்கள்.


**ஜோர்ஜ்**: வட இந்தியாவிலும் இருக்கிறதுதானே.

**அ.ராமசாமி**: ஆமா. ஆமா. மேலேயும் இருக்கிறது. ஜெயலலிதாவுக்கு வேணுமானால் வாரிசு இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஜெயலலிதாவுடன் இருந்த சசிகலாவின் வாரிசுகள் தானே இப்போது இருக்கிறார்கள். இப்பொழுது எடப்பாடி பையன் வந்திருக்கிறான். ஓ.பி.எஸ் பையன் வந்திருக்கிறான். பாட்டாளி மக்கள் கட்சியிலும் வாரிசுதான். எப்படி தி.மு.க.வினை மட்டும் வாரிசு அரசியல் என்று சொல்லமுடியும்?

இந்த நிலை பிஜேபியிலும் இருக்கிறது. மாநிலங்களில் அதன் தலைவர்கள் வாரிசுகள் என்பதை மறுத்துவிட முடியாது. கருத்தியல் ரீதியாக அதில் எந்த மாற்றமும் இல்லாமல் தானே இவர்களும் வருகிறார்கள்.

**கற்சுறா**: எப்படி சினிமாவில் வாரிசுக்களை நடிக்கக் கொண்டு வருகிறார்களோ அதேபோல் அரசியலிலும் தொடர்கிறதல்லா?

**அ.ராமசாமி**: இவர்கள் நடிக்க வைத்துக் கொண்டு வருகிறார்கள்.



அதே போல் மற்றவர்களும் செய்கிறார்கள். முயற்சிக்கிறார்கள். ஆனால் அது முடியல்ல.

**ஜோர்ஜ்**: மற்றது Money/ எல்லோரிடமும் அளவு கடந்த பணம் இருக்கிறது. அவர்களது பணத்தினை வைத்து எதுவும் செய்யலாம் என்ற நிலை இருக்கிறது.

**அ.ராமசாமி**: பணம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல. தமிழ்நாட்டு அரசியல் வாதிகளின் பணம் சிறிலங்காவிலும் முதலீடாகியிருக்கிறது. இலங்கையில் இருக்கிற பெரிய மீடியா வந்து தமிழ் நாட்டிலிருக்கிற சன் குரூப்தான். பெரிய அளவில அவங்கள்தான் இன்வஸ்ட் பண்ணியிருக்கிறாங்கள். அப்புறம் பெட்ரோலியம் சார்ந்து இன்வஸ்மென்டை வைத்திருப்பவர், ஆர். எம் வீரப்பன் கூட இருந்திட்டு இப்போ டி.எம்.கேயுடன் இருக்கிறார். ஜெகத்ரட்சகன் என்ற நாடாளுமன்ற உறுப்பினர்

**ஜோர்ஜ்**: அவருக்கு எத்தனையோ மெடிக்கல் கொலேஜ், என்ஜினியரிங் கொலேஜ் எல்லாம் இருக்கிறதல்லவா?

**அ.ராமசாமி**: அவர் எல்லோருடனும் இருப்பார். எந்தக் காலத்தில் யார் கவர்மெண்டோ அவர்கள் கூட இருப்பார். அப்படி நிறையப் பேர் இருக்கிறாங்கள். இப்ப புதிய தலைமுறை தொலைக்காட்சியின் உரிமையாளர் அப்படிப்பட்டவர். எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனங்களின் அதிபர் பச்சமுத்து. பேருக்கு ஒரு கட்சி வைத்திருக்கிறார். ஆனால் எந்தக் கட்சி அரசுக்கு வருகிறதோ அவர்களோடு கூட்டுச் சேர்ந்து விடுகிறார். முதலில் காங்கிரசுக்கு சப்போர்ட் பண்ணினார். பின்பு பி. ஜே.பிக்கு சப்போட் பண்ணினார். இங்கு தமிழகத்தில் டி.எம்.கே. இருந்தாலும் சப்போட் பண்ணுவார். எ.டி.எம்.கே. இருந்தாலும் சப்போட் பண்ணுவார்.அப்படி ஒரு ஐந்தாறுபேர் தமிழ்நாட்டில் இருக்கிறாங்கள். இப்படியானவர்களில் பலரும் எம்.ஜி. ஆரினால் உருவாக்கப்பட்டவர்கள்.

எம்.ஜி.ஆர் காலத்தில அவர் கைவசம் இருந்த பணத்தையெல்லாம் தேர்தலுக்குப் பயன்படுத்துவதற்காக, நீ முதலீடு பண்ணிக்க என்று சொல்லி நிறைய இடங்களில் கொடுத்து வைத்தார் என்று சொல்வார்கள். அதனுடன் அவர் காலத்தில் தான் காலேஜ், ஸ்கூல் எல்லாம் தனியார் மயப்படுத்தியதுடன் தனியார் பல்கலைக்கழகங்களும் உருவாக்கப்பட்டன என்பதோடு இணைத்துப் பார்த்தால் இது புரியவரலாம். வேலூரில் வேல் யூனிவேர்சிற்றி ஒன்று இருக்கிறது. அதன் நிறுவனர் விஸ்வநாதன் கூட எம்.ஜி. ஆரின் நம்பிக்கைக்குரியவராக இருந்தவர் தான்.

**கற்சுறா**: நாங்கள் கவனிக்க வேண்டும், தமிழகத்தில் மாஞ்சோலைப் படுகொலை நடைபெறுகிறதல்லவா, அது தி.மு.க. ஆட்சியில் தான் நடைபெறுகிறது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சி இருந்திருந்தாலும் அதேதான் நடந்திருக்கும் ஏனெனில் பங்கீட்டுப் பிரச்சனைகளில் கட்சிகளுக்குள் பேதமில்லையல்லவா?

**அ.ராமசாமி**: ஆமா, ஆமா! அதில யாரு இருந்தாலும் அப்படித்தான் நடக்கும். அங்கே எந்த முதலாளியை யார் சப்போர்ட் பண்ணுவது என்பதில்தான் இருக்கிறது. அந்த நேரத்தில எம்.ஜி. ஆர் ஆட்சியில் இருந்த நேரத்தில் கல்வித்தந்தைகளாக மாறி சுயநிதிப் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிச்சவர்களில் பலபேர் எம்.ஜி. ஆரோட நலன் விரும்பிகள். அவரது பணத்தை வைத்தே ஆரம்பித்தார்கள் என்று சொல்வார்கள். சென்னையில் வந்து ஜேப்பியார். கல்வித் தந்தை ஆவதற்கு முன்னால் சாராய வியாபாரத்தோடு அறியப்பட்டவர். அ.இ.அதிமுகவிற்குள் கொண்டு வந்தவர். எம்.ஜி.ஆர் அவர்கள். ராமச்சந்திரன் என்று பெயர் வைத்திருப்பவர்களோடு ஜாயிண்ட் எக்கவுண்ட் வைத்திருப்பார் என்று சொல்வார்கள்.

இதெ ஏன் சொல்றேன்னா.. தமிழ்நாட்டிலலஞ்சம், ஊழல் என்பது ஒரு சிஸ்டமா இருக்குங்கிறதுக்காகத் தான். எம் ஜி ஆர் காலத்தில் முதலீடு செய்வதற்கு அவருக்கும் அவரது கட்சிக்காரர்களுக்கும் தெரிந்த ஒரே வழி கல்வித் துறை. ஒரு அறக்கட்டளை வேண்டும். அதில் ஆகக் குறைந்தது 9 பேர் இருக்க வேண்டும். அந்த 9 பேருக்குள்ள உங்கள் வீட்டில் உள்ளவர்களில் 6 பேரைப் போட்டால் சரி. மற்றவர்களில் ஒரு லோயர் ஒரு ஆடிட்டர் இருப்பார்கள். நிதியைக் கணக்கு காட்ட அவர்களுக்குத்தானே தெரியும்.

**ஜோர்ஜ்**: ஒகே.ஒகே. யாருடைய காசு யாருடையது என்று தெரியாது என்பதற்காகத்தானே? இஞ்ச நீங்கள் போய்ப் பார்த்துச் சந்தித்து வந்தவர்கள் முழுப்பேரும் அதுதான். தலைவர் வந்தால் தாறம் என்று

**மனுஷ்யபுத்திரன் நேரடியாகக் கட்சியில் சேர்ந்து விட்டார். எந்தப் பிரச்சனையும் இல்லாமல் கருணாநிதி காலத்திலேயே சேர்ந்து விட்டார்.**

**இன்னும் சில கவிஞர்களும் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அதன் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொள்வார்கள். மற்ற நேரங்களில் வலதுசாரி, இந்துத்துவ அழகியலோடு கவிதைகளையும் கதைகளையும் எழுதிக் கொண்டிருப்பார்கள்.**

**திராவிடக் கலையியல், திராவிட இலக்கிய நோக்கு என்பதைப் பற்றிய ஒவ்வாமையோடு இருப்பார்கள். ஆனால் அதிகாரத்துக்கு வந்த திராவிட அரசாங்கத்தை நாடிச் செல்லும் வழியைச் சரியாகச் செய்வார்கள்.**

சொல்லுற ஆக்கள் தான்.

**கற்சுறா**: ஆக மொத்தம் ஒரு கனடா இலக்கியத் தோட்டம் என்ற நிறுவனம் செயற்படுவதுமாதிரி என்று சொல்லுகிறீர்கள்?

**ஜோர்ஜ்**: இது ஒரு அமைப்பு ரீதியான Systematic corruption தானே?

**அ.ராமசாமி**: அறக்கட்டளைகளின் பெயரில் அரசாங்கத்திடம் நிலத்தை மானியமாகப் பெறலாம். கலை, கல்வி போன்றவற்றுக்குத் தொண்டாற்றுவதாகச் சொல்லி 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் பெறுவார்கள். இது இப்போதில்லை. காங்கிரஸ் காலத்தில் இருந்த தொடரும் நடைமுறைதான். யாரெல்லாம் அறக்கட்டளைகளின் பெயரில் கல்வி நிறுவனங்கள் நடத்துகிறார்களோ, அங்கெல்லாம் இந்த முறைப்படுத்தப்பட்ட சிஸ்டமெடிக்கான ஊழல் நடக்கும். புதிதாகக் கல்வி, சமூகத்தொண்டு நிறுவனங்கள் தொடங்குபவர்களும் இப்படித்தான் செயல்படுகிறார்கள். மத்தியில் ஆளுங்கட்சிக்கு உதவும் வகையில் துணை அமைப்புகள் தொடங்கப்பட்டு நன்கொடைகள் பெறப்படுகின்றன. புது வகைச் சாமியார்கள் சாமியார் களாகவும் வியாபாரிகளாகவும் இருக்கிறார்கள். உண்டியல் வருவாயெல்லாம் கணக்கில் வராது.

**ஜோர்ஜ்**: அதுதானே பிராமணர்கள் தமது நிலங்களைத் திருப்பித் தரவேண்டும் என்று கோசமிடுகிறார்களே?

**அ.ராமசாமி**: நிலங்களை அல்ல, கோவில் சொத்துக்களை. கோவில் அதிகாரம் என்பது அதுதான். ஒவ்வொரு கோயிலுக்கும் நூறு, ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. மன்னர்கள் காலத்தில் எழுதி வைக்கப்பட்ட மானியங்கள். அதனைக் கொண்டு கட்டப்பட்ட சத்திரங்கள், மண்டபங்கள் போன்ற அசையாச் சொத்துகள் இருக்கின்றன. குறைந்த வாடகையில் பலரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**ஜோர்ஜ்**: திராவிடம் என்ற பெயருக்குள் இன்று அதிகமானவர்கள் உத்தியோகபூர்வமான தி. மு.க. ஆதரவாளர்களாகத் தானே இருக்கிறார்கள். நமது மனுஷ்யபுத்திரன் மாதிரி?

**அ.ராமசாமி**: மனுஷ்யபுத்திரன் நேரடியாகக் கட்சியில் சேர்ந்து விட்டார். எந்தப் பிரச்சனையும் இல்லாமல் கருணாநிதி காலத்திலேயே சேர்ந்து விட்டார்.

இன்னும் சில கவிஞர்களும் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அதன் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொள்வார்கள். மற்ற நேரங்களில் வலதுசாரி, இந்துத்துவ அழகியலோடு கவிதைகளையும் கதைகளையும் எழுதிக் கொண்டிருப்பார்கள். திராவிடக் கலையியல், திராவிட இலக்கிய நோக்கு என்பதைப் பற்றிய ஒவ்வாமையோடு இருப்பார்கள். ஆனால் அதிகாரத்துக்கு வந்த திராவிட அரசாங்கத்தை நாடிச் செல்லும் வழியைச் சரியாகச் செய்வார்கள். அதற்கு திமுகவின் இலக்கிய முகங்களான கவி. கனிமொழி, எழுத்தாளர் இமையம் போன்றவர்கள் பயன்படுகிறார்கள்.

**ஜோர்ஜ்**: இப்பொழுது பத்ரி அவர்களது பிரச்சனை ஒன்று தோன்றியிருக்கிறதல்லவா? பத்ரி வந்து அம்ருதாவில ஆலோசகராக இருந்தாரா?

**அ.ராமசாமி**: அம்ருதாவில நான் கூடத்தான் ஆலோசகர். திலகவதி ஒரு பத்திரிகை ஆரம்பித்தார். அவர் அப்பொழுது போலீஸ் ஒபீசர். அவர் தன்னுடைய பெயரைப் போட முடியாது. அதனால் அவர் பையன் பெயரினைப் போட்டிருக்கிறார்கள். அதற்குக் கீழே ஆலோசகர் என்று உங்கள் பெயரைப் போடலாமா என்று கேட்பார்கள். இதனாலென்ன யாருக்கும் ஒரு பிரச்சனையுமில்லை. அது ஒரு பெரிய 'றோலே' கிடையாது. ஒரு நாடகம் பற்றி ஒரு கட்டுரை அதில் வருகிறதென்றால் அது குறித்துக் கூட இன்று வரை என்னிடம் எதுவும் கேட்டது கிடையாது. அப்படித்தான் இருக்கிறது அதிகமான பத்திரிகைகளில் இந்த ஆலோசகர் என்ற கதை.

**கற்சுறா**: இப்படிப் பேருக்கு இருக்கும் ஆலோசகர் என்ற இடத்திற்கு உங்கள் பெயரைப் பாவிக்க நீங்கள் எவ்வாறு சம்மதிக்க முடியும்?

**அ.ராமசாமி**: அது ஆரம்பிக்கும் போது அது ஒரு இலக்கியப் பத்திரிகைதானே... இலக்கியப் பத்திரிகையில் பெயர் இருந்தால் பயன்படும் என்று தான் ஒத்துக்கொண்டேன்.

**கற்சுறா**: அது உங்களுடைய அடையாளத்தைச் சீரழிக்குமாயின் நீங்கள் அதனை மறுக்கத்தானே வேண்டும்?

**முத்துலிங்கம் யாரென்றே தெரியாத அவரது கையெழுத்துப் பிரதி ஒன்றை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது நான் பாண்டிச்சேரியில் இருந்தேன். அவருடைய ஏதோ ஒரு நாவல் கி.ரா அவர்களிடம் வந்திருந்தது. ஒரு கையெழுத்துப் பிரதி அது. கி.ரா. அவர்கள், அவருக்கு முன்னுரை எழுத, கருத்துச் சொல்ல வரும் பிரதிகளைப் பொதுவாக என்னிடம் கொடுப்பார். கொடுத்துப் படிக்கச் சொல்லிவிட்டு, படித்து ஏதாவது சொல்லுப்பா என்று சொல்லுவார். நான் அதனைப் படித்துவிட்டு இப்படித்தான் இருக்கிறது எனச் சொன்னேன்.**

**அப்போதுதான் முத்துலிங்கம் ஒன்றொருவர் இருக்கிறார். அவ் பல்வேறு நாடுகளில் வேலை செய்திருக்கிறார். அவற்றைப் பதிவு செய்கிறார் என்றார் கி.ராஜநாராயணன்.**

**ஒருவிதமான பயணக் கட்டுரைக்குள் தன்னை ஒரு பாத்திரமாக்கிப் புனைவாகத் தருகிறார். அதை நாவலென்றோ, சிறுகதையென்றோ சொல்லமுடியாதே என்றேன்.**

**‘ தமிழில் அப்படி ஒன்று இருப்பது தப்பில்லையே‘ என்றார். ‘ஆமா இருந்துவிட்டுப் போகட்டும் தப்பில்லை‘ என்றேன். அவருடைய சிறுகதைகள் கூட அப்படித்தானே இருக்கிறது.**

*அ.ரா. அம்ருதாவில் ஒரு அரசியலும் பேசுவதில்லை. தனியே இலக்கியத்திற்குள்தான் நிற்கிறார்கள். அதிலும் தளவாய் சுந்தரம் அவர்கள் கேட்டார். அவர் என்னுடைய மாணவன். தன்னைத்தான் அதனைப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்கள். உங்கள் பெயரைப் பாவிக்கிறேன் என்றான். சரி என்றேன்.*

*இதில எனக்கு ஒன்றுமேயில்லை. அவர்களே முதல்ல, எம்.ஜி.ஆர். காலத்தில அவரை சப்போர்ட் பண்ணினார்கள். காவல் துறைக்குள் அவருக்கு வால்டர் தேவாரம் ஆசான். அதெல்லாம் எனக்குப் பின்னால்தான் தெரியும். அதையெல்லாம் விட அம்ருதா எல்லாம் ஒரு பெரிதாக ஒன்றுமில்லை என்பதால் அதில் பெயர் இருப்பதைப் பொருட்படுத்தவில்லை.*

**ஜோர்ஜ்**: *நான் முன்பே விகடனிலேயோ குமுதத்திலேயோ வாசித்தேன் வால்டர் தேவாரம் திலகவதி பற்றி.*

**கற்சுறா**: *இது வந்து எப்படியிருக்கிறதென்றால் காலம் பத்திரிகையில் மற்றும் இலக்கியத் தோட்டத்தில் கவிஞர் செழியன் அவர்களை ஆலோசகராகவும் உறுப்பினராகவும் வைத்திருந்த கோமாளித்தனம் போலத்தானே!*

**ஜோர்ஜ்**: *ஒப்புக்குச் சப்பாணிக் கதைதான். அதுசரி, நீங்கள் முத்துலிங்கம் அவர்களைச் சந்திக்கவில்லையா?*

**அ.ராமசாமி**: *நான் இதுவரை அவரைப் பார்த்ததில்லை. 2016 இல் நான் முதல் வந்தபோதும் அவரைப் பார்க்கவில்லை. பார்க்க விரும்பினேன். அப்போதும் இப்போதும் டொரண்டோவில் இல்லை என்று தெரிந்தது.*

*இந்த முறை ஆ.சி.கந்தராசா நாவல் வெளியீட்டில் பார்க்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் வரவில்லை. அவரது வாழ்த்துரையாக, ஆசிக் கட்டுரையாக ஒன்று வாசித்தார்கள்.*

*அவர் எப்பொழுதும் ஒரு நழுவல் போக்குடையவர். ஒரு கருத்துச் சொல்ல வரும் பொழுது நழுவுவார். எதையும் நேரடியாகப் பேசமாட்டார் என்பது அதில் வெளிப்பட்டது.*

**ஜோர்ஜ்**: *அவருடைய பயண இலக்கியங்கள் பற்றிய உங்கள் கணிப்பீடு சரியானது எனத்தான் நான் நினைக்கிறேன். அது யாரோடு பேசியபோது சொன்னதாகச் எழுதியிருந்தீர்கள்?*

**அ.ராமசாமி**: *முத்துலிங்கம் யாரென்றே தெரியாத அவரது கையெழுத்துப் பிரதி ஒன்றை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது நான் பாண்டிச்சேரியில் இருந்தேன். அவருடைய ஏதோ ஒரு நாவல் கி.ரா அவர்களிடம் வந்திருந்தது. ஒரு கையெழுத்துப் பிரதி அது. கி.ரா. அவர்கள், அவருக்கு முன்னுரை எழுத, கருத்துச் சொல்ல வரும் பிரதிகளைப் பொதுவாக என்னிடம் கொடுப்பார். கொடுத்துப் படிக்கச் சொல்லிவிட்டு, படித்து ஏதாவது சொல்லுப்பா என்று சொல்லுவார். நான் அதனைப் படித்துவிட்டு இப்படித்தான் இருக்கிறது எனச் சொன்னேன்.*

*அப்போதுதான் முத்துலிங்கம் ஒன்றொருவர் இருக்கிறார். அவ் பல்வேறு நாடுகளில் வேலை செய்திருக்கிறார். அவற்றைப் பதிவு செய்கிறார் என்றார் கி. ராஜநாராயணன்.*

*ஒருவிதமான பயணக் கட்டுரைக்குள் தன்னை ஒரு பாத்திரமாக்கிப் புனைவாகத் தருகிறார். அதை நாவலென்றோ, சிறுகதையென்றோ சொல்லமுடியாதே என்றேன். ‘தமிழில் அப்படி ஒன்று இருப்பது தப்பில்லையே‘ என்றார். ‘ஆமா இருந்துவிட்டுப் போகட்டும் தப்பில்லை‘ என்றேன். அவருடைய சிறுகதைகள் கூட அப்படித்தானே இருக்கிறது.*

**ஜோர்ஜ்**: *எல்லாமே பயணக்கட்டுரைகள். இதயம் பேசுகிறது மணியன் மாதிரித்தான்.*

**அ.ராமசாமி**: *கட்டுரையை எங்கேயாவது ஒரு இடத்தில* fiction *ஆக மாத்துவார். அதுதான் அவர் செய்யும் வேலை.*

**ஜோர்ஜ்**: *இவர்கள் வழங்கும் இலக்கியத் தோட்ட விருது குறித்த பதிவொன்றை ஜெயமோகன் அவர்கள் போட்டிருந்ததை நீங்கள் கவனித்தீர்களா? அவரை அசோகமித்திரனுக்குப் பின்பு ஏதோ என்பது போல் அவரைச் சிலாகித்திருந்தார்.*

**கற்சுறா**: இவர்களுடைய இலக்கியத் தோட்டம் என்ற விருது விழாவில் இந்தமுறை தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்ட சாம்ராஜ் என்பவரை நான் நினைக்கிறேன் சாம்ராஜ் யார் என்பதை முத்துலிங்கம் அவர்கள் அறிந்திருக்கவே மாட்டார்.

**அ.ராமசாமி**: ஆமாம். அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஜெயமோகன் இணையதளத்தில் அவரைப் பற்றி எழுதியிருப்பதால் அறிந்திருக்கவும் வாய்ப்புண்டு. ஆனால் நிச்சயம் செல்வத்துக்குத் தெரியும்.

நீங்கள் கவனியுங்கள் முத்துலிங்கத்திற்கும் செல்வத்திற்கும் இந்த இலக்கியப்பரப்பில் கிடைத்த இடத்தை அவர்கள் தொடர்ந்து தக்க வைப்பதற்காகத்தான் இதனைச் செய்கிறார்கள் என்பதனை விட அதில் ஒன்றுமேயில்லை. தம்மைத் தொடர்ந்து அதேபோல் கொண்டு செல்வதற்கு யாரெல்லாம் தமிழ்நாட்டிலிருந்து பயன்படுவார்கள் என்று பார்க்கிறார்கள். அவர்களை அழைத்து விருதுகளைக் கொடுக்கிறார்கள். அவ்வளவுதான். அதிலையும் யாருக்குக் கொடுக்க வேண்டும் அல்லது கொடுக்கக் கூடாது என்று அவர்களுக்குப் பெரிய விளக்கம் எல்லாம் கிடையாது.

இதனைவிடவும் தமிழ்நாட்டிலிருந்து பரிந்துரைகள் இருக்கும் என்றே நினைக்கிறேன். அதையும் ஒரே இடத்திலிருந்து பெறுகிறார்கள் என்று கூடச் சொல்லமுடியாது. வெவ்வேறு வருசத்தில வெவ்வேறு ஆட்கள் சொல்கிறார்கள் என்று தோன்றுகிறது. அதனால சிலருக்கு இந்த வருசம் மற்றவர்களுக்கு அடுத்த வருசம், அதுதான்.

ஆனா அங்கயிருந்து ரெக்கமண்டேசன் பண்ணுபவர்கள், ஒன்று ஜெயமோகன் பக்கம், மற்றது காலச்சுவடு பக்கம். காலச்சுவட்டில் கண்ணன் என்றால் கண்ணனே சொல்கிறார் என்றில்லை. காலச்சுவடு குழுவில் இருக்கும் வெங்கடாசலபதி, சுகுமாரன் என்று பேசி அவர்கள் தமக்கானவர்களைத் தெரிவிப்பார்கள். ஜெயமோகன் தனக்கு வேண்டியவர்களைத் தெரிவிப்பார்.

> **நீங்கள் கவனியுங்கள் முத்துலிங்கத்திற்கும் செல்வத்திற்கும் இந்த இலக்கியப்பரப்பில் கிடைத்த இடத்தை அவர்கள் தொடர்ந்து தக்க வைப்பதற்காகத்தான் இதனைச் செய்கிறார்கள் என்பதனை விட அதில் ஒன்றுமேயில்லை. தம்மை, தொடர்ந்து அதேபோல் கொண்டு செல்வதற்கு யாரெல்லாம் தமிழ்நாட்டிலிருந்து பயன்படுவார்கள் என்று பார்க்கிறார்கள். அவர்களை அழைத்து விருதுகளைக் கொடுக்கிறார்கள். அவ்வளவுதான். அதிலையும் யாருக்குக் கொடுக்க வேண்டும் அல்லது கொடுக்கக் கூடாது என்று அவர்களுக்குப் பெரிய விளக்கம் எல்லாம் கிடையாது.**
>
> **இதனைவிடவும் தமிழ்நாட்டிலிருந்து பரிந்துரைகள் இருக்கும் என்றே நினைக்கிறேன். அதையும் ஒரே இடத்திலிருந்து பெறுகிறார்கள் என்று கூடச் சொல்லமுடியாது. வெவ்வேறு வருசத்தில வெவ்வேறு ஆட்கள் சொல்கிறார்கள் என்று தோன்றுகிறது. அதனால சிலருக்கு இந்த வருசம் மற்றவர்களுக்கு அடுத்த வருசம், அதுதான்.**

இந்த ஆண்டு வந்துபோன சாம்ராஜ், தமிழ்நாட்டிலேயே அதிகம் அறியப்படாத ஒருவர் தான். ஒரே ஒரு கவிதை மூலம் பரவலான அறிமுகம் பெற்றவர். அந்தக் கவிதை புலிகளின் தலைவர் பிரபாகரன் இறந்ததைப் பற்றிய கவிதை. அந்தக் கவிதைதான் இப்படியொராள் இருக்கிறார் என்று பலருக்கும் தெரியச் செய்தது. முகநூலில் அதிகம் பெயர் அடிபட்டது. நானே அதற்கு முன் அவரை நினைவில் வைத்துக் கொள்ளும்படி வாசித்திருக்கவில்லை. அதன் பிறகுதான் அவரை வாசிக்க ஆரம்பித்தேன்..

அதன்பின் தான் கோணங்கியின் கல்குதிரையில் எல்லாம் எழுதியிருக்கிறார் என்பது தெரியவந்தது. ஆனால் ஜெயமோகனுக்கு வேண்டப்பட்டவர். விஷ்ணுபுரம் இலக்கியவட்டத்தின் சிறப்பு அழைப்பாளர்.

தமிழில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் இப்படித்தான் இலக்கியச் செயல்பாடுகள் இருக்கின்றன.

**ஜோர்ஜ்**: அது சரி கோணங்கி விவகாரம் தமிழ் நாட்டில் என்ன நிலையில் உள்ளது, அப்படியே அடங்கி விட்டதா?

**அ.ராமசாமி**: ஒரு தனிப்பட்ட விடயம் என்றே கருதுகிறேன். பாலியல் அத்துமீறல் என்றால் வெறுமனே நீங்கள் முகநூலில் எழுதுவதால் எதுவுமே நடந்து விடாது. பொலீசில் தக்கபடி முறையிட வேண்டும். இப்போ வைரமுத்து பற்றி பல ஆண்டுகளாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்று வரை பொலீசில் முறையீடு செய்யவில்லை. பேஸ்புக்கில பேசுறார்கள். யூரியூப்பில் பேசுகிறார்கள். ஆனால் பொலீசில் கம்பிளைன்ட் இன்று வரை யாரும் கொடுக்கவில்லை. கொடுத்தால் தானே தெரியும் அரசு அதற்கு என்ன செய்யும் என்று?

**ஜோர்ஜ்**: இப்பொழுது பத்ரிக்கு நடந்திருக்கிறது தானே? முறையீடு செய்த பின்னால் கைது நடந்திருக்கிறது.

**அ.ராமசாமி**: அதேதான்.. அப்படித்தான் நடக்கும். பத்ரியோ அல்லது இந்த பிஜே.பி காரர்களோ திமுகவுக்கு எதிராக நிறையப் பேசியபடி இருக்கிறார்கள். தமிழுக்கு எதிராகவும் பேசியபடி இருக்கிறார்கள். அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது? யாராவது சொல்லவேண்டும். இந்த இந்த விடயங்களுக்கு எதிராக அவதூறாக இருக்கிறது என்று சொல்ல வேண்டும். பொலீசிற்குப் போனால் First Information Report

போடவேண்டுமே.

இப்போ சரியாக முறையீடு வந்து பத்ரியைப் பிடித்திருக்கிறார்கள். அதுமாதிரி கோணங்கி மீது புகார் செய்ய வேண்டும். ஆனால் கோணங்கியின் விடயம் குறித்து என்ன ஆதாரம் இருக்கிறது? ஆதாரம் இல்லை என்றால் கூட 'நான் பாதிக்கப்பட்டேன்' என்று போய்ச் சொல்ல வேண்டும்.

இப்பொழுது புதிதாக ஒரு சட்டம் அப்படி வந்திருக்கிறது. பாலியல் ரீதியாகப் பதிக்கப்பட்டவர்கள், எதுவும் ஆதாரம் காட்ட வேண்டிய தேவை இல்ல. 'நான் பாதிக்கப்பட்டேன்' என்று ஒருவர் சொன்னால் அதனை எடுத்தக் கொள்ள வேண்டும். சிறுவனாக இருந்தாலும் சிறுமியாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் அல்லது மாற்றுப் பாலினத்தவராக இருந்தாலும், பொதுவாக யாராக இருந்தாலும் பாலியல் துன்புறுத்தல் பற்றிய புகாருக்கு ஆதராம் காட்ட வேண்டியதில்லை. நான் பாதிக்கப்பட்டேன் என்ற ஒரு சொல் மட்டும் போதும். முகநூலில் எழுதுபவர்கள் போலீசில் போய்ச் சொல்ல வேண்டும். அங்கே போய்ச் சொன்னால் தான் அவர்களால் நடவடிக்கை எடுக்கமுடியும். ஆனால் அவர்கள் அதனை இன்றுவரை செய்யவில்லை.

அதற்கெதிரான கையெழுத்துக் கேட்டுக் கொண்டு என்னிடம் அனுப்பப்பட்டது. கோணங்கியின் எழுத்துகள் மீதான விமர்சனங்களை நான் முன்பே வைத்திருக்கிறேன். முருகபூபதியின் நாடகங்களில் கோணங்கியின் எழுத்து என்ன செய்திருக்கிறது என்று சொல்லி விமரிசனம் பண்ணியிருக்கிறேன். அதை வைத்துக் கொண்டு எனது கையெழுத்தைக் கேட்டார்கள். அந்தக் கையெழுத்தை வைத்து என்ன செய்யப் போகிறார்கள்? நீங்கள் பொலீசில் முறைப்பாடு செய்யுங்கள். அதுவே சரியானது. இந்த ராமசாமியின் கையெழுத்து அல்லது இன்னும் பத்துப் பேருடைய கையெழுத்தை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள்? ஒன்றுமே செய்ய முடியாது என்று சொல்லி, நான் ஆதரவு கொடுக்கவில்லை.

அவரது அண்ணன் தமிழ்ச் செல்வன் ஆரம்பத்தில் பேசினார். ஆரம்பத்தில் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்போம் என்றவர் பின்பு எதுவும் பேசவில்லை. முகநூலில் எழுதுவதைப் பரபரப்பு நோக்கம் தாண்டி எடுத்துச் செல்லவேண்டும். அந்தப் பரபரப்பை வாசித்துக் கடந்துகொண்டிருக்கிறது தமிழ் வாசிப்பு உலகம். அதனைத் தாண்டி எதுவுமே நடக்காது. முகநூலில் உருவாக்கப்படும் பரபரப்பு மாதிரி கொஞ்ச நாளில் மறந்து போய்விடுவார்கள் என நினைத்துத் தான் முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கமும், தமிழ்ச் செல்வனும் பின்னர் மவுனமாக ஆகிவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**ஜோர்ஜ்**: அவர்களுக்கு எல்லாம் தெரிந்துதானே நடந்திருக்கிறது.

**அ.ராமசாமி**: ஆமா. எல்லோருக்கும் தெரியும். முருகபூபதியின் மணல் மகுடி நாடகக்குழுவில் இதுபோன்ற பிரச்சினைகளும் சாதிரீதியான வேறுபாடுகளும் இருக்கின்றன என்பதை அங்கு நடிக்கப் போய்விட்டு, வெளியே வந்த நடிகர்கள் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து நடிக்கப் போனவர்கள் அடுத்த நாடகத்திற்கு ஏன் போகவில்லை என்று கேட்டபோது சொன்னவை அந்தத் தகவல்கள். பாண்டிச்சேரியிலிருந்தும் மதுரையிலிருந்தும் போய்விட்டு வந்து சொன்னவர்கள் எல்லாம் ஒதுங்கிக் கொண்டார்கள்.

பாண்டிச்சேரியில முருகபூபதி எனது மாணவர். அவருக்கெனத் தனித்த நாடகக் கோட்பாடு இருந்தது என்று உரையாடல்கள் வழியாக அறியமுடியாது. அப்படி உரையாடல் செய்யக்கூடியவர் அல்ல. அவரது மாணவப் பருவத்திலேயே அங்கே கோணங்கியும் வருவார்.

அப்போதிருந்தே முருகபூதியின் நாடகங்களில் ஒருவித அரூபமான சொல்முறை இருக்கும். தேர்வுக்கான நாடகப் புரஜெகட்டிற்கு நாடகம் எழுதிக் கொடுத்தது எஸ்.ராமகிருஷ்ணன். தஸ்தாவஸ்கியினுடைய மரண வீட்டின் குறிப்புக்களை வைத்து நாடகம் எழுதிக் கொடுத்தார். துறையில் அந்த மாதிரியான பிரதிகளை எல்லாம் அனுமதிப்பதில்லை. துறையில் ஆசிரியர்கள் கொடுக்கும் சில மாதிரிகளிலிருந்தே அவர்கள் தெரிவு செய்ய வேண்டும். மாணவர்களின் தெரிவை அனுமதிக்கும் வேலை ஆசிரியர்களுடையது.


அப்போது நடந்த விவாதத்தில் நான் அந்த நாடகத்தை அனுமதிக்கலாம் என்றேன். எஸ்.ராமகிருஸ்ணன் என்கிறதாலயும், அந்தந்த நேரத்தில சில புதிய விடயங்கள் நடக்கட்டும் என்று ஆதரித்துப் பேசியதாலும் அனுமதிக்கப்பட்டது. அத்தோடு நாடகப்பள்ளியில் கட்டுப்பாடுகள் தீவிரமாக இருக்கக்கூடாது என்று நம்புகிறவர்களே ஆசிரியர்களாக இருந்தார்கள்.

அதன்பிறகு அவர் போட்ட நாடகங்கள் எல்லாவற்றிலுமே கோணங்கியின் பிக்ஸ்சன நாடகமாக்கியே போட்டார். 'நாடக உரையாடலாக இல்லை. கவிதையின் சொல்முறையாக இருக்கிறது' என்று அப்போழுதே நான் விமர்சனம் பண்ணியிருந்தேன்.

'கோணங்கியின் நாவலைப் படிக்கிறதற்கே ஆளில்லை. அதனை நாடகமாகப் போட்டால் அதில் நாடகத் தன்மையே இருக்காது' என்றும் எழுதியிருக்கிறேன். அந்த விமரிசனங்களைத் தாண்டி இந்தப் பாலியல் விவகாரத்தில் நான் ஈடுபாடு காட்டவில்லை.

**ஜோர்ஜ்**: இங்கே இலக்கிய உலகத்தில் இருக்கும் சிக்கலே இதுதான். நீங்கள் என்னமாதிரியான விமர்சனங்களை முன்வைத்தாலும் அதனை மவுனமாக இருந்து கடந்து போகப் பார்க்கிறார்கள். பதில் சொல்லப் போனால் தம்மைப் பற்றிய பிரச்சனை பெருகும் என்ற பயம் ஒன்றுதான் அவர்களை மவுனமாகக் கடந்து செல்லப் பண்ணுகிறது.

தொடரும்.



# 'ஒரு ஏதோ..!'

## அங்கும் இங்கும், எங்கும் ஒரு நீள் கதை

### அதிகாரம் இரண்டு

அங்கு

"அந்த வீடு' கோயில் வாசலுக்கு நேரை இல்லையே. சத்தாருக்குத்தானே இருக்கு. கொடிமரத்துக்கு நேரை கடைக்காற புண்ணியமூர்த்தியின்ரை வீடுதானே இருக்கு. அப்ப அதுதானே எரிஞ்சிருக்க வேணும்,' என்றான் இவண்.

தாத்தர் கண் பூந்த, தலையைச் சொறிந்தார்.

'ஆனால், பிள்ளையாருக்கு செல்வ விநாயகத்தாரின் வீட்டிலைதான் கோபமாக்கும். அல்லது அதுதான் பிள்ளையாரின் கண்களுக்கு தெரிஞ்சதோ தெரியாது,' என்றார் இவணின் தாத்தாவான தாத்தர்.

அவரின் சொத்தை சால்ஜாப்பு பொய்யாகப்பட்டது, இவணுக்கு.

தாத்தர் சகல கேள்விகளுக்கும் ஏதோவொரு வகையில் பதில் வைத்திருப்பார். அவற்றில் பல, சும்மா புரட்டி விடும் புளுகாக இருக்கலாமென்றும் இவண் எண்ணுவதுண்டு.

விஷயம் இதுதான்° செல்வவிநாயகத்தின் வீடு நாலு நாட்களுக்கு முன், பூரணமாக தரை மட்டத்துக்கு எரிந்து நீறாகியது.

சிறினோ சிறி சிறிசு

செ.விநாயகமும் மனைவி, பிள்ளைகளும் படிப்படியாக தீயேற ஓடித் தப்பியிருந்தாலும் மீதம் யாவும் கங்கு கரையில்லாமல் பரந்தெறிந்த கோரத்தீயில் பொசுங்கின.

'செல்வவிநாயகத்தின் வீடு எரியுதாம்,' என்று ஊர் பதகளிப்பட்டு ஓடியபோது, இவணும் அரக்கப்பரக்க ஓடினான். அது வியாகூலத்தின் பாற்பட்ட கவலை என்பதிலும், விடுப்புப் பார்க்கும் பரபரப்பாகவே இருந்தது.

ஊரில் உதவுபவர்களிலும் விடுப்புக்கு மிலாந்துவர்களே அதிகமாக இருந்தனர். இது யாவு ஊர்கட்கும் பொருந்தலாமாக்கும். இதில் சின்ன வாண்டுகளின் மிலாந்தல் பற்றி பறையவே வேண்டாம்.

விடுப்பில், பரபரப்பில், திறிலிலேயே அவர்தம் பராயம் பின்னப்பட்டிருந்தது.

விடுப்பு சர்வதேசியமானது.

இவண் ஓடிப்போய்ப் பார்க்க செல்வவிநாயகத்தாரின் வீடு பூரணமாக எரிந்து, குறைத்தீ அங்கு சொச்சம், இங்கு மிச்சமாய் அப்போதும் புகைந்து கொண்டிருந்தது. தாய் வீட்டிலிருந்து, பின்புறமாய் ஆடுகள் கட்டவென, சின்ன அட்டாளைகள் பொருத்தி, இறக்கப்பட்டிருந்த பத்தியின் கீழ் ஐந்து ஆடுகள் பாதி எரிந்து கவிழ்ந்திருந்த கோரம், பல நாட்களாய் இவனுக்கு இரவில் திகிலூட்டியது.

அதிலொன்று மறிக்குட்டி. கனவில், திடுமென எழுந்த அது, கருகிய தாயாட்டின் முலையைச்சூப்பி சிவப்பு இரத்தம் குடித்தது. பாதி எரிந்து கவிழ்ந்து, நிலம் குத்தியிருந்த மற்றைய ஆடுகள் திடுமென்று முட்டக்கால்களில் எழுந்து இவனை இடிக்க வந்தன. அவற்றின் வாய்களிலிருந்து, குருதியும் சப்பிய குழையும் நெருப்பும் ஒருசேர கோரமான ஒரு நீர்ப்பாய்ச்சலாய் வழிந்து, இவனை சிக்காராய் மூடி, கொல்லுந்தலாய் மூச்சுத்திணற வைக்க, திடுக்கிட்டு நடுநிசியில் விழிக்க வேண்டியெல்லாம் வந்தது.

> **'மாகியப்பிட்டியான் எனக்கென்ன சொல்லுறது. அவன் பேயனுக்கு சிவாகமம், ஸம்ஹிதை ஏதும் தெரியாது,' என்று பொங்குவார், செங்குப்பு ஐயா.**
>
> **'சாத்திரம் தெரியாத அவனுக்கு அபானத்துக்கை அடிக்க வேணும்,' என்று திட்டுவார். அபானம் என்றால் என்னவென்று ஊருக்கு தெரியாததால் சோலியில்லை.**

படுக்கையறை பூரா எரியும் ஆட்டு ரோமம் வெடுக்கடிப்பதாயும் பட்டது.

இதெல்லாம் பிள்ளையார், பலிபீட நேர்கோட்டில் இருந்த புண்ணியமூர்த்தியின் வீட்டை விடுத்து செல்வவிநாயகத்தின் வீட்டை எரித்த கேட்டால் விளைந்த நாசம்.

சாத்திரி செங்குப்பு ஐயாதான் ஊர்பூரா சனங்களுக்கு வீடு கட்ட, கிணறு வெட்ட நிலையம் போட்டுக் கொடுக்கிற கைங்கர்யத்தை நீண்ட நாட்களாய் செய்து வந்தவர். 'செங்குப்பு ஐயா பூ எறிஞ்சு, புகை காட்டி நிலையம் போட்டால் அரக்காது,' என்றுதான் ஊர் பெருமையாயும் நம்பிக்கை கொண்டும் பேசிற்று.

செல்வவிநாயகத்தின் வீட்டுக்கும் நிலையம் போட்டுக்ககொடுத்தவர் செங்குப்பு ஐயாதான்.

கோயில் கருப்பக்கிரஹம், பலிபீடம், மூலவர் வாகனக்கல், கொடித்தம்ப கோட்டுக்கு நேரே தாய் முகவாசல் வரும் கணியத்துக்கு மனை நிலையம் போடக்கூடாதென்று, பிரபலமான மாகியப்பெட்டி சாத்திரி, புண்ணியமூர்த்தி வீட்டுக்கு செங்குப்பு ஐயா நிலையம் போடுகிறபோது சொல்லியிருந்தார்.

'ஏழு சந்ததிக்கும் சாமி பலியெடுக்கும்,' என்றும் வெருட்டியிருந்தார்.

மாகியப்பிட்டி சாத்திரிக்கும் செங்குப்பு ஐயாவுக்கும் எப்போதும் ஏக போட்டி. சாஸ்திராச்சாரப் போட்டி. ஊரூரெல்லாம் சாத்திரிகள், சனத்தை பேய்க்காட்ட போட்டியிடுவது எப்போதுமே வழமைதான்.

'மாகியப்பிட்டியான் எனக்கென்ன சொல்லுறது. அவன் பேயனுக்கு சிவாகமம், ஸம்ஹிதை ஏதும் தெரியாது,' என்று பொங்குவார், செங்குப்பு ஐயா.

'சாத்திரம் தெரியாத அவனுக்கு அபானத்துக்கை அடிக்க வேணும்,' என்று திட்டுவார். அபானம் என்றால் என்னவென்று ஊருக்கு தெரியாததால் சோலியில்லை.

செல்வவிநாயகத்தின் வீடு எரிந்து ஒரு வாரம் தள்ளி, அதையண்டிய வலப்புற கோவில் தெருவால் தாத்தரின் Bicycle வால்பக்க Carrier இல் குந்தியபடி இவண் வந்தபோதுதான் தாத்தரின் நீள்நாள் தோஸ்தர் இன்னாசித்தம்பி இடையில் நினையாப் பிரகாரமாய் வந்து மறித்தார்.

'என்ன அநியாயம்...? பாவம் விநாயகர். வீடு பரசுத்தியாய் எரிஞ்சு போச்சு சுட்டு மட்டை பரவியாச்சு.' அவர் குறிப்பிட்டது, கடவுள் விநாயகரோ, மனித விநாயகரோ என்பது இவணுக்கு தெரிந்திருக்கவில்லை.

'பாவந்தான். என்ன செய்ய? அவனவன். அது அது. வாணாள் விதி,' என்று ஒத்து தத்துவார்த்தமாய் விசனித்தார் தாத்தர். ஆனால், 'அது அது' எது என்று இவணுக்கு புரியவில்லை.

'உவன் செங்குப்பு ஐயன் செய்த வேலை. மாசியப்பிட்டிச் சாத்திரி அப்பவும் படிச்சுப்படிச்சுச் சொல்லியும் உவன் கேக்கேல்லை.

ஆசாரம் தெரியாமலுக்கு நிலையம் போட்டுக் குடுத்திருக்கிறான். கொடித்தம்பத்துக்கு நேரை குடி வாசல் வைச்சால் குடி பரநாசம்,' என்று திட்டினார் இன்னாசித்தம்பி.

'கொடித்தம்பத்துக்கு நேரை குடிவாசல் புண்ணியமூர்த்தி வீட்டுக்கு. எரிஞ்சது செல்வ விநாயகத்தின்ரை வீடெல்லோ!'

தப்பு தன் மூஞ்சியில் தப்பியிருக்க, தப்புப் பண்ணியதை உணர்ந்த இன்னாசித்தம்பியர் மொக்கையீனப்பட்டு தனது Bicycle ஐ கிளப்பிக்கொண்டு, 'நான் வாறன் தாத்தர்,' என்று நழுவினார்.

இன்னாசியரும் மாசியப்பிட்டிச் சாத்திரியும் நெருக்கமான நண்பர்கள்.

ஆவளைப் பிள்ளையார், தப்புத்தப்பாய் வீடு கொளுத்தினாரோ என்னவோ, அவர் ஊரூரெல்லாம் உச்சமாக பிரசித்தமானவர். கோவில் திருவிழா என்றால் இடி, மின்னல், மின்பொறி எகிறி அட்டகாசம் அமளிக்கும். ஒவ்வொரு திருவிழா உபயகாரரும் போட்டி போட்டுக்கொண்டு, காசை தூசாக இறைத்து, 'திருவிழா'க் காட்டுவர். சிகரம், சப்பறம், வாணவேடிக்கை, சோடனை என்று கட்டுக்களை கட்டும்.

பூங்காவனத்தோடு சேர்த்து பன்னிரண்டு நாள் திருவிழா.

சதிராட்டம், கோஸ்டி கானம், தவில் கோஸ்டி, வில்லுப்பாட்டு, சமயங்களில் இராவிரவாய் கூத்தும் போக, இந்தியாவிலிருந்து பாட்டுக்காரரை 'இறக்கு'வதும் உண்டு. எல்லாம் போட்டிக்குத்தான். இந்திய பாட்டாளர் வருவதறிந்து, பக்கத்து ஊரெல்லாம் இருந்து சனம் கொடி கட்டி வரும். நாலாம் ஐந்தாம் திருவிழாக்காரரிடையேதான் பாரிய போட்டி. ஒவ்வொரு ஆண்டும். இந்த குரோத எடுபடியில் அடிபிடிகளும் நிகழ்வதுண்டு. அப்போதெல்லாம் சாமிக்கு ஏன் திருவிழா செய்வதென்ற எந்த ஆகம விசாரணைகளும் சபைக்கு வரா.

**சதிராட்டம், கோஸ்டி கானம், தவில் கோஸ்டி, வில்லுப்பாட்டு, சமயங்களில் இராவிரவாய் கூத்தும் போக, இந்தியாவிலிருந்து பாட்டுக்காரரை 'இறக்கு'வதும் உண்டு.**

**எல்லாம் போட்டிக்குத்தான். இந்திய பாட்டாளர் வருவதறிந்து, பக்கத்து ஊரெல்லாம் இருந்து சனம் கொடி கட்டி வரும். நாலாம் ஐந்தாம் திருவிழாக்காரரிடையேதான் பாரிய போட்டி. ஒவ்வொரு ஆண்டும். இந்த குரோத எடுபடியில் அடிபிடிகளும் நிகழ்வதுண்டு.**

**அப்போதெல்லாம் சாமிக்கு ஏன் திருவிழா செய்வதென்ற எந்த ஆகம விசாரணைகளும் சபைக்கு வரா.**

**சரியை, கிரியை, யோகம், ஞானம் ஏதுமே இரா.**

**நீயா, நானாதான். நாலாந் திருவிழாவோ ஐந்தாம் திருவிழாவோதான்.**

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஏதுமே இரா.

நீயா, நானாதான். நாலாந் திருவிழாவோ ஐந்தாம் திருவிழாவோதான்.

இந்த திருவிழாக்களின் உபயகாரத்தலைவர்கள் தத்தம் திருவிழாக்களின்போது, ROCK STAR கணியத்துக்கு அட்டகாசமாய் உலவுவர். தேவையேயற்ற ஏதாவது விஷயங்களைச் செய்யுமாறு அபத்தமாக உத்தரவிடுவர்.

'டேய் பொடியா, உதிலை கிடக்கிற வாழைத்தண்டைத் தூக்கி அங்காலை எறியெடா. டேய், சகடையை அந்தப்பக்கமாய் இறுக்கித் தள்ளுங்கோடா,'

வாழைத்தண்டு ஓரத்தில் யாருக்கும் சோலி தராமல் தன்பாட்டில் கிடக்கும். சகடை சரியாய்த்தான் தள்ளப்படும். இருந்தாலும், றொக் ஸ்ரார்: தான்தான் 'சனம் விலத்தும் தலைப்பாக்கட்டுக்காறன்' என்பதை இடைக்கிடை சனங்களுக்கு காட்டிக் கொண்டே இருப்பார். இருந்தால்தானே தலைப்பாகைக்கு மவுசு.

ஒரு தடவை கலம்பகம் பெருத்து, சிலம்பாட்டத்தடியால் மண்டை பிளந்த சம்பவங்கூட நடந்திருக்கிறது. நாலாந்திருவிழா கொஞ்சம் சொட்டையாகி, ஐந்தாந் திருவிழாவிற்கு பெரிய அளவில் அறியப்படாத இந்தியப்பாட்டுக்காரக் கோஸ்டியொன்று வந்திருந்தது.

விடியவிடிய நடந்த திருவிழாவில், வடக்கு வீதியிலிருந்து திரும்பும் மூலையில் முத்துச்சப்பறத்தை நிறுத்தி, இந்தியக்கோஸ்டி பாடுவதாக இருந்ததாகத்தான் பறையப்பட்டது.

ஆனால், திடுதிப்பென்று, சப்பறத்துக்கு முன்னால் இருந்த வளைய முன்றில் கொடுக்குக்கட்டிய பயில்வான்கள் இருவர் நீள்கழி கொண்டு சிலம்பாடத் துவங்கினர்.

'போச்சு'.

ஐந்தாந்திருவிழா தலைப்பாக்கட்டி முகாரிக்கு இது உன்னத சந்தர்தர்ப்பமாய்ப் 'போச்சு' .

எங்கிருந்தோ பாய்ந்து வந்த அவர் ஒரு பயில்வானிடமிருந்து தடியைப்பறித்து அவனது மண்டையில் ஓங்கி பொளாரென்று அடித்தார். கபாலம் வெடித்து, குருதி குபுக்கென வழிந்தது.

பிறகென்ன.??!!

கலம்பகம் கிளம்பி, அடிதடி மெத்தி, திருவிழா திடீரென்று திருவிலா விழாவாக முடிவுக்கு வந்தது.

கோஸ்டி பாடவேயில்லை.

இந்தியாக்காரர் பாடி, எழும்பவிருந்த ஐந்தாந்திருவிழாவின் வெற்றியை குழப்ப, தோற்றுப்போன நாலாந்திருவிழா உபரகாரரே இந்த பயில்வான் சிலம்பாட்டத்தை சடுதியாய் இடைச்சந்தில் புகுத்தி சதி செய்ததாக ஊர் பேசிற்று.

ஊர் எல்லாம் பேசும்.

இவண் சிறு பையனாக

இருக்கையிலேயே அங்கு நடந்த இந்தமாதிரியான எல்லா வகைப்பட்ட சீத்தீவக்கேடுகளையும் கண்டிருக்கிறான். முன்னோரூர் களெல்லாமே எப்படித்தான் மெருகு மெழுகப்பட்டாலும், என்றும் இப்படியாகப்பட்டதாயே இருந்தது, என்பதே யதார்த்தம். அதை விடுத்து, வரலாற்றின் மெய்மையை விடுத்து, உண்மையை மசக்கி, சும்மா தூக்கி, ஆனை, குதிரை என்பதெல்லாம் படு பொய்.

இங்கு இவண் இப்படியிருப்பதன் ஆழ் சூக்ஷ்ஸ¬மம் அங்கு இவண் கண்டனவற்றின் சிலபல ரிஷிமூலக்கூறுகளாயும் இருக்கலாம்.

ஆக்கும்.

இங்கு

ஆளைப் பார்த்து எதையும் மதிப்பிட முடியாது. எப்போதும் எல்லோரும் இதில் கோட்டை விடுபவர்கள்தான். இல்லையென்போர் பொய்யர்.

இவணுந்தான்.

முதலில், இவண் கபிறியெல்லாவோடு கொஞ்சம் நெருக்கமாக பழகியபோது, தொபுக்கென இவ்விஷயத்தில் கோட்டை விட்டான். கொட்டுண்ட கோட்டை.

கபிறியெல்லாவைப் பார்த்தால் சனம் இயல்பாகவே கட்புருவத்தை உயர்த்தும். படு(ஊ) அழகாக மட்டுமல்ல, படு(ஊ) பாந்தமாகவும் இருப்பாள். கேஸம் Blonde வேறு. ஒரு பல்கலைச்சாலை விரிவுரையாளரைப் பார்த்தாற்போல் அழகாகிருதி இருக்கும். ஆழமான அறிவு கொண்ட ஆள் போல் சுட்டு நளினம் காட்டுவாள். யாருக்கும் சடாரென்று மேற்காரணமேதும் தேவைப்படா கணியமான நள்நளினம். அது எவரது கண்களையும் ஏய்க்கும் நளினம்.

எதெதெப்படியாயினும், எல்லாம் பார்வைக்கே.

ஆள் படு(ஊ) முட்டாள்.

முட்டாளிலும் முட்டாள்.

**கபிறியெல்லாவைப் பார்த்தால் சனம் இயல்பாகவே கட்புருவத்தை உயர்த்தும். படு(ஊ) அழகாக மட்டுமல்ல, படு(ஊ) பாந்தமாகவும் இருப்பாள். கேஸம் Blonde வேறு. ஒரு பல்கலைச்சாலை விரிவுரையாளரைப் பார்த்தாற்போல் அழகாகிருதி இருக்கும். ஆழமான அறிவு கொண்ட ஆள் போல் சுட்டு நளினம் காட்டுவாள். யாருக்கும் சடாரென்று மேற்காரணமேதும் தேவைப்படா கணியமான நள்நளினம். அது எவரது கண்களையும் ஏய்க்கும் நளினம்.**

**எதெதெப்படியாயினும், எல்லாம் பார்வைக்கே.**

**ஆள் படு(ஊ) முட்டாள்.**

**முட்டாளிலும் முட்டாள்.**

கதை, சரளைக்கல்லை சலவைக் கல்லில் உரோஞ்சினாற்போல ரொம்பவும் வெருளித்தனமாய் இருக்கும். பெரிதாய் ஏதுமே தெரியாது. உதாரணத்துக்கு, ஆபிரிக்கா என்றொரு கண்டம் இருப்பது தெரியாது. ஆபிரிக்காவை அவித்தாலா, பொரித்தாலா சுவையாக இருக்கும், என்று கேட்பாள். சாப்பாட்டிலும் உடை, கொடியிலுந்தான் பேரக்கறை.

உஸோமி இதற்கு தலைகீழ்.

அது பெரு விநோதம்.

எவ்வித சமூக விதிகளையும் ஒக்காத, இலகுவில் எதனாலும் கட்டுப்படுத்த முடியாத, சுயாதீன எண்ணப்பாடு கொண்ட Carefree free bird சீவன் உஸோமி. கன்னாபின்னாவென்று உடல் பூரா Tattoo கீறியிருந்தாள். இடக்கைத்தோள் பட்டைக்குக்கு நேர் கீழே ஒரு படம் குத்தியிருந்தாள். அது என்ன கோதாரியோவென்று தெரியாது. அவளுக்கும் தெரியுமோவென்றதும் தெரியாது. ஒட்டோரத்துக்கு பார்த்தால், லிங்கபீட யோனி மாதிரித் தோற்றிற்று. கூர்ந்து பார்க்க, வெடித்த லிங்கம் தெரிந்தது. நெருங்கிப்பார்க்க, ஒன்றுமே தெரியவில்லை. ஒன்றுமே தெரியாத ஒன்று, ஒன்றுமேயில்லாத ஒன்று, உஸோமியிடம் மாத்திரமே இருக்க முடியும்.

இவணுக்கு பெரிய அளவில் ஈடுபாடு கிடையாயெனினும், Bar. Brasserie என்று போய், அலட்டுவதில் உஸோமிக்கு மிக்க பிரியம்.

'சிற்று Alcohol இரத்த ஓட்டத்தில் பரவி, மூளை கீறுப்படுகிறபோது குறுக்கு மறுக்கான எண்ணங்கள் வெடிக்கும். அது கிளர்ச்சியானது' என்பாள். மூளை கீறப்படுவதிலும் கிளர்ச்சி எழுவதிலும் இவணுக்கும் ஈடுபாடு இருப்பதால் போவான். பிறரையும் சாய்த்துக்கொண்டு போவதிலும் கிளர்வு இருந்தது.

குட்டிவிலா, Calypso, பெப்பி, உஸோமியின் நெருக்க நண்பி Chloe, கு.வி. மாற்றி மாற்றி அழைத்து வரும் பெண்கள் என ஒரு பட்டாளமே BAR கிளர்வாளர் பட்டியலில் இருந்தது.

இதில் வியப்பு, உஸோமி மட்டுமே புத்தி பூர்வமாகவும் மிகு அறிவு சார்ந்தும் சம்பாஷிக்கக் கூடியவள். அவளது உடுப்பு நடப்பையும் Tattoos ஐயும் கண்டு மட்டும், 'இது அறிவிலி முண்டமாக இருக்க வேண்டுமென்று மாமூலாக நினைத்தால் 'கோட்டை'தான்.

குட்டிவிலாவும் கலிப்ஸோவும், Kim Kardashian இன் இடுப்பின் அளவின் நீள அகலம் பற்றி நீள் நேரம் விவாதித்தால், உஸோமி, இவணிடம், 'சோவியத் யூனியன் காலத்தில் அது, தானொரு கொம்மியூனிஸ தேஸமென்று கத்தியது. இப்போது, சோவியத்தும் இல்லை. கொம்மியூனிஸமும் இல்லை. அப்போ ஏன், தாம் இடதுசாரிகள் என்று பொய்யாய் போட்டடித்து குளறுகிற வெருளிகள், இன்றைய படு சர்வாதிகார, படு முதலாளித்துவ, உச்ச ஊழல் நாடாகிய றஸ்யாவை இன்னும் அது ஏதோ சமதர்ம தேஸமென்று நினைத்து, கோமணத்தை அவிழ்த்து ஆதரிக்கிறார்கள்,' என்று சுள்ளென்ற மூளாயதார்த்த வினாவை

எழுப்புவாள். அவள் அப்படித்தான். எதிர்பாராத வகைக்கு, பலரிடம் கிளராத பல கேள்விகள் அவளிடம் இருக்கும். அவை ரொம்பவும் விவேகமானவையாக இருப்பது அவளது Tattoo கீறிய நளினத்துக்கு பொருந்தாமலிருப்பதை காண்பது, அவளிடம் பேசிப்பார்த்தால்தான் உண்டு.

'ஐம்பதினாயிரம் வருஷமுன், பழைய கற்காலத்தில், மொக்கு கல் கொண்டு மிருகங்களைக் கிழித்து தின்ற நேரத்தில், தம் மூத்த இனம் இருந்ததாகவும் அது அந்நேரமே மூத்த மொழியைப் பேசியதாகவும் சில பாவ்லா பிரகிருதிகள் புளுக, அதை உண்மையென நம்பி, தூக்கிக்கொண்டாடும் பிரகிருதிகள், வரலாற்றை படிப்பதில்லையா?' என்று இவணிடம் விவேகமாக வினவ, குட்டிவிலாவும் கலிப்ஸோவும்,: ஏன் கிம் கர்டாஷியான் அவசரப்பட்டு Kanye West ஐ விவாகரத்து செய்தாள்? என்பது பற்றியே மண்டையைப் பிளந்து கொண்டிருப்பார்கள்.

இவணது முதல் காதலி, அம்பிகையும் இப்படித்தான். இவணிடம் விவேகமான வினாக்களை கேட்டிருக்கிறாள்.

அங்கு

அம்பிகையை அப்போதுதான் முதன்முறையாய் கண்டான். இவணுக்கு அப்போ பொறி பறக்கும் விடலைப்பருவம். முளை விடுவது மாதிரி, முளை விடாத பராயம்.

அது, ஆவளைப்பிள்ளையார் கோவில் ஐந்தாந்திருவிழா. நாலாந்திருவிழாவின் மிதப்புக்கு போட்டியாக துவாரபாலக கால்களில் ஊன்றிய சிகரங்கள் கட்டப்பட்ட சூழல். இந்தியாவிலிருந்து இறங்கிய சதிராட்டப்பெண்டுகள், சுழல் மேடையேறி நெளிக்க முன், இரண்டு படு இளம் பெண்கள், இவனது கண்ணைப் பொத்தி அறைந்தார்கள். மின் பொறி பறந்தது.

அம்பிகையும் அவளது மச்சாள் பெண்ணும்!

**'ஐம்பதினாயிரம் வருஷமுன், பழைய கற்காலத்தில், மொக்கு கல் கொண்டு மிருகங்களைக் கிழித்து தின்ற நேரத்தில், தம் மூத்த இனம் இருந்ததாகவும் அது அந்நேரமே மூத்த மொழியைப் பேசியதாகவும் சில பாவ்லா பிரகிருதிகள் புளுக, அதை உண்மையென நம்பி, தூக்கிக்கொண்டாடும் பிரகிருதிகள், வரலாற்றை படிப்பதில்லையா?'**

அரைச்சேலை அணிந்து, சொர்க்க வேலிக்கு கீழே பாவும் பீதாம்பர படுதாவில் பாவும் தேவதை போலத்தோற்றினாள், அம்பிகை இவனுக்கு.

அந்த தோற்றம் வயதின் குளறுபடியாயும் ஆகலாம். ஏனெனில், சொர்க்க வேலியும் இல்லை. அதன் கீழே பீதாம்பரமுமில்லை. அங்கு தேவதைகள் பாவுவதில்லை. ஏன் என்றால் தேவதைகளே இல்லை. மனித பெண்கள்தான் உளர்.

ஆனால், இவண் பார்த்ததோ தேவதைதான்.

தேவதையே பார்த்தபின் பிறகென்ன??!!

'அண்ணலும் நோக்கி, அவளும் நோக்கி' மிதிலாபுரியில் தீப்பற்றியது.

இப்படித்தான், இத்தீ மூலந்தான் இவணுக்கும் அம்பிகைத் தேவதைக்கும் குறுகுறுக்கும் குறு ஊசல் உண்டாயிற்று. சும்மா உடலும் உணர்வும் முதிர்வுறா நிலையின், ஏறு கவர்ச்சியென்றும் அதை எடுக்க முடியாது.

பல விஷயங்களுக்கு செம்மை விளக்கம் கிடையாது. அம்பிகைக்கும் இவணுக்குமெடையில் கிளம்பிய ஏதோவொருவகையான இதற்குந் தான்.

ஆவளைப்பிள்ளையார் கோவில் தேர்முட்டியின் வலக்கரையில், எலி, மயில், எருது போன்ற பழைய சாமி வாகனங்கள் உழுத்துக் கிடந்த, குற்றுக்குறையறை இருள் குகையில் இவணது அம்பிகாபிஷேகங்கள் ஏகமாய் நிகழ்ந்தன.

அங்குமிங்கும்

(அங்கு)

முத்துச் சப்பறத்தைக் கொண்டு வந்து கோவிலின் தென்கிழக்கு முகப்பில் நிறுத்தப்பட்டிருந்த சகடையில் ஏற்றினர். பாரிய சப்பறம். திட்டமிட்டு நாலாந் திருவிழாவின் இராச்சப்பறத்திலும் பெரிதாக இருப்பதற்காக தூராதூர ஊரிலிருந்து வரவழைக்கப்பட்டது.

இரவுச்சப்பற வீதி வலத்தின்போது பல சாமிகள் உலாக்கிளம்புவர். தகப்பன், தாய், பிள்ளைகள், என்று கூட்டமாக.

நடுச்சப்பறத்து இருக்கை திருவாசியில் தனிப்பிரமச்சாரி மூலவர் பிள்ளையார் வீற்றிருக்க, அவருக்கு இடப்புற சாமியாசனத்தில் வள்ளி, தெய்வயானை ஆகிய இரு மனைவியருடன் முருகனும், வலப்புறத்தில் அப்பன் சிவனும் அவன் சக்தி அம்பிகையும் ஏறுவது வழக்கம்.

பட்டுக்கொடிகளின் கீழ், தீவட்டி, கொம்பு:சங்கூதல், சேமக்கலம், ஆயவற்றுடன் பத்துக்கூட்டம் தவில் முழங்க, புகை பரவ, சாமியரை தூக்கி வந்தனர்.

பிள்ளையாரின் வலது பக்கத்து திருவாசி இருக்கையில் அம்பிகை ஏற, அதே கணத்தில்

(இங்கு)

படுக்கையறைக் கட்டிலின் மெது மெத்தையில் இவணுக்கு இடப்பக்கமாக சோர்ந்து, நித்திரையில் ஆழ்ந்திருந்த உஸோமியின் இடக்கைத் தோள்பட்டைக்கு நேர்கீழே கீறியிருந்த லிங்கபீட யோனி போலான. வெடித்த லிங்கம் போலான Tattoo இலிருந்து இவணது முதல் காதலி, அம்பிகை வெளியே வந்து, இவண் மேல் ஏறினாள்.

இன்னும் வர உண்டு.

# படித்த யாழ்ப்பாணிகளில் இருந்து சிந்திக்கத் தெரிந்த தமிழர்களாக...!

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னால்...

அல்லது யாழ்ப்பாணிகள் ஆயுதங்களை மௌனித்த பின்னால்...

என்னோடு அரசியல் பேசுகிறவர்களுக்கு நான் சொல்லிக் கொண்டிருந்த விடயம்,

எங்கள் சமூகத்தில் intellectual class ஒன்று emerge பண்ண வேண்டும் என்பது தான்.

ஒரு சிந்திக்கத் தெரிந்த வகுப்பு, குழு ஒன்று எங்கள் சமூகத்தில் மேலெழ வேண்டும்!

இந்தச் சமூகம் இதுவரை நாளும் உணர்வுபூர்வமான அரசியலைத் தான் கொண்டிருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பாக ஆங்கிலேயர் ஆட்சியின் போது, யாழ்ப்பாணிகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்கள் எதையும் நிகழ்த்தி விடவில்லை. சிங்களப் பகுதிகளில் அந்நியர்களை வெளியேற்ற வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதும், தமிழ்ப் பகுதிகளில் அவ்வாறான எழுச்சிகள் எழுந்ததில்லை.

அதற்கு அந்நியர்களின் பிரித்தாளும் திறன், சிறுபான்மையினரை கல்வி ரீதியாக மேலெழ வைத்து நிர்வாக சேவைகளில் அதிகமாக அமர்த்த வைத்தது ஒரு பெரும் காரணம்.

யாழ்ப்பாணிகளும் அடிமை விசுவாசத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்து, 'இராணியின் நம்பிக்கைக்குரிய சேர்வண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்தனர். தாங்கள் புறக்கணிக்கப்படுவதான சிந்தனை இவர்களுக்கு ஏற்பட்டிருந்ததில்லை. தங்களுக்கான விசேட கவனிப்பு, அதுவும் வெள்ளைக்காரனின் விசேட கவனிப்பு பெரும் குஷியாகத் தான் இருந்தது.

எஜமானனின் நம்பிக்கைக் குரிய அடிமையாக இருப்பதில் எவ்வளவு பெருமை? அந்த நம்பிக்கையின் பின்னாலும், தான் இன்னமும் அடிமையாக இருப்பது அடிமைக்கு ஒரு போதும் உறைப்பதில்லை.

யாழ்ப்பாணச் சமூகம் ஒரு கைத்தொழிற் சமூகமாகவும் இருந்ததில்லை. விவசாய உற்பத்தியும், 'கோழி மேய்த்தாலும் கொர்ணமேந்தில வேலை செய்வதற்கான' கல்வியும் தான் யாழ்ப்பாணத்தின் முதலீடுகளாய் இருந்தன.

இந்தக் கல்வி முதலீடு இவர்களை சிங்கப்பூர், மலேயா வரைக்கும் 'On her Majesty's loyal servants' ஆக்கியிருந்தது.

சிங்களவர்கள் எவரும் அவ்வாறு நிர்வாக சேவைக்காக அந்த நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படவில்லை என்னும் அளவுக்கு தமிழர்களுக்கு அந்தக் காலத்திலும் வெளிநாட்டு மோகம் தான்.

விவசாயம் பெரும்பாலும், சாதி அடிப்படையில் கீழ் நிலையில் இருந்தோர் கையிலும், (கையகப்படுத்தப்பட்ட முடிக்குரிய நிலங்கள் மேல் சாதியினரிடத்திலும்), கல்வி அறிவு உயர்சாதியினர் கையிலுமாகத் தான் யாழ்ப்பாணப் பொருளாதாரம் இருந்தது.

யாழ்ப்பாணப் பொருளாதாரம் அன்றிலிருந்து இன்று வரைக்கும் மணி ஓடர் பொருளாதாரம் தான்.

ஆனால், இந்த self-proclaimed படித்த யாழ்ப்பாணச் சமூகம் வெறும் ஏட்டுச்சுரைக்காய் படிப்புச் சமூகமாகத் தான் இருந்தது. இதன் கல்வியின் நோக்கமே, 'கோழி மேய்த்தாலும் கொர்ணமேந்தில மேய்க்கிற' வேலையைப் பெற்றுக் கொள்வதாகவும், 'நல்ல சீதனம் வாங்கிக் கலியாணம்

ஜோர்ஜ் இ.

செய்வதற்காகவும்' தான்.

இது யாழ்ப்பாணத்தில் கடதாசிப் பட்டம் வைத்திருந்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததே அன்றி, சிந்தனை வளர்ந்தவர்களின் எண்ணிக்கையை வளர்த்ததில்லை.

இப்படி, யாழ்ப்பாணிகளுக்கு கல்வி என்பது பட்டம் பெறுவதற்கானதே அன்றி அறிவை, சிந்தனையை வளர்ப்பதற்கானதாக இருந்ததில்லை.

இதனால் தான் யாழ்ப்பாணிகளில் கல்வியலாளர்கள் அதிகமாகவும் ஆய்வாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் குறைவாகவும் இருந்து வருகிறார்கள். (அந்தக் குறையை எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அரசியல் ஆய்வாளர்கள் நிவர்த்தி செய்வது வேறு கதை!)

மேற்குலகில் பல்கலைக் கழகங்கள் பெரும்பாலும் சமூகநீதி சார்ந்த சிந்தனையும், இடதுசாரிப் போக்கும் கொண்ட கொண்ட கல்விமான்களைக் கொண்டதாகத் தான் இருக்கின்றன. ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த எழுபதுகளில், கைலாசபதி துணைவேந்தராக இருந்து, சிவத்தம்பி போன்றவர்கள் இடதுசாரிச் சிந்தனையை வளர்க்க முயன்றாலும், தமிழ்த்தேசியத்தின் எழுச்சி அதையும் விழுங்கி, சிவத்தம்பியும் அந்த சோதியோடு கலக்க வேண்டிய நிலையை உருவாக்கி விட்டிருந்தது.

பல்வேறு படித்த, போராட்டங்களை முன்னெடுத்த இடதுசாரிகள் தமிழ்த் தேசிய அலையில் அடிபட்டுப்போய் விட்டார்கள்.

எனவே, சிந்தனை வளர்ச்சி என்பது, யாழ்ப்பாணப் பழமைவாதச் சிந்தனைகளுக்குள்ளே தமிழ்த் தேசியத்தால் முடக்கி வைக்கப் பட்டிருந்தது.

இன்றைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது, யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட புலி பிராண்ட் தமிழ்த்தேசியக் குகையாக உருவெடுத்திருக்கிறது. எந்த வகையான சிந்தனை எழுச்சியும்

**மேற்குலகில் பல்கலைக் கழகங்கள் பெரும்பாலும் சமூகநீதி சார்ந்த சிந்தனையும், இடதுசாரிப் போக்கும் கொண்ட கொண்ட கல்விமான்களைக் கொண்டதாகத் தான் இருக்கின்றன. ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த எழுபதுகளில், கைலாசபதி துணைவேந்தராக இருந்து, சிவத்தம்பி போன்றவர்கள் இடதுசாரிச் சிந்தனையை வளர்க்க முயன்றாலும், தமிழ்த்தேசியத்தின் எழுச்சி அதையும் விழுங்கி, சிவத்தம்பியும் அந்த சோதியோடு கலக்க வேண்டிய நிலையை உருவாக்கி விட்டிருந்தது.**

**பல்வேறு படித்த, போராட்டங்களை முன்னெடுத்த இடதுசாரிகள் தமிழ்த் தேசிய அலையில் அடிபட்டுப்போய் விட்டார்கள்.**

**எனவே, சிந்தனை வளர்ச்சி என்பது, யாழ்ப்பாணப் பழமைவாதச் சிந்தனைகளுக்குள்ளே தமிழ்த் தேசியத்தால் முடக்கி வைக்கப் பட்டிருந்தது.**

இல்லாமல், சமூக நீதி பற்றிய எந்தக் கரிசனையும் இல்லாமல், 'தீர்வு கிடைச்சால் அஞ்சு வரியத்தில வல்லரசு, அது இல்லாட்டி வெளிநாட்டு வாழ்க்கை' என்ற சிந்தனையோடுதான் கல்வி அணுகப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் அரசியல் என்பது, அன்று முதல் இன்று வரை உயர்சாதி கல்விமான்களின் கையின் இரும்புப்பிடிக்குள் தான் இருந்து வருகிறது. அதிலும் 'கொலைக் குற்றவாளிகளை தங்கள் வாதத் திறமையால் விடுவிக்கும் தொழில்களில் இருந்த' சட்டத்தரணிகளின் கையில் தான் அந்த அரசியல் நீண்ட காலமாக இருந்தது.

சுதந்திரம் கிடைக்க முன்னால் அதிகாரம் பெறுவதற்கான வழிகளையும், தமிழர் பகுதிகளுக்குரிய நியாயமான அதிகாரப் பகிர்வுகளையும் உறுதி செய்வதில் இந்தத் தலைமைகள் தீர்க்கதரிசனமான நோக்கைக் கொண்டிருக்கவில்லை. தங்களுக்கான தனிப்பட்ட நலன்களைத் தமிழர்களின் நலன்களாக்கிக் கொண்டதோடு அவர்களின் அரசியல் நிறைவு பெற்றது.

இதனால் தான் சிங்களவர்களை எதிர்த்து, போட்டிக்கு தமிழ் அரசியல் செய்த பொன்னம்பலமும் செல்வநாயகமும் ஐ.தே.கட்சியின் ஆட்சியமைப்புகளில் அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

ஆங்கிலேயர் காலத்தில் எல்லாருக்கும் வாக்குரிமை வழங்கும் திட்டத்திற்கு, காணி இருப்பவர்கள் தான் இராணிக்கு விசுவாசம் மிக்கவர்கள், அவர்களுக்கு மட்டும் தான் வாக்குரிமை வழங்க வேண்டும் என்று, உயர்சாதியினரோடு மட்டுமே வாக்குரிமையை மட்டுப்படுத்த முயன்ற தலைமை தான் இராமநாதனின் யாழ்ப்பாணித் தலைமை.

எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருந்து கொண்டு, அதிகாரங்களில் ஐம்பதுக்கு ஐம்பது கேட்ட, சாத்தியமில்லாத தீர்வுக்கு என்ன தீர்க்கதரிசனம் இருந்தது?

முடிந்தவரை கிடைப்பதைப் பெற்றுக் கொள்ளாமல், விட்டால் குடுமி, சிரைத்தால் மொட்டை என்று, வெற்றி அல்லது வீரமரணம் என்றால்...

வெற்றியை உறுதி செய்யாவிட்டால், வீரமரணம் தானே முடிவு?

அறுபதுகளில் தனிச்சிங்களச் சட்டமும், எழுபதுகளில் பல்கலைக்கழக நுழைவில் அறிமுகமான தரப்படுத்தலும், மொழிவாரியாக தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் என்ற கோஷம், மூன்று மாதத்தில் தமிழீழம் என்று தொடங்கி, முப்பது வருடங்களில் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்தது.

உசுப்பேத்திய அரசியல் வாதிகளே உசுப்பேத்தல்களுக்குப் பலியாகி, ஆயுதம் தலைதூக்கி, மண்டையில் போட்டுத் தள்ளி, மண்டையில் போட்டவர் மண்டை பிளந்து கிளந்ததோடு, எல்லாமே எங்கள் கண்ணுக்கு முன்னாலேயே

ஒரு கனவு போல நடந்து முடிந்து விட்டன.

அவ்வப்போது தலைவர்களாக இருப்போரை வால் பிடிப்பதும், அதற்கு முன்னால் தலைவர்களாக இருந்தோரை துரோகிகள் என்று திட்டித் தீர்ப்பதும் தான் தமிழர் அரசியலாக இன்று வரை இருக்கிறது.

பாராளுமன்றத்தில் ஈழம் எடுப்போம் என்றாலும் அரோகரா!

அடிச்சுப் பறிப்போம் என்றாலும் அரோகரா!

ஜெனிவாவில் எடுப்போம் என்றாலும் கோவிந்தா!

கனடா பாராளுமன்றத்தில் எடுப்போம் என்றாலும், அல்லேலூயா!

இந்த ஆயுதப்போராட்டம் யாழ்ப்பாணிகள் உருவாக்கும் பிராங்கென்ஸ்டைன் பூதம், இது கடைசியில் யாழ்ப்பாணிகளையும் அழித்து தன்னையும் அழிக்கும் என்பதை எத்தனையோ வருடங்களுக்கு முன்பே சொல்லியிருந்தேன். அந்தத் தீர்க்கதரிசனம் என் கண் முன்னாலேயே நிறைவேறியிருந்தது.

இந்த அழிவு முடிவோடு, பாராளுமன்ற அரசியல் மீதும், ஆயுதப் படுகொலை அரசியல் மீதும் கொண்டிருந்த நம்பிக்கைகள் தகர்ந்து விட்ட நிலையில், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை யாழ்ப்பாணிகளுக்கு வராதபடிக்கு, சூழ்நிலைகள் மாறிவிட்டன.

பல்கலைக்கழக தரப்படுத் தலைக் காரணம் காட்டி போராட்டத்தைத் தொடங்கிய வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக்கழங்களையே விரல் விட்டு எண்ண முடியாத அளவில், அதிகரித்து விட்டன.

யாழ்ப்பாணச் சமூகம் வெளிநாட்டுக் குடியேற்றங்களாலும், இடப்பெயர்வாலும் சனத்தொகையை பெருமளவு இழந்து விட்டிருந்தது.

இந்த நிலையில், எழுந்த புதிய அரசியல் சூழ்நிலையை கையாள்வதற்கு பழைய சிந்தனை ஒரு போதும் உதவாது.

இதுவரை காலமும், யாரோ ஒருவர் ஈழம் எடுத்துத் தருவார், அவருக்கு காசைக் குடுத்தாச் சரி என்று வெளிநாட்டு ஏஜன்சிக்கு

**இந்த அழிவு முடிவோடு, பாராளுமன்ற அரசியல் மீதும், ஆயுதப் படுகொலை அரசியல் மீதும் கொண்டிருந்த நம்பிக்கைகள் தகர்ந்து விட்ட நிலையில், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை யாழ்ப்பாணிகளுக்கு வராதபடிக்கு, சூழ்நிலைகள் மாறிவிட்டன.**

**பல்கலைக்கழக தரப்படுத் தலைக் காரணம் காட்டி போராட்டத்தைத் தொடங்கிய வடக்கு கிழக்கில் உள்ள பல்கலைக்கழங்களையே விரல் விட்டு எண்ண முடியாத அளவில், அதிகரித்து விட்டன.**

**யாழ்ப்பாணச் சமூகம் வெளிநாட்டுக் குடியேற்றங்களாலும், இடப் பெயர்வாலும் சனத்தொகையை பெருமளவு இழந்து விட்டிருந்தது.**

**இந்த நிலையில், எழுந்த புதிய அரசியல் சூழ்நிலையை கையாள்வதற்கு பழைய சிந்தனை ஒரு போதும் உதவாது.**

காசு கொடுத்தது போல இருந்த யாழ்ப்பாணிப் பனங்கொட்டைச் சமூகத்திற்கு, முள்ளிவாய்க்கால் முடிவு தலையில் பனங்காய் விழுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

உலகமே இருண்டு, வெலவெலத்து, அடுத்து என்ன செய்வது என்று எவருக்குமே தெரியவில்லை.

தலையைச் சுற்றி, தங்களையும் சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஆயுதங்களை மௌனித் திருக்கிறோம், தலைவர் உயிரோட இருக்கிறார் என்ற பொய்கள் மட்டுமே, இந்தப் பேரதிர்ச்சியிலிருந்து விடுவதற்கான தற்காலிக ஆறுதலாக இருந்தன. இந்த ஆறுதல்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதற்காக தாங்களே சொல்லி, தாங்களே நம்பிய பொய்களே அன்றி, தீர்வு பெறுவதற்கானவையும் இல்லை.

எதிர்காலம் சூனியமாகத் தெரிந்த அந்தச் சூழ்நிலையில் தான் ஒரு சிந்திக்கத் தெரிந்த ஒரு குழு ஒன்று எங்கள் சமூகத்தில் தலையெடுக்க வேண்டும் என்ற என் கருத்தை, கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவான் என்ற நினைப்பில், அகப்பட்டவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

டித்த குழு என்று சொல்லாமல், சிந்திக்கத் தெரிந்த குழு என்று நான் சொன்னதற்கான காரணமே, யாழ்ப்பாணியை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டது தான்.

யாழ்ப்பாணிகளுக்குள் சமூகத் தலைவர்கள் என்று இருக்கிறார்கள்.

அதிலும் புலன் பெயர்ந்தவர்களுக்குள் இருக்கும் சமூகத் தலைவர்கள் என்ற அயோக்கியர் கூட்டத்தின் சமூகவிரோதச் செயல்கள் சொல்லி மாளாது. இங்குள்ள அமைப்புகள் எல்லாம் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்த பின்னால், சுயநலன்களுக்காக ஒட்டிக் கொண்ட 'கோட்டுப் போட்ட' அயோக்கியர்கள் எல்லாம், கனடிய அரசியல்வாதிகளோடு ஒட்டிக் கொண்டு, தங்களைச் சமூகத் தலைவர்களாகக் காட்டி, தங்களால் வாக்குகளைப் பெற்றுத் தர முடியும் என்று, அவர்களுக்கு வேட்டி உடுத்தி, நன்றி வானக்கம் சொல்ல வைத்து, கொத்துரொட்டி வெட்ட வைத்து, இந்த முட்டாள் யாழ்ப்பாணிகளுக்கு அவர்கள் ஈழம் எடுத்துத் தருவார்கள், அல்லாது போனால் இனஅழிப்பு முத்திரையாவது வாங்கித் தருவார்கள் என்று கதை சொல்லிக் கொண்டு செய்தது முழுக்க முழுக்க தங்களை வளர்த்துக் கொண்டது தான்.

கனடிய அரசியலில் தங்களைப் புகுத்தி, இந்த யாழ்ப்பாணிகளின் முதுகில் சவாரி செய்து கொண்டு தான் இன்றைக்கும் இவர்கள் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதில் பலருக்கு பாராளுமன்றக் கனவுள் நிறையவே உள்ளன. ஆங்கிலமோ, கனடிய அரசியல் பற்றிய அறிவோ இல்லாமல், தேர்தலில் குதிக்கிற ஒரு கூட்டம் இங்கே இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில், உண்மையாகவே மக்கள் நலனைச் சிந்திக்கும் ஒருவரைக் கூட

இதுவரை காலமும் ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை, அரசியல் தலைமைகளும் துப்பாக்கியும் துரோகி என்று மண்டையில் போடுவதால் தீர்க்க முடியும் என்று தான் நம்பிக் கொண்டிருந்தன.

துரையப்பாவை மண்டையில் போடுவதில் தொடங்கிய அந்தக் கனவு, கதிர்காமரைப் போட்டதோடு முடிவுக்கு வந்தது.

இடையில் ராஜீவ் காந்தி.

இந்த மண்டையில் போடும் படுகொலை அரசியல் இந்தச் சமூகத்தைப் படுகுழியில் தள்ளும் என்று தாயகம் ஏடு இட்டோர் இயல்களில் 'இடித்துரைப்பு, எச்சரிக்கை, காட்டம்' எல்லாம் செய்தும், இந்த யாழ்ப்பாணிகள் இந்தப் படுகொலைகளை வெடி கொழுத்திக் கொண்டாடும் மனநிலையில் தான் இருந்தார்கள்.

*அடையாளம் காட்ட முடியாதபடிக்கு, எல்லோருமே கூட்டுக்களவாணி அயோக்கியர்கள்.*

*பாராளுமன்றத்திற்கு சிலரை அனுப்பினார்கள். யாழ்ப்பாணிகளைக் குஷிப்படுத்த சில தீர்மானங்களை நிறைவேற்ற அனுமதித்ததைத் தவிர, கனடிய அரசியல்வாதிகள் இவர்களின் எதிர்பார்ப்புகள் எதையும் நிறைவேற்றவில்லை.*

*முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நினைவுச்சின்னம் என்ற முயற்சி கூட, யாழ்ப்பாணியின் பெட்டிஷன் மொட்டைக்கடித பாரம்பரியப் புண்ணியத்தில், சேர்த்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் நிலையில் இருப்பதாக புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.*

*அங்கே, யாழ்ப்பாணிகளின் சமூகத் தலைவர்கள் என்றால், ஒரு ஐயர், ஒரு கிறிஸ்தவ குருவானவர், அகப்பட்டால் ஒரு இமாம், சில பல்கலைக்கழக ஆசிரியர்களோடும், ஒப்புக்குச் சப்பாணிகள் கதையாகத் தான் முடியும்.*

*இதுவரை காலமும் பிரபாகரனின் துப்பாக்கிக்குப் பயந்து வாயைப் பொத்திக் கொண்டு, மேதகு தேசியத் தலைவர் என்று புகழ் பாடிக் கொண்டிருந்த யாழ்ப்பாணிப் படித்த சமூகம், இன்றைக்கு தன்னுடைய வழிகாட்டலில் தான் தமிழ் அரசியல் இயங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு இருக்கிறது.*

*அதன் ஒரு முயற்சியாக பேரவை என்ற ஒரு கொஞ்ச நாள் கூத்து மேடையேறிக் கொண்டிருந்தது.*

*மறுபுறத்தில், புலிக்குச் சேர்த்த பணத்தை ஏப்பம் விட்ட திருடர்களும், புதிதாகக் கோட்டுப் போட்ட பிரமுகர்களும், தாங்கள் சொல்வதன்படி தான் அங்குள்ள அரசியல் இருக்க வேண்டும் என்ற நினைப்பில் திரிகிறார்கள்.*

*இந்தச் சமூகம் பற்றி பிறந்த நாள் முதலாகத் தெரிந்து கொண்டதால், இந்த முயல் பிடிக்கிற நாய்களின் மூஞ்சி எனக்கு நன்றாகவே தெரியும்.*

*ஆண்ட பரம்பரைக்கு சமூகநீதி பற்றி எந்த அக்கறையும் இல்லை. அத்தோடு கிடைக்கும் கொஞ்ச அதிகாரத்தையும் மற்றவனை நசுக்க எவ்வாறு பாவிக்கும் என்பதும் எனக்குத் தெரியும்.*

*அதற்கு வாழும் சாட்சியாக இன்றைக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருக்கிறது.*

*அதனுடைய செயற்பாட்டுத் திறனுக்குச் சாட்சியாக மாகாண சபை இருக்கிறது.*

*சமூகமாகச் சிந்திக்க முயலும் எவரையும் இந்தச் சமூகம் மேலெழ விடுவதில்லை.*

*இதையெல்லாம் மீறி, ஒரு சிந்திக்கத் தெரிந்த குழு ஒன்று மேலெழுவதன் மூலம் தான் இந்தச் சமூகம் முன்னோக்கி நகர முடியும்.*

*இதுவரை காலமும் ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை, அரசியல் தலைமைகளும் துப்பாக்கியும் துரோகி என்று மண்டையில் போடுவதால் தீர்க்க முடியும் என்று தான் நம்பிக் கொண்டிருந்தன.*

*துரையப்பாவை மண்டையில் போடுவதில் தொடங்கிய அந்தக் கனவு, கதிர்காமரைப் போட்டதோடு முடிவுக்கு வந்தது.*

*இடையில் ராஜீவ் காந்தி.*

*இந்த மண்டையில் போடும் படுகொலை அரசியல் இந்தச் சமூகத்தைப் படுகுழியில் தள்ளும் என்று தாயகம் ஏடு இட்டோர் இயல்களில் 'இடித்துரைப்பு, எச்சரிக்கை, காட்டம்' எல்லாம் செய்தும், இந்த யாழ்ப்பாணிகள் இந்தப் படுகொலைகளை வெடி கொழுத்திக் கொண்டாடும் மனநிலையில் தான் இருந்தார்கள்.*

*செய்வதறியாது திகைத்து நின்ற ஒரு சமூகத்தை வழிப்படுத்த எந்த அரசியல்வாதியாலும் முடியாதபடிக்கு, யுத்த முடிவின் பின்னான நிலைமை இடியப்பச் சிக்கலாகி இருந்தது.*

*போராட்டம் தொடங்கிய போதிருந்த நிலைமை யுத்தம் ஆரம்பித்த போது இல்லை. யுத்தம் ஆரம்பித்த போது இருந்த நிலைமை யுத்தம் முடிந்த போது இருக்கவில்லை.*

*சமாந்தர அரசுக் கதைகளும் கனவுகளும் முழுமையாகத் தகர்க்கப்பட்டு விட்டன.*

*ஆனால், சமூகம் தனது அடிச்சுப் பறிக்கும் சிந்தனையிலிருந்து, சர்வதேசம் தீர்வு வாங்கித் தரும் என்ற சிந்தனைக்கு நகர்ந்ததே அன்றி, தன் பிற்போக்குத் தனமான சிந்தனையிலிருந்து விடுபடவேயில்லை.*

*தன் தலைவிதியை தானே நிர்ணயிக்க என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை இந்த மரமண்டைகளுக்கு இன்னமும் உறைக்கவே இல்லை.*

*மொத்த யாழ்ப்பாணிகளும் புலிகளின் எச்சங்களோ, புலிகளின் எச்சங்களை நக்கி, வீராவேஷம் போடும் அரசியலவாதிகளோ தீர்வை வாங்கித் தருவார்கள் என்று நம்பத் தொடங்கினர்.*

*அதன் தொடர்ச்சி தான் அனந்தி முதல் கஜேந்திரன், விக்னேஸ்வரன் வரையிலான தலைமைகள் பற்றிய கனவுகள்.*

*வா, வந்து தலைமையை*

ஏற்றுக்கொள் என்று கொடி பிடித்த அதே கூட்டம் இன்றைக்கு விக்னேஸ்வரனைப் பார்த்து காறித் துப்பிக் கொண்டிருக்கிறது.

இப்படி அறப்படிச்ச யாழ்ப்பாணிகள் கூழ்ப்பானைக்குள் ஒட்டுமொத்தமாக விழுந்து கிடக்கிறார்கள்.

இவர்களுடைய சிந்தனை எல்லாமே, ஏதோ தலைக்கு அடிக்கும் மை போல, தலைமையை மாற்றி விட்டால் தீர்வு கிடைக்கும் என்னும் அளவுக்கு எளிமையானது.

பிரச்சனை தலைமையில் இல்லை.

சமூகத்தில்.

அதன் சிந்தனையில்.

அந்தச் சிந்தனையை மாற்ற அரசியல்வாதிகளால் முடியாது.

இன்றைய அரசியல், தீர்வு அரசியலில் இருந்து கதிரை அரசியலுக்கு நகர்ந்து விட்டது. அந்த அரசியலில் தீர்வை வாங்கித் தருவதாகச் சொல்லிக் கொண்டே, சொத்துக் குவிக்கலாம் என்ற உண்மை தற்போதைய அரசியல்வாதிகளுக்குத் தெரிகிறது.

அதைக் கண்டு வாயூறிய நிலையில் தான், வித்யாதரன் போன்ற 'தமிழ் உணர்வு (எழுப்பு) ஆளர்'களும், தங்களுக்கு அதன் எலும்புகளையாவது சுவைக்க, ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என்று முக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய யாழ்ப்பாணச் சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் முற்றுமுழுதாக, போராட்டம் தொடங்கிய காரணிகளில் இருந்து வேறானவை.

யாழ்ப்பாணச் சமூகம் பொருளாதார ரீதியாக பின் தங்கிய நிலையில் இருக்கிறது.

உழைப்பு என்பது சமூகத்தில் ஒரு அவசியமான அம்சமாக உணரப்படாதபடிக்கு, இலகுவான வெளிநாட்டுப் பணம் சொகுசு வாழ்க்கைக்கு இடம் அளிக்கிறது.

வேலைக்கு ஆளில்லாமல் வெளியார்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய சூழ்நிலை.

வெளிநாட்டுப் பணம் வேலை வாய்ப்புகளுக்கானதாகவோ, கல்வி மேம்பாட்டுக்கானதாகவோ இல்லாமல், ஆயிரம் கால் கோயில் மண்டபங்கள் கட்டுவதில் தான் இருக்கிறது.

**தற்போதைய அரசியல் வாதிகள் எவராலும், எந்த விதமான தீர்வையும் பெற்றுத் தர முடியாது. தீபாவளிக்குத் தீர்வு, ஜெனிவாவில் தீர்வு என்று கோஷம் போடுவதோடு, மாவீரர்களுக்கு மாலை அணிவித்து நாடகம் ஆடி, பாராளுமன்றத்தில் வீராவேசப் பேச்சுக்களை பத்திரிகைகளில் வரப் பண்ணினால், யாழ்ப்பாணிகள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். தாங்கள் திரும்பத் திரும்ப மொட்டை அடிக்கப்படுவது தெரிந்தாலும், 'எண்டாலும் அவங்கள் தமிழ்த் தேசியம் தானே!' என்று மனதை ஆற்றிக் கொள்ளவும் முடியும். தேவை ஏற்பட்டால், அமைச்சர் டக்ளஸைப் பிடித்து அலுவல் பார்த்து விட்டு, தேர்தலில் கூட்டமைப்புக்கும் குத்தலாம்.**

வெளிநாட்டு மோகம் இந்தச் சமூகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியிருக்கிறது.

இராணுவ சோதனை நிலையங்கள் இருந்த மாதிரி புத்தர் சிலைகள், விகாரைகள் தோன்றுகின்றன.

இளம் தலைமுறை கல்வி என்பதை விட, ஆடம்பரங்களில் கவனம் செலுத்துகிறது.

எங்கும் நிறைந்திருக்கும் போதைப் பொருள் விற்பனை.

யாருமே அக்கறைப்படாத சுற்றாடல் அழிவுகள்.

குடிநீர் மாசுபட்டும், குறைந்தும் வெளியிலிருந்து குடிநீர் கொண்டு வர வேண்டிய நிலை.

வெளியார் குடியேற்றங்கள்.

நிலங்கள் வெளியாருக்கு விற்கப்படுதல்.

குடும்பங்கள், பிள்ளைகளிடம் உள்ள உள அழுத்தப் பிரச்சனைகளும், அவற்றின் மோசமான பாதிப்புகளும்.

எத்தனையே பிரச்சனைகள்.

இவையெல்லாம் அரசியலால் தீர்க்கப்பட முடியாத சமூகப் பிரச்சனைகள்.

கிடைத்த மாகாண சபையை வைத்தே எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாத ஒரு இனம், ஈழம் கிடைச்சா, அஞ்சு வரியத்தில வல்லரசு என்ற கனவோடு இருக்கும் கோமாளித்தனம் வேறெங்கு காண முடியும்?

தற்போதைய அரசியல் வாதிகள் எவராலும், எந்த விதமான தீர்வையும் பெற்றுத் தர முடியாது.

தீபாவளிக்குத் தீர்வு, ஜெனிவாவில் தீர்வு என்று கோஷம் போடுவதோடு, மாவீரர்களுக்கு மாலை அணிவித்து நாடகம் ஆடி, பாராளுமன்றத்தில் வீராவேசப் பேச்சுக்களை பத்திரிகைகளில் வரப் பண்ணினால், யாழ்ப்பாணிகள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

தாங்கள் திரும்பத் திரும்ப மொட்டை அடிக்கப்படுவது தெரிந்தாலும், 'எண்டாலும் அவங்கள் தமிழ்த் தேசியம் தானே!' என்று மனதை ஆற்றிக் கொள்ளவும் முடியும்.

தேவை ஏற்பட்டால், அமைச்சர் டக்ளஸைப் பிடித்து அலுவல் பார்த்து விட்டு, தேர்தலில் கூட்டமைப்புக்கும் குத்தலாம்.

எந்த அரசியல்வாதிகளும் ஒற்றுமையாக ஒருமித்த குரலில் கோரிக்கைகளை முன்வைக்கவோ, பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவோ முடியாமல் இருப்பதற்கு அவர்கள் மட்டும் காரணமில்லை.

அவர்களில் ஏதோ ஒருவரை தீர்வு வாங்கித் தரும் தேசியத் தலைவராக நம்புகின்ற குழுக்கள் அதிகரிக்கின்றன.

மாவீரர்களின் தியாகம் என்று உருட்ட, அதை வைத்துப் பிழைக்கும் புலன் பெயர்ந்த கொள்ளையர்கள் இருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட தமிழ்நாட்டுத் திராவிட அரசியல் நிலைமையில் வந்து நிற்கிறது. அரசியல் என்பது சொத்துச் சேர்ப்பதற்கான வழியாக மட்டும் தான் இன்றைக்கு இருக்கிறது.

எடப்பாடிகளும் பன்னீர்ச் செல்வங்களும் எங்களுக்கும் குறைவில்லாமல்.

இப்படி, இந்த அரசியல் பல அயோக்கியர்களை உருவாக்கியிருக்கிறது.

அயோக்கிய சமூகத்திலிருந்து கடைந்தெடுக்கப்பட்டவர்கள் அப்படித் தானே இருக்க முடியும்?

இவற்றை எல்லாம் சமூகப் பிரச்சனைகளாக அணுகாமல், சர்வரோக நிவாரணத் தீர்வு கிடைத்தவுடன் தானாகவே தீரக் கூடிய அரசியல் பிரச்சனைகளாகத் தான் இவற்றை இந்த சமூகம் நினைத்துக் கொண்டிருக்கிறது.

யுத்தம் முடிந்து பதினைந்து வருடங்களாகப் போகின்றன.

தங்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கையாக இந்தச் சமூகம் எதை முன் வைத்திருக்கிறது?

யுத்தம் முடிந்த பின்னால், இந்தத் தோல்விக்கான காரணங்களை இந்தச் சமூகம் சமூகமாகச் சிந்தித்திருக்கிறதா?

47 நாடுகள் சேர்ந்து சதி செய்யாவிட்டால், அண்ணை அடிச்சுப் பறிச்சிருப்பார் என்ற கோமாளித்தனமான பொய்க் கதையை தனக்குத் தானே சொல்லி, அதை நம்பிக் கொண்டிருக்கிறது.

வரலாறே வழிகாட்டி என்று சொன்னவரை கண்ணை மூடிக் கொண்டு, வாயையும் பொத்திக் கொண்டு, ஆதரித்தவர்களுக்கு, வரலாற்றிலிருந்து எதையும் கற்றுக் கொள்ள முடியவில்லை.

யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சமூகங்கள் எல்லாம் தங்களைக் கட்டி எழுப்பிக் கொண்டது இவ்வாறான சிந்தனை மாற்றங்களால் தான்.

ஜேர்மன் நாஸிக் கொள்கைகளைக் கைவிட்டது.

ஜப்பான் முடியாட்சியைக் கைவிட்டது.

எங்களுக்கு இன்றைக்கும் தேசிக்காய் தலைவர் சிங்களவர்களுக்குச் சிம்ம சொப்பனம் என்ற நினைப்புத் தான்.

அவருடைய பெயரைக் கேட்டால் சிங்களம் கதறுகிறது என்று தான் பேஸ்புக் போராளிகள் சுவரொட்டி ஒட்டுகிறார்கள்.

பெரும் தோல்வியைப் பெற்றுத் தந்த புலிச் சிந்தனையை கழற்றி விட இன்றைக்கும் இந்தச் சமூகம் தயாரில்லை. அதையிட்டு இன்றைக்கும் பெருமை கொண்டபடி தான் இருக்கிறது.

**யுத்தத்தினால் அழிக்கப்பட்ட சமூகங்கள் எல்லாம் தங்களைக் கட்டி எழுப்பிக் கொண்டது இவ்வாறான சிந்தனை மாற்றங்களால் தான்.**

**ஜேர்மன் நாஸிக் கொள்கைகளைக் கைவிட்டது. ஜப்பான் முடியாட்சியைக் கைவிட்டது.**

**எங்களுக்கு இன்றைக்கும் தேசிக்காய் தலைவர் சிங்களவர்களுக்குச் சிம்ம சொப்பனம் என்ற நினைப்புத் தான். அவருடைய பெயரைக் கேட்டால் சிங்களம் கதறுகிறது என்று தான் பேஸ்புக் போராளிகள் சுவரொட்டி ஒட்டுகிறார்கள்.**

**பெரும் தோல்வியைப் பெற்றுத் தந்த புலிச் சிந்தனையை கழற்றி விட இன்றைக்கும் இந்தச் சமூகம் தயாரில்லை. அதையிட்டு இன்றைக்கும் பெருமை கொண்டபடி தான் இருக்கிறது.**

அப்படி, சிந்தனைப்போக்கை முழுமையாக மாற்றிக் கொள்ளும் ஒரு மாற்றம் நிகழாத பட்சத்தில், இன்னும் முப்பது வருடங்களின் பின்னால், ஒருபோதுமே மாற்ற முடியாத மாற்றங்கள் நிகழ்ந்து இது ஒரு தமிழ் மண் என்ற சுவடுகளே தெரியாத நிலை கூட ஏற்படலாம்.

இத்தனை வருடங்களின் பின்னாலும், இந்தச் சமூகம் ஜெனிவாவையும், இந்தியாவையும் மாறி மாறி நம்பிக் கொண்டிருக்கிறது.

இன்னமும் காலம் சென்று விடவில்லை.

இந்தச் சமூகம் இன்றைக்காவது சமூக நீதி சார்ந்து, சமூக அக்கறை சார்ந்து, ஒரு சிந்திக்கத் தெரிந்த குழு ஒன்றை தனக்குள் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

அரசியலோடு சம்பந்தப் படாமல், அதனால் கறைப் படுத்தப்படாமல், அரசியல் ஊடுருவலும் தலையீடும் இல்லாமல், புலன் பெயர்ந்த அழுத்தங்களும் இல்லாமல், சுயாதீனமாக இயங்கும் ஒரு சிந்திக்கத் தெரிந்த ஒரு intellectual class இனால் தான் இந்தச் சமூகத்தை வழிநடத்த முடியும்.

அது தான் வழிநடத்தவும் வேண்டும்.

அந்த வகுப்பினர் தான் இந்தச் சமூகத்தில் ஒரு சிந்தனை மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

அந்த வகுப்பினர் தான் பொறுப்பு வாய்ந்த ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மூலமாகவும், ஆரோக்கியமான விவாதங்கள் மூலமாகவும், அடுத்த தலைமுறையை வளர்க்கும் பல்கலைக்கழக மட்ட பயிற்றுவிப்புகள் மூலமாகவும், சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

அவர்களால் தான் அங்கு எப்படி அரசியல் செய்யப்பட வேண்டும் என்ற சொல்கிற புலன் பெயர்ந்த கூட்டத்தையும், புலியை வைத்துப் பிழைக்கிற தமிழ் நாட்டுக் கும்பலையும் வாயைப் பொத்தும்படி சொல்ல முடியும்.

அந்தச் சிந்தனை மாற்றம் தான் இந்த நூற்றாண்டுக்குரிய தலைவர்களை உருவாக்க முடியும்.

அந்தத் தலைவர்களால் தான் அடுத்த தலைமுறைக்கான வளமான ஒரு வாழ்வை, அந்தத் தலைமுறைக்கு வாழ வேண்டும், வாழ்க்கையை அமைக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தருகின்ற ஒரு பிரதேசத்தை அமைக்க முடியும்.


அது தான் இந்தச் சமூகத்தின் எதிர்காலத்தை இந்த மண்ணில் உறுதி செய்வதற்கான சரியான வழியாக அமைய முடியும்.

சமூகத்தின் சிந்தனையில் மாற்றம் ஏற்படாமல் எந்த மாற்றமும் இங்கே நிகழ்ந்து விடப் போவதில்லை.

அவ்வாறன சிந்தனை மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, தன் எதிர்காலத்தை தானே சுயநிர்ணயம் செய்வதற்கான முயற்சிகளைத் தொடங்குவதற்கு, இன்றைக்கும் காலம் கடந்து விடவில்லை என்றாலும்,

அந்த நம்பிக்கை நிறைவேறும் என்ற எண்ணம் எனக்கு எந்தக் கனவிலும் இல்லை.

ஏன்...?




# வாசிப்பும், யோசிப்பும்!

## வ.நகிரிதரன்

**டெஸ்ட்மண்ட் மொரிஸின் ‘மனித மிருகக்காட்சிசாலை‘ (Human Zoo)**

இன்று மிகவும் சாதாரணமாக ‘கட்டடக்காடு‘, ‘காங்ரீட் காடு‘ போன்ற பதங்களைப் பாவிக்கின்றோம். அண்மையில் வெளியான எனது சிறுகதைத் தொகுதியில் கட்டடக்காடு என்னும் சொற்பதத்துடன் கட்டடக்கூடு என்னும் சொற்பதத்தையும் உள்ளடக்கியிருந்தேன்.

‘கட்டடக்காடு என்னும் சொற்பதத்தைப் பாவித்துத் தமிழில் மேலும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. கவிஞர் ‘காலம்‘ செல்வம் அருளானந்தம் அவர்களின் கவிதைத் தொகுதியொன்றும் ‘கட்டிடக்காடு‘ (உண்மையில் கட்டடக்காடு என்றிருக்க வேண்டும். பலரும் கட்டடத்தைக் கட்டிடம் என்றே அழைக்கின்றார்கள். வழக்கில் இவ்விதமே பலராலும் அழைக்கப்படுவதால் ஆசியான் பதிப்பகமும், கவிஞர் செல்வமும் அவ்விதமே பாவித்திருக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். கட்டிடம் : கட்டு + இடம் = கட்டுமிடம்.

கட்டு + அடம் = கட்டடம்.

கட்டடம் கட்டுவதற்கான இடமே கட்டிடம்.


அடம் = அடுக்கு.

ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதால்

கட்டு+அடம் = கட்டடம் என்றானது.) என்னும் பெயரில், அமரர் எஸ். சபாலிங்கத்தின் ஆசியான் பதிப்பகத்தின் வெளியீடாக வெளியாகியிருந்தது.

நான் முதன் முதலாக காங்ரீட் காடு (Concrete Jungle) என்னும் சொற்பதத்தைக் கேட்டது கொழும்பு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியரான கார்லோ பொன்சேகா மூலமே. கட்டடக்கலை மாணவர்களாக எமக்கு ‘உடலியல்‘ (Physiology) பற்றிய பாடமொன்றினை அவர் கற்பித்தார்.

கட்டடங்களை வடிவமைப்பதற்கு மானுட உடலியல் பற்றியும் அறிந்திருக்க வேண்டியதன் அவசியத்தினால் அப்பாடம் எமக்குக் கற்பிக்கப்பட்டது.




அவ்விரிவுரையாளர் எமக்கு விலங்கியல் நிபுணரான (Zoologist) டெஸ்மண்ட் மொரிஸ் (Desmond Morris) எழுதிய ‘மனிதமிருகக் காட்சிசாலை‘ (Human Zoo) என்னும் நூலைப் பற்றி அறிமுகப்படுத்தியிருந்தார். அத்துடன் அந்நூல் காங்ரீட் காடுகளான நகரங்களில் வாழும் மனிதர் கூண்டுகளில் அடைக்கப்பட்டு மிருகக்காட்சி சாலைகளில் வசிக்கும் மிருகங்களைப்போல் நடந்துகொள்கின்றார்கள் என்பதை விபரிக்கும் நல்லதொரு நூலென்றும் கூறியிருந்தார்.

காங்ரீட் காடு அல்லது கட்டடக்காடு என்னும் சொற்பதத்தை முதன் முதலாகப் பாவித்தவர் டெஸ்மண்ட் மொரிஸ் என்றே கருதுகின்றேன். ஆனால் இது மேலதிக ஆய்வுக்குரியது.

சந்தர்ப்பம் கிடைத்தால் தவறாமல் இந்நூலை வாசித்துப் பாருங்கள். கூகுளில் தேடினால் இலவசமாக இதன் pdf வடிவம் கிடைக்கும்.

நூல் பின்வருமாறு ஆரம்பமாகின்றது.

'When the pressures of modern living become heavy. the harassed city-dweller often refers to his teeming world as a concrete jungle/ This is a colourful way of describing the pattern of life in a dense urban community. but it is also grossly inaccurate. as anyone who has studied a real jungle will confirm"




## அறிந்து கொள்வோம் கேலிச்சித்திரக்காரர் அவந்த ஆர்டிகல (Awantha Artigala)

இலங்கையின் முக்கிய கேலிச்சித்திரக்காரர் என்றால் முதலில் நினைவுக்கு வருபவர் அவந்த ஆர்டிகல. 'டெய்லி மிரர்', 'அத்த' ஆகிய பத்திரிகைகளில் வெளியாகும் அவரது கேலிச் சித்திரங்கள் தனித்துவமானவை. முக்கியமானவை. மிகுந்த வரவேற்பைப் பெற்றவை. சமூக, அரசியல் நிகழ்வுகளை படைப்புத் திறமையுடன், சமுதாயப் பிரக்ஞையுடன் விமர்சிப்பவை.

இலங்கை பல கேலிச் சித்திரக்காரர்களைக் கண்டுள்ளது. விஜேரூபகே விஜேசோமா (Wijerupage Wijesoma) அவர்களில் புகழ்பெற்ற கேலிச்சித்திரக்காரர். அவரது கேலிசித்திரமே அவந்தா ஆட்டிகல முதன் முறையாக, அவர் சிறுவனாகவிருந்த சமயம் எதிர்கொண்ட கேலிச்சித்திரம்.

பின்னர் விஞ்ஞானத்துறையில் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தவர் அதனை உதறிவிட்டு முழுநேரமாகக் கேலிச்சித்திரக்காரராக இயங்கத்





தொடங்கி விட்டார். இலங்கையின் முக்கிய கேலிச்சித்திரக்காரர்களில் ஒருவராக அவர் தன்னை அடையாளப்படுத்திவிட்டார்.

அவரது கேலிச்சித்திரங்கள் சமூக, அரசியல் நிகழ்வுகளை உள்வாங்கி, படைப்புத் திறமையுடன், தனித்துவம் மிக்கவையாகப் படைக்கப்படுகின்றன. அதே சமயம் அவை சமுதாயப் பிரக்ஞை மிக்கவையாகவும் அமைந்துள்ளன. அதனால் அவை பார்ப்பவர் உள்ளங்களில் ஒரு பார்வையிலேயே பதிந்து விடுகின்றன. உதாரணத்துக்கு அண்மையில் அவர் கோவிட் தொற்று நோய் சமூக, அரசியலில் ஏற்படுத்திய விளைவுகளை மையமாகக்கொண்டு உருவாக்கிய கேலிச்சித்திரங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை.

அவந்த ஆர்ட்டிகல கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். என் முகநூல் நண்பர்களிலொருவரான எழுத்தாளர் காத்யான அமரசிங்ஹ கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். என்னுடன் கட்டடக்கலை பயின்று அத்துறையில் ஆஸ்திரேலியாவில் பணியாற்றும் ஆரியரத்தின கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவ்விதம் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களைப் பார்க்கையில் கேகாலை இவர்களைப்போல் மேலும் பலரைக் கலைத்துறையில் உருவாக்கியுள்ளதா என்பதை ஆராய்ந்திடும் எண்ணம் தோன்றுகின்றது.

இனவாதம், கோவிட் ஆகியவற்றை மையமாகக்கொண்டு அவர் உருவாக்கிய கேலிச்சித்திரங்களுடன் அவரது புகைப்படத்தையும் பகிர்ந்து கொள்கின்றேன். அண்மையில் தமிழ்ப்பகுதிகளில் பொலிசார் முகக்கவசம் அணியாதவர்களைக் கைது செய்த முறையினைக் கருப்பொருளாகக் கொண்ட கேலிச்சித்திரம் அனைவரையும் திரும்பிப்பார்க்க வைப்பது. உப கண்ட, சர்வதேச அரசியலுக்குள் விழுந்து கிடக்கும் இலங்கையின் நிலையினைச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. புகைப்படத்தை ஆஸ்திரேலியாவிலிருந்து இயங்கும் பெண் ஊடகவியலாளரான Smriti Daniel அவர்களின் SmritiDaniel.com வலைப்பதிவிலிருந்து பெற்றுக் கொண்டேன். நன்றியுடன் இங்கு பாவிக்கின்றேன்



## ஹிதுமதெ ஜீவிதெ என்றழைக்கப்பட்ட படுகாகஹே டொன் சுமதிபாலா!

அண்மையில் இம்மனிதனைப் பற்றிய செய்திக் குறிப்பொன்றை வாசித்தேன். இவனது வாழ்க்கை என் கவனத்தை ஈர்த்தது. நமது தமிழ்ப்பட நாயகர்கள் பலர் திரைப்படங்களில் செய்ததைத்தான் இவன் தன் வாழ்க்கையில் செய்திருந்தான். அதனால் இவன் தன் வாழ்வின் 43 வருடங்களைச் சிறையில் கழித்திருந்தான். பின்னர் விடுதலையான இவன் நோய் வாய்ப்பட்டு இறந்திருந்தான். அது பற்றிய செய்தியினை ஜூலை 17, 2022 வெளியான டெய்லி நியூஸ் (இலங்கை) வெளியிட்டிருந்தது.

இவன் களுத்துறை மாவட்டத்தில்

பிறந்தான். இவனது பெயர் படுகாகஹே டொான் சுமதிபாலா. ஆனால் இவன் 'ஹிதுமதெ ஜீவிதெ' (Hitumate Jeevithe) என்றே அறியப்பட்டிருந்தான். இவனுக்கு ஒரேயொரு சகோதரி. அழகுமிக்க அச்சகோதரி 1972 புது வருட தினத்தில் நடைபெற்ற அழகுராணிப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தாள். ஆனால் அவனது சகோதரி அழகு ராணிப் போட்டியில் வெற்றி பெற்றபின் வீடு திரும்பவில்லை. அவளுக்கு என்ன நடந்தது? களுத்துறைக் காவல்துறை அதிகாரி ஒருவன் இவனது சகோதரியைக் காரில் கடத்தி, ஹொட்டலொன்றுக்குக் கொண்டு சென்று பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய பின் கொலை செய்திருக்கின்றான். இதனை அறிந்த ஹிதுமதெ ஜீவிதெ அந்தக் காவல் துறை அதிகாரியைக் கொன்றிருக்கின்றான். அதற்காக அவனுக்குத் தூக்குத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்திருக்கின்றார். சிறையிலிருந்தபோது இவன் ஐந்து தடவைகள் தப்பிச் சென்றிருக்கின்றான். தனது சகோதரியின் மரணத்துடன் தொடர்பு உள்ளவர்களாகக் கருதப்பட்ட மேலும் ஐவரைக் கொலை செய்திருக்கின்றான்.




**இவன் சிறையிலிருந்த காலத்தில் இவனுடன் சிறையிலிருந்த அரசியல் கைதிகளில் சிலர், ரோகண விஜேவீரா, விஜய குமாரணதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனா, சரத் பொன்சேகா.**

1978இல் இவனது மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. மரண தண்டனையை இலங்கை அரசு ஒழித்ததே அதற்குக் காரணம். பின்னர் பல வருடங்கள் சிறையிலிருந்த இவன் 2018இல் ஜனாதிபதியின் பொது மன்னிப்பால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றான். விடுதலையானதிலிருந்து இவன் குளியாப்பிட்டியில் இருக்கும் பெளத்த ஆலயமொன்றில் தங்கி வாழ்ந்திருக்கின்றான்.

அவனது ஒரேயொரு தங்கையின் மரணத்துக்காக, அம்மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழி வாங்கி இருந்திருக்கின்றான். என்னைப் பொறுத்தவரையில் இவனுக்கு மரண தண்டனை கொடுத்திருக்கவே கூடாது. ஆனால் சட்டம் அப்படிச் சொல்லாது. அதனால்தான் சட்டம் ஒரு கழுதை என்பார்கள். சட்டம் ஓர் இருட்டறை என்பார்கள். ஆனால் இதைத்தான் நமது தமிழ்ப்படக் கதாநாயகர்களில் பலர் செய்து வருகின்றார்கள். இவன் திரைப்படக் ஹீரோ அல்லன். உண்மையான ஹீரோ!

இவன் சிறையிலிருந்த காலத்தில் இவனுடன் சிறையிலிருந்த அரசியல் கைதிகளில் சிலர், ரோகண விஜேவீரா, விஜய குமாரணதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேனா, சரத் பொன்சேகா.

இவனது கதை சிங்களத் திரைப்படமாகவும் 'ஹிதுமதெ ஜீவிதெ' (The Wandering Life : அலையும் வாழ்க்கை) என்னும் பெயரில் 2021இல் திரைப்படமாகவும் வெளியாகியுள்ளது. சர்வதேசத் திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுமுள்ளது. பின்வரும் இணைப்பில் அதைப் பார்க்கலாம்: https://www/youtube/com/watch?v=o0d-vL00w1A




**தி.ஜானகிராமனின் 'அன்பே! ஆரமுதே!'**

வெகுசனச் சஞ்சிகைகளில் முக்கிய தமிழ் எழுத்தாளர்கள் பலரின் நல்ல நாவல்கள் பல வெளியாகியுள்ளன. உதாரணங்களாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

1. ஜெயகாந்தன் : ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம், நடிகை நாடகம் பார்க்கிறாள் மற்றும் குறுநாவல்களான 'ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன', 'யாருக்காக அழுதான்', உன்னைப் போல் ஒருவன், அக்கினிப் பிரவேசம் ( இவையெல்லாம் ஆனந்த விகடனில் வெளியானவை)

2. ஜெயகாந்தன் : சில நேரங்களில் சில மனிதர்கள்ஈ ரிஷி மூலம், ஜெயகாந்தனின் பல சிறந்த சிறுகதைகள் (தினமணிக்கதிர்)

3. தி.ஜானகிராமனின் அ்ன்பே ஆரமுதே', விந்தனின் 'பாலும் பாவையும்', கு.அழகிரிசாமியின் 'தீராத விளையாட்டு' :

இவையெல்லாம் கல்கியில் தொடராக வெளியானவை.

இவ்விதம் கூறிக்கொண்டே செல்லலாம். இவ்விதம் வெளியான தொடர்நாவல்களில் ஒன்றான தி.ஜானகிராமனின் 'அன்பே ஆரமுதே' பற்றி முன்பு எழுதிய குறிப்பை, கிடைத்த ஓவியங்கள் சிலவற்றுடன் மீண்டும்

பகிர்ந்துகொள்கின்றேன். கல்கியில் தொடராக வெளியான 'அன்பே ஆரமுதே' நாவலுக்கு ஓவியர் விஜயா வரைந்த ஓவியங்கள் இவை.

தி.ஜானகிராமனின் 'அன்பே! ஆரமுதே!'

தமிழில் எனக்குப் பிடித்த முக்கியமான நாவலாசிரியர் தி.ஜானகிராமன். இவரது 'செம்பருத்தி', 'மோகமுள்', 'மலர் மஞ்சம்', மற்றும் 'அன்பே ஆரமுதே' ஆகிய நாவல்கள் இவரது நாவல்களில் எனக்கு மிகவும் பிடித்தவை. 'அன்பே ஆரமுதே' நாவலை என் பதின்ம வயதுகளில் வாசித்திருக்கின்றேன். கல்கி சஞ்சிகையில் தொடராக வெளிவந்த நாவலை அழகாக 'பைண்டு' செய்யப்பட்ட நிலையில், ஓவியங்களுடன் வாசித்திருக்கின்றேன். அன்று இந்த நாவலை வாசித்ததற்கும், இன்று வாசிப்பதற்குமிடையில் நாவலை அனுபவிப்பதில், புரிந்து கொள்வதில் நிறையவே வித்தியாசங்களுள்ளன. ஏனென்றால் இந்த நாவலின் பிரதான பாத்திரங்கள் இளம் வயதினரல்லர். முதுமையை எட்டிப்பிடிக்கும் நடுத்தர வயதினர். இவ்வயதினரின் உளவியலை பதின்ம வயதுகளில் புரிந்து கொள்வது வேறு. பாத்திரங்களின் வயதில் புரிந்து கொள்வதென்பது வேறு.

கதை இதுதான். அனந்தசாமி என்னும் சன்யாசி, சென்னையில் வாழும் மக்களுக்கு வர்க்க, சமூக வேறுபாடுகளற்ற நிலையில் நாட்டு வைத்தியம் செய்பவர். பந்தங்களைத் தன் இளவயதில் துறந்தவருக்குப் பந்தங்கள் அவரிடம் வைத்தியம் பார்க்கும் சென்னைவாசிகள்தாம். நாவல் அனந்தசாமியின் தாயாரின் மரணத்துடன் ஆரம்பமாகின்றது. அவருக்குச் சகோதர, சகோதரிகள் நல்ல நிலையில் இருந்தாலும், யாருமே வயதான தாயாரைத் தம்முடன் வைத்துப் பார்க்கத் தயாரில்லை. அனந்தசாமியே தாயாரைத் தன்னுடன் கூட்டி வந்து பராமரிக்கின்றார். இந்நிலையில்தான் தாயாரும் இறந்து விடுகின்றார். இவரிடம் வைத்தியம் பார்க்கும் செல்வந்தப் பெண்மணி ஒருத்திதான் நாகம்மாள். அவளுக்கு ஒரு மகள் சந்திரா. காதல் தோல்வியால் துயரத்துக்கு உள்ளாகியிருப்பவள் சந்திரா.

இந்நிலையில் நாகம்மாளிடம் புது தில்லியில் காலேஜ் ஒன்றில் சரித்திரப் பேராசிரியராகப் பணிபுரியும் ருக்கு என அழைக்கப்படும் ருக்மணி, அவளது தோழி, வருகின்றாள்.

அவள் யார்? முப்பது வருடங்களுக்கு முன்னர் அனந்தசாமிக்கும், அவளுக்கும் இடையில் திருமணம் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அக்கால கட்டத்தில் ஆன்மிக ஈடுபாடு மிக்கவராக விளங்கிய அனந்தசாமி திருமண நாளன்று சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுகின்றார். சன்யாசியாக அலைந்து திரிகின்றார். இதற்கிடையில் ருக்குவின் நின்று விட்ட கல்யாணத்தின் பின்னர் ருக்கு மீண்டுமொரு கல்யாணம் செய்யவேயில்லை. அவள் தில்லியில் வசிக்கும், மகளை இழந்த துயரத்திலிருக்கும் தனது பெரியப்பாவுடன் சென்று விடுகின்றாள். அங்கு படித்துக் காலேஜொன்றில் பேராசிரியராகவும் பணி தொடங்கி விடுகின்றாள். வழக்கம்போல் நாகம்மாளுக்கு வைத்தியம் பார்க்க வரும் அனந்தசாமியும், ருக்மிணியும் சந்தித்துக் கொள்கின்றனர்.

**நான் அந்தச் சிரமங்களெல்லாம் உங்களுக்குக் கொடுக்க மாட்டேன். நான் பாட்டுக்கு எங்கோ ஒரு வீட்டில் குடியிருப்பேன். நீங்கள் விருப்பமிருந்தால் வரலாம். ஆனால் கட்டாயமாக இல்லை. நாகம்மாள் வீட்டுக்கு அடிக்கடி வருவேன். அப்பொழுது பார்த்துக் கொள்வேன்.' சற்று நிறுத்தி யோசித்து விட்டு மீண்டும் சொன்னாள் ருக்மிணி. 'அப்படியெல்லாம் சிரமம் கூட நினைக்காதவள் இங்கு ஏன் மெனக்கெட்டு வர வேண்டும். சொல்ல வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் முப்பது வருஷங்கள் தினம் பத்து தடவையாவது நினைக்கிற ஒருவரிடம் எப்படிச் சொல்லாமலிருப்பது என்று புரியவில்லை. இல்லாவிட்டால் பெண்மனம் ஆறாது. நான் வருகிறேன்.' என்று மீண்டும் எழுந்தாள் அவள்.'**

முப்பது வருடங்களுக்குப் பின்னர் அவரைச் சந்தித்த ருக்குவோ தனது புது தில்லி திரும்பும் முடிவை மாற்றி, சென்னையிலேயே இருக்க முடிவு செய்து விடுகின்றாள். அதற்குக் காரணம் அனந்தசாமிதான். இதுபற்றி நாவலில் மிகவும் அழகாக விபரித்திருப்பார் நாவலாசிரியர். உதாரணத்துக்கு ஒரு மாதிரி-

ருக்குவின் சென்னையிலே தங்கும் முடிவைப்பற்றி அனந்தசாமிக்கும், ருக்குவுக்குமிடையில் நடைபெறும் உரையாடல் நாவலின் முக்கியமான உரையாடல்களிலொன்று.

'அன்பே ஆரமுதே'- பக்கம் 146, 147 148

'அனந்தசாமி- 'உங்களைப் புரிந்து கொள்வதே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது' என்றார் அனந்தசாமி.

ருக்கு நான் அந்தச் சிரமங்களெல்லாம் உங்களுக்குக் கொடுக்க மாட்டேன். நான் பாட்டுக்கு எங்கோ ஒரு வீட்டில் குடியிருப்பேன். நீங்கள் விருப்பமிருந்தால் வரலாம். ஆனால் கட்டாயமாக இல்லை. நாகம்மாள் வீட்டுக்கு அடிக்கடி வருவேன். அப்பொழுது பார்த்துக் கொள்வேன்.' சற்று நிறுத்தி யோசித்து விட்டு மீண்டும் சொன்னாள் ருக்மிணி. 'அப்படியெல்லாம் சிரமம் கூட நினைக்காதவள் இங்கு ஏன் மெனக்கெட்டு வர வேண்டும். சொல்ல வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் முப்பது வருஷங்கள் தினம் பத்து

தடவையாவது நினைக்கிற ஒருவரிடம் எப்படிச் சொல்லாமலிருப்பது என்று புரியவில்லை. இல்லாவிட்டால் பெண்மனம் ஆறாது. நான் வருகிறேன்.' என்று மீண்டும் எழுந்தாள் அவள்.'

இவ்விதமாகத் திருமண நாளன்று சொல்லாமல் கொள்ளாமல் ஓடிச்சென்று, சன்யாசியாக, நாட்டு வைத்தியராக வாழ்ந்து வரும் அனந்தசாமியின் வாழ்வில் மீண்டும், அவர் திருமணத்தன்று யாரைக் கைவிட்டுச் சென்றாரோ, அந்தப்பெண், ருக்கு (சரித்திரப்பேராசிரியை ருக்மிணி எதிர்ப்படுகின்றாள். நாகம்மாளின் மகள் சந்திராவும் இவருடனும், ருக்மிணியுடனும் அன்பாகப் பாசத்துடன் பழகுகின்றாள். டொக்கி என்னும் பெண்ணொருவரும் தந்தையைப் போல் அனந்தசாமிமீது பாசம் கொட்டி வாழ்ந்து வருகின்றாள். சன்யாசியாக ஓடிப்போனவரின் வாழ்க்கை, முப்பது வருடங்களுக்குப் பின்னர் தன்னால் கைவிடப்பட்ட பெண்ணைச் சந்திப்பதுடன் மீண்டும் மாறுகின்றது.

நாவல் முழுவதும் அனந்தசாமியின் வாழ்க்கையை அற்புதமாக விபரிக்கின்றது.

நாவல் அக்காலத்துச் சென்னையைப் படம் பிடிக்கிறது. தி.ஜா.வின் எழுத்து நடை அற்புதமானது. நாவலில் வரும் பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்கள் வாசிக்க வாசிக்க இன்பத்தைத் தருபவை. பாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல்களை இயற்கையாக, அலுப்புத் தட்டாமல் எழுத்தில் வடிப்பதில் தி.ஜா.வுக்கு நிகர் தி.ஜா.வேதான். தி.ஜா.வின் எழுத்தைப் பற்றிப் பொதுவாக வைக்கப்படும் விமர்சனங்களில் முக்கியமானது முறை தவறிய காமத்தை மையமாக வைத்தே அவரது கதைகள் இருப்பதாக. என்னைப் பொறுத்தவரையில் அது சரியானதொரு விமர்சனமல்ல. மோகமுள், அன்பே ஆரமுதே போன்ற படைப்புகள் காதலை (காமத்தையல்ல) சிறப்பாக எடுத்துரைக்கும் படைப்புகள்.



## இலங்கைத்தமிழ் இலக்கியத்தில் முக்கியமானதொரு காவியம் எழுத்தாளர் 'பண்டிதர்' மாவிட்டபுரம் க.சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியம்'!

எழுத்தாளர் 'பண்டிதர்' மாவிட்டபுரம் க.சச்சிதானந்தன் கவிதை, சிறுகதை, நாவல் , கட்டுரை எனப்பன்முகத்திறமை வாய்ந்தவர். இவர் ஒரு மதுரைத்தமிழ்ச்சங்கப் பண்டிதர். கலாநிதி. வானியல் வல்லுநர். இவரது கல்வித்தகைமைகள் வருமாறு B.A ( Hons.)London, M.Phil, London., PhD (Jaffna) & மதுரைப்பண்டிதர்). இவர் பாவித்த புனைபெயர்கள்: சச்சிதானந்த, ஆனந்தன், யாழ்ப்பாணன், பண்டிதர சச்சி

இவரது 'யாழ்ப்பாணக் காவியம்' இலங்கைத் தமிழ்க் கவிதைப்பரப்பில் வெளியான மிகவும் முக்கியமான வரலாற்றுக் காவியம். இவரைப்போல்

இலங்கைத் தமிழ்க் கவிதைப் பரப்பில் வெளியான மிகவும் முக்கியமான காப்பியம் 'யாழ்ப்பாணக் காவியம்'. ஏன் இதனை நமது விமர்சகர்கள் கவனத்தில் எடுப்பதில்லை என்று தெரியவில்லை. அவர்கள் இப்படைப்பு பற்றி அறிந்திருக்கவில்லையா? அல்லது இதன் முக்கியத்துவம் பற்றி அறிந்திருக்கவில்லையா?

யாழ்ப்பாண வரலாற்றை மையமாகக்கொண்டு வெளியான இன்னுமொரு காவியம் கவிஞர் காரை.செ.சுந்தரம்பிள்ளையின் 'சங்கிலியம்'. ஈழநாடு பத்திரிகையின் பத்தாவதாண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற காவியம்.

'யாழ்ப்பாணக் காவியம்' யாழ்ப்பாண அரசின் 1450 1467 காலகட்ட வரலாற்றை மையமாகக் கொண்டது. இக்காலகட்டத்தில் கனகசூரிய சிங்கை ஆரியனின் யாழ்ப்பாண அரசு கோட்டை அரசு கோட்டை அரசனின் வளர்ப்புப் பிள்ளையான 'சபுமல் குமாரய'வின் (செண்பகப் பெருமாள்) ஆதிக்கத்தின் கீழ் வருகின்றது. பின்னர் கோட்டை அரசிலேற்பட்ட குழப்பங்களையடுத்து சபுமல் குமாரய தளபதி விஜயபாகுவின் பொறுப்பில் யாழ் அரசைப் பொறுப்புக் கொடுத்துவிட்டு கோட்டை திரும்பி புவனேகபாகு என்னும் பட்டப்பெயர் தாங்கி ஆட்சியில் அமர்கின்றான். ஆட்சியை இழந்த கனகசூரிய சிங்கை ஆரியனின் குழந்தைகளான பரராஜசேகரன், செகராசசேகரன் இருவரும் இந்தியாவில் மறைந்து வாழ்ந்து, இளைஞர்களாக படை திரட்டி இலங்கை மீண்டு, மீண்டும் யாழ் அரசைக் கைப்பற்றுவதை மையக் கருத்தாகக் கொண்டு பின்னப்பட்ட காப்பியம் 'யாழ்ப்பாணக் காவியம்'

இலங்கைத் தமிழ்க் கவிதைப் பரப்பில் வெளியான மிகவும் முக்கியமான காப்பியம் 'யாழ்ப்பாணக் காவியம்'. ஏன் இதனை நமது விமர்சகர்கள் கவனத்தில் எடுப்பதில்லை என்று தெரியவில்லை. அவர்கள் இப்படைப்பு பற்றி அறிந்திருக்கவில்லையா? அல்லது இதன் முக்கியத்துவம் பற்றி அறிந்திருக்கவில்லையா? இவர் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். அதனால் இவரது அரசியற் கருத்துகள் காரணமாக இவரது படைப்புகளைத் தவிர்த்தார்களா? காரணங்கள் எவையாயினும் இவரது கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள் பற்றி இன்றைய தமிழுலகு கவனம் செலுத்த வேண்டிய தருணமிது.



மல்லாவி 06

# வியக்கத்தக்க தொழில் முறைகளும் மறக்க முடியா மனிதர்களும்

மல்லாவி என்கிற புதிய கிராம வாழ்க்கை முறையில் அப்போது அங்கு தேவைப்பட்ட எல்லா விடயங்களிலும் யாரோ ஒரு கெட்டிக்காரன் அந்தத் தொழிலுக்குத் தலைமை தாங்குபவராகவும் அந்தத் தொழிலுக்கு முன்னோடியாகவும் ‘விலேஜ் விஞ்ஞானி’ களாகவும் இருந்தார்கள் என்பது தற்போது மல்லாவிக் கிராமத்தில் வாழும் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

### மல்லாவிக்குள நீர் முகாமைத்துவம்.

இந்தக் குளத்தோடு வாழ்ந்து இறந்துபோன ஒரு மறக்க முடியாத மனிதன் மு.க. இதன் அர்த்தம் முகத்துவாரம் கந்தையா என்பதாகும். வெள்ளைத் தலைமயிரும் தாடியும் (அவரது தாடி சிலவேளை முற்று முழுதாக வழிக்கப்பட்டிருக்கும். மீசை வைக்கமாட்டார். வளர்த்தால் சடை வழித்தால் மொட்டை என்பதுபோல சுத்தமாக வழித்திருப்பார். இவ்வாறு தாடியை வழிப்பதற்குத் தான் பாவிக்கும் வில்லுக் கத்தியைத் தீட்டிச் சவரக் கத்தியாக மாற்றிச் சவரம் செய்வதாக அவர் கூறக் கேட்டிருக்கிறேன்) திடகாத்திரமான உடல்வாகும் எப்போதும் வெற்றிலை சப்பிய வாயும் குரலை உயர்த்திப் பேசும், கட்டளையிடும் பாங்கான பேச்சும் கையில் குளத்துத் தண்ணீரைத் திறக்கும் சாவியுடனும் ஒரு கத்தியுடனும் மழை வெயில் என இரண்டு காலப்பகுதியிலும் தலைப்பாகை கட்டுவதோ குடை பிடிப்பதோ இல்லாத ஓர் ஆளுமை அவர்.

மழை காலத்தில் பெரிய பச்சைக் குறியன் சாக்கை உட்புறமாக மடித்துத் தலையில் மாட்டினால் தலையும் முதுகுப் பக்கமும் நனையாது பாதுகாப்பாக இருக்கும். மழை தூறிக்கொண்டிருக்கும்போது தலைச் சாக்குடன்போய்க் குளத்தில் தண்ணீர் மட்டம் எவ்வளவு இருக்கிறது. கலிங்கு பாய எத்தனை நாள் எடுக்கும். சென்ற வருடம் பெய்த மழையை வைத்து இந்த வருடம் எப்படி மழை பெய்யும். மழை குறைவு என்றால் வேளைக்கே விதையுங்கோ. இந்த முறை பின் மழை பெய்யும் என்றால் அவசரப்பட்டு விதைக்கவேண்டாம் என்று விவசாயிகளுக்குக் கூறுவார். சிறந்த வானிலை பற்றியும் இயற்கை விவசாயம் பற்றியும் அறிவுள்ளவராக இருந்தார். அவர் அவ்வாறு கூறுவது பிழைத்ததும் இல்லை அவர் கூறுவதை யாரும் மறுத்துக் கூறுவதுமில்லை. மழை காலத்தில் கோவணத்துக்கு மேல் ஒரு சிறிய துவாயை இடுப்பில் கட்டியிருப்பார். திரைப்படங்களில் வரும் உடுப்புக் குறைந்த அளவிலான ஆடைபோல அது இருக்கும். மொத்தமான தொடைகளும் செருப்புப் போடாத பெரிய பாதங்களும் மு.காவிற்கு ஒரு தனி அழகைக் கொடுக்கும். நான் சிறுவயதில் பார்த்து ரசித்த உருவம் அவர். சிறுவர்களைக் குளம் நிறைந்திருக்கும் காலத்தில் அங்கு

**அ.விஜயன்**

போகக்கூடாது என்று உரப்பும் தொனியே தனியழகு.

கோடை காலத்தில் வயலுக்குத் தண்ணீர் திறக்க வேண்டும் என யார் கூறினாலும் வாய்க்கால்கள் எங்காவது உடைந்திருந்தால் வரம்புகள் உடைந்து தண்ணீர் வீணாகப்போய்க் கழிவு வாய்க்காலில் விழும் நிலையிருந்தால் தண்ணீரைத் திறக்க மாட்டார்.

அவர் எப்போதும் துருசுச் சாவியைத் தன்னுடன் வைத்திருப்பதற்குக் காரணமே மல்லாவிக் குளத்தின் ஒரு துளி நீரைக்கூட வீணாக ஓடவிடக்கூடாது என்ற சிக்கனமே. தண்ணீர் வீணாகப் போவதைக் கண்டுவிட்டால் அவர் முதலில் செய்வது குளத்திலிருந்து தண்ணீர் வெளியேறாமல் துருசுக் கதவைப் பூட்டுவதாகும்.

அதிகாலையிலேயே சகல வாய்க்கால்கள் வயல்கள் எனச் சென்று பார்த்து எங்கு என்ன நடந்திருக்கிறது என்பதை அறிந்து வைத்திருப்பார். அது சிலவேளை குறிப்பிட்ட வயல் சொந்தக்காரர்களுக்குத் தெரியாமல் இருக்கும். அவற்றைச் சீர்செய்யாமல் துருசைத் திறந்து தண்ணீர் கொடுக்க மாட்டார் உண்மையான, பொறுப்பான இயற்கையை நேசிக்கும் கம விதானை அவர்.

### கொங்கிறீட் வாய்க்கால்கள் இல்லை

அப்போது வாய்க்கால்கள் மண்ணால் கட்டப்பட்டிருந்ததால் துருசால் வடியும் தண்ணியால் ஆடு மாடுகள் குடிக்கத் தண்ணீர் போதுமானதாக இருக்கும். தண்ணீர் மண் வாய்க்கால்களில் ஓடுவதால் அதன் இருபுறமும் பச்சைப் பசேலெனப் புல் வளர்ந்திருக்கும். அவற்றை மாடுகள் வயிறு முட்டத் தின்றுவிட்டு அந்த வாய்க்காலிலேயே தண்ணீரையும் குடித்துவிட்டு வெயில் நேரங்களில் மருத மர நிழலில் படுத்துக் கிடந்து இரை மீட்கும் காட்சியே தனி அழகு.


மாடுகள் எல்லாம் மொழு மொழுவென்று நல்ல தசைப்பிடிப்பாக இருக்கும். எலும்புகள் தெரியாத அழகான தோற்றம் அது.



சிலவேளை வயலுக்குத் தண்ணீர் தேவைப்படாமல் இருந்தாலும் ஆடு, மாடுகள் குடிப்பதற்காகக் கொஞ்ச நேரம் தண்ணீரைத் திறந்து விடுவார் மு.க. அதுவெல்லாம் அவர், தானே எடுக்கும் தீர்மானம். அதை எதிர்த்து யாரும் பேச முடியாத அளவுக்கு அவரது தீர்மானம் சரியாகவே இருக்கும். கால்நடைகளைப் பொறுத்தவரையிலும் மு.க. ஒரு நடமாடும் கடவுள்.

குளம் வற்றும் காலத்து நீர் முகாமைத்துவம்

மு.க. தனது நீர் முகாமைத்துவத் திட்டத்தை நாலுபேர் நிற்கும் இடங்களில் விளக்கமாகக் கூறுவார். குளத்தில் இடுப்பளவு தண்ணீர் நிற்கும்போது அந்த வறட்சியான சூழலை எவ்வாறு கையாள்வது



என்பதில் மிக இறுக்கமான நடைமுறைகளை முன்வைப்பார். குளத்தின் நீரேந்து பகுதிகளில் உள்ள புற்களைத் தின்று வாழும் மாடுகள் குளம் வற்றும்போது பின்புறமாக வந்து தண்ணீர் குடிக்கும். அதேவேளை யானை உட்படக் காட்டு விலங்குகள் எல்லாம் தண்ணீர் குடிப்பதற்கு மல்லாவிக் குளத்துக்கு வந்துபோகும். சிறிய அளவில் மீன் பிடிக்க அனுமதிப்பார். தண்ணீர் முழங்கால் அளவுக்கு வந்ததும் கரப்புக் குத்தி மீன் பிடிக்க விடுவார். அதன் பிறகு தண்ணீரைத் திறக்கவே மாட்டார். அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று குளத்தில் வாழும் முதலைகள் தண்ணீர் ஒட்ட வற்றிய பின்னர் குளக்கட்டின் கீழ்ப் பகுதியில் பாளியமைத்து அதற்குள் போய்ப்படுத்துவிடும் என்பது. அவ்வாறு பெரிய முதலைகள் பெரிய பாளிகளை உருவாக்கிவிட்டால் மீண்டும் குளத்தில் நீர் தேங்கும்போது அந்த முதலைகள் மீண்டும் குளத்துக்குள் வந்துவிடும். ஆனால் முதலைகள் தோண்டிய பாளியால் உமை வைத்து (குளக்கட்டின் மறுபுறத்தில் நீர்க்கசிவு ஏற்படுவது) கட்டை உடைத்துவிடும் என்பது. குளக்கட்டை உறுதியாக வைத்திருப்பதற்கு முதலை பாளி வைக்காது தடுக்க வேண்டியது அவசியமானது என்பதை மு.க. நன்கு தெரிந்து வைத்திருந்தார்.

இரண்டாவது, குளத்திலுள்ள மீன் வகைகள் முற்றாக அழிந்துவிடாது தப்புத் தண்ணி சேறு என இருந்தால் அவை மழை காலம் வரும்வரை அதில் உயிர்வாழும். மீண்டும் குளம் நிரம்பும்போது மீனினம் பாதுகாக்கப்படும் என்பது.

2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் மல்லாவிக் குளத்தில் மீன்கள் அதிகளவில் இறந்தன. அதற்குக் காரணம் வளர்ப்பு மீனைத் தண்ணீரின் அளவைத் திட்டமிடாது குளத்தில் விட்டதும் அவற்றுக்குப் போதுமான அளவு நீரைச் சேமிக்க முடியாது போனமையும் ஆகும். மு.க இருந்த காலத்தில் மீன் குஞ்சுகள் குளத்தில் விடும் நடைமுறையோ வாய்க்கால்களுக்குக் கொங்கிறீட்

கட்டுப்போடும் நடைமுறையோ இருக்கவில்லை. எல்லாவற்றையும் விட கம விதானைமாரின் நீர் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடும் குளத்திலுள்ள நீருக்கு மேலதிகமாகச் சிறுபோகக் காணிகளை விதைத்துவிட்டு அவற்றுக்குத் தண்ணீர் விட முனைவதும் தற்போதைய நீர் முகாமைத்துவத்தில் காணப்படும் குறைபாடு ஆகும்.

அதனைவிடவும் நகரக் கழிவுகளையும் சந்தைக் கழிவுகளையும் கொண்டு சென்று கொட்டும் இடமாக அந்தக் குளம் பாவிக்கப்பட்டு வருவது குறித்து அங்கிருக்கும் அரச அதிகாரிகளுக்கோ சமூகச் செயற்பாட்டாளர்களுக்கோ அக்கறையில்லை. ஒரு காலத்தில் அந்தக் கிராமத்தின் நீச்சல் தடங்களாக மல்லாவிக் குளத்தின் பல பகுதிகள் இருந்தன. ஆனால் இன்று யாரும் அதற்குள் கால் நனைக்கக் கூட விரும்புவதில்லை. மிக மோசமான தொற்று வியாதிகளைக் கொண்டு வரும் நீராக அது கணிக்கப்படுகிறது. ஆனால் அந்தக் குளத்தில் மீன் பிடிக்கும் ஒப்பந்தங்களைத் தென்னிலங்கையிலிருந்து வரும் சிலருக்குக் கொடுப்பதன் மூலம் மல்லாவி அரச அலுவலகங்கள் பணம் சம்பாதிக்கின்றன என்று குற்றம் சொல்கிறார்கள் அங்கே வாழும் மக்கள். முன்பு மல்லாவிக் கிராம மக்கள் தமது உணவுக்காகப் பிடித்த மீன்களை இப்பொழுது பிடிக்க முடிவதில்லை என்கிறார்கள். இன்று யாராலுமே கவனிப்பாரற்றுக் கிடந்து நாற்றமெடுக்கிறது அந்த மல்லாவிக் குளம்.

ஆனால் அன்றைய காலத்தில் மு. காவின் முழு வாழ்க்கையும் மல்லாவிக்






குளத்தை மையப்படுத்தியே இருந்தது. திடீரென அவர் இறந்துபோனார் என்ற அறிந்தேன். இரவு பகல் பாராத அவரது கடின உழைப்பின்போது அவரது காலில் துருப்பிடித்த கம்பி குத்தி அதன் பின்னர் ஏற்பட்ட ஈர்ப்புக் காரணமாக அவர் இறந்தார் என்று அறிந்து துக்கப்பட்டேன். அவரது இறப்பு பெரும் துக்கமாக இன்றுவரை எனது மனதைப் பாதித்திருக்கிறது.

ஒரு தடவை பெருமழையின்போது அதிக தண்ணீர் வரத்துக் காரணமாகக் குளம் உடைக்கப்போகிறது என்ற பயம் எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டது. குளம் உடைந்தால் மு.க உயிருடன் இருக்கமாட்டார் என நினைத்தேன். முருகன் கோவில் வீதியில் குளத்தில் வால்கட்டுப் பகுதியில் குளக்கட்டை வெட்டி விடும் தீர்மானத்தை மு.க எடுத்தார். தொடர்ச்சியாக மழை தூறிக்கொண்டிருந்தபோது கோவணமும் சிறு துவாயும் என்ற அவரது தேசிய உடையில் கம்பீரமாகக் கட்டளையிட்டுக்கொண்டிருந்தார். தானே குளக்கட்டின் முதல் மண்ணை வெட்டி எறிந்தார். அதைத் தொடர்ந்து மண்வெட்டியால் பலர் சேர்ந்து குளக் கட்டை வெட்டினார்கள். நிரம்பி நின்ற தண்ணீருக்கு மேலதிகமாக நீர் என்பவற்றால் காப்பாற்றப்பட்டது.

அவர் இறந்தபின்பு முருகன் கோவிலுக்குச் சற்றுத் தூரத்தில் இரு துருசுகளுக்கும் இடையில் மல்லாவிக் குளம் உடைப்பெடுத்தது. இரவு நேரம் உடைப்பெடுத்தது என்று அறிந்தேன். மறுநாள் காலை நான் ஓடிப்போய் அந்தக் கோரக்காட்சியைக் கண்டேன். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கத்தியால் கிழித்துக் குழந்தையை எடுத்து வெளியே வீசியது போன்ற துக்கம் எனக்கு ஏற்பட்டது.

நல்லவேளை அந்தக் குரூரமான காட்சியைப் பார்ப்பதற்கு முன் மு.க இறந்துவிட்டார். அந்தக் குளம் தானாக உடைப்பெடுத்ததா? அல்லது வேண்டுமென்றே செயற்கையாக உடைக்கப்பட்டதா? என்ற கேள்வி என் மனதில் இன்றும் எழுந்தவண்ணமே உள்ளது. என் வாழ்நாளில் நான் சந்தித்த மிகப்பெரிய அனர்த்தம் அது.

எது எவ்வாறிருப்பினும் வன்னியின் மிகப் பழைய ஒரு நீர்ப்பாசன நாகரீகத்தின் சிறப்பான கம விதானையாக இறுதியாக இருந்த மனிதர் என்ற பெருமைக்குரியவர் மு.க என்கிற முகத்துவாரம் கந்தையாவே.

# ‘சிதைப்பு‘ அல்லது புலியழித்தல்

## அதிகாரம் 4

நம்ப வைக்கப்பட்டனர்.
ஆகவே, நம்பினர் ‘அவர்கள்‘.
எல்லோரும் அல்ல,
எனினும்
நம்ப வைக்கப்பட்டதால் நம்பினர்,
அவர்கள்.

‘நம்புங்கள், நாளை கிடைக்கும்‘
என்பதால் நம்பினர்.
அடிப்போம் பிடிப்போம்,
என்றதை நம்பினர்.
ஆரம்பத்தில்,
கோரங்களை இவர்கள்
கட்டவிழ்த்து விட்டபோதும்,
கண்களை மூடிக்கொண்டு
நம்பினர் அவர்கள்.

‘இவர்கள்‘
‘அவர்களது‘
அண்ணனைக் கொன்ற போதும்
அன்னையைக் கொன்றபோதும்
‘அவர்கள்‘ கண்களைத் திறக்கவில்லை.
இவர்கள் அவர்களது கண்களைக்
கட்டியே இருந்தனர்.

பிறகு, தீ எல்லா இடமும் பரவிற்று.
கோரமாய் பரவிற்று.
வேலிகளை, வீடுகளை,
ஊர்களை, மனிதரை அழித்தது.
அவர்களை அழித்தது.
இவர்களையும் அழித்தது, முற்றாய்.
இப்போதும், அவர்களில் சிலர்
இவர்களை காவுகின்றனர்.
செத்த இவர்களை.!
கோரர்களை ஊர்தி கட்டி காவுகின்றனர்.
அவர்கள் தெரியவேண்டியது ஒன்றுதான்॰
கொல்ல இவர்கள் இல்லை.
இனி, இனியாவது,:
கண்களைத் திறக்கலாம்.

# 'RUIN'

## (or ERADICATING TIGERS)

### CHAPTER: 4

('Those' were) Forced to Believe
Therefore. those believed
'Those' believed since those
Were made to believe;
Though. 'not all'
'Those' believed

Because 'These' Promised
that 'Believe, Tomorrow You will get'
Those believed because these Said.
'We'll attack and capture'
Initially.
even though. these Unleashed horrors.
they believed.
Eyes closed.

When these killed 'those' elder (Brother)
and mother.
'didn't open Their eyes'
those
These blindfolded those' eyes

Then.- fire spread everywhere.
Spread horrendously
It destroyed fence-curtains.
Houses. villages and 'PEOPLE'
It destroyed 'Those'
It destroyed 'These' Completely
Still. some of 'Those' carry 'These'
'THESE DEAD'
Carry the'HORRRISTS' on Floats
Those need to know one thing Only:
These are not here to kill/
Now. from now on. (those)
Can open the eyes.

சிறினோ
சிறி
சிறிசு

# இடைமறிப்பு



# ரமேஷ் பிரேதன்

புனைவுகளாகவும் அபுனைவுகளாகவும் அறியப்பட்ட படைப்பு மொழிக்கு பரீட்சயம் இல்லாத உரையாடல்களை தமது படைப்புக்களில் நிகழ்த்திக் காட்டிப் பேதலிக்க வைத்தவர்கள் பிரேம் அன்ட் ரமேஷ் அதில் அவர்களது மிக முக்கியமான ஒரு புனைவாக வெளிக்காட்டும் நூல்

'சொல் என்றொரு சொல்.

கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்டு

முடிவற்று நீளும் மதில் மீது

நேர்த்தியாக நடந்து செல்கிறது

பூனை என்ற ஒரு சொல்

ஆம் ஒரு சொல்

அதைக் கொஞ்சம் பின் தொடர்ந்தால்

அது ஒரு வாக்கியமாவதையும்

வாக்கியத்தின் நீண்ட அசைவில்,

கண்ணாடிச் சில்லொன்று பொத்துவிட்டால்

மதிலின் பக்க வாட்டில் வழியும் குருதி

கவிதையாவதையும் வாசிக்கலாம்

அது பூனையைப் பற்றிய கவிதையாக இருக்குமென்று நீங்கள் எதிர்பார்த்தால்

ஏமாந்து போவீர்கள்.

என்று தொடங்கிய கவிதையுடன் ஆரம்பமாகும் அந்த நாவலை பழக்கப்பட்ட நாவல்களுடன் இணைத்து வாசிப்பிற்குள் நிறுத்த முடியாது. அப்படித்தான் அவர்களது அதிக பிரதிகளின் அனுபவம் இருக்கும்.

அதேபோல 'ஆதியிலே மாமிசம் இருந்தது' என்ற நாடகப்பிரதியின் உடல் உருவங்கள் பேசும்.

அதிகாரத்தால் அமைக்கப்பட்ட விம்பங்களிலிருந்து நாம் எப்படி விடுபடப் போகிறோம் என்ற ஒரு உடலின் கேள்விக்கு

கொலை செய்ய நிர்ப்பந்தித்தவர்களைக் கொலை செய்வதன் மூலம்.

கருத்துக்களால் நம்மமை அளப்பவர்களை கவிழ்த்து படக்கவைத்துப் புணர்வதன் மூலம்.

அழகியல் பேசுபவர்களின் முகத்தில் விரிந்த ஈரமான குறியைத் தேய்ப்பதன் மூலம்.

என்று மற்றய உடல்கள் பதிலுரைக்கும் படியான உரையாடல் நிகழும்.

இந்த சமூகம் கட்டமைக்கும் ஒவ்வொரு தினுசுகளையும் இவர்களது பிரதிகள் கேள்விக்குட்படுத்தும் உடலுக்குள் நடைபெரும் உரையாடல்களே அதிகமான புனைவுகளின் சாட்சியாகும். எழுத்தின் இன்னொரு வழி பேசத் தொடங்கிய புனைவுகள் அவை. தனியே அவை கதைகளாக இருந்ததில்லை. அதிகமான தருணங்களின் கட்டுக் கதைகளாகவே அவை இருந்தன.

அவ்வாறு எழுதிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று ஒரு நாளில் பிரிந்து நின்று ஒருவரை ஒருவர் அயோக்கியர்கள் என்றார்கள். எழுத்தைத் தனியே பிரித்தெடுப்பதற்குச் சண்டை செய்தார்கள். எழுத்தின் கோரமோ அல்லது அகோரமோ அவர்களுக்குள் எந்தப் புதிய சிந்தனையையும் ஏற்படுத்தவேயில்லை என்றே எண்ணுகிறேன். தற்பொழுது பக்கவாத நோயினால் தாக்கப்பட்டு இருக்கும் ரமேசிடம் கேட்கப்பட்ட சில கேள்விகள் இவை. அது பூரணப்படாது இடையில் நின்று போனது வருத்தமே.

**கற்சுறா**

**கற்சுறா**: வணக்கம் ரமேஸ் பிரேதன்.

பிரேதன் என்ற சொல் தமிழிலக்கிய அடையாளத்தின் இன்னொரு மொழி: இன்னொரு பேசு பொருளை உருவாக்கிவிட்டிருக்கிறது. அதனைக் கடந்து நாம் உரையாடலை நகர்த்திவிட முடியாத ஒரு பொருளை கொண்டிருக்கிறது. ஆனாலும் அந்தப் பெயரின் பின்னிருக்கும் கதைகளையும் எழுத்தின் தர்க்கங்களையும் நாம் பேசத் தொடங்கு முன்பு உங்கள் உடல் நலம் இப்பொழுது எவ்வாறு இருக்கிறது? இப்பொழுது எங்கு இருக்கிறீர்கள்? யார் இப்பொழுது உங்களுக்குத் துணையாக இருக்கிறார்கள்? உடல்நலம் குன்றிய காலத்தில் என்ன நடந்தது? யார் உதவி செய்தார்கள்? எவ்வாறு நகர்கிறது தின வாழ்வு? எதிர்காலம் எப்படியிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? அதற்குள்ளும் இருந்து தொடரும் எழுத்தை தமிழ் நாட்டு இலக்கியச் சூழல் எவ்வாறு இன்றைய காலத்தில் அணுகுகிறது?

**ரமேஷ் பிரேதன்**: வணக்கம் தோழர். உயிருள்ள வாழ்க்கை இந்தியத் தமிழ்ச் சூழலில் ஒரு கலகக் கலைஞனுக்கு ஒருபோதும் வாய்க்காது. செத்துச் செத்து வாழும் வாழ்க்கையில் பாதி செத்த உடம்பைச் சுமந்துத் திரிகிறான். பிறந்ததிலிருந்து உயிரோடு இருக்கும் அதிசயத்தை வியந்து வியந்து வாழ்வதால், ஏறக்குறைய உயிரோடிருக்கும் பிணமான நான் பிரேதன் என்றானேன்.

15.09.2007 அன்றிரவு பன்னிரெண்டு மணிக்குக் கொல்லப்பட்டேன். உலகில் நான் அதிகம் நேசித்த கவிஞனும் கவிஞையும் சேர்ந்து என்னைக் கொன்றனர். நான் மொழியாலானவன் என்பதால் எனது மரணம் உருவக நிலையிலேயே நிகழ்கிறது. என்னைக் கொன்று அவர்கள் பாவிகளாவதைத் தவிர்க்க நான் கூட்டு வாழ்க்கையிலிருந்து வெளியேறினேன்.

ஏழாண்டுகள் நூலகம், பூங்கா, சுடுகாடு இங்கெல்லாம் திரிந்தேன். என் நிலைமையைக் கேள்விப்பட்டு வாழ வீடமைத்துக் கொடுத்து ஜெயமோகன் உதவினார். ஒழுகாதக் கூரையின் கீழிருந்து 'அவன் பெயர் சொல்' நாவலை எழுதிமுடித்தேன். கையால் எழுதிய கடைசி எழுத்து அதுதான். 11. 2.2014 அன்று பக்கவாதத்தில் விழுந்தேன். இன்றுவரை எழமுடியவில்லை.

பிரேமா என்னைக் காத்து

**ஏழாண்டுகள் நூலகம், பூங்கா, சுடுகாடு இங்கெல்லாம் திரிந்தேன். என் நிலைமையைக் கேள்விப்பட்டு வாழ வீடமைத்துக் கொடுத்து ஜெயமோகன் உதவினார். ஒழுகாதக் கூரையின் கீழிருந்து 'அவன் பெயர் சொல்' நாவலை எழுதிமுடித்தேன். கையால் எழுதிய கடைசி எழுத்து அதுதான். 11. 2.2014 அன்று பக்கவாதத்தில் விழுந்தேன். இன்றுவரை எழமுடியவில்லை.**

வருகிறார். இரவில் வீட்டைப் பூட்டி சாவியை எடுத்துச் சென்று விடுவார். மறுநாள் காலை பணிப்பெண் வருவார். சாளரம் வழியே என்னிடமிருக்கும் மாற்று சாவியைப் பெற்று கதவைத் திறந்து இரண்டு மணி நேரத்தில் எனக்கானப் பணிகளை முடித்துச் சென்று விடுவார். மதியமும் இரவும் பிரேமா உணவு கொண்டு வருவார். ஒருநாளில் இருபத்தியோரு மணிநேரம் தனியாகத்தான் இருக்கிறேன். மாதத்திற்கு இரண்டொரு தொலைப்பேசி அழைப்பு வருவதே அரிது. புதுச்சேரியில் எனக்கு நண்பர்களே இல்லை என்பதை நோய்மையில் வீழ்ந்தப் பிறகுதான் அறியவந்தேன்.

ஜெயமோகன், மாமல்லன், வாசுதேவன் எனக்கு உதவினார்கள். தொடர்ந்து வாசுதேவன் உறுதுணையாக இருக்கிறார். வலிப்பு வந்தபோதும் இதய அடைப்பு ஏற்பட்டபோதும் தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து என்னைப் பிழைக்க வைத்தார். புதுவை விசாகன் பிரேமாவுடன் நின்று மருத்துவ உதவிகளைச் செய்தார். விஷ்ணுபுரம் இலக்கிய அமைப்பைச் சார்ந்த கடலூர் சீனு, சிவாத்மா இருவரும் உடனிருந்து உதவுபவர்கள். படைப்புக் குழுமம் ஜின்னாவும், பேராசிரியர். சுந்தர்காளியும் வாழவுதவுகிறார்கள். ஒவ்வொரு மாதமும் யாரேனும் மருந்து மாத்திரைக்கு உதவுவார்கள். மருத்துவரும் தோழருமான



பிரேம் தன்னை முன்னிறுத்தி என்னை ஓரம் கட்டுவதை சாருநிவேதிதா, மாலதி மைத்ரி போன்றோர் சுட்டிக்காட்டுவதை என்னால் நம்ப முடியாமல் இருந்தது.

எனது எழுத்துக்களால் தன்னை ஓர் அரசுப் பேராசிரியராக அமர்த்திக்கொண்ட பிறகு, இந்த வாழ்க்கை, எழுத்து அனைத்தையும் பிரேம் மறுத்தான். பாதுகாப்பான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு என்னைப் பிரிந்தான். பிரேம் எதையும் இழக்கவில்லை.

நான் இழந்ததோ என் வாழ்க்கை, எனது படைப்புகள், கூலி உழைப்பு.

எளிமையாகச் சொன்னால் மூவராலான கூட்டு எழுத்து, கூட்டு வாழ்க்கையில் நானொரு ஏமாளி, பிரேம் ஒரு பொய்யன், மாலதி மைத்ரி ஒரு போலி.

*சரவணன், இதயத்திற்கான மருந்தை மாதாமாதம் அனுப்பி உதவுகிறார்.*

*யாவரும் பதிப்பகம் எனது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு பொருளுதவியும் செய்கிறது. அதன் நிர்வாக இயக்குனரும் எழுத்தாளருமான ஜீவ கரிகாலன் எனக்குப் பக்கபலமாக இருக்கிறார். இறக்கும்வரை எழுதிக் கொண்டிருப்பேன். எனது வாசகர் 2050 காலக்கட்டத்தில் என்னை வாசித்துப் பேசத் தொடங்குவர் அப்போது நான் இருக்கமாட்டேன்.*

**கற்சுறா**: *இந்தியத் தமிழ்ச் சூழலில் கூட்டு வாழ்வை மட்டுமல்ல கூட்டு எழுத்து முறையையும் ஒன்றாக்கிச் செயற்பட்டு வந்தவர்கள் நீங்கள். அந்தக் கூட்டு எழுத்து முறையினை தமிழ்ச்சூழல் இன்று வரை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். தமிழ் நாட்டு இலக்கியச் சூழலுக்கே ஆச்சரியமாக இருந்தவைதான் அந்த வாழ்வும் எழுத்தும். அவற்றை அந்த ஆரம்ப காலத்தில் எப்படிக் கடந்தீர்கள்?*

*உங்கள் கூட்டு எழுத்து முறையை பொது உரையாடலுக்குள் எடுத்துக் கொள்ள அந்த ஆரம்ப கல இலக்கிய உலகு எவ்வளவு சிரமப்பட்டது? '2050 காலக்கட்டத்தில் என்னை வாசித்துப் பேசத்தொடங்குவர்' என்று நீங்கள் சொல்லும் போது இன்றைய சூழல் அதனை வாசிக்கத் தொடங்கவேயில்லை என்றுதானே பொருள். இன்றைய இந்தத் தேங்கு மனநிலைக்கு ஒவ்வொருவருக்குள்ளும் ஊடுபாவியிருக்கும் தற்குறித்தனம் என்ற ஒன்றுதான் கரணம் என நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*



**ரமேஷ் பிரேதன்**: *எழுத்தை முன்வைத்துதான் வாழ்க்கையைக் கட்டமைத்தோம். தொடக்க காலத்தில் நானும் பிரேமும் தனித்தனியாகத்தான் எழுதினோம். பதினோறாம் வகுப்புப் படிக்கும்போதே எனது விருத்தப்பாக்கள் அச்சேறத் தொடங்கிவிட்டன. நாங்கள் இருவரும் ஒரே பெயரில் எழுதலாம் என முடிவு செய்தோம். தனித்தனியாக எழுதி ஒரே பெயரில் சேர்ந்தே வெளியிட முடிவெடுத்தோம்.*

*சாருநிவேதிதா கிரணம் என்ற இதழைத் தொடங்கி எங்களுடைய படைப்பை வெளியிட்டபோது பிரேதா என்ற பொதுப்பெயரில் பிரேம் மட்டுமே அறியவந்தான். எனக்குத் தனியடையாளம் வேண்டுமென சாரு வலியுறுத்தினார். அதனால் நான் பிரேதன் எனத் தனித்து அடையாளப்படுத்தப்பட்டேன். இன்று 'பிரேதா பிரதிகள்' என்று எதிர் வெளியீடாக கிரணம் எழுத்துகள் வெளிவந்துள்ளன. அது 'அதீதனின் இதிகாசம்' என்ற நூலில் என் பெயர் நீக்கப்பட்டு மொத்த எழுத்தையும் தன் பெயரிலேயே வெளியிட்டுக் கொண்ட பிரேமின் அநீதி. போகட்டும். நான் வேண்டாம் எனக் குப்பையில் எறிந்ததைச் சொந்தம் கொண்டாட விரும்பவில்லை. அந்தக் குப்பையில் கலந்திருக்கும் எனது பங்களிப்பையும் அவனே எடுத்துக்கொள்ளட்டும்.*

*நிற்க தொடக்கம் முதலே எங்களுக்கு உரிய அங்கிகாரமும் வாசக ஆதரவும் இருந்து வந்தது. குற்றாளம் பதிவுகள் கருத்தரங்குகளில் பங்கேற்கவைத்து கலாப்ரியா அவர்கள் உரிய அங்கிகாரம் அளித்தார். இருவரும் தனித்தனியாக இரு அமர்வுகளில் கட்டுரை வாசிப்போம். காலச்சுவடு காலாண்டிதழாக வந்தபோது அதிலேயே எங்களுடைய நேர்காணல் வெளிவந்தது. பிரேம் தன்னை முன்னிறுத்தி என்னை ஓரம் கட்டுவதை சாருநிவேதிதா, மாலதி மைத்ரி போன்றோர் சுட்டிக்காட்டுவதை என்னால் நம்ப முடியாமல் இருந்தது. எனது எழுத்துக்களால் தன்னை ஓர் அரசுப் பேராசிரியராக அமர்த்திக்கொண்ட பிறகு, இந்த வாழ்க்கை, எழுத்து அனைத்தையும் பிரேம் மறுத்தான். பாதுகாப்பான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு என்னைப் பிரிந்தான். பிரேம் எதையும் இழக்கவில்லை. நான் இழந்ததோ என் வாழ்க்கை, எனது படைப்புகள், கூலி உழைப்பு. எளிமையாகச் சொன்னால் மூவராலான கூட்டு எழுத்து, கூட்டு வாழ்க்கையில் நானொரு ஏமாளி, பிரேம் ஒரு பொய்யன், மாலதி மைத்ரி ஒரு போலி.*

*நிற்க 1987 லிருந்து எனது*

**என்னை எனது சமகால எழுத்தாளர்களும் முன்னோடிகளும் மட்டுமே அறிந்து வைத்திருக்கிறார்கள். எனக்குப் பிறகு எழுத வந்த புதிய தலைமுறைக்கு நான் போய்ச் சேரவில்லை. என்னைத் தேடிக் கண்டடைய இன்னுமொரு தலைமுறைக் காலம் எடுத்துக்கொள்ளும். 2050 என்ற காலக்கோட்டை அறுதியிட்டது, புதுச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் ப.ரவிக்குமார் அவர்கள். எனது வேலை எழுதுவது. எழுதினால் மட்டும் போதாது உங்களை விளம்பரப்படுத்திக்கொள்ள வேண்டுமென சகப் பயணிகள் சொல்கிறார்கள். அது எனது வேலையில்லை. எனது படைப்புகள் இலக்கிய வரலாற்றில் தம்மைத் தாமே நிலைப்படுத்திக்கொள்ளும் தகுதி படைத்தவை.**

படைப்புகள் வெளிவருகின்றன. முப்பத்தைந்து ஆண்டுகளில் முப்பத்தைந்து நூல்கள் வெளிவந்துள்ளன. இவை கவிதை, கதை, நாடகம், கட்டுரை என அனைத்துத் தளங்களிலும் புதிய முன்னெடுப்பைச் செய்தவை. பொதுப்புத்திக்கு எதிரானச் சொல்லாடல்களைக் கட்டமைத்தவை. என்னை எனது சமகால எழுத்தாளர்களும் முன்னோடிகளும் மட்டுமே அறிந்து வைத்திருக்கிறார்கள். எனக்குப் பிறகு எழுத வந்த புதிய தலைமுறைக்கு நான் போய்ச் சேரவில்லை. என்னைத் தேடிக் கண்டடைய இன்னுமொரு தலைமுறைக் காலம் எடுத்துக்கொள்ளும். 2050 என்ற காலக்கோட்டை அறுதியிட்டது, புதுச்சேரி பல்கலைக்கழகப் பேராசிரியர் ப. ரவிக்குமார் அவர்கள். எனது வேலை எழுதுவது. எழுதினால் மட்டும் போதாது உங்களை விளம்பரப்படுத்திக்கொள்ள வேண்டுமென சகப் பயணிகள் சொல்கிறார்கள். அது எனது வேலையில்லை. எனது படைப்புகள் இலக்கிய வரலாற்றில் தம்மைத் தாமே நிலைப்படுத்திக்கொள்ளும் தகுதி படைத்தவை. தமிழிலக்கியத்தில் நான் முன்னிலைப்படுத்தப்படாததன் காரணம் தற்குறித்தனம் இல்லை. அதன் காரணம் இலக்கிய அரசியல். எனது எழுத்தில் செயல்படும் அரசியலால் நான் மருட்சியுடன் அணுகப்படுகிறேன்.

**கற்சுறா**: தற்குறித்தனம் என நான் அடையாளம் காட்டும் சொல் 'தன்முன்நிலை' நிறுவுதல் என்ற அர்த்தத்திலேயே. தம்மை மட்டும் முன்நிறுத்துவதினூடாகச், சமகாலத்தில் தோன்றும் மற்றவற்றின் மீதான உரையாடலை நிகழ்த்த விரும்பாது விடுவதும் அதனைத் திட்டமிட்டுத் தவிர்ப்பதுவுமாக நகரும் களமாகவே இன்றைய தமிழ்நாட்டு : ஈழத் தமிழ்ச் சூழல் வெளிக்காட்டுகிறது. மற்றயதின் மீதான உரையாடலை நாம் நிகழ்த்தும் போது தாம் மறைந்து போவோம் என்ற அச்சம் அவர்களை உள்ளார உருக்குலைப்பதால் தோன்றும் வினை அது. அதனால் பலதரப்பட்ட உரையாடல்கள் உள்ளே நடைபெறாது தேங்கிக் கொள்கிறது. தவறானதும் மிக ஆபத்தானதுமாக நமது சூழலை நிறைத்து அது வெளித் தோன்றுகிறது. அதனால் தான் அதனைத் 'தற்குறித்தனம்' என நான் அடையாளம் கொள்கிறேன். மற்றப்படிக்கு நீங்களும் பிரேமும் இணைந்து எழுதிய படைப்புக்கள் அவை 'புதைக்கப்பட்ட பிரதிகளும் எழுதப்பட்ட மனிதர்களும்' என்ற பிரதியாகட்டும். 'ஆதியிலே மாமிசம் இருந்தது' என்ற நாடகப் பிரதியாகட்டும், 'முன்பொரு காலத்தில் நூற்றியெட்டுக் கிளிகள் இருந்தன' என்ற சிறுகதைப் பிரதியாகட்டும், அவை எல்லாமே பல்வேறு தளத்தில் பேசப்படுவதற்கு முக்கிய தளமாக இருந்தது சொல்லப்படும் அழகியலும் அதற்குள் பரவிய அரசியலும். கோட்பாட்டுத் தளத்திலும் அது சொல்லப்படும் அழகியல் தளத்தில் இணைந்து எழுதிக் கொண்டதால் தமிழிலக்கியச் சமூகம் பல்வேறு அதிர்வுகளை எதிர் கொண்டது. உங்கள் கூட்டு வாழ்வின் ஊடாக மட்டும் நமது சமூகம் அதிர்வுகளை எதிர் கொள்ளவில்லை கூட்டு எழுத்து முறையாலும் பெரும் அதிர்வுகளை எதிர் கொண்டது. அப்படி அதிர்வுகளை எதிர் கொண்ட சமூகத்திற்கு 'இந்தா பார்' என்று அந்த எழுத்துமுறையைச் சமூகமே காறித்துப்பும் அளவிற்கு தெருவிற்கு வந்ததன் 'பின் காரணம்' தனியே அடிப்படையாகச் சமூகம் கட்டமைத்த குடும்ப மனநிலைதானா? இணைந்து எழுதிய எழுத்துக்களைத் தனியாகப் பிரித்தெடுப்பதைச் சட்டரீதியாக அணுகப்போவதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுடைய எழுத்துக்கள் குறித்து பிரேமிடம் இருந்து தோன்றும் கரைச்சலும் மனவுழைச்சலும் எப்படியானதாக இருக்கிறது?

நீங்கள் பக்கவாதம் வந்து வீழ்ந்த பேதும் அதன்பின்னர் இருதயம் பாதிக்கப்பட்டபோதும் உங்களது வாழ்வை முன்நிறுத்தி பொது வெளியில் பணம் சேகரிக்கப்பட்டது. அவை நியாயமாகவே உங்கள் உடல் நிலையைப் பாதுகாக்கப் பயன்பட்டதா? உடனடியாக உங்கள் நிலை அறிந்து நான்கூட இங்கிருந்து பணம் அனுப்பியிருந்தேன். அதன் பலன் உங்களுக்குக் கிடைத்ததா? இதனை ஏன் நான் பொது வெளியில் கேட்கிறேன் என்றால், அதற்குள்ளன பல்வேறு அனுபவங்களை நான் தனிப்பட்ட ரீதியில் பெற்றிருக்கிறேன்.

தமிழ் நாட்டு எழுத்தாளர்களதும் கதை சொல்லிகளதும் கோட்பாட்டாளர்களதும் பல்வேறு கதைகளை அறிந்தும்

அனுபவமாகவும் பட்டவன் என்ற ரீதியிலேயே கேட்கிறேன். பிணத்தை வைத்துத் தன் பிழைப்புச் செய்யக் கூடியவன் தமிழன். இதில் தமிழ் நாட்டுத் தமிழன் ஈழத் தமிழன் என்ற பேதமில்லை. அதில் நீங்கள் சொல்லும் பாதிப்பிணத்தை வைத்துப் பிழைப்பு நடத்தியிருப்பார்கள் என்ற சந்தேகத்திலேயே கேட்கிறேன். நிங்கள் இன்றும் இந்த நிலையில் இருப்பதற்கு என்ன காரணம் பின்னுள்ளது?

**ரமேஷ் பிரேதன்**: தோழர், நீங்கள் முதலில் ரமேஷ் பிரேதன் நேர்காணல்கள் நூலை வாசித்துவிடவும். ஏற்கெனவே பேசப்பட்டதைத் தவிர்த்துவிடலாம். தடம், யாவரும் நேர்காணல்கள் இணையத்திலும் கிடைக்கின்றன. கலை இலக்கியம் மெய்யியல் சார்ந்த உரையாடலை வளர்த்தெடுக்க வேண்டும். நான் நண்பர்களின் உதவியால் உயிர்வாழ்பவன். ஒருநாள் வாழ்ந்ததற்கு ஒரு பக்கமேனும் எழுதவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுகிறேன். இதைக்கூட உடல்வலியோடு தட்டச்சு செய்கிறேன். வரலாற்றில் நிலைக்கக்கூடியதை மட்டுமே எழுதுகிறேன்.

சேர்ந்து வாழ்ந்ததை நானோ பிரேமோ பொதுவில் வைக்கவில்லை. கூட்டு எழுத்து இன்று தனித்தனி எழுத்தாகிவிட்டது. அவ்வளவுதான்.

இதில் பொதுச்சமூகம் காறித்துப்ப நாங்கள் அரசியல்வாதிகளா, சினிமாக்காரர்களா? என்னுடைய முப்பத்தைந்து நூல்களில் பத்து நூல்களைப் படித்தவர் ஒருவருமில்லை. எனது படைப்புகளுக்கு வெளியே நானில்லை. படைப்பைத் தாண்டிய கேள்விகளைத் தவிர்த்து உரையாடுவோம்.

**கற்சுறா**: நன்றி ரமேஷ். நீங்கள் சொல்வது உண்மைதான். நான் உட்பட ஈழத்தவர்கள் பலர் உங்களது பத்து நூல்களைக் கூட முழுமையாகப் படிக்கவில்லை. ஈழத்துச் சூழலில் தமது தேவைக்கு மேலான வாசிப்பு என்பது தமிழ்நாட்டவர்களைப் போல இருந்ததில்லை. எழுத்து என்பதே அதிகமானோருக்கு அங்குள்ளவர்களைப் போல முழுநேரச் செயற்பாடாகவும் இருந்ததில்லை. அல்லது அவர்களது வாழ்வும் வேலையும் இலக்கியத்துடன் இணங்கிய ஒன்றாக இருந்ததுமில்லை. அனைத்தும் நேரெதிர்ச் செயற்பாடுகளாக ஒருமித்தன.

அதற்குள்ளும் கடந்து வந்த யுத்தம் பலருக்கு இலக்கியத்தில் வேறு எழுத்து நிலையை உருவாக்கிவிட்டிருக்கிறது. பல்கலைக்கழகங்களிலும் பத்திரிகைத் துறைகளிலும் வலம் வந்தவர்கள் ஒருசிலர் அவ்வாறு இருப்பார்கள். அப்படியிருப்பவர்களிடம் இருந்து வெளிப்படும் எழுத்துமுறைகள் என்னை ஈர்ப்பதில்லை. உங்களின் எழுத்து முறை( நான் சொல்வது ரமேஷ் : பிரேம்) உருவங்களின் வாழ்தலை அரூபங்களின் மொழிக் கூடாக கடக்கும் அதீதத் தனத்தை அவற்றை வாசிக்கத் தொடங்கிய நாள் முதல் உணரத் தொடங்கினேன். உருவங்களால் வாழவிரும்பியும் வாழமுடியாத வாழ்வு அதற்குள் ஒழிந்திருக்கிறதாக உணர்ந்தேன். அதனாலேயே அந்த மொழியின் உரையாடலைத் தொடர்ந்து தொடர்ந்தேன். அது எங்களின் தேடலுக்குள்ளும் அப்பாற்பட்டே இருந்து கொண்டிருந்தது. அக்காலத்தினைத் தொடர்ந்து அதன் போலிகளும் தேன்றினார்கள். ஆனால் அவற்றைப் போலிகள் என்று கண்டுபிடிக்க எங்களால் முடியுமாயிருந்தாலும் அவர்களும் உங்கள் மடியிலிருந்துதான் தோன்றினார்கள் என்றும். அந்தப் போலிகளையும் நீங்களே உருவாக்கினீர்கள் என்று அறியும் போது மிகுந்த ஏமாற்றம் அடைந்தோம்.

**நான் நண்பர்களின் உதவியால் உயிர்வாழ்பவன். ஒருநாள் வாழ்ந்ததற்கு ஒரு பக்கமேனும் எழுதவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுகிறேன். இதைக்கூட உடல்வலியோடு தட்டச்சு செய்கிறேன். வரலாற்றில் நிலைக்கக்கூடியதை மட்டுமே எழுதுகிறேன்.**

**சேர்ந்து வாழ்ந்ததை நானோ பிரேமோ பொதுவில் வைக்கவில்லை. கூட்டு எழுத்து இன்று தனித்தனி எழுத்தாகிவிட்டது. அவ்வளவுதான்.**

**இதில் பொதுச்சமூகம் காறித்துப்ப நாங்கள் அரசியல்வாதிகளா, சினிமாக்காரர்களா? என்னுடைய முப்பத்தைந்து நூல்களில் பத்து நூல்களைப் படித்தவர் ஒருவருமில்லை. எனது படைப்புகளுக்கு வெளியே நானில்லை.**

இலக்கியத்தில் அசரீரிகள் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டே இருந்தன. எமது வாழ்வியலில் இலக்கியம் அல்லது கலை என்று எதுவானாலும் அதற்குள் அறம் ஒன்று இருந்தே வந்தது என்று நான் நம்புகிறேன். ஈழத்தவர்கள் பலரது வாழ்வியல் அனுபவங்களை அதற்கு ஆதாரமாகச் சொல்லலாம். தமிழ்நாட்டில் அது ஒரு போலி அடையாளம் என்று சொல்லிவிடும்படி இருப்பதாகவே பல்வேறு அனுபவங்கள் எமக்குக் காட்டிவிடுகின்றன. அந்தப் போலி அடையாளத்தின் கயிறு பிடித்து இலக்கியவாதியாக ஏறிவர ஈழத்தில் பலர் முண்டியடித்துக் கொண்டிருப்பது இன்னொரு கேவலம். இதற்குள் தான் உங்கள் எழுத்துக்களைப் பார்த்து எழுதும்போலச் செய்யும் சிலர் ஈழச் சூழலிலும் தோன்றியிருக்கிறார்கள். இது எல்லாம் நல்லதொரு தளத்தில் இலக்கியத்தையோ கலையையோ நிறுத்தாது. இது குறித்தெல்லாம் பேசிவந்து உரையாட வேண்டும் என்றே விரும்பினேன்.

**ரமேஷ் பிரேதன்**: ஆம், நீங்கள் சொல்வதின் உண்மை என்னை பல காலமாக வலியுணர வைக்கிறது. ஒருகட்டத்தில் பெருங்கூட்டம் என்னைச் சுற்றி இருந்தது. இன்று ஒற்றையில் நிற்கிறேன். இறுதியாக பிரேம், மாலதி என்னைப் பிரிந்ததையும் இயல்பாக எடுத்துக் கொண்டேன். அவர்கள் என்மீது சுமத்தும் அவதூறுகள் நான் இறந்தப் பிறகும் தொடரப்போவதை நீங்கள் பார்ப்பீர்கள். நான் எல்லோரையும் மறந்துவிட்டேன். படைப்பதால் இருக்கிறேன்.

தமிழ்நாட்டுச் சூழலை முன்வைத்துதான் பேசினேன். ஈழத்து நண்பர்கள் முகநூல் வழியே என்னைத் தொடர்கிறார்கள். நாமும் தொடர்ந்து உரையாடுவோம். சனநாயகம் பேச்சை முன்னெடுப்பது.

**கற்சுறா**: படைப்பதால் இருக்கிறேன்' என்ற சொற்களுக்குள் வாழ்வு முடங்குவதாகவும் அதற்குள்ளேயே நீள்வதாகவும் இரட்டை அர்த்தங்களைப் பெற்றுவிடுவது எழுத்தின் படைப்பாற்றல் கொண்டவனுக்கு இரசிப்புத்தன்மை கொண்ட அனுபவந்தான். ஒரு காலத்தில் அந்த இரசிப்புத்தன்மை கொண்ட ஆற்றலுக்குள் அகப்பட்டு இருந்த பெருங்கூட்டம் விலகி இன்று ஒற்றையாயிருப்பதற்கு, படைப்பின் மகிமை இழந்து போய்விட்டது என்று அர்த்தம் கொள்ளமுடியாதுதானே? உங்கள் வாழ்வையும் அதற்குள்ளான சிந்தனையையும் அந்தப் படைப்புக்கள் ஒவ்வொன்றும் பதிவிட்டே நகர்கின்றன. காலம் காத்துநிற்கும் பதிவுகள் அவை. ஆனாலும் இவற்றையெல்லாம் தாண்டி என்னைத் துருத்தி நிற்கும் விடயம் என்னவென்றால், ஒரு காலத்தில் இணைந்திருந்தவர்கள்: இணைந்து செயற்பட்டவர்கள், அது நண்பர்களானாலும் அது குடும்பமானாலும் அல்லது ஒரு இயக்கமானாலும் இணைந்து செயற்பட்ட காலத்திற்கு நாம் நேர்மையாக இருக்க வேண்டும். அக்காலத்தில் செய்யப்பட்ட

**ஒருகட்டத்தில் பெருங்கூட்டம் என்னைச் சுற்றி இருந்தது. இன்று ஒற்றையில் நிற்கிறேன். இறுதியாக பிரேம், மாலதி என்னைப் பிரிந்ததையும் இயல்பாக எடுத்துக் கொண்டேன். அவர்கள் என்மீது சுமத்தும் அவதூறுகள் நான் இறந்தப் பிறகும் தொடரப்போவதை நீங்கள் பார்ப்பீர்கள். நான் எல்லோரையும் மறந்துவிட்டேன். படைப்பதால் இருக்கிறேன்.**

வேலைகளிற்கும் அதன் தாக்கங்களுக்கும் அனைவரும் பொறுப்பாளிகள் என்ற பொறுப்புக் கூறல் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால் ஒரு கூட்டு எழுத்து முறையில் எழுதி வந்த நீங்கள், உங்கள் எழுத்தைமட்டும் பிரித்தெடுத்துக் கொள்வதும், பிரேம் தன்னுடையதைப் பிரித்தெடுத்துக் கொள்வதும், மாலதிக்கு அதிகமான கவிதைகளை நானே எழுதிக் கொடுத்தேன் என்று சொல்வதும், அந்த எழுத்தின் காலத்தை நீங்கள் மூவரும் குழி தோண்டிப் புதைத்துக் கருத்துச் சொல்லி வருவதும் எழுத்தின் உருக்களுக்கு சேர்மதியாகாத செயல்கள். நீங்கள் இணைந்திருந்து எழுதிய எழுத்துக்களை அப்படியே விட்டு, பிரிவின் பின் உங்கள் எழுத்துக்களைத் தனியாக்குவதே ஒரு எழுத்தாளுமைக்கு அழகு. ஆனால் நீங்கள் மூவரும் அவ்வாறு செய்யவில்லை. ஒரு காலத்தின் எழுத்துலக அதிர்ச்சிகளை நீங்களே அதிர்வற்றதாக்கினீர்கள். இதன் பின் நிலையை நீங்கள் மூவரும் விளங்கிக் கொண்டதாக நினைக்கிறீர்களா? எழுத்தில் மட்டும் சமூக அதிர்வுகள் தங்கியிருப்பதில்லைத்தானே ரமேஷ்? சமூகத்தின் மீதான அதிர்வுகளே மெய்யியலின் முக்கிய பங்கு என நான் கருதுகிறேன்.

**ரமேஷ் பிரேதன்**: தாழர், உடல்நிலை மோசமாக இருக்கிறது. கடந்து வந்தவையைக் கிளறி என்னை நானே வதைத்துக் கொள்ள விரும்பவில்லை. வலிப்பில் கீழே விழுந்தால் தூ க்கிப் படுக்கையில் கிடத்த யாருமில்லை. இந்த உரையாடலை ஒத்திவைப்போம். இன்று காலை குளிக்கும்போது ஏற்பட்ட உடம்பு நடுக்கத்தைக் கண்டு பணிப்பெண் பயந்துவிட்டார். மன அமைதியைக் குலைத்தால் உடம்பில் நடுக்கம் வருகிறது. என் நிலைமையைப் உங்களால் புரிந்துகொள்ள முடியும். மன்னிக்கவும் தோழர்.

**கற்சுறா**: ஒரு சிக்கலுமில்லை ரமேஷ். எனது பக்கத்து ஆதரவு நிச்சயம் உங்களுக்குக் கிடைக்கும். உடல் நிலையைக் கவனமாகப் பாருங்கள். கைவிடப்பட்ட நிலையில் இருந்து தொடர்ந்தும் எழுதுவதன் தர்க்கத்தை நான் விளங்கிக் கொள்கிறேன். ஈழச் சூழலுக்குள் இதன் வீரியத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அல்லது அதுகுறித்த உரையாடலுக்கான பாதை இல்லாதிருக்கிறது. அதற்காகவே அதன் வெளியைத் திறக்க முனைந்தேன். தமிழ் நாட்டின் இலக்கியச் சூழல் குறித்து எனக்குப் பெரிதும் அக்கறையில்லை. அதற்குள் பல போலி முகங்களுண்டு. தனியே 'போற்றிப் புகழ்ந்திருந்து மெய்கெட்டுப் பொய்யாகும்' நிலை அங்கே அதிகம். ஆனால் உங்கள் கூட்டு எழுத்தின் உரம் அதற்கும் புதிதானதே. அப்போ ஈழச் சூழலை நினைத்துப் பாருங்கள். அப்படியிருக்க அந்தச்சூழலே கிலிசுதட்டிப் போனது பெரும் அபத்தம். அது எனக்குப் பெருங்கவலை. இந்த உரையாடலை ஒத்தி வைப்போம். அல்லது நிறுத்துவோம். அதில் சிக்கலில்லை. இதுவரை உரையாடியதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் நீண்ட காலமாக உங்களோடு இணைந்திருக்கிறேன். பிரேம் பாரீஸ் வந்தபோதும் அந்த நெருக்கம் இருந்தது. நன்றி ரமேஷ்

**ரமேஷ் பிரேதன்**: அன்பும் நன்றியும் தோழர்.

அ



# ஆசானுக்கு ஒரு ‘சாமானியன்’!

Shut up and calculate.

இந்த வசனம் குவாண்டம் பௌதிகவியல் வட்டங்களில் பிரபலமான கூற்று. கடந்த நூற்றாண்டின் இருபதுகளில் டென்மார்க் விஞ்ஞானியான நீல் போர் அணுவின் நுண்ணிய கூறுகளின் இயல்புகள் பற்றிய குவாண்டம் தத்துவத்தை முன்மொழிந்தவர். அந்த தத்துவப்படி, இலத்திரன் என்பது நிறை கொண்ட துகளாகவும், நிறை இல்லாத வெறும் அலையாகவும் ஒரே நேரத்தில் இருக்கும். இந்த குவாண்டம் தத்துவம் பற்றிய விளக்கத்தை, நீல் போர் ஆராய்ச்சி நடத்திய மையம் இருக்கும் டென்மார்க் தலைநகரத்தைக் குறிக்கும் விதமாக Copenhagen interpretation என்பார்கள்.

இந்த குவாண்டம் தத்துவங்கள் பற்றிய பல கருத்துக்கள், பரிசோதனை அவதானங்களின் அடிப்படையிலும், அந்த அவதானங்களில் கண்டடையப்படும் அளவீடுகள் தற்போதைய தத்துவங்களோடு முரண்படுவதால் அவற்றுக்கான சாத்தியமான விளக்கங்களாகவும், தர்க்கரீதியானதும் கணித ரீதியானதுமான நியாயங்களை வைத்துக் கொண்டு, செய்யப்பட்ட தத்துவ முன்மொழிவுகளே.

ஏதோ ஒரு பௌதீக புத்தகத்தில் Direct Experimental Evidence for String Theory என்ற ஏழாவது அத்தியாயத்தில், There is no direct experimental evidence for String Theory என்ற ஒரு வசனம் மட்டும் இருக்கும் படம் ஒன்று, நீங்கள் விஞ்ஞான ஆர்வலராக இருந்தால், பேஸ்புக்கில் கண்ணில் பட்டிருக்கும்.

இப்படி இந்த தத்துவங்களில் பல, பரிசோதனைகள் மூலமாக நிருபிக்க முடியாதன என்பதால், இது பற்றிய ஆழ்ந்த அர்த்தங்களைத் தேடி நேரத்தை வீணாக்காமல் வாயை மூடிக் கொண்டு கணிதக்

**மிழ் இலக்கிய உலகில், இன்றைக்கு சர்ச்சைகளை உருவாக்கி பரபரப்பை ஏற்படுத்துவதன் மூலம், தங்கள் பெயர்களை பொதுவெளியில் தொடர்ச்சியாகப் பேசப்பட வைக்கும் முயற்சியில் இலக்கிய உலகின் Self-proclaimed numero uno க்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார்கள்.**

**தாங்கள் எழுதுவதை விடவும் அதிகமாக, தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதில் அவர்கள் காட்டும் அக்கறையும், அங்கீகாரம் குறித்த அதீதமான புலம்பல்களும் அவர்கள் மீது பரிதாபத்தையும் பச்சாத்தாபத்தையும் ஏற்படுத் துகின்றன. இது தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளால் ஏற்படும் உளவியல் சிக்கல்களால் ஏற்படுகின்ற இயல்புகள்.**

**இது நியூமரோ உனோக்களுக்கு மட்டுமானதுமில்லை.**

**தங்களைப் பேட்டி எடுக்க வேண்டும் என்று... ஓ... நேர்காணல் செய்ய வேண்டும் இலக்கியச் சில்லறைகள் படும்பாடு சொல்லி மாளாது.**

**ஏன் அவர்களுக்கும் தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் இருக்கக் கூடாதா?**

கணக்கீடுகளைச் செய்யச் சொல்வதாகத் தான், Shut up and calculate என்ற இந்தப் பதம் பயன்பட்டு வருகிறது.

பௌதிகவியல் வட்டாரங்களிலேயே இது Richard Feyman என்ற விஞ்ஞானி கூறியதாகத் தான் நீண்ட காலமாக நம்பப்பட்டாலும், தற்போது David Mermin என்ற விஞ்ஞானி தான் கூறியிருந்தார் என்பது முடிவாகியிருக்கிறது.

தனக்குப் பிடித்த எதையும், அதன் உண்மைத் தன்மை தெரியாமல் பகிர்ந்து கொள்வது என்ன பேஸ்புக்கில் உள்ள ஆயிரம் முட்டாள்களுக்கு மட்டு மானதல்லவே? விஞ்ஞானிகளுக்கும் தானே?

அவரும் அந்த வார்த்தையை என்ன அர்த்தத்தில் பயன்படுத்தியிருந்தார், அதை தான் தான் முதலில் கூறியது என்பதையே தெரியாமல் இருந்து அதை எப்படிக் கண்டுபிடித்தார், அவர் அதைச் சொன்னதற்கான காரணம் என்ன என்பதெல்லாம் பற்றி, ஆர்வம் உள்ளோர் Physics Today தளத்தில் கண்டடையலாம்.

●●●

தமிழ் இலக்கிய உலகில், இன்றைக்கு சர்ச்சைகளை உருவாக்கி பரபரப்பை ஏற்படுத்துவதன் மூலம், தங்கள் பெயர்களை பொதுவெளியில் தொடர்ச்சியாகப் பேசப்பட வைக்கும் முயற்சியில் இலக்கிய உலகின் Self-proclaimed numero uno க்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார்கள்.

தாங்கள் எழுதுவதை விடவும் அதிகமாக, தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதில் அவர்கள் காட்டும் அக்கறையும், அங்கீகாரம் குறித்த அதீதமான புலம்பல்களும் அவர்கள் மீது பரிதாபத்தையும் பச்சாத்தாபத்தையும் ஏற்படுத் துகின்றன. இது தங்களைப் பற்றிய அதீதமான மதிப்பீடுகளால் ஏற்படும் உளவியல் சிக்கல்களால் ஏற்படுகின்ற இயல்புகள்.

இது நியூமரோ உனோக்களுக்கு மட்டுமானதுமில்லை.

தங்களைப் பேட்டி எடுக்க வேண்டும் என்று... ஓ... நேர்காணல் செய்ய வேண்டும் இலக்கியச் சில்லறைகள் படும்பாடு சொல்லி மாளாது.

ஏன் அவர்களுக்கும் தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் இருக்கக் கூடாதா?

இங்கே Famous for nothing பிரபலங்களான அந்தக் காலத்து பாரிஸ் ஹில்டனும், இந்தக் காலத்து கிம் கார்டாஷியானும் பிரபலமாவதற்காக செக்ஸ் டேப்புகளை வெளியிட்ட மாதிரி, சாருவும், (மனுஷ்ய்ம்?) எதையாவது ஏடாகூடமாகச் செய்யாத வரைக்கும் எனக்கு என்ன பிரச்சனை?

அரசியல்வாதிகள் முட்டாள்தனமாக மாட்டிக் கொள்வது போலல்லாமல், இந்த நம்பர் வண்கள் திட்டமிட்டே சர்ச்சைகளை உருவாக்குகிறார்கள். சில நேரங்களில் வாயை கொடுத்து வம்பில் மாட்டிக் கொண்டு, பேஸ்புக் மேதாவிகளிடம் வாங்கிக் கட்டியும் கொள்கிறார்கள்.

அவர்களுக்கு அதெல்லாம் பிரச்சனையேயில்லை.

They love basking in the limelight.

தாங்கள் பேசப்பட வேண்டும் என்பதே நோக்கமாக இருக்கும்போது, அது நல்லதாகத் தான் இருக்க வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லையே!?

கவர்ச்சி நடிகைகள் மாதிரி!

சர்ச்சைகளை உருவாக்கி பரபரப்பை ஏற்படுத்துவது இங்கே புத்தகங்கள், பாடல்களின் விற்பனையிலோ, திரைப்படத்தின் வரவேற்பிலோ திடீரென்று பெரும் அதிகரிப்பை ஏற்படுத்தி விடும்.

அதற்காக என்றே public relations நிறுவனங்களையே வாடகைக்கு அமர்த்தியிருப்பார்கள். சில நேரங்களில் தங்கள் ஒரு பால் ஈர்ப்புப் பற்றிக் கூட வதந்திகளைக் கிளப்பி பரவலாக்குவார்கள். மடோன்னா இதற்காகவே மலாவியிலிருந்து ஒரு குழந்தையை தத்தெடுப்பார்.

அவர்களுக்கு any news is good news.

இவர்களின் பரபரப்பினால் ஆகப் போவது என்ன?

ஆளுக்காள் pdf please என்று கேட்கிற அந்த இருநூறு இலக்கிய ஆர்வலர்களுக்கும் அப்பால், சில ஆர்வக் கோளாறுகள் இவர்களுக்கே ஈமெயில் அனுப்பி, pdf கிடைக்குமா என்று கேட்கப் போகிறார்கள்.

அவ்வளவு தான்!

இப்படி சர்ச்சைகளாலேயே உயிர் வாழ்கிறவர்களில், தங்கள் இருப்பைத் தெரியப் படுத்துகிறவர்களில் நம்ம ஆசான் ஜெயமோகன் முக்கியமானவர்.

அவரை மற்றவர்கள் ஆசான் என்று அழைக்கிறார்களோ என்னவோ, அவரே தன்னை ஆசானாக அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்கிறார்.

ஆனால், அவர் அதற்குக் கொண்டிருக்கும் அர்த்தம், மற்றவர்கள் அந்த பதத்திற்கு கொண்டிருக்கும் அர்த்தத்தை விட வேறானது.

ஆசான் என்பதற்கான நேரடி மொழிபெயர்ப்பான Master என்ற ஆங்கிலப் பதத்திற்கு மூன்று அர்த்தங்கள்.

முதலாவது, எஜமான்.

அடிமைகளை வைத்திருக்கும் எஜமான்.

ஆசானின் அடிப் பொடிகளை அடிமைகள் என்று சொல்லி, அடிமைகளை அவமானப்படுத்தக் கூடாது.

பிரமிட்டையும் அமெரிக்காவையும் கட்டி எழுப்பியவர்கள் அடிமைகள் தானே!

அடிப்பொடிகள் ஆசான் பற்றி அண்ணாந்து பார்த்த பிரமிப்போடு



நிறுத்திக் கொள்கிறவர்கள்.

ஆசான் என்பவர் குருவாகத் தான் பெரும்பாலும் கருதப்படுகிறார். ஆசிரியர் என்ற பதத்தில் கற்பிப்பவராகவோ, Mentor என்ற பதத்தில் வழிகாட்டியாகவோ ஆசான் கருதப்படலாம்.

ஆசானுக்கு என சீடகோடிகள் தனியாக வேறு உளர். அவர்கள் இவரை தங்கள் மானசீக அல்லது நேரடிக் குருவாகவோ வரித்துக் கொண்டிருக்கக் கூடும். அவரும் கட்டை விரலைக் கேட்கக் கூடிய ஏகலைஞர்களை, ஏகப்பட்ட திறமை கொண்டவர்களை, சீடர்களாகச் சேர்த்துக் கொண்ட மாதிரியும் தெரியவில்லை.

தீக்குளிக்கும் தொண்டனை மட்டுமே வேண்டி நிற்கும் அரசியல்வாதி மாதிரி!

அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி, தவழ்ந்தபடியே ஏறிச் செல்லும் இந்தச் சீட கோடிகள் எல்லாம், மலை மேல் இருந்து தங்களுக்கு ஞானம் பகருகின்ற (Dispensing wisdom) ஞானகுருவாக ஆசானை நினைத்துக் கொள்ளக்கூடும்.

ஆனால், ஆசான் தன்னைக் கருதிக் கொள்வதெல்லாம் அந்த அர்த்தத்தில் இல்லை.

அவர் தன்னை ஒரு Master ஆகக் கருதிக் கொள்கிறார்.

மற்றவர்களுக்கு வழி காட்டுகிற ஆசானாக இல்லை, மேதையாக!

தன்னுடைய படைப்புகள் Masterpieces என்ற அர்த்தத்தில் மட்டுமே அவருடைய ஆசான் கருத்துரு இருக்கிறது.

மற்றும்படி, இவர் தன்னுடையதாக வைத்துக் கொண்டிருக்கும் சீடர் கூட்டம் தன்னைப் போற்றிப் பாடுவதற்கு மட்டுமே.

அ.முத்துலிங்கம் இயல் விருது கொடுப்பது மாதிரி!

முத்தரும் 'பாத்துப் பாராமல்' விருதுகளை quantitative easing செய்தாராகில், இலக்கிய உலகில் இயல் விருது கிடைக்காதவர்களே இருக்க முடியாது என்ற சாதனையை ஏற்படுத்தி, அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று அந்தரிக்கும் இலக்கிய ஆத்துமாக்களை அமைதியில் இளைப்பாறச் செய்ததை, தன் வாழ்நாள் சாதனையாகவே செய்து விடவும் முடியும்.

போகிற இடத்துக்குப் புண்ணியமும் கிடைக்கும்.
கிடைத்தவர்களும் அவரை இலக்கியத் தோட்டத்தின் high priest ஆக, இலக்கிய மகா சன்னிதானப் பெரியவாள் ஆக இல்லாமல், இலக்கியக் கோயில் கட்டிக் கடவுளே ஆக்கியும் விடுவார்கள்.

அதைப் பற்றி வருடாவருடம் எழுதுகிற எனக்கும் ஒரு தலையிடி குறையும்.

அது கிடக்க,

அவ்வப்போது வாசகர் கடிதங்களில் கௌரவித்து விட்டாலேயே, விருது கிடைத்த பெருமையோடு புல்லரிக்கிற ஒரு கூட்டம் தான் ஆசானின் சீடகோடிகள்.

என்னவோ, ஆசானின் சீட கோடிகள் எல்லாமே ஏதோ வகையில் பெண்கள் குறித்த பிற்போக்குச் சிந்தனை கொண்டவர்களாக எனக்குப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அந்தப் படுதல் எனக்கு மட்டுமானதாகவே இருக்கவும் கூடும்.

அவர்களில் பலரை வாசித்த பாதிப்பு.

அதை விட, ஆசான் பெண்ணியம் குறித்த முற்போக்குச் சிந்தனை கொண்டவராக, அந்தக் கருத்துக்களால் அறியப் பட்டவராகவும் நினைவில்லை என்பதும் காரணமாக இருக்கலாம். அவரே பிற்போக்குத் தனமான இந்துத்துவத்தை முன்னெடுக்கும் போது, பின்தொடர்வோருக்கு தர்க்கரீதியான சிந்தனையைக் கற்றுக் கொடுக்க முடியுமா?

**ஆசானின் சீட கோடிகள் எல்லாமே ஏதோ வகையில் பெண்கள் குறித்த பிற்போக்குச் சிந்தனை கொண்டவர்களாக எனக்குப் பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அந்தப் படுதல் எனக்கு மட்டுமானதாகவே இருக்கவும் கூடும்.**

**அவர்களில் பலரை வாசித்த பாதிப்பு.**

**அதை விட, ஆசான் பெண்ணியம் குறித்த முற்போக்குச் சிந்தனை கொண்டவராக, அந்தக் கருத்துக்களால் அறியப் பட்டவராகவும் நினைவில்லை என்பதும் காரணமாக இருக்கலாம். அவரே பிற்போக்குத் தனமான இந்துத்துவத்தை முன்னெடுக்கும் போது, பின்தொடர்வோருக்கு தர்க்கரீதியான சிந்தனையைக் கற்றுக் கொடுக்க முடியுமா?**

இவ்வாறான சீடகோடிகள் பிரபாகரனின் விசுவாசிகள் போலத் தான் ஆசான் மீதான விமர்சனங்களை எதிர்கொள்வார்கள்.

ஆசான் ஒரு ஒப்பற்ற மாமேதை, அவருடைய புகழைச் சகித்துக் கொள்ள முடியாதவர்கள், அவரை விமர்சிப்பதன் மூலம் தாங்கள் பெயர் பெறலாம் என்று நினைப்பவர்கள் தான் ஆசான் பற்றி விமர்சனங்கைக் கொண்டிருப்பார்கள் என்பது தான் அவர்களின் முட்டுக்கொடுத்தலின் அடிநாதமாக இருக்கும்.

இவர்கள் எல்லாம் புத்தக விழாக்களில் சந்தர்ப்பம் கிடைத்தால் ஆசானின் கட்டவுட்டுக்குப் பால் ஊத்தக் கூடியவர்கள் என்பதை விட, அவர்களைப் பற்றிப் பெருமைப்பட பெரிதாக எதுவும் இல்லை.

சாருவையே தன் குருவாக வரித்துக் கொண்டவர்களை எல்லாம் கண்டு தானே வந்திருக்கிறோம்.

இலக்கியத்தில் ஒரு புதிய சிந்தனைப் பள்ளியை (School of thoughts) உருவாக்கியவர் என்றோ, புதியதொரு இலக்கியத் தலைமுறையை போஷித்து வளர்த்தார் என்றோ ஆசானைப் பற்றிச் சொல்ல முடிகிறதா?

எல்லாப் புகழும் என் ஒருவனுக்கே!

அம்புடுதேன்!

ஆசானைப் பற்றிக் கொண்டு இலக்கிய உலகில் ஈடேறி விடலாம் என்ற எண்ணத்தில் மட்டுமே அவரைப் புகழ்ந்து கொண்டிருப்போரை, அவரும் எங்கோ இடத்தில் குறிப்பிட்டுப் புல்லரிக்க வைத்து, நிரந்தர cheerleaders ஆக்கி, இந்த மொண்ணைகளுக்குத் தேர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

அவர்களும் தெருக்கூத்தாடிகளின் குரங்கு மாதிரி, வேடிக்கை காட்டிக் கொண்டே இருக்கிறார்கள்.

முத்தரைப் போல, தன்னைப் போற்றிப் பாடுவதற்கான ஒரு மொக்கைக் கூட்டத்தைப் பின்னால் வைத்துக் கொண்டது தவிர, புதியதொரு சமூக எழுச்சிக்கானதோ,

சமூக நீதிக்கானதோ ஆனதொரு இலக்கியச் சிந்தனையை முன் வைத்து ஒரு தலைமுறையை ஆசான் வழிநடத்தியதோ, நெறிப்படுத்தியதோ இல்லை.

அதற்கும் கிடைத்த ஆட்கள் போதாதென்று, போதாக்குறைக்கு வாசகர் கடிதம் எழுத ஃபேக் ஐடிக்களையும் அவர் உருவாக்குகிறார்.

இலக்கிய உலகின் எல்லா நம்பர் வண்கள் மாதிரியும் இவரும் அடிக்கடி பேசப்பட வேண்டும் என்பதற்காக சர்ச்சைகளை உருவாக்குகிறார். அல்லது வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்கிறார்.

கட்டவுட்டுக்குப் பால் ஊற்றப்படா விட்டாலும், தனக்கு புளித்த தோசை மாவையாவது ஊற்ற வைக்கிறார்.

இவருடைய சுயமோக இயல்பு இவரை ஒரு bully என்ற நிலைக்கு கொண்டு வந்து விட்டிருக்கிறது. தனக்குப் பிடிக்காதவர்கள் குறித்து, தன்னை விட மேலானவர்கள் என்று பொறாமைப்படுகிறவர்கள் மீது இவர் வெளிப்படுத்துகிற கருத்துக்கள் எல்லாம் மற்றவர்களை தன்னை விட குறைந்தவர்களாக கருதுவதும், சிறுமைப்படுத்துவதுமாகத் தான் இருக்கிறது.

எனக்குத் தெரிந்து சாரு, பெருமாள் முருகன், மனுஷ்.

இடையில் ராஜன் குறையின் பழைய பதிவு ஒன்று கண்ணில் பட்டது. எம்டிஎம், அ.இராமசாமி பற்றியும் எழுதியதாக அவர்கள் எழுதிய நினைவு.

சு.ராவையும் திட்டியதாக வாசித்த நினைவு.

தொடர்ச்சியாக ஆசானை வாசிக்காத எனக்குத் தெரியாத எத்தனையோ?

அவதூறுகள் என்று சொல்லக் கூடிய அளவுக்கு உண்மைகள் இல்லாமல்,



தனிப்பட்ட தாக்குதல்களாகத் தான் இவை இருக்கின்றன.

ஆட்களை அவதூறு செய்ததும் போதாமல், விருதைக் கூட விமர்சித்த பெருமை வேறு அவருக்கு உண்டு.

இந்த கொடுமைப்படுத்தும் இயல்பு, தான் திருப்பித் தாக்கப்படும்போது தன்னை, ‘போடி, அந்தப் பக்கமா வாடி’ என்று அடி வாங்கிய கவுண்டமணி மாதிரி, ‘பழம் தாம்மா வெல கேட்டேன்!’ என்று அப்பாவித் தனமான ‘பாதிக்கப்பட்டவராக’ (victim) அழுது புலம்ப வைக்கிறது.

தோசை மா விவகாரத்தில், தன்னை அவர் ஒரு அப்பாவியாகக் காட்ட முயன்றதும் இந்த விதத்தில் தான்.

தானே புகழ்ந்தவர்களைத் திட்டியதும்,தானேதிட்டியவர்களைப் புகழ்ந்ததும், மரணம் என்று திட்டிய விருதை வெட்கமில்லாமல் வாங்கியதும் என இவர் எதிலும் நிரந்தரமான கருத்துக்களைக் கொண்டிராதவராகத் தான் இருக்கிறார்.

இத்தனை கோளாறுகளும், குறைபாடுகளும் இருந்தும், ஆசானின் சாதனைகளில் பெரியதாக நான் கருதுவது, தன்னை எதிர்ப்பவர்களைக் கூட, தன்மேல் obsessed ஆக வைத்திருப்பது தான்.

ஆசானை எதிர்ப்பவர்கள் எல்லாம் அவரைத் தவறாமல், வரிக்கு வரியும், வரிகளுக்கு இடையிலும் வாசிக்க வைத்தது தான் அந்தச் சாதனை.

நான் ஆசானைப் பற்றி அதிகமாக படிக்க நேருவதெல்லாம் இப்படியானவர்கள் அவர் எழுதிய ஏதாவது பற்றி கொதித்தெழும்போது தான்.

மற்றும்படி என் கட்டாய வாசிப்புப் பட்டியலில் அவர் இல்லை.

அகழ் மின்னிதழுக்கு வழங்கிய பேட்டியில் சொல்லியிருக்கிறேன்...

'ஆசானைப்படிப்பதால் அறிவு வளரும் என்றோ, சாருவைப் படிப்பதால் சிந்தனை செழுமையடையும் என்றோ சொல்ல முடியுமா?'

ஒரு இலக்கியக் கும்பலே, அவரது முகமூடியைக் கிழிக்கிறோம் பேர்வழிகள் என்று புத்தகமே விட்ட நினைவு.

இப்படி தன்னை முழுநேரமாக எதிர்ப்பதற்கென்றே, தன்னை வாசிக்கும் ஒரு கூட்டத்தை உருவாக்கிய பெருமை அவருக்குரியது.

•••

ஆசான் பற்றி சில வருடங்களுக்கு முன் பேஸ்புக்கில் எழுதியிருந்தேன்.

"ஜெமோ புராணம்

தான் மட்டுமே எல்லா விடயங்களிலும்
மேதை (Master) என்று நினைக்கிறார்.

எதைப் பற்றியும் தீர்ப்பளிக்கும் உரிமை
தனக்கு மட்டுமே இருப்பதாகவும்
அதுவே அறுதியானதும் இறுதியானதும்,
விமர்சனங்களுக்கோ, கேள்வி களுக்கோ
அப்பாற்பட்டது என்று நம்புகிறார்.

தன்னுடைய கருத்துக்களோடு முரண்படுபவர்களையும்
தனக்கு ஒவ்வாத கருத்து சொல்பவர்களையும்
'விசரன்' என்கிறார்.

தனக்கு பிடிக்காத கருத்துக்களை வெளியிட்ட
ஊடக ஆசிரியர்களை மிரட்டுகிறார்.

தனக்கு கிடைக்காத போது
கேலியும், கிண்டலுமாக கோபம் கொள்பவர்,
பொன்னாடை, டாக்டர் பட்டம், விருது என
தனக்கு கிடைக்கும் போது,
தனது திறமையை அறிந்து வழங்கியதாக
பெருமை கொள்கிறார்.

பத்து சதத்திற்கு பெறுமதியில்லாத
புளித்த மா விடயங்களுக்காக
சண்டைக்கு போகிறார்.
போராட்டம் செய்கிறார்.

எதிரிகள் தனக்கு பயந்து பின்வாங்கியதாக
தன்னுடைய வெற்றியை
எகத்தாளமாக கொண்டாடுகிறார்.

மாற்றானின் வலிமை தெரியாமல்
மோதப் போய் மூக்கு உடைபட்டு
வாங்கிக் கட்டிக் கொண்ட பின்னர்
தன்னை ஒரு Victim ஆகக் காட்டி
அனுதாபம் தேடி ஒப்பாரி வைக்கிறார்.

சுருக்கமாக சொன்னால்..

தன்னை மட்டுமே புத்திசாலியாகவும்
உலகத்தில் உள்ள மற்றவர்களை எல்லாம்
முட்டாள்களாகவும் நினைக்கிறார்.

மொத்தத்தில்
இவர் ஒரு யாழ்ப்பாணியாகப்
பிறந்திருக்க வேண்டியவர்!"

•••

எது பற்றியதுமான தன்னுடைய கருத்தே அறுதியும் இறுதியுமானதுமானதாக இருக்க வேண்டும் என்ற அவருடைய சிந்தனையின் நீட்சி தான் அவரது விக்கி முயற்சி.

தமிழ் இலக்கியத்தில் சகலமும் பற்றிய தன் கருத்துக்களை உண்மைகளாக்கி வரலாறு ஆக்குவதன் முயற்சி தான் அது. வெறும் தனிமனித அபிப்பிராயங்களை வரலாறு ஆக்கும் அந்த முயற்சியின் ஆபத்துப் பற்றி விளக்கமாக முன்னைய அபத்த இதழ் ஒன்றில் எழுதியிருக்கிறேன்.

இப்படி ஒரு புறம் அடிப்பொடிகளையும், மறுபுறம் haters ஐயும் உருவாக்கிய ஆசானுக்கு என் போன்ற சாமானியர்கள் மீது இருக்கும் மதிப்பு இன்னொரு புறம்.

**எது பற்றியதுமான தன்னுடைய கருத்தே அறுதியும் இறுதியுமானதுமானதாக இருக்க வேண்டும் என்ற அவருடைய சிந்தனையின் நீட்சி தான் அவரது விக்கி முயற்சி.**

**தமிழ் இலக்கியத்தில் சகலமும் பற்றிய தன் கருத்துக்களை உண்மைகளாக்கி வரலாறு ஆக்குவதன் முயற்சி தான் அது. வெறும் தனிமனித அபிப்பிராயங்களை வரலாறு ஆக்கும் அந்த முயற்சியின் ஆபத்துப் பற்றி விளக்கமாக முன்னைய அபத்த இதழ் ஒன்றில் எழுதியிருக்கிறேன்.**

**இப்படி ஒரு புறம் அடிப்பொடிகளையும், மறுபுறம் haters ஐயும் உருவாக்கிய ஆசானுக்கு என் போன்ற சாமானியர்கள் மீது இருக்கும் மதிப்பு இன்னொரு புறம்.**

ஆசான் அருளிச் செய்த பொன்மொழி ஒன்று குறித்து நான் போட்ட பதிவு!

'இது மிகச் சங்கடமான காலம். சமூக வலைத்தளங்கள் சர்வ சாதாரண மானவர்களை படைப்பாளி களுடனும் சாதித்தவர்களுடனும் புகழ் பெற்றவர்களுடனும் இணையாகப் பழக அனுமதிக்கின்றன. போலியான ஒரு சமத்துவத்தை அவை அவர்களுக்கு அளிக்கின்றன. சாதாரணமானவர்களுக்கு அந்த சமத்துவம் உள்ளீடற்றது என்று உள்ளூரத் தெரியும். தாங்கள் வெறும் சாமானியர் என்பதும் தெரியும். ஒவ்வொருநாளும் அவர்களின் அன்றாட வாழ்க்கை அதை அவர்களிடம் ஆணியடித்ததுபோலச் சொல்லிக்கொண்டே இருக்கிறது. ஆகவே படைப்பாளிகளுடனும் சாதித்தவர்களுடனும் தங்களை ஒப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். கசப்பு கொள்கிறார்கள். புண்படுகிறார்கள். அகத்தே எரிந்துகொண்டே இருக்கிறார்கள். அது நரகம்.'

இணையத்து இமயங்கள்
நீங்கள் எழுதுகின்றவற்றுக்கோ,
ஏன், அவர்களின் பதிவுகளுக்கு போடுகின்ற பின்னூட்டங்களுக்கோ ஏன் வெறும் லைக் கூட போடுவதில்லை என்று
கு(ழப்ப)முறும் சாமான்யர்களுக்கு...

சும்மா ஒரு தகவலுக்காக!

•••

இதுதான் தன்னை வாசிக்காத சாமானியர்கள் பற்றி இவர் கொண்டிருக்கும் மதிப்பீடு.

ஆசானுக்கு சாமானியர்கள் மட்டுமல்ல, தமிழர்கள் மீதும் அதே மதிப்பீடு தான் இருக்கிறது.

தமிழ்நாட்டுப் பார்ப்பனீயர்களுக்கு இருக்கிற அதே தமிழ் வெறுப்பு.

ஆனால், அது பார்ப்பனீயர்களின் திராவிட வெறுப்புப் போன்றதல்ல. பார்ப்பனீயர்களின் திராவிட வெறுப்பு தங்கள் கையில் இருந்த அதிகாரம் கைவிட்டுப் போனதால் ஏற்பட்ட கொதிப்பு.

ஆசானுக்கான தமிழ் வெறுப்பு தன்னைத் தலையில் வைத்துக் கொண்டாடவில்லை என்பதால் ஏற்பட்டது தான்.

இதனால் தான் தமிழில் எதுவும் இல்லை என்ற முடிவோடு, அதைக் குத்திக் காட்டி, மொத்துப்படுகிறார்.

ஆனால் என்னவோ, நம்ம 'வந்தாரை வாழ வைக்கும்' தமிழ் இவரை கணக்கெடுக்காமலேயே இருக்கிறது.

எனக்கு மலையாள இலக்கிய உலகம் பற்றி பெரிய பரிச்சயம் இல்லை. தமிழில் அது பற்றி எழுதப்பட்டவைகளைக் கண்ணில் படும் போதெல்லாம் ஆர்வத்தோடு வாசித்திருக்கிறேன்.

ஆனால், இவர் இங்கே நடத்துகிற அத்தனை கூத்துக்களையும் அங்கே நடத்த முடியுமா என்பது எனக்குத் தெரியாது.

மற்றவர்களுக்கு எதுவுமே தெரியாது என்று இங்கே அவர் அடித்து விடுகிற நியூமரோ உனோக் கதைகள் அங்கே செல்லுபடியாகுமோ எனக்குத் தெரியாது.

அல்லாமல், அவருக்கு அங்கே பெரும் வரவேற்பு இருந்தால், இந்த நாத்திக பூமியிலிருந்து நாடு கடந்து, ஏன் அவர் படைப்பாளிகளுக்கு உரிய கௌரவம் கொடுக்கும் அந்த God's country யில் தன்னுடைய களத்தையும் தளத்தையும் அமைத்துக் கொள்ளவில்லை என்பதும் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இப்படி தமிழ்ச் சுவரில் மண்டையை மோதிக் கொண்டிருப்பது போலத் தான் இவரின் இந்துத்துவ சிந்தனைகளும்.

தமிழ்நாடு பெரியார் பூமி, ஏதோ பேதங்கள் அற்ற பகுத்தறிவுப் பாசறை என்றெல்லாம் நான் ஒரு போதும் நினைப்பதில்லை.

இது கட்டவுட்டுக்கு பால் ஊற்றும் பூமி. அது தனக்கான ஹீரோக்களைத் தெரிவு செய்து கொண்டால், அவர்கள் தான் கடவுள்.



'இது மிகச் சங்கடமான காலம். சமூக வலைத்தளங்கள் சர்வ சாதாரண மானவர்களை படைப்பாளி களுடனும் சாதித்தவர்களுடனும் புகழ் பெற்றவர்களுடனும் இணையாகப் பழக அனுமதிக்கின்றன.

போலியான ஒரு சமத்துவத்தை அவை அவர்களுக்கு அளிக்கின்றன. சாதாரணமானவர்களுக்கு அந்த சமத்துவம் உள்ளீடற்றது என்று உள்ளூரத் தெரியும். தாங்கள் வெறும் சாமானியர் என்பதும் தெரியும். ஒவ்வொருநாளும் அவர்களின் அன்றாட வாழ்க்கை அதை அவர்களிடம் ஆணியடித்ததுபோலச் சொல்லிக்கொண்டே இருக்கிறது. ஆகவே படைப்பாளிகளுடனும் சாதித்தவர்களுடனும் தங்களை ஒப்பிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். கசப்பு கொள்கிறார்கள். புண்படுகிறார்கள். அகத்தே எரிந்துகொண்டே இருக்கிறார்கள். அது நரகம்.'

ட்ரெய்லரைப் பார்த்து தியேட்டர் சீட்டைக் கிழிக்கும் பகுத்தறிவுப் பகலவர்கள் வாழும் இடம் இது.

இங்கே திராவிடம் என்பது ஏதோ வகைகளில் மனதில் புகுந்து, டி.டி. தினகரனைக் கூடத் தெரிவு செய்யத் தயாராக இருக்கிறது.

சாமிக்கு ஆடும் கோழியும் வெட்டிப் பலி கொடுக்கும் பூமியில், சாதிவெறியில் ஆணவக் கொலை செய்யும் நாம் பிறந்த மண்ணில், இந்துத்துவப் பிரசாரம் என்பது 'வடக்கன்ஸ் விடயமாகத்' இது வரைக்கும் பார்க்கப்படுகிறது.

சுயசாதிப் பெருமையும் மறுசாதி வெறுப்பும் கொண்ட இந்த 'பாருக்குள்ளே நல்ல நாட்டுக்குள்', நான் சொல்கிற மாதிரி, ஒரே மொழியைப் பேசுகிற வெறும் சாதிக் கூட்டங்களுக்குள், எந்தச் சாதிகளோடும் தன்னை அடையாளம் காட்டிப் பெருமைப்பட முடியாதவர் வந்து ஒட்டுமொத்தமாக தமிழர்களை முட்டாள்கள் என்பதால் யாரை convince பண்ண முயற்சிக்கிறார் என்பது எனக்கு மர்மமாகவே இருக்கிறது.

வாக்களிப்பு இயந்திரங்களின் புண்ணியத்தாலோ, வருமானவரிப் பாய்ச்சல்களாலோ, ஆச்சரியங்களும் அற்புதங்களும் நிகழ்ந்தால் ஒழிய, அண்ணாமலை ஆட்சிக்கட்டில் ஏறுவது என்பது அண்ணா வாழ்ந்த பூமியில் சாத்தியமில்லை.

இவர்களின் தகுதிக்கு எடப்பாடியே போதும்!

PM Cares கொள்ளையில் வந்த பணத்திற்குக் கூட விலை போகத் தேவையில்லாத அளவில், தமிழ்நாட்டு அரசியல்வாதிகளிடம் போதிய பணம் வேறு இருக்கிறது.

இங்கே வந்து, தன்னை ஏற்கனவே வெறுக்கிற ஒரு மண்ணில் நின்று கொண்டு, இந்துத்துவப் பிரசாரம் என்பது எந்தளவு சாத்தியம் என்பது குறைந்த பட்ச common sense உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

இந்த மேதைக்குத்தான் இன்னமும் புரியவில்லை.

இந்த நிலையில், தமிழில் எதுவுமே இல்லை, தமிழர்கள் முட்டாள்கள் என்றபடியே இந்துத்துவச் சிந்தனையை உட்தள்ள முயற்சிப்பது என்பது எப்படி வெற்றியளிக்கும் என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாமல், முட்டி மோதிக் கொண்டே இருக்கிறார்.

உடைவது அவரது மண்டையாகத் தான் இருக்கப் போகிறது!

Sans தோசை மாவு!

நான் கூட யாழ்ப்பாணிகள் பற்றி எழுதிக் கொண்டு தான் இருக்கிறேன். ஆனால், அதன் நோக்கம் என்னைத் தங்கள் வழிகாட்டியாகவோ, தீர்க்கதரிசியாகவோ நினைக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

மந்தைக் கூட்டம் போல கொலைகாரர்கள், அயோக்கியர்கள் பின்னால் போய் நாசமாகப் போகிறார்களே என்ற சமூக அக்கறை தவிர, என்னை ஏதோ புத்திசாலி என்று நிருபிப்பதற்காக இல்லை.

ஆனால், தன்னை தலையில் வைத்துக் கொண்டாட வேண்டும் எதிர்பார்ப்பவர், அதே கூட்டத்தை முட்டாள்கள் என்பதில் உள்ள முரண்நகையை இந்த மரமண்டைக்கு விளங்கிக் கொள்ள முடிகிறது.

அந்த மாஸ்டருக்குத் தான் விளங்கவில்லை.

இவரது இந்துத்துவ உணர்வு என்பது ஆர்வக் கோளாறா? அல்லது கொடுத்த பணத்துக்கு அதிகமாகக்



கூவுகிறாரா? என்பதில் எனக்குக் குழப்பங்கள் உண்டு.

சவுக்கு சங்கருக்கும் சீமானுக்கும் சமனாக தன்னை வைத்துக் கொள்ள வேண்டிய தேவை என்ன?

ஆர்வக் கோளாறு என்றால், அடக்கி வாசிக்கலாம்.

பணம் தான் பிரச்சனை என்றால், PS-13 வரைக்கும் லைக்கா அருள்பாலிக்க வேண்டும் என்று, எங்கள் ஊர் வைரவருக்கு ஆடு வெட்ட நேர்த்தி வைக்கலாம் என்றிருக்கிறேன்.
இந்துத்துவக் கடவுள்கள் அவருக்கு அருள் பாலிக்காததால்!

இப்படி, தமிழ் இலக்கிய உலகில் இன்றைக்கு ஆசான் ஒரு divisive figure ஆக வந்து முடிந்திருக்கிறார்.

Either you love him or hate him.

With no middle ground.

ஆசானின் அறம் பற்றிய பீற்றல்கள் எப்போதுமே 'சற்று ஓவர்' தான்.

ஆசான் அறத்தோடு தான் வாழ வேண்டும் என்று யாரும் முரண்டு பிடித்ததாகவும் நான் கண்டதில்லை. தன் படைப்புகளுக்கும் அப்பால் அவர் தன் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்த்ததும் இல்லை.

எழுத்தாளர் ஒருவர் தன் வாழ்வை தனக்கு விரும்பிய விதத்தில், மற்றவர்களுக்குத் துன்பம் தராமல் வாழ்வதில் என்ன பிரச்சனை?

தன்னை அறத்தின் மொத்த வடிவமாகவும், மற்றவர்கள் அறமே இல்லாதவர்கள் என்று ஆசான் போதிக்கத் தொடங்கும் போது தானே பிரச்சனை வருகிறது?

ஆசான் தனிப்பட்ட ரீதியில் குறை சொல்லக் கூடிய குணாதிசயங்கள் கொண்டவராகவும் இல்லை.

சாரு போல எந்த ஒரு நற்பண்புகளும்

இல்லாத 'கடைந்தெடுத்த' அயோக்கியன் என்று ஆசானைச் சொல்வதற்கும் இல்லை.

பிரான்சிஸ் கிருபாவின் மரணத்தின் போது, அவரது இறுதிச் சடங்குகளில் நேரில் போய் கலந்து கொண்டிருக்கிறார்.

தமிழ் இலக்கிய உலகின் சாம்பவான்கள் எல்லாம் அங்கே படையெடுத்து அஞ்சலி செலுத்தியதாக எனக்கு நினைவு இல்லை.

இப்போதும், நோய் வாய்ப்பட்டிருக்கும் ஒரு ரமேஷ் பிரேதனுக்கு தங்குவதற்கான இடத்தை பெற்றுக் கொடுத்தது பற்றி அவர் இந்த இதழில் கற்சுறாவுடனான இடைமறிப்பில் நன்றியோடு நினைவு கூர்ந்திருக்கிறார்.

புலிக் கூட்டம் விடுத்த எச்சரிக்கை, மிரட்டல்களையும் மீறி நண்பர்களுக்கு உறுதியளித்ததற்காக கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார்.

தனிப்பட்ட ரீதியில் அவரையும், அவரது குறைபாடுகளைத் தெரிந்து கொண்டு, அவரது நற்பண்புகள் பற்றி சிலாகிக்கின்ற எனக்கு நெருக்கமான நண்பர்களும், தெரிந்தவர்களும் இருக்கிறார்கள்.

அதிலும் உட்பெட்டிகளுக்குள் அம்பு விட்டதாக எந்தப் பெண்ணியவாதியும் இவர் மீது குற்றம் சாட்டியதாகவும் இல்லை.

அந்தப் பெண்ணியவாதிகள் எல்லாம் தங்களுக்கு விடப்பட்ட அம்புகளின் ஸ்கிரீன்ஷொட்களை அனுப்பி நீதி கேட்கும் அளவுக்கு, பெண்ணியவாதிகள் மத்தியில் பெரும் மதிப்பு வேறு பெற்றிருக்கிறார்.

அல்லது அப்படி உரிமை கோரிக் கொள்கிறார்.

அழுகிப் போன இந்த அறப் பீற்றலை உரித்து எடுத்து விட்டால், இந்த வெங்காயம் உண்மையில் வேறாக இருந்திருக்கக் கூடும்.

**இத்தனை தலையால் மண் கிண்டலின் பின்னாலும், சும்மா விருதை அச்சடித்துக் கொடுத்த அ.முத்துலிங்கத்துக்குக் கிடைத்த போஸ்ட் கார்ட் பெருமை கூட ஆசானுக்குக் கிடைக்கவில்லைத் தானே!?**

ஆசானுக்கு என்று இலக்கிய உலகில் இடம் ஒன்று இருக்கிறது. அது அவருக்கே தனித்துவமானதும் கூட.

நான் வாசித்தவரைக்கும், ஆசானின் எழுத்து தமிழில் தனித்துவமானது. ஒப்பில்லாதது. செழுமை மிக்கது.

It is rich in all senses.

வெறும் எழுத்து மூலமாக அடையாளம் காணக் கூடிய அளவுக்கு அவர் தனக்கென ஒரு எழுத்து நடையைக் கொண்டிருக்கிறார்.

இதையெல்லாம் அவரின் முழுநேர எதிரிகளும் ஒப்புக் கொள்ளக் கூடும்.
பகிரங்கமாக இல்லாவிட்டாலும்!

மற்றவர்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொண்டு, தன்னுடைய அந்தத் தனித்துவத்தில் தன்னம்பிக்கையும், பெருமையும் கொள்வதை விடுத்து, நானே நம்பர் வண், நீங்கள்லாம் ஸீரோ என்பதில் தானே பிரச்சனை ஆரம்பிக்கிறது.

ஆசான் இப்படியெல்லாம் வீம்புக்கு முரண்டு பிடிக்காமல், எல்லோர்க்கும் இனியனாக இருந்திருந்தால், எல்லோருமே அவரை நம்பர் வண் என்று கொண்டாடுவதில் பிரச்சனை எதுவும் வந்திருக்கப் போவதில்லை.

அதற்கான தகுதி அவருக்கு இருக்கிறது என்று நினைக்கிறேன்.

நான் மட்டும் தான் மேதை என்று நிறுவ முயல்வதன் மூலம் எதைச் சொல்ல வருகிறார்?

இத்தனை தலையால் மண் கிண்டலின் பின்னாலும், சும்மா விருதை அச்சடித்துக் கொடுத்த அ.முத்துலிங்கத்துக்குக் கிடைத்த போஸ்ட் கார்ட் பெருமை கூட ஆசானுக்குக் கிடைக்கவில்லைத் தானே!?

பெருமை என்பது மற்றவர்கள் மூலமாக வருவதாகத் தானே இருக்க வேண்டும்?

தானே சொல்லிக் கொள்வதால், சுய இன்பம் தவிர்ந்து வேறு என்ன பெருமை இருக்கிறது?

பன்றிகளோடு மல்யுத்தம் பண்ணித் தான் ஆவேன் என்று அடம் பிடிக்காமல், அவர் தனக்குக் கிடைத்த இந்தத் திறமையையும், பெருமையையும் வைத்துக் கொண்டே, தன்னுடைய சுயத்தை இழக்காமல், எல்லோரையும் அனுசரித்தும் அரவணைத்தும் போகிற high road ஐ எடுத்திருந்தால், இலக்கிய உலகின் Elder statesman ஆக சுலபமாகவே வந்திருக்கலாம்.

அவருக்கு இணையாக மிகவும் குறைவானவர்களையே வைக்க முடியும். அவர்களுடன் அந்தப் பெருமையை பகிர்ந்து கொள்கிற பெருமனதும் அவருக்கு இருந்திருந்தால், அது இவருக்கு பெருமை சேர்த்திருக்கும்.

தன்னுடைய நிலைப்பாடுகள் காரணமாக, தன்னை முழுநேரமாக எதிர்ப்பவர்கள் மட்டுமல்ல, வெறுப்பவர்கள் என்ற அளவிலும் பெரும் கூட்டத்தைச் சேர்த்திருக்கிறார். அவர்கள் எந்தக் கட்டத்திலும் இவருடைய மேதைமையைப் புகழப் போவதுமில்லை. அவ்வாறான ஒரு தொகையினரை, தன்னை வாசிப்பவர்களாக அவர் இழக்காவிட்டாலும், தன்னைப் புகழ்கிறவர்களாக இழந்திருக்கிறார்.

இதையெல்லாம் உணர்ந்து கொள்ள முடியாதபடிக்கு அவரது சுயமோகமும், இந்துத்துவச் சிந்தனையும், தமிழ் வெறுப்பும் அவரை ஆட்கொண்டிருக்கின்றன.

தன்னுடைய நம்பிக்கைகளைத் தனக்குள்ளே வைத்திருப்பதில் எவருக்கும் பாதிப்பு இல்லை. அதை மற்றவர்கள் மீது திணிக்க முயல்வதும், அதை ஏற்க மறுப்போர் மீது வசை பொழிவதும் இவரை எங்கேயும் கொண்டு போய் விடப் போவதில்லை.

It can't take him anywhere!

இவர் மீதான அறம் குறித்த விமர்சனங்கள் எல்லாம் இவர் வாயைத் திறந்ததால் எழுந்தவையே அன்றி, இவரது படைப்புகளால் எழுந்தவையும் இல்லை.

முன்பு ஒரு தடவை இவரை வாசித்த கடுப்பில் பேஸ்புக்கில் எழுதியது இது.

Oxford Dictionary says...

narcissist
: a person who admires himself or herself too much.
especially their appearance

My view is...

Even when crucified.
Narcissist savors every moment of being the center of attention.
You ignore him.
his ego will suffocate.

Unfortunately. many people make the mistake of giving oxygen to his ego!

இது ஜெமோ பற்றிய பதிவு என யாராவது கருதிக் கொண்டால், அதனால் ஏற்படக் கூடிய indirect. incidental. consequential. special or exemplary damages க்கு கம்பனி எந்த விதத்திலும் பொறுப்பேற்காது!

•••

ஆசான் தன் மீது கவனம் எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்யும் சகல கூத்துக்களுக்கும், அவர் எதிர்பார்த்தபடியே மற்றவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன. அவர்களைக் கோபப்படுத்துவதே அவரது நோக்கம் என்றால், கோபப்படுகிறவர்கள் தான் இருக்கிறார்களே அன்றி, கிண்டல் அடித்து வெட்கப்பட வைப்பவர்கள் இல்லை. அல்லது கவனிக்காமல் கடந்து போகிறவர்களும் இல்லை.

அவரது நோக்கமும் முயற்சியும் எப்போதும் வெற்றியளிப்பதால் தான் அதை அவர் ஒரு போர்முலாவாகக் கைக்கொண்டபடி இருக்கிறார்.

அவர்கள் எல்லாருமே எப்போது இவர் சொல்வதைக் கணக்கெடுக்காமல் போகிறார்களோ அன்றோடு ஆசான் தன்னைப் பற்றிக் கொண்டிருக்கும் பிம்பம் உடைந்து சிதறிப் போகும்.

ஆசானுக்கு உண்மையில் தேவைப்படுவதெல்லாம் மற்றவர்கள் தன் மீது கொண்டிருக்கும் கவனம் (attention) இல்லை.

பணிவு!

தாகூர் சொன்ன மாதிரி,
"We come nearest to the great when we are great in humility."

எவரும் சொல்லா விட்டாலும், எங்கோ ஒரு 'சாமானியன்' சொல்ல வேண்டித் தான் இருக்கிறது.

என்னுடன் நெருக்கமான நண்பராக இருந்தால், இதை உரிமையோடு முகத்திற்கு நேரே சொல்லியிருப்பேன்.

You are great indeed,
There is no point trying to establish you are the greatest.

You will have your place
and don't blow it.

Just...
Shut up and write!

**ஜோர்ஜ் இ.**

(இது சில மாதங்களுக்கு முன், எஸ்.ராமகிருஷ்ணன், சாரு பற்றி எழுதியதன் பின்னால் அடுத்து வெளியிட வேண்டும் என்று எழுதத் தொடங்கிய கட்டுரை. என்னுடைய தோட்டவேலை காரணமாக இழுபட்டு, சென்ற மாத இதழில் எப்படியாவது முடித்து பிரசுரிக்க வேண்டும் என்று முயன்ற போது, கடைசி நேரத்தில் நண்பர் கற்சுறா, ஆசான் கனடா வருவது குறித்த விளம்பரம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதனால், அதை இம்முறை போடுவது, அபத்தம் வாசகர்களுக்கு அவரது அறம் பற்றிய பேருரையை நேரில் கேட்ட வேண்டும் என்ற ஆர்வத்தை அதிகரிக்கக் கூடும், ஏன்னா any news is good news இல்லையா, என்ற எண்ணத்தில் சென்ற இதழில் பிரசுரிக்கவில்லை.
இது ஆசானின் வருகையைப் பயன்படுத்திப் பெயர் வாங்க அவசரமாக எழுதப்பட்டதல்ல என்று சொல்வதற்காகவே இந்தக் குறிப்பு.
இதையெல்லாம் அவர் வாசிப்பார் என்றோ, அவரது கவனத்தை ஈர்த்து, திட்ட வைத்து, அங்கீகாரமோ, பெயரோ வாங்க வேண்டும் என்பதற்காகவோ, அகழ் மின்னிதழோடு வைத்த விளையாட்டெல்லாம் என்னோடும் வைத்துக் கொள்வார் என்பதற்காகவோ, அருண் அம்பலவாணருக்கு செய்த psychiatric diagnosis ஐ எனக்கும் செய்வார் என்பதற்காகவோ எழுதவில்லை.
ஆசான் பற்றி, பிழை கண்டுபிடித்துப் பெயர் வாங்க முயலும் புதிதாகத் தோன்றிய இன்னொரு புலவர் என்று ஆசானின் அடிப்பொடிகள் என்னைச் சொல்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நான் எழுதத் தொடங்கிய காலங்களில் இந்த அடிப்பொடிகள் அரைநிஜாரோடு கோலிகுண்டு விளையாடினார்களா? அம்புலிமாமா வாசித்துக் கொண்டிருந்தார்களா? இல்லை, அப்போதும் தோஸ்துவிஸ்கி தானா? என்பதைச் சொன்னால், அதையும் ஆர்வத்தோடு வாசிப்பேன்!)



# ஏரியும் ஓரமும்!












ROGERS CENTRE



















ஜோர்ஜ் இ.




பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் சனல் 4 என்னும் மேற்கத்தேய ஊடகமானது கடந்த செப்டம்பர் 5ஆம் திகதியன்று வெளியிட்ட ஆவணப்படம்(?) இலங்கையை ஒரு குலுக்குக் குலுக்கி எடுத்துள்ளது. இலங்கையில் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுவெடிப்புகளுக்கு பின்னணியில் 'இலங்கை அரசியல்வாதிகள்' இருந்தனர் என்கின்ற குற்றச்சாட்டை அது முன்வைத்துள்ளதோடு ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக இராஜபக்ச குடும்பத்தினரே அதனைத் திட்டமிட்டு நிறைவேற்றியுள்ளனர் என்கின்றது அவ்வொளிபரப்பு

மேற்படி சனல் 4 னுடைய அந்த ஒளிபரப்பானது முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சராக பணியாற்றிய வரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமாகிய சந்திரகாந்தனின் (பிள்ளையான்) இணைப்பாளராக செயற்பட்ட ஆசாத் மௌலானா என்பவருடைய வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## யார் இந்த ஆசாத் மௌலானா?

முஹம்மது மிஹிலார் முஹம்மது ஹன்ஸீர் என்னும் முழுப் பெயரையுடைய இவர் அம்பாறை மாவட்டம் மருதமுனை என்னும் ஊரைச் சேர்ந்தவராகும். இவரின் தந்தையார் 'முஹமட் மிஹிலார்' தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் பங்கெடுத்தவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மூத்தப்போராளிகளில் ஒருவரான அவர் 'கமலன் தோழர்' என அழைக்கப்பட்டவர். அவ்வமைப்பின் தலைவரான பத்மநாபாவின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவராக இருந்தவர். 19.06.1990ஆம் ஆண்டு சென்னை கோடம்பாக்கம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய கொலைத் தாக்குதலில் பத்மநாபாவுடன் இணைந்து அதிகமான தலைமைக்குழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டபோது அவரும் கொல்லப்பட்டார்.

03.02.1983 ஆம் ஆண்டு பிறந்த ஹன்சீருக்கு அவரது தந்தையை இழந்த போது வெறும் ஏழு வயதுகள் மட்டுமே நிரம்பியிருந்தது. இளைஞனாக வளர்ந்த ஹன்சீர் உயர் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஈ. பி.டி.பி யின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த குணசேகரம் சங்கர் (முன்னாள் ஈ.பி.ஆர்.எல். எப் போராளி) என்பவருடைய உதவியாளராக இந்த இருந்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பானது வடக்கு:கிழக்கு என்று பிளவுபட்டு கிழக்குப்புலிகள் தனியாக இயங்கிய வேளைகளில் இவ்விருதரப்பினருக்கும் இடையே பலத்த மோதல்கள் இடம்பெற்றன.

இம்மோதல்கள் கடுமையாக நடந்த தருணங்களில் 2006 ஆம் ஆண்டு கிழக்குப் புலிகளின் பேச்சாளராக 'தூயவன்' என்னும் பெயரில் குரல் கொடுத்து வந்த உருத்திரா மாஸ்டருக்கு துணையாக பொருத்தமான ஒருவர் தேவைப்படுகின்றார்.

குறித்த ஹன்சீர் என்னும் இளைஞன் புலிகளின் படுகொலையில் தந்தையை பறி கொடுத்தவர் என்பதால் வன்னிப் புலிகளுக்கு எதிரான தமது போராட்டத்தில் விசுவாசமாக இயங்குவார் எனும் அடிப்படையிலும் ஒரு இஸ்லாமியர் என்பதால் வன்னிப்புலிகளின் கொலைப் படலத்தில் இருந்து தப்பி சந்தேகத்துக்கிடமின்றி நடமாட முடியும் என்பதன் அடிப்படை யிலும் பிள்ளையானால் இனம்

காணப்பட்டு அப்பணிக்காக உள் வாங்கப்படுகிறார். அப்போது அவர் அமைப்புக்குள் 'சுகந்தன்' என்றும் வெளியே அவர் 'ஆசாத் மௌலானா' என்றும் பிள்ளையானால் பெயரிடப்பட்டார். வன்னிப்புலிகள் என்றழைக்கப்பட்ட வடக்குப் புலிகளை கிழக்கு மாகாணத்தை விட்டு துரத்தியடிப்பதில் கிழக்குப்புலிகள் மெது மெதுவாக வெற்றி பெறத் தொடங்கினர். அப்போது கிழக்குப்புலிகள் வெளியிட்ட 'தமிழ் அலை' பத்திரிகையில் 'உத்தமன்' என்னும் பெயரில் ஆசாத் மௌலானா உலக அரசியல் பற்றிய பல கட்டுரைகளையும் எழுதினார். அவ்வேளைகளில் ஆசாத் மௌலானா கொழும்பு வாழைத்தோட்டப் பகுதியில் பிறந்து பாணந்துறை பிரதேசத்தில் வளர்ந்த 'நொஸ்கியா' எனும் பெண்ணைத் திருமணம் செய்துகொள்கின்றார். 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் கிழக்குப் புலிகள் 'தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்' என்னும் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு தேர்தலில் போட்டியிட்டனர். அத்தேர்தலில் வெற்றிபெற்று பிள்ளையான் என்னும் சந்திரகாந்தன் அவர்கள் முதலமைச்சர் ஆகின்றார். வன்முறைப் பாதையை விட்டு விலகி ஜனநாயகப் பாதைக்கு வந்த முதலமைச்சர் சந்திரகாந்தன் பல இக்கட்டான சூழ்நிலைகளிலும் தனக்கு விசுவாசமாக செயல்பட்ட ஆசாத் மௌலானாவுக்கு உரிய கௌரவம் கொடுத்து அவரை தனது இணைப்பாளர்களில் ஒருவராக நியமித்தார். அன்று தொடங்கி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரான காலம் வரை ஆசாத் மௌலானா சந்திரகாந்தனுடன் இணைந்தே பணியாற்றி வந்தார்.



## மோசடித் திருமணம்

ஏற்கனவே திருமணமாகி இரண்டு வளர்ந்த பிள்ளைகளுக்கு தந்தையான ஆசாத் மௌலானா தனது சொந்த ஊருக்கு அண்மையில் உள்ள சாய்ந்தமருதில் மற்றுமொரு திருமணம் முடிக்கின்றார். ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் 'பெனாசீர்' என்னும் இளம்பெண்ணொருவரை (தனது முதலாவது மனைவியை பிரிந்து விட்டதாக பொய் சொல்லி) ஏமாற்றி 27.09.2021 அன்று மட்டக்களப்பு rivera resort ஹோட்டலில் கலிமா விருந்து கொடுத்து நிச்சயதார்த்தம் செய்கின்றார். 28.09.2021 அன்று அம்பாறை மாவட்டம், வாங்காமம் கிராமத்தில் உள்ள 'அல்:மஜ்ஜிதுல் ஹுதா பசார்' பள்ளிவாசலில் பதிவுத் திருமணம் செய்து கொள்கின்றார்.

இதன்காரணமாக அவரது தனிப்பட்ட வாழ்வில் பெரும் சூறாவளி வீச ஆரம்பித்தது. முதல் மனைவி போர்க்கொடி தூக்குகின்றார். இரு மனைவிகளின் குடும்பங்களும் ஆசாத் மௌலானாவுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கின்றன. சந்திரகாந்தனிடம் இருதரப்பினரும் முறையிடுகின்றனர். ஆசாத் மௌலானாவோ தன்னைக் காப்பாற்றுமாறு சந்திரகாந்தனிடம் சரணடைகின்றார். அவரோ இந்த விடயத்தில் தான் எதுவுமே செய்யமுடியாதென்றும் இரு தரப்பினரும் சட்டத்தை நாடுமாறும் ஆசாத் மௌலானாவை நீதிக்குத் தலைவணங்குமாறும் அறிவுரை கூறுகின்றார்.

சந்திரகாந்தனின் ஆதரவை இழந்த ஆசாத் மௌலானாவுக்கு முதல் மனைவியின் குடும்ப உறவினர்கள் மூலம் அடிதடி, போலீஸ் என்று நெருக்கடிகள் கொடுக்கப் படுகின்றன. அதேவேளை இரண்டாவது மனைவியும் 30.01.2022 அன்று சாய்ந்தமருது போலீஸ் நிலையத்தில் குறித்த மோசடித் திருமணம் குறித்து ஆசாத் மௌலானாவுக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல்

செய்கின்றார். (முறைப்பாட்டு இலக்கம் CIB 153/263) மேலும் அரசு ஆவணங்களை பொய்யாக தயாரித்தார் என்கின்ற முறைப்பாட்டையும் அம்பாறை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு வழங்குகின்றார்.

ஆசாத் மௌலானாவின் 'மானம்' கப்பலேறத் தொடங்குகின்றது. வேறு வழியின்றி ஆசாத் மௌலானா இந்தியாவுக்கு 'விமானம்' ஏறுகின்றார்.

2022ஆம் ஆண்டு யூன் மாதமளவில் பாரிசில் வந்திறங்கிய ஆசாத் மௌலானா சுவிஸ்நாட்டுக்கு தரை மார்க்கமாகச் சென்று அங்கு அரசியல் தஞ்சம் கோருகின்றார். அங்கு அவரது தஞ்சக் கோரிக்கை மறுக்கப்பட்டு பிரான்ஸுக்கு திருப்பியனுப்பப் படுகின்றார். பிரான்ஸிலும் அவருக்கு தஞ்சம் வழங்கப்படுவது மறுக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னரே இலங்கையில் நடந்திருந்தபோதிலும் மேற்குலகின் பிரசைகளும் கொல்லப்பட்ட பயங்கரவாத நடவடிக்கை ஒன்றின் நேரடிச் சாட்சியாக ஒப்புதல் அளிப்பதன் மூலம் தனது தஞ்சக் கோரிக்கையை ஐ.நாவின் அகதிகள் அமைப்பு நேரடியாக கையாளும் அதி உயர் வாய்ப்பை பெறும் வண்ணம் சனல் 4 ஊடாக காய் நகர்த்தல்கள் தொடங்குகின்றன.

(மோசடித்திருமணம், அதற்கான வழக்கு போன்றவற்றுக்கான ஆதாரங்கள் இதழாசிரியருக்கு அனுப்பப்பட்டுள்ளன.)

ஆசாத் மௌலானா மூலமாக சனல் 4 ஊடகமானது வெளியிட்ட தகவல்களின் அடிப்படைகள் ஒன்றும் புதியன அல்ல. அதாவது 'இராஜபக்ச தரப்பினரே தங்களுக்கு வாய்ப்பான ஆட்சி மாற்றம் ஒன்றுக்காக ஈஸ்டர் தாக்குதலுக்கு திட்டமிட்டனர்' என்கின்ற வதந்திகள் ஏலவே அறிந்தவைதான் ஆனாலும் அவற்றை ஒருவரது வாக்குமூலம் ஊடாக சர்வதேசத்துக்கு சொல்வதன் ஊடாக மேற்குலகின் கவனத்தை இலகுவாக ஈர்க்கமுடியும். அதே வேளை ஆசாத் மௌலானா பிள்ளையானுடன் நீண்டகாலமாக பணியாற்றியவர் என்பதனால் அவரையும் இதற்குள் இழுத்து விட்டால்தான் தன்னைச் சுற்றி ஒரு சித்திரத்தை தீட்ட முடியும். இதற்கு வாய்ப்பாக பிள்ளையான் இராஜ பக்ஸவினருடன் கொண்டிருக்கக் கூடிய அரசியல் நெருக்கத்தினையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். என்கின்ற திட்டமிடல்களுடனேயே ஆசாத்துக்கு ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளன.

இத்தகைய ஆலோசனை களை புகலிடத்திலுள்ள தமிழ்த் தேசிய வியாபாரிகளான புலிப்பினாமிகள் மட்டுமல்ல இலங்கையிலுள்ள பிள்ளையானின் அரசியல் போட்டியாளர்களும் இணைந்து வழங்கியிருக்க முடியும். அந்தவகையில்தான் பிள்ளையான் மீதும் ஆசாத் ஊடாக சனல் 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது. இக்குற்றச் சாட்டுக்கள் ஊடாக புலிப்பினாமிகளின் (பொன் முட்டையிடும் வாத்தாக இருந்துவந்த பிரபாகரனைக் கொன்ற) இராஜபக்ஸாக்களை பழிவாங்கும் நோக்கமும் பிள்ளையானை அரசியல் அரங்கிலிருந்து தோற்கடிக்கும் பகிரதப் பிரயத்தனமும் அரங்கேறியுள்ளது என்பதே உண்மையாகும்.

இந்த உண்மையை அறிந்தமையினால்தான் சனல் 4 காணொளி வெளியாகிய ஐந்தாம் நாளே (செப்:10) மட்டக்களப்பு மக்கள் வீதிக்கு இறங்கி 'கிழக்குத் தலைமையை அழிக்க முனையாதே' 'பிள்ளையானைக் குறிவைக்காதே' என்னும் கோஷங்களுடன் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

சனல் 4 காணொளியில் ஈஸ்டர் தாக்குதல் காட்சிகள், இலங்கையில் கடந்த காலங்களில் கொல்லப்பட்ட பல அரசியலாளர்கள், ஊடகவியலாளர்கள் பற்றிய விபரங்கள், அக்கொலைகள் குறித்த மனித உரிமை ஆர்வலர்களின் கருத்துக்கள் என்று நிறைந்த விடயங்கள் ஒன்றன் பின் ஒன்றாக காட்சிப் படுத்தப்படுகின்றன. அதேபோன்று 'சுரேஷ் சாலே' என்கின்ற இலங்கையின் புலனாய்வுத்துறை சார்ந்த




அதிகாரியொருவருக்கும் குறித்த தாக்குதலின் சூத்திரதாரியான ஷஹ்ரான் குழுவியினருக்கும் இடையிலான சந்திப்பொன்றுக்கு (அவ்வேளையில் சிறையிலிருந்த) பிள்ளையான் திரைமறைவி லிருந்து செயற்பட்டார் என்றும் பிள்ளையானின் வேண்டு கோளுக்கிணங்க அச்சந்திப்பினை தானே முன்னின்று ஒழுங்கமைத் ததாகவும் ஆசாத் மௌலானா அந்த காணொளியில் தெரிவிக்கின்றார்.

அவரது சாட்சியத்தைத் தொடர்ந்து பிள்ளையான் மீதான குற்றச்சாட்டான 'குறித்த சந்திப்பு' பற்றிய (ஒரு பழைய தென்னம் தோட்டமொன்றுக்குள் முஸ்லிம்கள் போன்று தொப்பியணிந்த சிலர் கூட்டாகச் செல்வது போன்ற) காட்சியொன்று ஒளிபரப்பப்பட்டது. அந்தக் காட்சியை 'மாதிரி ஒளிப்படங்களூடாகவே' சனல் 4 ஊடகமானது தயார் செய்துள்ளது. ஆனால் அதனைப் பார்ப்பவர்களுக்கு அது இட்டுக்கட்டிய மாதிரிப்படம் என்பதாக அல்லாமல் உண்மை யான ஆவணப் படம் என்ற மனப்பதிவுகளை ஏற்படுத்தும் விதமாகவே அவ்வொளிபரப்பானது திட்டமிடப் பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இங்கு குறிப்பிடப்படும் குறித்த சந்திப்பை மேற்கொண்டதாக சொல்லப்படும் தரப்பில் உள்ள சுரேஷ் சாலே என்பவர் ஒரு புலனாய்வுத்துறை அதிகாரியாவார். இலங்கையில் ஒரு மாகாணத்தின் முதலமைச்சராகவும் ஜனாதிபதியின் ஆலோசகராகவும்

இருந்த ஒருவருக்கு நாட்டிலுள்ள குறிப்பிடத்தக்க தரத்திலுள்ள புலனாய்வு அதிகாரிகளைத் தெரிந்திருப்பது இயல்பானது.

அடுத்தது ஷஹ்ரான் குழுவின் சிலரை அவர் அறிந்திருந்தார் என்பதையும் பிள்ளையானே தனது பேட்டிகளில் ஒளிவு மறைவின்றி நேர்மையாக ஒப்புக்கொள்கின்றார். அதனைக்கூட 'குற்றத்தைப் பிள்ளையான் ஒப்புக்கொண்டார்' என்கின்ற ரீதியில் தலைப்புக்கள் இட்டு பல சமூக வலைத்தளங்கள் எரிகின்ற வீட்டில் பிடுங்கியது மிச்சம் வசூலைக் குறிவைத்து களமிறங்கின. இதுவே பலரது சந்தேகம் தொடர்வதற்குக் காரணமாயிருக்கின்றது.

## ஷஹ்ரான் குழுவினரை பிள்ளையான் அறிந்திருந்தாரா?

பிள்ளையான் 2015ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டுவரை தடுப்புக்காவலில் இருந்தார். அவ்வேளையில் 2017ஆம் ஆண்டு காத்தான்குடியில் ஒரு மதக் கலவரம் நிகழ்கின்றது. ஷஹ்ரான் தலைமையிலான தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பினரால் காத்தான்குடியிலுள்ள அலியார் சந்தியில் என்னுமிடத்தில் சூஃபி முஸ்லிம்களுக்கு எதிரான மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. 'ஓரிறைக் கொள்கைக்கு (தவ்ஹீத்) எதிரானவர்கள் மதம் மாறியவர்களே' என்னும் தலைப்பில் இம்மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் ஏற்பட்ட கலவரம் காரணமாக ஷஹ்ரான் குழுவினரும் சூஃபி பிரிவினரான அப்துல் ரஹுஃப் மௌலவியின் ஆதரவாளர்களும் மோதிக் கொள்கின்றனர். கல்வீச்சுகளும் வாள்வெட்டுக்களும் இடம்பெற்றன. சூஃபி முஸ்லிம்கள் ஷஹ்ரான் குழுவினரால் மூர்க்கமாகத் தாக்கப்பட்டு பலர் வாள் வெட்டுகளுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டனர்.

இத்தாக்குதலுக்குரிய சந்தேக நபர்களாக ஷஹ்ரானின் தந்தையான ஹாஷிம், சகோதரர் சைனி மௌலவி போன்றோர் உள்ளிட்ட எட்டுப்பேர் கைதாகி மட்டக்களப்பு சிறையில் அடைக்கப்படுகின்றனர். (ஷஹ்ரான் தலைமறைவாகி விடுகின்றார்) கைதாகி சுமார் ஆறு மாதங்களுக்கு பின்னரே அவர்கள் பிணையில் செல்கின்றனர். சிறைக்கு வந்தவர்களை ஏற்கனவே அங்குள்ள கைதிகள் சந்திப்பதும் அறிமுகமாவதும் உரையாடிக்கொள்வதும் சர்வ சாதாரண விடயம். இவ்வாறாகதான் சிறைவாழ்வில் பிள்ளையான் ஷஹ்ரான் குழுவின் சில உறுப்பினர்களை அறிகின்றார்.

அதற்கு பின்னர் இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலேயே 2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல் நிகழ்கின்றது. தாக்குதல் நடந்து இரண்டுவருடங்கள் கழித்தே பிள்ளையான் (2020) விடுதலையாகின்றார். இந்த வரலாறுகளை நன்கே அறிந்திருந்தவர் ஆசாத் மௌலானா ஆகும். அதனால்தான் 'பிள்ளையானுக்கு ஷஹ்ரான் குழுவினரை ஏற்கனவே தெரிந்திருந்தது'. 'அவரே சுரேஷ் சாலேயிடம் அவர்களை அறிமுகப்படுத்தச் சொன்னார்'. அவரது வேண்டுகோளின்படி அந்த ஒழுங்கமைப்பை நான் செய்து கொடுத்தேன்' என்று தனது புனைவை அழகாக சித்தரிக்கின்றார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஷஹ்ரான் குழுவினர் புலனாய்வுத்துறையினரின் சம்பளப் பட்டியலில் இருப்பவர்கள் என்றும் குற்றம்சாட்டுகின்றார். இக்குற்றச்சாட்டின் ஊடாக பிள்ளையான் மீதான 'குறித்த சந்திப்பு' பற்றிய அடிப்படைக் குற்றச்சாட்டினை அவரே வலுவிழக்கச் செய்கின்றார்.

முதலாவது இத்தகைய சந்திப்புகளை எந்தவொரு புலனாய்வு துறையினரும் இடைத்தரகர்களை கொண்டு ஏற்படுத்த மாட்டார்கள் என்பதோடு ஒரு குற்றப்புலனாய்வு அதிகாரிக்கு அவர்களது சம்பளப்பட்டியலில் இருக்கின்ற சிலரை அதிலும் சிக்கலுக்குரியவர்களாக அறியப் பட்டவர்களை சந்திப்பதற்கு சிறையிலிருக்கும் பிள்ளையானின் இடைதரகு தேவையில்லை என்பது சாதாரணமான உண்மையாகும். மாறாக அப்படியே தேவையாயிருந்தாற் கூட பிள்ளையானைப் போலவே சுரேஷ் சாலேயும் ஆசாத் மௌலானாவுக்கும் அறிமுகமானவர்தான். அந்தவகையில் ஆசாத் மௌலானவைக் கொண்டே அச்சந்திப்பை அவர் ஏற்படுத்தியிருக்க முடியும். எனவே பிள்ளையான் மீதான ஆசாத் மௌலானாவின் குற்றச்சாட்டு மிகவும் பலவீனமானதொன்றாகும்.

## பிள்ளையான் குறி வைக்கப்படுவது ஏன்?

ஆசாத் மௌலானாவின் வாக்குமூலமானது ஈஸ்டர் தாக்குதல் பற்றி பல்வேறு விடயங்களைப் (இராஜபக்ச தரப்பு, ஜனாதிபதித்தேர்தல்) பேசினாலும் 'பிள்ளையான் மீதான 'குறித்த சந்திப்பை' ஒழுங்கமைக்கச் சொன்னார்' என்கின்ற குற்றச்சாட்டே ஊடகங்களில் கூடிய கவனம் பெற்றது. இப்படி தலையை விட்டு வாலைப் பிடித்துக்கொண்டு ஆரவாரம் செய்வதற்கு அடிப்படைக்காரணம் பிள்ளையான் கடந்த காலத்தில் மிலேச்சத்தனமான 'தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினராக இருந்தவர் என்பதாக இருக்கலாம். ஆனால் அதுமட்டுமே ஊடகங்களின் கவனம் பிள்ளையான் மீது குவிக்கப்படுவதற்கும் குற்றச்சாட்டுக்கள் அள்ளி வீசப்படுவதற்கும் காரணமல்ல.

இன்று பிள்ளையான் வழிநடத்துகின்ற 'கிழக்கின் தனித்துவத்தை முன்னிறுத்தும் சமரசமற்ற அரசியலே' இவையனைத்துக்கும் முழுமுதற் காரணமாகும். 'படிக்காத பிள்ளையான்' என்னும் பாமரனின் ஆளுமையென்பது தமிழ்த்தேசியம் மற்றும் 'வடக்கு கிழக்கு இணைப்பு' என்கின்ற யாழ்:மேட்டுக்குடியினரின் நூற்றாண்டுக் கனவினை சுக்குநூறாக்கியிருக்கின்றது. பிள்ளையான் வழிநடத்தும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் என்னும் கட்சியானது யாராலும் நிராகரிக்க முடியாத ஒரு பேரியக்கமாக வளரத் தொடங்கியுள்ளது. அது

அப்புக்காத்துக்களின் அரசியலை மட்டுமல்ல நீதிமான்களையும் பரம்பரையாதிக்க வாதிகளையும் காலப்போக்கில் தமிழ் அரசியல் பரப்பில் இருந்து ஓரம்கட்டும் வல்லமையுடன் இன்று சவால் விட்டு நிற்கின்றது

இதன் காரணமாகத்தான் 'தமிழ் தேசியம்' என்னும் சரக்கை மட்டுமே மூலதனமாகக் கொண்டியங்கும் பெரும்பாலான ஊடகங்கள் இக்குற்றச்சாட்டை வைத்துக்கொண்டு பிள்ளையானை அரசியல் அரங்கிலிருந்து அகற்றிவிட படாதபாடு படுகின்றனர். இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி பிள்ளையானின் அரசியல் போட்டியாளர்களான தமிழ் தேசியவாதிகளும் கிழக்கிலுள்ள முஸ்லீம் அதிகார வர்க்கத்தினரும் இணைந்து இவ்வுலகிலுள்ள எல்லாக் கற்களையும் பிள்ளையான் மீது எறிந்து முடித்துள்ளனர்.

ஒருபுறம் யுத்தம் நடந்த போது ஆளுமையான அரசியல் தலைமைகளற்று கிடந்த கிழக்குத் தமிழர்கள் பிள்ளையானின் எழுச்சி ஊடாகவே சிறிதளவாவது அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களின் வாழ்வு மெதுமெதுவாக மேம்பட்டு வருவதற்கு பிள்ளையானின் அயராத முயற்சியும் ஒரு காரணமாக இருக்கின்றது. இந்நிலைமையை யுத்தம் நடந்து கொண்டிருந்த காலங்களில் தனிக்காட்டு ராஜாக்களாக அரசியல் அதிகாரங்களை ருசித்துக் கொண்டு ஊருக்கொரு அமைச்சராக வலம் வந்தவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. அதன் காரணமாக பிள்ளையானை 'குறித்த ஒரு இனத்துக்கு எதிரானவராக' அவர்கள் சித்தரிக்கத் தொடங்கியுள்ளனர். எனவேதான் வாய்ப்பைப் பயன்படுத்தி தமது சார்பு ஊடகங்களுடாக பிள்ளையான் மீது இல்லாத பொல்லாத பழிகள் அனைத்தையும் போட்டு முடித்துள்ளனர்.

மறுபுறம் யுத்தகாலங்களில் ஒரு வெடிச்சத்தம் கூட கேட்டிராத சுமந்திரன், சாணக்கியன் போன்றோரெல்லாம் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நடந்து முடிந்த முப்பத்து வருட யுத்த அழிவுகளுக்கும் கொலைகளுக்கும் பிள்ளையானின் கையிலிருந்த ஒரேயொரு துப்பாக்கிதான் காரணம் என்பதாக பாராளுமன்றத்தில் பிள்ளையான் மீதான கொலைப் பட்டியல்களை அடுக்கினர். தமிழ்த்தேசிய வியாபார ஊடகங்கள் அவற்றுக்கு குங்குமம் பூசி குஞ்சமும் வைத்து தலைப்பிட்டு மகிழ்ந்தனர். இத்தோடு தமது பங்குக்கும் ஒரு 'தரும அடி' என்பதாக கடந்த காலத் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் பிரபலங்களின் பிள்ளையான் பற்றிய ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யக்கூடியளவுக்கு வியாபித்து நிற்கின்றன.

ஆனால் பிள்ளையானோ 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை' என்பதாக எதற்கும் சளைக்காமல் அத்தனை வசைகளையும் தனித்துநின்று எதிர்கொண்டார். சனல் 4 இன் தன்மீதான 'குற்றச்சாட்டுக்கள் அபாண்டமான பழிகள்' என்றும் "சர்வதேச விசாரணைக்கு தான் தயாரென்றும் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தானே தூக்கில் தொங்குவேன்' என்றும் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதைவிட எவரும் தன்னிலைவிளக்கம் அளிக்க முடியாது. அதுமட்டுமன்றி அவரை அழைத்த அத்தனை ஊடகங்களினதும் நேர்காணல்களிலும் தயக்கமின்றி பங்குபற்றி தன்மடியில் கனமில்லை என்பதை அழுத்தம் திருத்தமாக பதிவு செய்திருக்கின்றார்.

சில ஊடகங்கள் மிக அண்மைக்கால வரலாறு பற்றிக் கூட எவ்வித அறிதல்களும் இன்றி பிள்ளையானை நோக்கி அரந்தலாவை (1987), மற்றும் காத்தான்குடிப் பள்ளிவாசல் (1990), படுகொலைகள் வரை குற்றச்சாட்டுக்கள் வீசி கேள்வி எழுப்புகின்றனர்.

1975ஆம் ஆண்டு பிறந்து 1991ஆம் ஆண்டு தனது பதினாறாம் வயதிலே இயக்கத்தில் இணைந்த பிள்ளையானை நோக்கி அவரது பத்தாம், பதினைந்தாம் வயதுகளிலே நடந்த படுகொலைகளுக்கு விளக்கம் கோரியது ஒரு ஊடகம். நல்ல வேளையாக அல்பிரட் துரையப்பாவை சுட்டதும் இவர்தான் என்கின்ற 'திகிலூட்டும் செய்திகள்' இன்னும் வரவில்லை.

அத்தோடு கண்டி மன்னனை காட்டிக் கொடுத்தது நீர்தானே? என்னும் கேள்வியை மட்டும் இன்னும் யாரும் கேட்கவில்லை. சிலவேளை மட்டக்களப்பிலுள்ள சில ஊடகவியலாளர்கள் (பலர் மன்னிக்க) பேட்டியெடுத்தால் அந்தக் கேள்வியையும் பிள்ளையான் எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

இதற்கிடையில் செப்டம்பர் 25 ல் ஜெனிவா நகரில் சனல் 4 ஆவணப்படம் காட்சிப் படுத்தப்பட்டபோது அப்படத்தின் தயாரிப்பாளர் பெண் டி பியர் மற்றும் இயக்குனரான தோம் வோக்கர் ஆகியோர் பகிரங்க கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்றனர். அதன்போது ஊடகவியலாளர் சுனந்தா தேசப்பிரிய எழுப்பிய கேள்வியொன்றுக்கு அதன் தயாரிப்பாளர் அளித்த பதில் இதுவரையான அனைத்து புரளிகளையும் புரட்டிப்போட்டுள்ளது.

ஆசாத் மௌலானாவின் கூற்றுன்படி சுரேஷ் சாலேயை ஷஹ்ரான் குழுவினர் சந்தித்தமைக்கான ஆதாரங்கள் ஏதுமில்லை என்று அவர் கைவிரித்துள்ளார்.

ஆக 'பிள்ளையான்' இதில் சிக்கவைக்கப் படவேண்டும் என்பதற்காகவே ஆசாத் மௌலானாவை பயன்படுத்தி இந்த சதிவலை பின்னப்பட்டு சனல் 4 ஊடாக அது அரங்கேற்றப்பட்டுள்ளது என்பது நன்கே புலனாகின்றது. எனவே குறித்த சனல் 4 வின் காணொளி ஒரு டொக்குமெண்டரி அல்ல வெறும் மொக்குமெண்டரி (mockumentary) தான்.

ஆக இந்த சதிவலையில் சூத்திரதாரிகள் யார்? இதுவே இன்று விடைகாண வேண்டிய கேள்வியாகும்.




# தி.உமாகாந்தன் 1956-2004

தாயகம் இதழுக்காக

**க.கலாமோகன்**

நானும் அர்விந் அப்பாத்துரையும் உமாகாந்தனைக் கடைசியாகப் பார்க்க வில்லியர் லூபெல் செல்லும் ரயிலுள் இருந்தபோது, எனக்கு உமாவின் மணிக்கவிதைகள் நினைவுக்கு வந்தன. நான் 'தினபதி' 'சிந்தாமணி'யுள் எழுத்துத் தொழிலாளியாக இருந்தபோது, இலக்கியத்திலேயே அதிக கரிசனை காட்டினேன். 80 களில் இலங்கைத் தமிழ் இலக்கியத்துள் புதுக்கவிதை தேசியப் பத்திரிகைகளால் மிகவும் நன்றாக வரவேற்கப்பட்டது. தேசியப் பத்திரிகைகளின் இலக்கியத் தேர்வுகள் மீது எனக்கு ஓர் பேரபிப்பிராயம் இல்லாதபோதும், அபூர்வமாக நல்ல படைப்புகளும் அதற்குள் நுழைந்துள்ளன எனக் கருதுகின்றேன்.

சிந்தாமணி தொடக்கிய மணிக் கவிதைப் பகுதிக்குள் நான் குப்பைகளையும் குண்டு மணிகளையும் கண்டதுண்டு. காதல் இல்லாமல் இவர்களிற்கு கவிதைகள் எழுத வராதா எனும் கேள்வியோடு கவிதை விமர்சன உலகில் அப்போது இருந்தபோதும் உமாகாந்தனின் காதல் கவிதைகளை ரசித்தேன். இவரது கவிதைகள் தினபதி, சிந்தாமணி ஆசிரியபீடங்களால் ரசிக்கப்பட்டன. எளிமையும் ஆர்ப்பாட்டமெதுவுமில்லாத காதல் மொழி இவரது எழுத்தின் காந்தம் எனலாம். சிந்தாமணி ஆசிரியர் இராஜ அரியரத்தினமும் (முன்னாள் 'ஈழகேசரி' ஆசிரியர்) இவரது காதல் கவிதைகளின் பரம ரசிகர். 'யார் இந்த உமாகாந்தன்?' என திரு இராஜ

அரியரத்தினத்திடம் கேட்டபோது, 'அவர் பிரான்ஸிலிருந்து எமக்கு எழுதுகின்றார்.' என்றதுடன் அவர் கவிதைகளின் எளிமை தனக்குப் பிடித்துள்ளதுமென்றார். ஆம்! நான் சிந்தாமணியில்தான் உமாவை அறிந்தேன்.

அண்மையில் கனடாவின் கவிஞை மொனிக்கா இவர் நினைவு மீது ஓர் கவிதையை 'தாயகம்' முகப் புத்தகத்தில் எழுதியிருந்தார். சிறப்பான நினைவுக் கவிதை. எனது இலக்கிய நண்பரான உமாவின் மீது பலர் எழுதாதுவிட்டாலும் இவர் மீது மீண்டும் என்னை எழுதத் தூண்டுகின்றது. இவருடன் கழித்த தினங்கள் இப்போதும் என் நினைவில் உள்ளன.

இவரது இழப்பின் பின்னர் கனடா தாயகம் 19 நவம்பர் 2004 இல் இவர் நினைவாக ஓர் சிறப்பு இதழை வெளியிட்டது. மீண்டும் எழுதுதல், உமாவின் மீது எனக்குள் உள்ள அதீதமான நேசிப்பின் சாட்சியமாகும்.

நான் இலங்கையில் பயங்கரவாத நிலைகளைக் கண்டு பாரிஸ் வந்தபோது எழுத்து உலகத்திற்கு அப்பாற்பட்ட இன்னோர் உலகிலிருந்தேன். அதாவது விளம்பரப் பத்திரிகைகளை மூட்டையாக முதுகில் காவி, பனி நிலங்களுக்குள் கால்களைப் புதைத்து, தபால் பெட்டிகளிற்குள் போடும் வேலை. என்னோடு தொழில் செய்தவர்களில் ஒருவரான ஓவியர் தேவதாஸனின் (இப்போது இவர் அரசியலில்) மூலமாகவே எனக்கு உமாவின் தொடர்பு ஏற்பட்டது. ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிறுவனம் நடத்திய 'தமிழ் முரசு' சஞ்சிகையின் ஆசிரியராக உமா இருந்தார். இது EPRLF வின் செய்திப்பிரிவான EPIC இனால் வெளியிடப்பட்டது.

இந்த சஞ்சிகையில் நான் பல வருடங்களாக எழுதியவேளைகளில் இவரோடு நிறையப் பழக முடிந்தது. உமாகாந்தனின் கையெழுத்தால் தயாரிக்கப்பட்டதே 'தமிழ் முரசு'. புகலிட இலக்கியத்தினதும் அரசியலினதும் காத்திரமான முதலாவது பதிவாக இதனை நாம் இன்றும் கருதலாம். உமாவின் எழுத்துக் கரிசனையை நான் இந்தக் காலங்களில் அவரிற்கு அருகிலிருந்து தரிசித்துள்ளேன். இவரது பேச்சுத் திறனை மேடைகளிலும் எபிக் (EPIC) கூட்டங்களிலும் கண்டுள்ளேன்.

புகலிடத்தில் உமாகாந்தன் காட்டிய அரசியல் அக்கறை தீவிரமானது. பல நெருக்கடிகளிற்கு மத்தியிலும் தனது அரசியல் கொள்கையில் தெளிவான பார்வையைக் கடைப்பிடித்தார். இவரிடம் இருந்தது இடதுசாரி மனம். இலங்கையின் கொடூரமான போர் சூழலை எரிக்க எது வழி? ஆம்! இவரது வழிகள் இடதுக் கொள்கையிலேயே விளைந்தன.

இவர் கவிஞர், அரசியல்வாதி மட்டுமல்லர். நடிகரும்கூட. EPIC சில ஆண்டுகள் நடத்திய 'சங்கே முழங்கு' எனும் கலாசார, அரசியல் நிகழ்வில் எனது நாடகங்கள் தோன்றின. 'படகு' என்பது ஓர் நாடகத்தின் தலைப்பு. இது புகலிட வாழ்வைப் பல நிறங்களில் காட்ட எழுதப்பட்டது. இந்த நாடகத்தில் ஓர் பிரெஞ்சுப் பெண்ணும், நாடக நடிகையான Evelyne Levasseur ஐ நடிக்க வைத்தேன்.

புகலிடத்தில், எமது தமிழ் நாடகத்தில் ஓர் பிரெஞ்சுப் பெண் நடிகையாக வருதல் ஓர் முதல் விஷயம். இந்த நாடகத்தில் நடிக்கமுடியுமா என உமாவைக் கேட்டபோது, மென்மையான சிரிப்போடு 'ஆம்' என்றதுடன், எனது நாடகப் போக்கு வித்தியாசமானது என்பதையும் என்னிடம் சொன்னார்.

இவர் நடித்த முதலும் கடைசியுமான நாடகமாக 'படகு' இருக்கலாம். மிகவும் அற்புதமான நடிப்பு. வந்தோரை ரசிக்க வைத்தது. இந்த நாடகத்தின் நடிகர்கள் யாவரும் EPIC இன் அங்கத்துவர்களே. இவர்களது கலை ஆற்றல்கள் செழுமையானவை. EPIC நிறுவனத்தினது கலை, அரசியல், செய்தித்துவப் போக்குகளில் முக்கியமானவர் உமாகாந்தன்.

பாரிஸ் 75008 இல் உள்ள Hôtel Le Vignon தான் இவரது தொழிலிடம். நான் அடிக்கடி இவரை விஞ்னோனில் சந்தித்ததுண்டு. நான் எப்போது போனாலும் வாசித்துக் கொண்டே இருப்பார். இவரது வாசிப்பு வேட்கை என்னைப் பிரமிக்க வைத்தது.

இந்த வேளையில்தான் நான் கனடா 'தாயகம்' இதழுக்கு எழுதிக் கொண்டிருந்தேன். உமாவின் வாசிப்பு உலக அரசியலை நோக்கியது. 'தாயகம் பத்திரிகைக்கு நீங்கள் எழுதுவது நல்லது. உங்களால் முடியுமா?' எனக் கேட்டேன். அவரது தொழிலுக்கு நீக்கல் வராது இருக்கவேண்டும் என்பது என் எண்ணம். 'ஆம்' என்றார். அவர் ஹோட்டலில் இருந்து எழுதிய 'உலக விமர்சனம்' பக்கங்களைத் தேடுவது என் போக்கு, இது இனிய போக்குமாகும். பின் இவைகளை Pedro Vianna வினது Documentation Réfugiés இதழை வெளியிடும் நிறுவனத்தில் fax மூலமாக 'தாயகம்' இதழுக்கு அனுப்பி வைப்பேன்.

உமாவின் 'உலக விமர்சனங்கள்' ஹோட்டலில், தனது வேலை நேரத்துடன் எழுதப்பட்டவையே. 'இன்று உங்களுக்கு நேரம் இல்லாது விட்டால், நாளை நான் வந்து நான் கட்டுரையை எடுப்பேன்' என நான் சொல்லும்போது 'சில நிமிடங்களில் முடிந்து விடும்' என்பார். அவருடன் கழித்த ஹோட்டல் தினங்கள் அவருக்கு எழுத்து என்பது சேவை என்பதைக் காட்டியது. பல தடவைகளில் நான் சென்றபோது கட்டுரை முடியாமல் இருக்கும், அவர் தொழிலால். மிகவும் அன்புடன் எனக்குத் 'தண்ணீர்' தந்துவிட்டு, தொழிலையும் பார்த்து, கட்டுரையை முடித்துத் தந்துவிடுவார்.

கனடா தாயகம் பத்திரிகையில் இவர் வாராவாரம் எழுதிய 'உலக விமர்சனம்' பகுதி புகலிட வாசகர்களின் கவனத்தை ஈர்த்தது. சிக்கலான அரசியல் கேள்விகளைத் தெளிவான மொழியில் தமிழ் வாசிப்பிற்கு இவர் வழங்கினார். இவரது எழுத்துக்குள் ஒவ்வொரு உலக நாடுகளும் பேசப்பட்டன. உமாவின் விமர்சனப் பார்வை ஓர் இடதுசாரிப்போக்கை எப்போதுமே கொண்டிருந்தது. இதனை இவரின் அரசியல் நேர்மையெனலாம்.

எமது புகலிட வரலாற்றில் இவரது பெயர் அதிகமாகப் பேசப்படுவதில்லை. 'தாயகம்' இதழ் இவரை மறப்பதில்லை என்பதைத் தனது பல குறிப்புகளால் காட்டியுள்ளது.

தனது கடைசித் தினங்களில் உமாவின் உருவம் உமாவின் உருவமாக இருக்கவில்லை என்பதை மிகவும் சோகத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இவரது இருப்பின் போக்குகள் மீளவும் எமது நினைவுக்கு ஆக்கப்படவேண்டும்.

இவரது உழைப்பின் மீதான காணிக்கைக்காக.

எங்கே போய் முட்ட?

# இலக்கிய உலகின் சீமானும் விஜயலட்சுமியும்!

## சும்மா பொத்திக்கிட்டுப் போங்கடா!

தமிழக அரசு பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவச உணவு வழங்குகிறது. தினமலர் பள்ளி மலகூடங்கள் நிறைவது பற்றி ரொம்பவும் கவலைப்பட்டது.

தினமலம்.

மலத்தைப் பற்றிக் கவலைப்படத் தானே செய்யும்.

இலவசங்களை வழங்குவதால் எங்கே திமுக தொடர்ந்தும் ஆட்சியில் இருந்து விடுமோ என்ற பயம் சங்கிகளுக்குத் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. பெண்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம், ஆயிரம் ரூபா கொடுப்பனவு பற்றி எல்லாம் பேஸ்புக்கில் சங்கிகள் பிரளயமே கிளப்பி வருகிறார்கள்.

சூத்திரன் படிக்கக் கூடாது என்று சொன்னவர்களுக்கு, மலம் அள்ளுகிறவர்களும் இலவச உணவோடு படிக்கிறார்கள் என்பது வயிற்றைக் கலக்கக் கூடிய ஒன்றுதான்.

'கிராமங்களில் பணப்புழக்கம் அதிகரித்து விட்டது' பொருளாதார அறிக்கைகள், 'நான் கார் புக் பண்ணி அம்மா வீட்டுக்குப் போயிடுவேன்' மொக்கை ஜோக்குகள் எல்லாமே பேஸ்புக்கில் கண்ணில் பட்டன.

இலவசங்கள் எப்போதுமே இந்தியாவில் வாக்குகளை வாங்குவதற்கான லஞ்சம் தான். வேட்டி, சேலை முதல் டிவி, கிரைண்டர் வரைக்கும் கொடுப்பதற்கு ஆட்சியைப் பிடிக்கக் கூடிய கட்சிகள் தயாராகவே இருக்கின்றன.

ஏற்கனவே கொள்ளையடித்த பணம், வெற்றி பெற்றால் இதை விட அதிகமாக கொள்ளை அடிக்கலாம் என்ற நம்பிக்கை இரண்டுமே தான் இந்த இலவசங்களின் பின்னணி.

எம்.ஜி.ஆர் காலம் முதல் ஜெயலலிதா காலம் ஈறாக, எல்லாக்கட்சிகளும் அள்ளிக் கொடுத்துத் தான் ஆட்சியைப் பிடித்தன. பிடிக்க முயன்றன.

ஆனால் இந்த இலவசங்களால் தி.மு.க ஆட்சி நீடித்து விடுமோ என்ற பயம் தவிர்ந்து, சங்கிகளுக்கு வேறெந்த பிரச்சனையும் இல்லை. இந்த இலவசங்கள் பார்ப்பனர்களுக்கு சாதி அடிப்படையில் வழங்கப்படாது என்று எங்கும் அறிவிக்கப்படுவதும் இல்லை. கொடுப்பதை வாங்கிக் கொண்டு, நினைத்ததற்கு வோட்டுப் போடவும் எந்தத் தடையும் இல்லை.

இதற்கெல்லாம் போய் கால் கடுக்க நிப்பேளா? என்று கௌரவக் குறைச்சலாக நினைக்கக் கூடும்.

திமுக இப்போது கொடுப்பவை பல, தேர்தல் வாக்குறுதிகளே.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றா விட்டால், குத்திக் காட்டத் தயங்காத சங்கிகள் இதற்கு வானத்திற்கும் பூமிக்கும் துள்ளிக் குதிப்பதில் ஆச்சரியமில்லை.

நான் ஆச்சரியப் படுவதெல்லாம், 'அட, கொடுத்த இந்த ஆயிரம் ரூபாவுக்கு இந்த குதி குதிக்கிறார்களே, ஒருத்தர் ஒவ்வொருத்தர் பெயரிலும் பதினைந்து லட்சமோ, ஏதோ, வங்கிக் கணக்கில் போடுவேன் என்று ஆட்சிக்கு வந்தாரே... அவர் தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினாரா?' என்று இந்த சங்கிகள் குத்தி முறியாதிருப்பதையும், தற்செயலாக நிறைவேற்றியிருந்தால், 'மக்களின் வரிப்பணம் எப்படி வீணாகிறது?' என்று குத்தி முறிவார்கள் என்பதையும் நினைத்துத் தான்!

•••

பார்ப்பனியத்தின் மாஸ்டர் ஸ்ட்ரோக் என்று நான் கருதுவது படிநிலைச் சாதிகளை உருவாக்கியது தான் என்று முன்பு எழுதியிருக்கிறேன். சுயசாதிப் பற்றை மதத்தின் பெயரால் மண்டைக்குள் திணித்து, பரஸ்பர வன்மத்தை வளர்த்து, ஆணவக் கொலை வரைக்கும் கொண்டு வந்து விட்ட பார்ப்பனிய சாதுரியத்தை மிஞ்ச எதுவும் இல்லை.

மாணவர்களுக்கான இலவச உணவு பார்ப்பனர்களுக்கு வயிற்றைக் கலக்குகிறது என்றால், தலித் பெண்கள் சமைத்த உணவை தங்கள் பிள்ளைகள் சாப்பிடக் கூடாது என்று சூத்திர ஆண்டைப் பெற்றோர்கள் முரண்டு பிடிக்கிறார்கள்.

இந்த வன்மத்தை எந்தப் பிரிவில் சேர்ப்பது?

தமிழர்கள் எனப்படுவோர், சுயசாதிப் பற்றும், மற்ற சாதிகள் மீது வன்மமும் வெறியும் கொண்ட, ஒரே மொழி பேசும் சாதிக் கூட்டங்களே!

இதற்குள் மனுவையோ, சங்கிகளையோ, பார்ப்பனியத்தையோ திட்டி என்னாகப் போகிறது?

•••

ஜோர்ஜ் இ.

இந்தியாவுக்கும் சீனாவுக்குமான முறுகல் அதிகரித்தால் தமிழீழம் அமையும் சாத்தியம் உண்டு என்று புளொட் சித்தார்த்தன் சொல்லியிருக்கிறார் என்று ஒரு வார காலம் பேஸ்புக் அதிர்ந்தது.

அவருடைய முழுமையான பேட்டியில் அது ஒரு சம்பந்தமில்லாத வசனம் மட்டுமே. அதுவே பத்திரிகை தலையங்கமாகி, புழுதியைக் கிளப்பி விட்டிருந்தது.
அவர் சொன்ன மற்ற விசயங்கள் பற்றி யாருமே அலட்டிக் கொள்ளவில்லை.

பேஸ்புக்கே அப்படித் தானே? போகிற போக்கில் காதில் படுவதை வைத்துக் கொண்டு எத்தனை ஆர்ப்பாட்டம்!

பொங்கலுக்கு ஈழப் பிரகடனம் என்பதை நம்பிக் கனவு கண்ட கூட்டம், கொஞ்ச நாளாக தீபாவளிக்கு தீர்வு என்பதையும் நம்பிக் கொண்டிருந்தது.

விக்னேஸ்வரனை அனுப்பினால் தீர்வு.
கஜேந்திரகுமாரை அனுப்பினால் தீர்வு.
இந்தியாவினால் தீர்வு.
சர்வதேசத்தினால் தீர்வு.
ஜெனிவாவில் தீர்வு.
சனல் 4 இனால் தீர்வு.
தப்பியோடிய நீதிபதியால் தீர்வு.
துவாரகாவினால் தீர்வு.

இதற்குள் சீனாவினால் தீர்வு வரும் என்று நம்பிக்கை கொள்வதில் என்ன தப்பு?

ஐரோப்பா, கனடாவுக்கு விசா கிடைத்தாலும் தீர்வு தான்!

எது முதலில் கிடைக்கிறதோ, அது தான் தீர்வு.

நம்பிக்கை தானே வாழ்க்கை?

அதுவரைக்கும் நல்லூர் திருவிழாவிலும் செல்பி!
திலீபன் திருவிழாவிலும் செல்பி!

அங்கேயும் ஒரு குத்து!
இங்கேயும் ஒரு குத்து!

•••

**விக்னேஸ்வரனை அனுப்பினால் தீர்வு.**
**கஜேந்திரகுமாரை அனுப்பினால் தீர்வு.**
**இந்தியாவினால் தீர்வு.**
**சர்வதேசத்தினால் தீர்வு.**
**ஜெனிவாவில் தீர்வு.**
**சனல் 4 இனால் தீர்வு.**
**தப்பியோடிய நீதிபதியால் தீர்வு.**
**துவாரகாவினால் தீர்வு.**

**இதற்குள் சீனாவினால் தீர்வு வரும் என்று நம்பிக்கை கொள்வதில் என்ன தப்பு?**

**ஐரோப்பா, கனடாவுக்கு விசா கிடைத்தாலும் தீர்வு தான்!**

**எது முதலில் கிடைக்கிறதோ, அது தான் தீர்வு.**
**நம்பிக்கை தானே வாழ்க்கை?**
**அதுவரைக்கும் நல்லூர் திருவிழாவிலும் செல்பி!**
**திலீபன் திருவிழாவிலும் செல்பி!**

**அங்கேயும் ஒரு குத்து!**
**இங்கேயும் ஒரு குத்து!**

திடீரென்று இந்தியாவிற்குப் பெயர் மாற்றம் செய்து விட்டார்கள். நியுமரோலஜி காரணமாக இல்லாமல், எதிர்க்கட்சிக் கூட்டணிக்கு இந்தியா என்ற பெயர் வந்தது தான் காரணமாக இருக்கும்.

பாரத்!

பாரத தேசம் என்று தோள் கொட்டுவோம்!

பெயரை மாற்றினாலும்
இயல்பை மாற்ற முடியுமா?

மனிதனைத் தீட்டு என்றும் மாட்டு மூத்திரத்தை புனிதம் என்றும் சொல்வது,

சனாதனம் என்று சொன்னால்...

நீயும் ஆன்டி பாரத்தே!

பெயர் மாற்றம் ஒன்று முன்பும் நடந்தது.

திடீரென்று பிரேமதாசா சிறிலங்கா என்ற பெயரை ஷ்ரிலங்கா என்று மாற்றினார். Sri Lanka என்பது Shri Lanka என்று இரவோடிரவாக மாற்றப்பட்டது.

பிரேமதாசா சாத்திரிமாரை நம்பிய காலம்.

மாற்றி ஒரு மாதத்திற்குள் என்று நினைக்கிறேன்.

பிரேமதாசா புலிகளின் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

•••

சவுக்கு சங்கர் தன்னுடைய மீடியா திறப்பு விழாவிற்கு வெற்றிமாறனை அழைத்து, அவர் ஆஜரானது குறித்து பேஸ்புக் இரண்டாகப் பிளந்தது.

சீமான் முதல் சவுக்கு சங்கர் வரைக்கும் திராவிடம், தி.மு.க மீது குறி வைக்கிறவர்கள் சங்கிகளின் சம்பளப்பட்டியலில் உள்ளவர்கள் தான். அவர்களின் குறி திமுக மீதானதாகத் தான் இருக்கும். அ.தி.மு.க கூட ஒரு திராவிடக் கட்சி என்பதோ, அதுவும் ஊழல் நிறைந்தது என்பதோ பற்றி இவர்கள் வாய் திறப்பதில்லை.

நேரடியான பார்ப்பனிய சங்கிகளான ராஜா, சேகர், கஸ்தூரி வகையறாக்களை விட, களம் இறக்கப்பட்ட இந்தச் சூத்திரக் கையாள்கள் கொடுத்த காசுக்கு அதிகமாகவே கூவுவார்கள்.

இந்த யூடியூபர்கள் எல்லாம் பணத்திற்காக எதையும் செய்வார்கள் என்பதே ஸ்டிங் ஒப்பரேஷனில் கொஞ்ச நாள் ஓடி, எல்லோரும் அதை மறந்தும் கன காலம்.

ஆனால், இந்த mouth for hire கள் எல்லாம், இந்த சமூக வலைத்தள யுகத்தில் ஊதிப் பெருப்பிக்கப் பட்டவர்களே. இவர்கள் அவ்வப்போது அந்தந்த வாரங்களிற்கான பேசுபொருட்களை உருவாக்கி, கவனத்தைத் திசை திருப்புகிறவர்கள் மட்டும் தான்.

பொதுமக்களின் மனப் போக்குகளை மாற்றுகிற அளவிற்கு அவர்கள் Social media influencers ஆகவோ, opinion makers ஆகவோ இருப்பதில்லை.

வெற்றிமாறன் போனதால், சங்கருக்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது என்பதே ஒரு வகை அங்கீகாரம் தான்.

இவர்களது இருப்புக்குக் கிடைக்கும் ஒக்சிஜன் இவர்கள் பேஸ்புக்கிலும் யூடியூபிலும் பெரும் ஊடகங்களிலும் பேசுபொருட்களாக இருப்பதன் மூலமாக வருவதே.

அந்த பைப்லைனை கட் பண்ணினால், மூச்சே நின்று போகும்.

இவர்கள் அவ்வப்போது என்டர்டெய்ன் பண்ணும் கழைக்கூத்தாடிகளின் குரங்குகளே.

கும்பல் கூடி நின்று
வேடிக்கை பார்க்கும்.
வாக்குப் போடாது!

•••

ஆரம்பிச்சாட்டங்கய்யா! ஆரம்பிச்சிட்டாங்கய்யா!

பிக் பொஸ்!

கொஞ்ச நாளைக்கு பேஸ்புக் கலங்கும்.

அதில் பவா செல்லத்துரையும் கலந்து கொள்கிறார் என்று செய்தி.

கமலஹாசன் இலக்கியத்தை அங்கீகரிப்பது குறித்து பெருமிதம் கொள்வோர் உளர். இந்த அங்கீகாரத்திற்காக கனடாவிலிருந்து விஸ்கி சுமப்போர் பற்றி எல்லாம் எழுதத் தான் இருக்கு.

கமலஹாசனின் படங்களில் மட்டுமன்றி, விஜயின் படங்களிலும் விஞ்சி நிற்கும் இலக்கியச் செழுமை குறித்து ஆய்வு நடத்தும் பேஸ்புக் இலக்கியவாதிகள், விமர்சகர்கள் கொண்ட இலக்கிய உலகம் இது.

இவர்கள் எல்லாம் திடீரென்று பவா செல்லத்துரை பிக் பொஸ்ஸிற்குள் நுழைந்தது குறித்துப் பொங்குகிறார்கள்.

பவா செல்லத்துரையை ஒரு முழு நேர இலக்கிய விமர்சகர், 'எல்லாவற்றையும் அநியாயத்துக்குப் புளுகும் மிகையுணர்ச்சிச் சுரண்டல் கேளிக்கைவாதி பவா செல்லத்துரைக்கு மிகப் பொருத்தமான வேடம் பிக் பாஸ் நடிகராக வாழ்வது' என்று விமர்சித்திருக்கிறார்.

இவ்வாறான ஒரு பிரபலமான 'இலக்கியவாதிக்கு' ஒரு பொதுவெளியில் exposure கிடைப்பது பற்றிய பெருமையும் மகிழ்ச்சியும் இல்லாமல், இதை 'philstines, lumpens, சாமான்யர்கள்' எல்லாம் புத்தகங்களை வாசிக்க வைப்பதற்கான சந்தர்ப்பமாக அவர் பயன்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்காமல், ஏதோ மட்ட ரகமான கேளிக்கை நிகழ்ச்சியில் இலக்கியத்தின் கற்பைக் கெடுக்க வந்தவராக இவர்கள் விபரிப்பதன் காரணம் என்ன?

இந்த இலக்கியக் கூட்டம் பற்றி எதனைத்தான் நம்புவீர்கள்?

எந்த விருது கொடுக்கப் பட்டாலும், அது குறித்துப் பொங்கி எழுகின்றவர்களின் பிரச்சனை எல்லாம் 'நம்மைப் போன்ற ஆல் இன் ஆல் அழகுராஜா இருக்கும் போது...!' என்பது தான்.

இவர்கள் எவருமே அந்த விருதைத் தந்தால் வாங்க மாட்டேன் என்று ஒரு போதும் பகிரங்கமாகச் சொல்வதில்லை.

பிரச்சனையே தனக்குத் தரவில்லை என்பது மட்டும் தான்.

அதைப் போல, பவா செல்லத்துரை மீதான கோபமும் தங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பதும் இதில் அவருக்கு பணமும் புகழும் கிடைக்கப் போகிறதே என்ற பொறாமையும் தான்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டால், கமலஹாசன் முகத்தில் வீசி எறிவோம் என்று இவர்கள் யாருமே சொல்வார்களா?

ஒரு போதும் இல்லை!

ஆசான் மாதிரி, 'ஒரு மட்டரகமான கேளிக்கையின் மரணம்' என்று எழுதி விட்டு, மான ரோஷம் இல்லாமல், உள்ளே போய் கோமாளித்தனமான விளையாட்டுகளில் ஈடுபட வேண்டியது தான்.

எந்த விருது கொடுக்கப் பட்டாலும், அது குறித்துப் பொங்கி எழுகின்றவர்களின் பிரச்சனை எல்லாம் 'நம்மைப் போன்ற ஆல் இன் ஆல் அழகுராஜா இருக்கும் போது...!' என்பது தான்.
இவர்கள் எவருமே அந்த விருதைத் தந்தால் வாங்க மாட்டேன் என்று ஒரு போதும் பகிரங்கமாகச் சொல்வதில்லை.

பிரச்சனையே தனக்குத் தரவில்லை என்பது மட்டும் தான்.
அதைப் போல, பவா செல்லத்துரை மீதான கோபமும் தங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்பதும் இதில் அவருக்கு பணமும் புகழும் கிடைக்கப் போகிறதே என்ற பொறாமையும் தான்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டால், கமலஹாசன் முகத்தில் வீசி எறிவோம் என்று இவர்கள் யாருமே சொல்வார்களா?
ஒரு போதும் இல்லை!

அவர் மீதான கோபத்திற்கான இன்னொரு காரணம், ஆசானுக்கு வேண்டப்பட்டவராக இருப்பதும்.

பிக் பொஸ்ஸில் தன்னுடைய புத்தகத்தை கமல் பரிந்துரைத்தார் என்று பிறவிப் பெரும்பயன் அடைந்த ஒருவர் கனடாவிலும் இருக்கிறார்.

கமலஹாசன் அங்கே புத்தகங்களைப் பரிந்துரைக்கும் போது, யாரும் பொங்கவில்லை.

கோமாளிக் கூடத்தில் இலக்கியம் வளர்ப்பா? என்று யாரும் கேட்டதுமில்லை.

எனக்கு அதெல்லாம் பிரச்சனை இல்லை. கார் திருத்தப் போன இடத்தில், காத்திருந்த போது பார்த்த பிக் பொஸ்ஸில் அண்ணாச்சி கோமாளி போல இழுப்பட்டதைக் கண்ட ஞாபகம்.

பவா செல்லத்துரைக்கும் அதே கதிதான்!

ஒரு எழுத்தாளனுக்கு இருக்க வேண்டிய மதிப்பும் கௌரவமும் போய், ஒரு கோமாளி ஆக்கி வெளியே அனுப்புவார்கள்.

•••

அவர் அங்கங்கே காறித் துப்புவது பற்றி மனுஷ் எழுதியிருந்தார். மனநலக் குறைபாடு உள்ளோர் அடிக்கடி இப்படி கண்ட இடமெல்லாம் துப்புவதைக் கண்டிருக்கிறேன். ஒரு பொதுவெளியில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற குறைந்த பட்சப் பண்பாடு கூட இல்லாத ஒருவர் பற்றி எதைத் தான் சொல்ல முடியும்?

இதைப் பார்த்த பின்னால் அவரை யார் வீட்டுக்குள் அழைப்பார்கள் என்பதும் தெரியவில்லை.

அவர் இருக்க வேண்டியது பிக் பொஸ் இல்லை.

சீனா!

•••

இனி என்ன? உலக இலக்கியம் தவிர வேறெந்தத் தமிழ் வணிக இதழை வாசிப்பதையோ, தமிழ் கேளிக்கை எதையும் பார்ப்பதையோ தங்களது இலக்கிய ஸ்டேட்டஸ்க்கு இழுக்கு என்று கிட்டவே அண்டாத

*நம்ம இலக்கியவாதிங்களும் தினசரி பாப்பாங்க.*

*(அந்த இருநூறு pdf please இலக்கிய ஆர்வலர்களும் தான்!)*

*தமிழ் ரசனை எப்படி மட்டமாகிக் கெட்டுக் கிடக்கிறது என்று விமர்சனம் செய்வதற்காகவும், இதற்கெல்லாம் நேரம் செலவிடும் தமிழ் சமூகம் தங்களுடைய உலக மகா காவியங்களை கணக்கே எடுக்கிறாங்களே இல்லை என்று புலம்பவும்...!*

*கிட்டத்தட்ட நான் பார்க்கும் எல்லா இலக்கியவாதிகளுமே முதல்நாள் முதல் ஷோ செல்பி ரசிகர்கள் தான்.*

*என்ன, கட்டவுட்டுக்குப் பால் ஊற்றினால் விமர்சகர்கள் (அதுவும் இவர்களே தான்!) என்ன சொல்வார்களோ என்ற பரஸ்பர பயம்!*

*ஆனால், பாப்லோ நெருடா பற்றி பீலாவுக்கு மட்டும் ஒரு போதும் குறைச்சல் இருக்காது!*

•••

*மூன்று வருடங்களுக்கு முன் பேஸ்புக்கில் போட்ட பதிவு.*

*'பிஸியாய் இருக்கிறியோ?*

*நீ தான் போன் அடிப்பாய். நான் பிஸி இல்லை எண்டாலும், இடையில நீ பிஸியாய் இருக்கிறாய் எண்டிட்டு நீயே போனை வைப்பாய்.*

*ஏய்... நான் கதைக்கேக்க ம்..ம்.. எண்டா, நீ பிஸி எண்டு நான் மரியாதையா வைக்கிறது தானே முறை!*

*சரி, சொல்லு!*

*அதுசரி, நீ பிக் பொஸ் பாக்கிறேலையோ?*

*அது பாக்காமல்?*

*அதுவும் சரி தான். ஆர் அதில இருக்கினம்?*

*சொன்னா உனக்கென்ன தெரியப் போகுதோ?*

*சொல்லன், ஆரும் தெரிஞ்சவை இருப்பினம் தானே!?*

*எல்லாம் புது ஆக்கள்!*

*அப்ப, லொஸ்லியா?*

*உனக்கென்ன விசரே? பழைய ஆக்களை ஏன் திரும்ப கொண்டு வாறாங்கள்?*

*அப்ப... அந்த அறந்தாங்கி நிசா எண்டிறது?*

*ஓ! அது விஜய் டிவில புறோகிராம் செய்யிறவ.*

*என்ன புறோகிராம்?*

*சொன்னா உனக்கென்ன தெரியவே போகுது? நீ தானே உதுகள் பாக்கிறேலை!?*

*அப்ப, என்னணண்டு சோசல் டிஸ்டன்சிங் மெயின்டெய்ன் பண்ணுகினம்?*

*அங்க அது ஒண்டும் இல்லை.*

*அப்ப நோய் தொத்திச்சுது எண்டா...*

*அது முதலே செக் பண்ணித் தானே உள்ளுக்க விட்டிருப்பாங்கள்!*

*அப்ப, அவையை 14 நாள் குவாரண்டைன்ல வைச்சிருந்தவங்களோ?*

*ஆருக்குத் தெரியும்?*

*அப்ப உது என்ன, ஒவ்வொரு நாளுமோ? இல்லாட்டி கிழமைக்கு ஒருக்காவோ?*

*ஒவ்வொரு நாளும் தான்.*

*எத்தினை மணிக்கு?*

*மனிசர் எண்டா ஊர் உலகத்தில என்ன நடக்குது எண்டு தெரிஞ்சு வைக்கிருக்க வேணும்!*

•••

*ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு உலகம்!*

*சிலர் தாங்களே அதை சிருஷ்டிக்கிறார்கள்.*

*சிலர் மற்றவர்கள் சிருஷ்டித்த உலகங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.*

*அந்தந்த உலகங்களுக்கான அறநெறிகள், ரசனைகள், மொழிகள், வார்த்தைப் பிரயோகங்கள்.*

*அந்தந்த உலகங்களில் அவரவர் வாழ்வதற்கான நியாயங்களும் நிர்ப்பந்தங்களும் பற்றி மதிப்பீடு செய்ய நான் யார்?*

*என்னுடைய உலகம் மேலானது என்று சிந்திப்பது எவ்வளவு முட்டாள்தனம்?*

•••

*நீண்ட நாட்களுக்கு முன் கடும் குளிர் காலம் ஒன்றில் மொன்றியல் போய்க் கொண்டிருந்த போது...*

*உயரமான பாலம் ஒன்றின் கீழே உறைந்து போயிருந்த பெருநதியின் நடுவில் ஜீப்பில் போய், சிறு கூடாரம் அமைத்து உறைபனியில் துளை போட்டு, மீனுக்காக தூண்டில் போட்டு காத்திருந்த ஒருவனைக் கண்டேன்.*

*ஐந்து டொலருக்கு வாங்கக் கூடிய மீனுக்கு இப்படி ஒரு குளிருக்குள் உயிரைப் பணயம் வைக்க வேண்டுமா என்று யாருக்கும் தோன்றக் கூடும்.*

*ஒரு டொலருக்கு கிடைக்கக் கூடிய தக்காளிப் பழத்திற்கு இப்படி கோடை காலம் முழுவதும் வெயிலுக்குள் கிடக்கிறானே மூடப்பயல் என்று என்னைப் பார்த்து அந்த மனிதன் சிரிக்கக் கூடும்.*

*அந்தந்த உலகங்களுக்கு அந்தந்த நியாயங்கள்.*

*ஒரு உலகத்தின் அளவீடுகளைக் கொண்டு இன்னொரு உலகத்தை அளவிட முடியாது.*

•••

**உலக இலக்கியம் தவிர வேறெந்தத் தமிழ் வணிக இதழை வாசிப்பதையோ, தமிழ் கேளிக்கை எதையும் பார்ப்பதையோ தங்களது இலக்கிய ஸ்டேட்டஸ்க்கு இழுக்கு என்று கிட்டவே அண்டாத நம்ம இலக்கியவாதிங்களும் தினசரி பாப்பாங்க.**

**தமிழ் ரசனை எப்படி மட்டமாகிக் கெட்டுக் கிடக்கிறது என்று விமர்சனம் செய்வதற்காகவும், இதற்கெல்லாம் நேரம் செலவிடும் தமிழ் சமூகம் தங்களுடைய உலக மகா காவியங்களை கணக்கே எடுக்கிறாங்களே இல்லை என்று புலம்பவும்...!**

**கிட்டத்தட்ட நான் பார்க்கும் எல்லா இலக்கியவாதிகளுமே முதல்நாள் முதல் ஷோ செல்பி ரசிகர்கள் தான். என்ன, கட்டவுட்டுக்குப் பால் ஊற்றினால் விமர்சகர்கள் (அதுவும் இவர்களே தான்!) என்ன சொல்வார்களோ என்ற பரஸ்பர பயம்!**

**ஆனால், பாப்லோ நெருடா பற்றி பீலாவுக்கு மட்டும் ஒரு போதும் குறைச்சல் இருக்காது!**

அம்பைக்கு டாடா நிறுவனம் இலக்கியத்திற்கான வாழ்நாள் சாதனை விருது கொடுத்திருக்கிறது.

இந்த அமளிக்குள் எங்கள் இலக்கியவாதிகள் ஒரு பெரிய போராட்டத்தை மிஸ் பண்ணியிடுவாங்களோ என்று ஒரே பதட்டமாக இருக்கிறது.

'கோப்பரேட்களுக்கு அம்பை விலை போய் விட்டார்' என்று ஒரு கூட்டம் இந்த நேரம் ஆரம்பித்திருக்க வேண்டும்.

அபத்தம் அச்சுக்குப் போகப் பிந்தினாலும், இன்னமும் பிக்பொஸ் ரசிகர்கள் பவா செல்லத்துரையைப் பகைவர்கள் பந்தாடும் வரைக்கும் திரையை விட்டு கண்ணை திருப்புவதாக உத்தேசமில்லை.

விசில் அடிக்கக் காத்திருக்கும்போது, விருதாவது சிகையாவது!?

•••

பேஸ்புக்கில் பிக் பொஸ் நேரடி வர்ணனை, அது பார்க்காத குறையைத் தீர்த்துவைக்கிறது.

எனக்கு பிக் பொஸ்ஸை விடப் பரிதாபமாக இருப்பது இந்த இலக்கியவாதிகளைப் பார்க்கத் தான்.

தாங்கள் தங்கள் உலக மகா காவியங்களில் பதிவு செய்த ஒப்பற்ற சிந்தனைகளை எல்லாம் இந்தச் சாமானியர்களின் சமூகம் பேச வேண்டும், விவாதிக்க வேண்டும் என்று கனவு காண்கிற அத்தனை இலக்கியவாதிகளும், பிக் பொஸ்ஸில் அந்த சாமானியர்களால் உதிர்க்கப்படுகிற அத்தனை மொக்கைக் கருத்துக்களும் பற்றி மயிர் பிளந்த விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வனிதா பற்றி முடிந்து இப்போது வனிதாவின் மகள் பற்றி!

இந்த அமளிக்குள் பாமுக்கையும், முகாரமியையும், அந்த தோஸ்துவிஸ்கியையும் மறந்துடாதீங்கப்பா!

அப்புறமாக, அவங்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசத்தை மெய்ன்டெய்ன் பண்ண முடியாம போயிடும்.

•••

கந்தன் திருவிழா, திலீபன் திருவிழா என்று (நல்)ஊரே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும் போது, பேஸ்புக்கில் பெரும் அல்லோலகல்லோலம்.

நல்லூர்க் கோவில் முன்னால் நின்றபடி ஒரு பெண் எடுத்திருந்த படத்தோடு, 90s kids ம், 90 years old kids ம் ஜொள்ளு வடித்துக் கொண்டிருந்தார்கள்.

எனக்கோ பரிச்சயமான முகமாகவும் தெரியவில்லை.

இதற்குள் திலீபனின் கொண்டாட்டத்தைச் சிதைக்க றோவின் சதி என்று வேறு புலிப் பக்தர்கள் காவடி எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பிறகு தான் யாருடையவோ பதிவில், அன்ட்ரியாவாம்.

எத்தனை கடவுள்களையடா நல்லூர் தாங்கும்?

எனக்கு ஒரு காலத்தில் ஜேர்மன் நாட்டில் அந்தப் பெயரில் ஒரு பேனா நண்பி இருந்தாள். ஜேர்மனிக்கு நான் வந்த போது, அவளை நேரில் பார்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

•••

என் வேலை நண்பர்கள் உதைபந்தாட்டம் ஆடிய காலத்தில், அவர்களோடு விளையாட வந்த ஒருவன் மைதானத்தின் நடுவில் துண்டு விரித்து மொன்றியல் நோக்கி தொழுது கொண்டிருந்தான். மொன்றியல் வடக்குப் பக்கம், மெக்கா கிழக்குப் பக்கம் என்பது அவனுக்குத் தெரியவில்லையே என்று நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஒருதடவை வீட்டுக்காரியை வழியனுப்ப விமான நிலையம் போன போது, வரிசையில் நின்ற ஒருவன் திடீரென்று விழுந்து தொழுதான். மெக்கா எந்தப் பக்கம் என்று எனக்கே திசை தெரியவில்லை.

அந்த இரண்டு இடங்களிலும் இதே நம்பிக்கை கொண்ட மற்றவர்கள் தங்கள் பாட்டில் நின்று கொண்டிருந்தார்கள்.

விமானத்தில் கூட துண்டு விரித்து தொழுவோரின் படங்களைக் கண்டிருக்கிறேன்.

தன்னுடைய நம்பிக்கைகளை இப்படி பொது இடங்களில் காட்ட முனைகிறவர்களை நான் வேடதாரிகள் என்று தான் நினைப்பதுண்டு.

நம்பிக்கைகள் மனதிலும் வாழ்விலும் இருக்க வேண்டியவை. செயலில் காட்டப்பட வேண்டியவை. மற்றவர்களுக்குக் காட்டி உங்களை விட மேலானவன் என்று காட்டும் வெளிவேடதாரிகள் குறித்து எனக்கு எந்த மதிப்பும் இல்லை.

இவர்கள் வெறும் hypocrites மட்டுமே. இவர்கள் செய்யும் செயல்கள் பெரும்பாலும் இவர்கள் கொண்டிருப்பதாகப் படம் காட்டும் கொள்கைகளுக்கு முரணாகவே இருக்கும்.

யாழ்ப்பாணிகளும் இதே hypocrites தான்.

கனடாவில் கொடி பிடித்து விட்டு, கந்தசாமி கொடியேற்றத்திற்குப் போகிற...!

**எனக்கு பிக் பொஸ்ஸை விடப் பரிதாபமாக இருப்பது இந்த இலக்கியவாதிகளைப் பார்க்கத் தான்.**

**தாங்கள் தங்கள் உலக மகா காவியங்களில் பதிவு செய்த ஒப்பற்ற சிந்தனைகளை எல்லாம் இந்தச் சாமானியர்களின் சமூகம் பேச வேண்டும், விவாதிக்க வேண்டும் என்று கனவு காண்கிற அத்தனை இலக்கியவாதிகளும், பிக் பொஸ்ஸில் அந்த சாமானியர்களால் உதிர்க்கப்படுகிற அத்தனை மொக்கைக் கருத்துக்களும் பற்றி மயிர் பிளந்த விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

**வனிதா பற்றி முடிந்து இப்போது வனிதாவின் மகள் பற்றி!**

**இந்த அமளிக்குள் பாமுக்கையும், முகாரமியையும், அந்த தோஸ்துவிஸ்கியையும் மறந்துடாதீங்கப்பா!**

**அப்புறமாக, அவங்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசத்தை மெய்ன்டெய்ன் பண்ண முடியாம போயிடும்.**

இப்போது திலீபனுக்குக் கொடி பிடிக்கிறார்கள்.

திலீபனுக்கு எடுக்கும் காவடியும் இதே வேடதாரிக் கணக்குத் தான்.

நல்லூர் ஆறுமுகத்தின் சிலையை எழுபதுகளில் யாழ்ப்பாணம் பூராகக் கொண்டு திரிந்ததை, ஐந்தாம் வகுப்பில் கண்டிருக்கிறேன். அந்த நாவலர் சிலை எங்கே என்று யாருக்குத் தெரியும்?

அந்தச் சிலையை முன்பு புலிக்கு ஆதரவாகவும், தற்போது தமிழரசிலும் இருக்கும் முன்னாள் யாழ்.நகர ஆணையாளர் குப்பை லொறியில் கொண்டு போய் தற்போதைய இடத்தில் எறிந்ததாக பேஸ்புக்கில் வாசித்த ஞாபகம்.

இப்படி திலீபன் படத்தோடு திருகோணமலையில் 'பேரணி ஊர்வலம்' நடந்த இடத்தில், தாக்குதல் நடந்திருக்கிறது.

வழமைபோல, 'சிங்கள இனவாதம் தன் சுயரூபத்தைக் காட்டி விட்டது' என்று, சர்வதேச விசாரணையைக் கோராத குறையாக யாழ்ப்பாணிகள் பொங்கியிருக்கிறார்கள்.

சைக்கிள் கூட்டம் திலீபன் படத்தைக் கொண்டோடுவது அரசியல் பிழைப்புக்கு.

யாழ்ப்பாணிகள் திலீபன் படத்தை விழுந்து வணங்குவது சீன் காட்ட.

இந்த தாக்குதல் கூட, திட்டமிட்டுக் காத்திருந்து நடத்தப்பட்டது போலத் தான் இருக்கிறது.

இரு தரப்புக்கும் அரசியல் செய்ய இது தேவை.

உயிரோடு ஒரு மனிதன் இறந்து கொண்டிருப்பதை, வரிசையில் நின்று ஒரு சமூகத்தால் வேடிக்கை பார்க்க முடிந்தது என்றால், என்ன நம்பிக்கையில்?

இறக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு இருத்தப்பட்ட ஒரு மனிதனை, 'நீ முன்னால போ, நான் பின்னால வாறன்' என்று நம்பிக்கையூட்டிய மனிதன் என்ன நோக்கத்தில் இருத்தினான்?

ஒரு வார்த்தையோடு இந்தக் கூத்தை எல்லாம் நிறுத்தி, ஒரு உயிரைக் காப்பாற்றியிருக்க முடியாதா?

திலீபன் கிட்டனின் ஆள், தமிழ்ச்செல்வன் நம்பிக்கைக்குரிய விசுவாசி!

அந்தக் கணக்கில் இருந்து தொடங்கினால், ஏன் திலீபன் தியாகியாக்கப்பட்டான் போன்ற பல விடயங்கள் ஓடி வெளிக்கும்.

இந்தக் கூத்துக்களுக்கும் பொதுவெளியில் துண்டு விரித்து தொழுகிறவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

வெறும் வேடதாரிகள்.

தாகமாயிருக்கிறது என்று
குடிக்கத் தண்ணீர் கேட்டவனுக்கு...

•••

தண்ணீர் கொடுக்காமல்...

வரிசையில் நின்று
விடுப்புப் பார்த்தவன் எல்லாம்...
பார்த்திபன் பசித்திருக்கிறான் என்று
பேஸ்புக்கில் படம் போடுகிறான்.

வைத்துப் பிழைக்கலாம்,
படம் காட்டலாம் என்றால்...
கொலைகாரனும் காந்தி தான்!

•••

**திலீபனின் படத்திற்குக் காவடி எடுத்திருக்கிறார்கள். இந்த பறவைக் காவடியில் உணர்ச்சி வசப்பட்டு, பேஸ்புக்கில் 'நேற்று நடந்தது தான் உண்மையான கடவுளுக்கு. அதற்கு முன்பு நடந்ததெல்லாம் வெறும் கல்லுக்குத் தான்' என்று யாரோ புல்லரித்திருக்கிறார்கள்.**

**இதனால், தங்களுடைய தெய்வத்தை கல் என்றதால், உணர்ச்சி வசப்பட்ட பேஸ்புக் சிவபக்தர் ஒருவர் பொங்கி, சிறிது நேரத்தில் அடங்கி பதிவை அழித்து விட்டார். உட்பெட்டி மிரட்டல் அப்படிப் போலும்! பயத்தில் தானும் போய் திலீபனுக்கு வணக்கம் செலுத்திய செல்பி போட்டு பாவ மன்னிப்புப் பெற்றுக் கொண்டார்.**

இப்போது, திலீபனின் படத்திற்குக் காவடி எடுத்திருக்கிறார்கள்.

இந்த பறவைக் காவடியில் உணர்ச்சி வசப்பட்டு, பேஸ்புக்கில் 'நேற்று நடந்தது தான் உண்மையான கடவுளுக்கு. அதற்கு முன்பு நடந்ததெல்லாம் வெறும் கல்லுக்குத் தான்' என்று யாரோ புல்லரித்திருக்கிறார்கள்.

உண்ணாவிரதம் இருப்பது தான் காந்தி ஆவதற்கான தகுதி என்று நினைக்கும் சமூகத்தில், கல் என்ன, கொலைகாரர்களும் கடவுள் ஆகுவதில் என்ன ஆச்சரியம்?

இதனால், தங்களுடைய தெய்வத்தை கல் என்றதால், உணர்ச்சி வசப்பட்ட பேஸ்புக் சிவபக்தர் ஒருவர் பொங்கி, சிறிது நேரத்தில் அடங்கி பதிவை அழித்து விட்டார்.

பாவம் அவர், மற்ற மதங்கள் மீது எந்த வித தயக்கமும் இல்லாமல் பதிவு போடுகிற அவருக்கு, யாழ்ப்பாணித் தமிழ்த் தேசிய தெய்வத்தை நிந்தனை செய்ய முடியவில்லை.

உட்பெட்டி மிரட்டல் அப்படிப் போலும்!

பயத்தில் தானும் போய் திலீபனுக்கு வணக்கம் செலுத்திய செல்பி போட்டு பாவ மன்னிப்புப் பெற்றுக் கொண்டார்.

துரோகி என முத்திரை குத்தப்படுவதில், துரோகி என முத்திரை குத்துவோருக்கு விருப்பம் இல்லை!

•••

கொலைகாரர்களைக் கொண்டாடும் சமூகத்தில், சமூகத்திற்காக உழைத்த கல்வியாளர்களை துரோகி என்பதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லைத் தான்.

பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்து கொல்லப்பட்ட ராஜினி திரணகமவைக் கொண்டாடாமல் ஒரு கொலைகாரனான திலீபனைக் கொண்டாடும் சமூகம் ஈடேறும் என்று எந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பது?

சுட்டுக் கொன்றது யார்? அதற்கு உடந்தையாக இருந்த அவரது மாணவர்கள் யார்? அவர்கள்

இப்போது எங்கே? என்பதெல்லாம் பரவலாக அறியப்பட்டிருந்தாலும், இந்தச் சமூகம் இவ்வாறானதொரு சமூக உணர்வு மிகுந்த பேராசிரியரின் மரணத்தினால் வந்த இழப்பை உணர்ந்து கொள்ளாமல், திலீபனுக்குக் காவடி எடுப்பதில் பெருமை கொள்கிறது.

தினமுரசு பத்திரிகையில் அற்புதன் என்ற பெயரில் ரமேஷ், ஈபிஆர்எல்எஃப் தான் அந்தக் கொலையைச் செய்தது என்று எழுதியதை, புலி ஆதரவாளர்கள் காவித் திரிகிறார்கள்.

அற்புதன் இறுதிக் காலங்களில் புலிகளைப் புகழ்ந்து ஜால்ரா அடித்துக் கொண்டிருந்ததை பலரும் அவதானித்திருந்தனர். அற்புதன் சொன்ன அந்தக் கதையை உண்மை என்று நம்பும் புலி ஆதரவாளர்கள், அற்புதன் சொன்ன மற்றக் கதைகளையும் நம்புவார்களா?

சரி, புலிகள் கொல்லவில்லை என்று தான் வைத்துக் கொள்வோம்.

ராஜினியை புலிகள் கொல்லவில்லை என்று தான் வைத்துக் கொள்வோம். மற்ற இயக்கத்தினர் கொன்றார்கள் என்பதற்காகவே, சிவராம் முதல் பலரின் பிணங்களைக் காவித் திரிந்து, பிணத்தை வன்னிக்கே அழைத்து மாமனிதர் பட்டம் கொடுத்த புலிகள், ராஜினியை மற்ற இயக்கத்தினர் தான் கொன்றார்கள் என்றால் சும்மா இருந்திருப்பார்களா?

இப்போதும் திலீபனுக்குச் செய்யும் அதேயளவு காவடியையும் அவருக்கும் செய்திருக்க மாட்டார்களா?

தங்களுடைய மனித உரிமைகள் அமைப்புக்குப் பொறுப்பாக இருந்த கிளி பாதரை, ஆழ ஊடுருவும் படையணி கொன்றதாகக் கதை விட்ட புலிகள், ஏன் இன்றைக்கும் அவரை நினைவு கூர்வதில்லை?

தாங்களே குண்டு வைத்துக் கொன்றதால் தானே?

மற்ற இயக்கத்தினர் கொன்றார்கள் என்பதற்காகவே, சிவராம் முதல் பலரின் பிணங்களைக் காவித் திரிந்து, பிணத்தை வன்னிக்கே அழைத்து மாமனிதர் பட்டம் கொடுத்த புலிகள், ராஜினியை மற்ற இயக்கத்தினர் தான் கொன்றார்கள் என்றால் சும்மா இருந்திருப்பார்களா?

இப்போதும் திலீபனுக்குச் செய்யும் அதேயளவு காவடியையும் அவருக்கும் செய்திருக்க மாட்டார்களா?

தங்களுடைய மனித உரிமைகள் அமைப்புக்குப் பொறுப்பாக இருந்த கிளி பாதரை, ஆழ ஊடுருவும் படையணி கொன்றதாகக் கதை விட்ட புலிகள், ஏன் இன்றைக்கும் அவரை நினைவு கூர்வதில்லை?

தாங்களே குண்டு வைத்துக் கொன்றதால் தானே?

திலீபனுக்கு காவடியாடுவது hypocrite அரசியல் பிழைப்பும் கூத்தும் மட்டும் தான்.

வெளி வேடதாரிகள் முதலைக் கண்ணீர் விட்டுக் கொண்டே இருப்பார்கள்.

பேஸ்புக்கில் கேட்டிருந்தேன்.

'திலீபனுக்கு எடுக்கும்
இவ்வளவு காவடிகளையும்...

தேசிக்காயருக்கு
எடுக்க மாட்டியளோ!?

•••

புலிகள் புறமுதுகிட்டு முள்ளிவாய்க்காலுக்கு தோற்று ஓடிய காலத்தில், அம்மாவின் சேலைக்குள் பதுங்கி இருந்த மாவீரன் ஒருவர், பேஸ்புக்கில் தன் படத்தைப் போட்டு...

'ஓ... மரணித்த வீரனே... உன் சீருடைகளை எனக்குத் தா... உன் பாதணிகளை எனக்குத் தா... உன் ஆயுதங்களை எனக்குத் தா...' என்று பதிவு போட்டிருக்கிறார்.

சரி. அவற்றை அந்த மரணித்த வீரனோ, மரணிக்காத தலைவரோ, துவாரகாவோ கொண்டு வந்து கொடுத்தால், இவர் என்ன செய்யப் போகிறாராம் என்பதை மட்டும் சொல்லவில்லை.

பேஸ்புக்கில் சீன் காட்டுகிற இவர் போன்றவர்கள் தான் நான் சொல்கிற அந்த hypocrites.

•••

ஆனாலும் முன் எப்போதும் இல்லாமல், யாழ்ப்பாணிகளின் இந்தக் கூத்துகளுக்கு போட்டியாக சபாஷ், பலே வந்திறங்கியிருக்கிறது.

யாழ்ப்பாணிகளுக்குத் தடி ஓட்ட, கச்சேரியில் அருண் சித்தார்த் முயற்சியில் புலிகளால் கொல்லப் பட்டவர்களின் படங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டிருக்கின்றன.

திலீபனுக்கான கேலிக் கூத்துக்கள் நடந்த அதே காலத்தில்!

தமிழ் உணர்வாளர்கள் மனம் புண்பட்டிருக்கத் தான் செய்யும்.

ஆனால், அந்தப் படங்களில் மாத்தயாவின் படம் உட்பட பலரின் படங்கள் இருந்திருக்கின்றன. மக்களும் மிளகாய்த் தூள் அடிக்காமல் வந்து பார்த்துப் போயிருக்கிறார்கள்.

ஆனால், இயற்கையே கோபம் கொண்டு மழை பெய்து, அந்தப் படங்கள் நனைந்தன என்று ஒருவர் பேஸ்புக்கில் புல்லரித்திருந்தார்.

யார் என்று பார்த்தால், கொஞ்ச நாளாக புலிகள் திரையிட விடாமலும், மற்ற தமிழ்த் தேசியப் பிலிம்மேக்கர் 'திரையிட விடக் கூடாது' என்றும் சொன்ன படத்தை மேக்கிய பிலிமர்!

இந்த யாழ்ப்பாணித் தமிழ்த் தேசியத்தின் கோமாளித் தனத்தை இன்னமும் உணர்ந்து கொள்ளாத இந்த பிலிம் மேக்கரிடம் இருந்து, இந்த யாழ்ப்பாணிகளைக் குஷிப்படுத்துவதை விட, வேறு எதை எதிர்பார்ப்பது?

அதே யாழ்ப்பாணிக் குட்டையில் ஊறிய இன்னொரு மட்டை!

இன்னொரு hypocrite!

•••

யாழ்ப்பாணிக்குத் தடி ஓட்டும் அடுத்த முயற்சியாக... துரையப்பாவிற்குச் சிலை எடுக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதுவரை காலமும், இவ்வாறான நிகழ்வுகளை அடாவடித்

தனம் செய்யும் குழப்ப முயலும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்குப் பயந்து இருந்த நிலை போய், புலிகள் மீதான விமர்சனங்கள் யாழ்ப்பாணத்தில் பொதுவெளியில், பொதுமக்களின் ஆதரவோடு வர ஆரம்பித்திருக்கின்றன.

புனிதப் போராட்டக் கதை இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக உதிர்ந்து கொட்டுண்டு போகக் கூடும்.

புனிதப் போராட்டக் கதையை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்களுக்குத் தான் வயிற்றைக் கலக்கப் போகிறது.

யாழ்ப்பாணிகளின் மல கூடங்களும் நிறையக் கூடும்!

•••

பாஜகவுடனான உறவுகளை அதிமுக முறித்துக் கொண்டு கூட்டணியிலிருந்து வெளியேறிய ிருக்கிறது.

அதிமுக தொண்டர்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் என்று செய்தி வந்திருக்கிறது.

பேஸ்புக் அரசியல் ஆய்வாளர்கள் ஆளுக்காள் நீட்டி முழக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரச்சனை என்னவென்றால், தமிழ்நாட்டுச் சங்கிகளும் மகிழ்ச்சி தெரிவித்திருப்பது தான்.

தினமலர் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறது. கூட்டணிக் கட்சிகளுக்கு முதுகெலும்பு வந்து நிமிர்ந்திருக்கிற மாதிரி காட்டூன் போட்டிருக்கிறது.

கதிரைக்கு கீழால் தவழ்ந்த எடப்பாடிக்கு முதுகெலும்பு வந்த மாதிரி, கதை விடுவதன் பின்னணி என்ன?

வருமான வரித் துறையைப் பாய வைத்து எடப்பாடியை தவழ வைப்பதில் ஏதாவது பிரச்சனை உண்டா?

அல்லது பன்னீர்ச் செல்வத்தைப் பிரித்தெடுத்து கூட்டணி அமைப்பதிலோ, சின்னம்மாவை உயிர்ப்பித்து இருவரையுமே வானத்தைப் பார்த்துக் கும்பிட வைப்பதிலோ மத்திய சங்கிகளுக்குப் பிரச்சனை இருந்திருக்குமா?

இல்லை.

பாஜக இருக்கும் வரைக்கும் தி.மு.கவோடு கூட்டணி வைத்திருக்கும் கட்சிகள் அதிமுகவுடன் கூட்டுச் சேர மாட்டா.

இப்போது பாஜக பிரிந்து விட்டதால், இந்தக் கூட்டணிக் கட்சிகள் திமுகவுடனான தொகுதிப் பேரத்தில் திருப்தியில்லாத பட்சத்தில் அதிமுகவின் ஆசை வார்த்தைகளை நம்பி கூட்டணி வைக்கலாம்.

இதன் மூலம் திமுகவின் வாக்குகள் பிரியும்.

சங்கிகளின் நோக்கமே அது தான்.

அதனால் தான் திமுக முன்னால்வளைந்து நின்றகூட்டணிக் கட்சிகளுக்கு முதுகெலும்பு வந்து நிமிர்ந்திருப்பதாக சங்கிகள் மகிழ்ச்சி கொள்கிறார்கள்.

இதற்குள் ஜோக் என்னவென்றால், இதுவரை காலமும் கூட்டணிக் கட்சிகளைத் திட்டிக் கொண்டிருந்த உடன் பிறப்புகள் ‘இது தானாகச் சேர்ந்த கூட்டம். அந்த இணைப்பு அசைக்க முடியாதது’ என்று தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்வது தான்.

அரசியலில் இதெல்லாம் சகஜம்பா!

•••

**பாஜக இருக்கும் வரைக்கும் தி.மு.கவோடு கூட்டணி வைத்திருக்கும் கட்சிகள் அதிமுகவுடன் கூட்டுச் சேர மாட்டா.**
**இப்போது பாஜக பிரிந்து விட்டதால், இந்தக் கூட்டணிக் கட்சிகள் திமுகவுடனான தொகுதிப் பேரத்தில் திருப்தியில்லாத பட்சத்தில் அதிமுகவின் ஆசை வார்த்தைகளை நம்பி கூட்டணி வைக்கலாம்.**
**இதன் மூலம் திமுகவின் வாக்குகள் பிரியும்.**
**சங்கிகளின் நோக்கமே அது தான்.**

**அதனால் தான் திமுக முன்னால் வளைந்து நின்ற கூட்டணிக் கட்சிகளுக்கு முதுகெலும்பு வந்து நிமிர்ந்திருப்பதாக சங்கிகள் மகிழ்ச்சி கொள்கிறார்கள்.**

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இறைச்சி சாப்பிட்டால், மிருகக் குணங்கள் வரும் என்று யாரோ சொன்ன ஜோக் நாலைந்து நாட்கள் ஓடிக் கொண்டிருந்தது.

இதைப் பற்றி வந்த பதிவு ஒன்றிற்குப் பின்னூட்டம் விட்டிருந்த மாலனும் திருவள்ளுவரைத் துணைக்கு அழைத்திருந்தார்.

புலால் உண்ணாமையாம்!

மரக்கறி சாப்பிடுறவங்களுக்கு, அதுவும் வெங்காயம், பூண்டு சேர்க்காதவங்களுக்கு, தாவர இயல்பு வரும் என்றால், மாடு சாப்பிட்டார்கள் என்று மனிதர்களை அடித்துக் கொல்வதும், கோமாதாவை வெட்டி ஏற்றுமதி செய்வதையும் பார்ப்பனர்களே செய்வதும், அங்கீகரிப்பதும் எந்த இயல்புகளுக்குள் சேர்த்தி!?

மரக்கறி சாப்பிடுகிறவர்களுக்கு கொலைவெறியும் நரிப்புத்தியும் வருகிற விடயம் எனக்கு இதுவரை தெரியாது.

மரக்கறி VS மாட்டிறைச்சி என்பதில் முரண்டு பிடிப்பதில் சங்கிகள் எதற்கு ஆவலாக இருக்கிறார்கள் என்பது புரியவில்லை. இறைச்சி உண்பது தலித்துக்கள் மட்டுமன்றி, சூத்திர இந்துக்களும் தான்.

இந்துக்களாய் ஒன்று திரள்வோம் என்று கொண்டே, இறைச்சி உண்டால் மிருக உணர்வு வரும் என்று சொல்வது எந்த வகையான தந்திரோபாயம் என்பது எனக்கே புரியவில்லை.

அதை விட, மாட்டு இறைச்சி சாப்பிட்டா, மாட்டுக் குணம் வரும்னா, கோமியம் குடிக்கிறவங்களுக்கு என்ன குணம் வரும்?

ஒருவேளை, இன்னும் கொஞ்சம் மாட்டிறைச்சி சாப்பிட்டால், இந்த மாட்டுமூளைக்குப் புரியுமோ என்னவோ!?

•••

இலக்கிய உலகம் விருதுகளில் இருந்த தபால் அட்டைகளுக்கு நகர்ந்திருக்கிறது.

12 இலக்கிய மேதகுக்களுக்கு தபால் அட்டை

வெளியிட்டிருக்கிறார்கள்.

வழமை போல, பேஸ்புக் இலக்கியவாதிகள் குருசேத்திரத்தில் வியூகம் அமைத்துப் போர் புரிந்து கொண்டார்கள்.

எனக்கு இந்த இலக்கிய உலகத்தில் இதுதான் புரிவதில்லை.

யாரோ தற்குறிகள் தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு விருது கொடுக்கிறார்கள். அதைத் திறமைக்கும், தகைமைக்கும் கொடுப்பதாக எதற்காக இந்த இலக்கியவாதிகள் நம்புகிறார்கள் என்பது தான் புரிவதில்லை.

கிடக்கிறது. கொடுக்கிறார்கள்.

கொடுப்பதால் தங்களுக்குப் பெருமை சேர்க்கக் கொடுக்கிறார்கள்.

ஒரு அல்லக்கைக் கூட்டத்தை உருவாக்கக் கொடுக்கிறார்கள்.

இப்படி ஆயிரம் காரணங்கள்.

அ.முத்துலிங்கத்திற்கும் தபால் அட்டை போட்டதால், அவரும் பிரதியுபகாரமாக தபால் அட்டை போட்டவருக்கு விமானச்சீட்டுப் போட்டு விருதும் கொடுப்பார்.

ஏற்கனவே பாட்டு எழுதி மியூசிக் வீடியோ விட்டவர், இந்த வருடம் தான் விருது வாங்கிச் சென்றார்.

இதையெல்லாம் ஏதோ இலக்கிய அங்கீகாரம் என்பது போல அலட்டிக் கிட்டு!

பேசாம போய் வேலையைப் பாருங்கப்பா!

•••

சீமான் விவகாரம் திடீர் திருப்பங்களுடன் முடிவடைந்த மாதிரி இருந்திச்சு.

கொஞ்ச நாளைக்கு முன் தான் விஜயலட்சுமி 'சீமான் சார்' என்று வீடியோ போட்டு, 'பொத்திக்கிட்டுப் போங்கடா!' என்றிருந்தார்.

திடீரென்று கர்ப்பம் கலைத்த கதை சொல்லி பொலிசில் முறைப்பாடு செய்தார். திடீரென்று வாபஸ் வாங்கிக் கொண்டு, சீமான் பவர்புல் மான் என்கிறார்.

'கண்ணியமான குடும்பத்தில் பெண் எடுத்த' சீமானை, 'மாமா, உனக்கு வேற பொண்ணு கிடைக்கலியா?' என்று காளிமுத்துவின் இணைவியின் மகள், குரல் வளையை நசுக்கிக் கேட்கிற அளவுக்கு நிலைமை மோசமாக போய் விட்டது.

அதைவிட மோசம், சீமானை குத்துச்சண்டைக்கு அழைப்பு விடுத்தது தான். 'என் கையால தான் சாவு என்று முடிவானதுக்கப்புறம்...' என்ற புஹாஹா, பம்முதலோடு முடிந்தது.

சீமானையும் பிக் பொஸ்ஸில் சேர்த்துக் கொண்டால், ஜாலியாக இருக்குமே!?

'மாமன் கெட்டவன் தான், கேவலமானவன் இல்லே!'.

•••

இலக்கிய உலகில் ஒரு சீமான் விஜயலட்சுமி விவகாரம் போனதை யாருமே கண்டுக்கல போல!

தன்னை ஏமாற்றி விட்ட கோபத்தில் செங்கடலாய்... ஓ... செங்கனலாய் கொதித்து ஒரு கவிதை வந்தது.

Hell hath no fury like a woman scorned!

'சக்தி இன்றேல், சுபம் இல்லை!'

பெரும் பரபரப்பு எதுவும் இல்லை. இலக்கிய உலகின் இரண்டு முக்கியஸ்தர்கள் (எனக்கு அடையாளம் தெரிந்த!) லைக்கியிருந்தார்கள். என்ன? அவர்களுக்கும் எதிரியின் எதிரி நண்பர்கள் என்ற ஒப்பற்ற தத்துவம் தான்.

வேறு யாரும் அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

பொதுவெளியில் வைத்த கவிதைக்கு, உள்பெட்டி ஏன் நிரம்பி வழிகிறது? என்று அடுத்த கேள்வியும் வந்திருந்தது.

அதே உட்பெட்டி இலக்கியவாதிகள், மற்றப் பக்கத்து உட்பெட்டிக்குள்ளும் போய் இருப்பார்கள் தானே!?

பகிரங்கமாக பின்னூட்டம் விட்டால், தோழரை 'மச்சான்' என்று உரிமையோடு அழைக்க முடியாதே!?

எங்களுக்கு உதெல்லாம் எப்போதோ முடிந்த காரியங்கள், தெரிந்த இயல்புகள்.

இப்போதுதான் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட மாதிரி!

மேலதிக விபரங்கள் எதுவும் புதிதாக இல்லை.

வஞ்சிக்கப்பட்ட வஞ்சி'.

அவ்வளவு தான்!

இன்னொரு கனடா விஜயத்தோடு, kiss and make up ஆகி, 'சார்' போட்டு, லைக் போட்டவர்களுக்கே 'பொத்திக்கிட்டுப் போங்கடா!' என்றும் சொல்லக் கூடும்.

உட்பெட்டிச் சமரசம் செய்வோர் அதையும் நினைவில் கொள்க!

மேலதிகமாய் 'அந்தரங்க அங்க லாவண்ய' விபரங்கள் எதையாவது தெரிவித்து இருந்தாலாவது, தமிழச்சியின் 'அம்மண' விபரங்களோடு ஒப்பிட்டு, அவுஸ்திரேலியாவிலிருந்து ஒரு ஆய்வுக்கட்டுரை வெளிவந்திருக்கக் கூடும்! அ

**இலக்கிய உலகில் ஒரு சீமான் விஜயலட்சுமி விவகாரம் போனதை யாருமே கண்டுக்கல போல!**

**தன்னை ஏமாற்றி விட்ட கோபத்தில் செங்கடலாய்... ஓ... செங்கனலாய் கொதித்து ஒரு கவிதை வந்தது.**
Hell hath no fury like a woman scorned!
**பெரும் பரபரப்பு எதுவும் இல்லை. இலக்கிய உலகின் இரண்டு முக்கியஸ்தர்கள் (எனக்கு அடையாளம் தெரிந்த!) லைக்கியிருந்தார்கள். என்ன? அவர்களுக்கும் எதிரியின் எதிரி நண்பர்கள் என்ற ஒப்பற்ற தத்துவம் தான். இன்னொரு கனடா விஜயத்தோடு,** kiss and make up **ஆகி, 'சார்' போட்டு, லைக் போட்டவர்களுக்கே 'பொத்திக்கிட்டுப் போங்கடா!' என்றும் சொல்லக் கூடும்.**

**மேலதிகமாய் 'அந்தரங்க அங்க லாவண்ய' விபரங்கள் எதையாவது தெரிவித்து இருந்தாலாவது, தமிழச்சியின் 'அம்மண' விபரங்களோடு ஒப்பிட்டு, அவுஸ்திரேலியாவிலிருந்து ஒரு ஆய்வுக்கட்டுரை வெளிவந்திருக்கக் கூடும்!**




# அதிர்வு தரும் பறையொலி

பறையொலி ஒரு அழகான சிறுகதைத் தொகுப்பு. இது இலட்சுமி பதிப்பகத்தால் திருகோணமலையில் மாசி மாதம் 2023 இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் அலெக்ஸ் பரந்தாமன். ஈழத்து இலக்கியப்பரப்பில் அறியப் பட்டவராக இருக்கிறார். இருப்பினும் நூல் ஆசிரியரின் ஏனைய படைப்புகளை அதிகம் அறியாத நிலையில், இந்நூலின் கதை களுக்கான விமர்சனத்தை வைப்பது கூடுதலான நடுநிலைத் தன்மையோடு இருக்கும் என நம்புகிறேன்.

பறையொலி என் கைகளுக்கு ஒரு இணைய ஆவணமாகவே வந்து சேர்ந்திருந்தாலும், வழமையாக ஒரு சிறுகதைத் தொகுப்பை வாசிக்கும் ஆர்வத்துடன் இதனை வாசித்து முடிக்கக் கூடியதாய் இருந்தது. தற்போதைய பரபரப்பான வாழ்க்கை காலகட்டத்தில் அதிகமாக வாசிக்கப்படும் இலக்கிய வகைகளில் முன் நிற்பது சிறுகதைத் தொகுப்புக் கள் என்பதன் தாற்பரியத்தை இச்சிறுகதைத் தொகுப்பு மீண்டும் எனக்கு உணர வைத்தது. இதன் அட்டைப்படத்தை சௌந்தர் அவர்கள் படைத்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

படைப்பிலக்கியங்களைக் காலத்தின் கண்ணாடி என்பர். அந்த ரீதியில்ப் பறையொலியில் பொதிந்திருக்கும் எட்டுக் கதைகளுமே புலத்தில் பல கால கட்டத்திலும் நடந்த அல்லது நடந்து கொண்டிருக்கின்ற சமூக, பொருளா தார, குடியியல், அரசியல் சார்ந்த பாதிப்புகளை, நல்லதும் கெட்டதும் என்று அனைத்தையும் புனைவு வழியில் காட்டிச் செல்கின்றன.

சாதாரண மக்கள் அனைவரும் இலகுவாக வாசிக்கக் கூடிய மொழிநடை, என்னைப் போலவே வாசகர்களை இச்சிறு கதைகளுடன் ஒன்றிப் போகச் செய்யும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை. நூல் ஆசிரியருக்கு தான் பார்த்த அல்லது அனுபவித்த ஒரு விடயத்தை புனைவுகளினூடு, சுவாரசியத்தோடு நகர்த்திச் செல்லும் சாமர்த்தியம் இக்கதைகளில்க் கைகூடியிருக்கிறது. இருந்தாலும் கதைகளின் நடுவே ஏற்படுகின்ற சில நெருடல்களையும், சில விடயங்களை தவிர்த்திருந்தால் அல்லது இணைத்திருந்தால், அவை இச்சிறுகதைகளை இன்னும் வீரியமாக்கியிருக்கும் என்ற எனது பார்வையில் தோன்றியவற்றையும் இவ்விமர்சனம் ஆங்காங்கே தொட்டுச் செல்கின்றது.

## பூங்கோதை

அம்மான்ரை காணி, விளிம்பு நிலை மக்களின் குடியியல், பொருளாதாரம் சார்ந்த நில உரிமை பேணல், நிலங்களின் உரிமையாக்குவதில் ஏற்படும் பிணக்குகள், சகோதர பாசம் பெறுமதியிழந்த நிலை, பெண்களுக்கான சமூகக் கட்டுமானமும் அதன் பால் விளைந்த எதிர்பார்ப்புகளும் போன்றவற்றை விபரிக்கின்றது.

மக்கள் நடமாட்டமில்லாத, யானைகளின் ஆக்கிரமிப்பு மிகுந்த ஒரு காட்டு நிலத்தை பரமன் தன் நட்புக்களுடன் இணைந்து துப்பரவு செய்து, எல்லைகளைப் போட்டுத் தனதாக்கிக் கொள்ளுவதும், அந்தக் காணி நாளடைவில் அவனுக்குச் சொந்தமாகி விடுவதும் மிக இயல்பாக நடந்தேறுகிறது. அவனுடைய மூத்த சகோதரி திருமணம் செய்து கொள்ளாது இருப்பதற்கு அவள் பெரும் வாய்க்காரி என்பது இக்கதையின் முக்கியமான கருப்பொருள் என்பது சிறு இடராக இருப்பதை பின்பு விபரமாகப் பார்க்கலாம்.

தாய் இறந்து போனதும், பரமனும் திருமணமாகி தனது மனைவியின் வீட்டருகே விவசாயம் செய்யும் வசதி இருந்ததால், அங்கேயே குடித்தனம் ஆரம்பித்ததும் அச்சகோதரி தையல்

வேலை செய்தவாறே அவ்வீட்டில் தனியாகிப் போகிறாள். வருடங்கள் ஓடி, பரமனுக்கும் அவன் சகோதரிக்கும் வயது போன பின்பு, தான் இருக்கும் வீட்டிலும் காணியிலும் பாதியைத் தருமாறு அவள் கோருவதில் தான் பிரச்னை ஆரம்பமாகிறது.

நற்பண்புகளும் கடின உழைப்பும் உள்ள ஒருவருக்கு வாழ்வில் நடப்பவையும் நன்றாகவே இறுதியில் கைகூடி வரும் என்ற நல்லதொரு விடயம் பரமன் கதா பாத்திரத்தினூடே வெளிப்படுத்தப் படுவது வாழ்வில் மனிதர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியது.

ஒரு அரச அலுவலகத்தில் அதுவும் ஒரு பெண் உரத்த குரலில் பேசுவதை அந்த அரச அலுவலர் கடுப்போடு பார்ப்பதாக ஒரு வசனம் வருகிறது. உரத்த குரலில் தேவையில்லாமல் பேச வேண்டிய அவசியம் இல்லைத் தான். இதில் ஒரு ஆண் உரத்த குரலில் பேசினால் அவர் கடுப்பாகியிருக்க மாட்டாரா எனக் கேட்கத் தோன்றுகிறது. தனியாக வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒரு பெண், தனக்காக ஒரு நிலம் வேண்டும் என நினைத் திருக்கலாம். அவள் தம்பியோ தான் திருமணம் ஆன பின் தன் மனைவியின் நிலத்தில் குடியேறி விட்டான், ஆகையினால், தான் அச்சகோதரி பிறர் தயவில் வாழாமல் தன்னம்பிக்கையோடு சுயமரியாதை யோடு வாழ நினைத்திருக்கலாம்.

அதே வேளையில் ஒரு பெண் வாய்க்காரி எனப் பெயர் எடுப்பது அவள் அகம்பாவத்தால் மட்டுமே என்பதும், அவள் அகம்பாவத்தால் அந்த ஊரில் எவரும் அவளைத் திருமணம் செய்ய முன் வரவில்லை என்பதும், பிரதேச சபையில் தேவி என்னும் பரமனின் சகோதரி கதைப்பதை அரச உத்தியோகத்தர் ஒரு பெண் இப்படிப் பேசுவதா என்று பார்ப்பதும் சற்றே பழமைவாத, பிற்போக்குத்தனத்தை கோடிட்டுக் காட்டுவதாய்ப் படுகிறது.

அதுவே ஒரு ஆண் பேசினால், ஒரு ஆண் ஒரு பொது இடத்தில இப்படிப் பேசுவதா என எழுதத் தோன்றுமா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும்.

ஒரு பெண் திருமண பந்தத்தில் இணைய முடியாமல் தனிப்பெண்ணாய் வாழ்வதால் அவளுக்குரிய சொத்துகள் ஊரார் கைகளுக்குப் போய்விடும் என்ற அச்சம் ஏன் எழ வேண்டும்? தமது சந்ததிக்கு மட்டுமே நில உரிமையைக் கடத்தும் வர்க்க பேதம் சரி என்கின்ற கருத்து முனைப்பாக வைக்கப்பட்டிருக்கிறதா போன்ற சில வினாக்கள் இங்கே எழுவதைத் தடுக்க முடியவில்லை.

கறிவேப்பிலைகள் காட்டுப் பிரதேசங்களிலுள்ள மரங்களை எந்த வித யோசனைகளும் இன்றி, வெறும் சுயநலத்துக்காய் அழித்து அவற்றை தமதாக்கிக் கொள்ளும் பலர் இன்றும் எம்மிடையே வாழ்கிறார்கள். இவர்களது மண்ணாசை அளப்பரியது என்பது இங்கு கதையாக விரிந்து செல்கிறது.

**கறிவேப்பிலைகள் காட்டுப் பிரதேசங்களிலுள்ள மரங்களை எந்த வித யோசனைகளும் இன்றி, வெறும் சுயநலத்துக்காய் அழித்து அவற்றை தமதாக்கிக் கொள்ளும் பலர் இன்றும் எம்மிடையே வாழ்கிறார்கள். இவர்களது மண்ணாசை அளப்பரியது என்பது இங்கு கதையாக விரிந்து செல்கிறது. யாழ் மாவட்டத்தில் நான் கண்கூடாகப் பார்த்த ஒன்று தான் இந்தக் கதையின் மையக் கருத்து.**

**அத்தோடு அதை செயற்படுத்துவதற்கு கந்தவனம் என்கின்ற ஒரு மேட்டுக்குடி நிலச்சுவான்தார் ஒருவர் எவ்வாறு ஒரு மலையகத்தைச் சேர்ந்த ஒருவரது உழைப்பை, அவர் வாழ் நாள் முழுவதும் சுரண்டுகிறார் என்பதும், அதன் பின் அந்தத் தொழிலாளி போரின் காரணமாய் அங்கவீனராய் வந்து நிற்கின்ற போது, தனக்கு அவரைத் தெரியாதது போல அவரைக் கடந்து போவது மனித நேயத்தை மிதித்துப் போவதைக் காட்டுகிறது.**

யாழ் மாவட்டத்தில் நான் கண்கூடாகப் பார்த்த ஒன்று தான் இந்தக் கதையின் மையக் கருத்து. அத்தோடு அதை செயற்படுத்துவதற்கு கந்தவனம் என்கின்ற ஒரு மேட்டுக்குடி நிலச்சுவான்தார் ஒருவர் எவ்வாறு ஒரு மலையகத்தைச் சேர்ந்த ஒருவரது உழைப்பை, அவர் வாழ் நாள் முழுவதும் சுரண்டுகிறார் என்பதும், அதன் பின் அந்தத் தொழிலாளி போரின் காரணமாய் அங்கவீனராய் வந்து நிற்கின்ற போது, தனக்கு அவரைத் தெரியாதது போல அவரைக் கடந்து போவது மனித நேயத்தை மிதித்துப் போவதைக் காட்டுகிறது.

இங்கே மலையக மக்களின் வலி மிகுந்த அன்றாட வாழ்வும், அரசியல் சார்ந்து அவர்களின் ஒடுக்கப்பட்ட நிலையும், கல்வியைத் தொடர முடியாத அவர்களின் வறுமையும், உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் கண்ணீரும் எனப் பலவும் பேசப்படுகிறது.

இருப்பினும் சக்கர நாற்காலியில் இருக்கும் மாடசாமி என்னும் அந்த மலையகத்தையைச் சேர்ந்த மனிதனுக்கு, தனது பொய்க்காலுடன், அவனைக் கடந்து போகும் ஒரு விதவைப் பெண் தன்னிடமுள்ள காசைக் கொடுத்துச் செல்வது நெகிழ்ச்சியாய் இருக்கிறது. மனித நேயம் இன்னும் சாகவில்லை என்பது மட்டுமல்ல, விளிம்பு நிலையில் இருக்கும் மக்கள் தம்முடைய வலிகளால் மற்றவர்களது வலிகளையும் உணர்ந்து கொள்கிறார்கள் என்பது இக்கதை மூலம் நிதர்சனமாகின்றது.


காலம் தின்ற வாழ்வு குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களால் தகுந்த முறையில் வழி காட்டப்படாமல் வளர்ந்து, நாளடைவில் தான் மேற்கொள்ளும் தவறுகளைக் கூட சரியென வாதாடி, மற்றவர்களுடன் ஓயாமல் தர்க்கத்தில் ஈடுபடும் ஒரு பெண்ணின் கதை. வெறும் வாய்த் தர்க்கம் மட்டுமல்ல, விதண்டாவாதங்களில் தன்னோடு இருப்பவர்களையும் இழுத்து வைத்து அவர்களைத் தன் கருத்துகளைச் சரியென ஆமோதிக்கப் பண்ணும்

பிறழ்வு மனம் கொண்ட பெண்ணாகத் தேவி வருகிறாள். காலம் கடந்து அவளுக்கே ஞானம் பிறக்கும் போது அவளுக்கு வயதும் போய் நோய்களும் வந்து விடுகின்றன.

தான் இளமையாக இருந்த காலத்தில் தன் உடன் பிறந்த சகோதரிக்கு அரச உத்தியோகத்தர் ஒருவர் தான் கணவராக வரவேண்டும் என்பதை நியாயப்படுத்தி, இறுதி வரையில் அச்சகோதரி திருமணம் முடிக்காமல் போவதற்கும் தேவி காரணமாகிறாள். ஒரு கட்டத்தில் அச்சகோதரி மனம் வருந்தி தற்கொலை செய்து கொள்வது சமூகத்தில் அவ்வப்போது நாம் எதிர்கொள்ளும் தற்கொலைகளைச் சுட்டிக்காட்டுகிறது.

நாட்டின் பொருளாதாரச் சீர்கேடு, வேலை வாய்ப்பின்மை, அதிலும் பெண்களுக்கான பொருளாதாரச் சுதந்திரம் இன்மை, அரச உத்தியோகம் என்பது மட்டும் தான் சமூகத்தில் உயர்ந்த நிலை என்பதை நம்புகின்ற மக்கள் எனப் பலவும் இக்கதையை உருவாகியிருக்கின்றன.

சிங்களத்தி போரின் பின்னான பொருளாதார நெருக்கடி, இனநல்லிணக்கம், மக்களிடையேயான இன, மத, மொழிகடந்த புரிந்துணர்வு, மனித நேயம் என பல்வேறுவிடயங்கள் இக்கதையின் கதை மாந்தர்களினூடே அலசப்படுகின்றன.



**மிக மென்மையான காதல் ஒன்று முன்னை நாள் தமிழ்ப் போராளிக்கும் ஒரு சிங்கள இராணுவ வீரனின் விதவை மனைவிக்கும் இடையே ஏற்படுவதை எவ்வாறு அந்தத் தமிழ்ப்போராளியின் சகோதர, சகோதரிகள் மூர்க்கமாக எதிர்க்கிறார்கள் என்பதை இக்கதைபேசுகிறது.**

**இது வெறுமனே ஏற்படும் இன எதிர்ப்பல்ல. அதற்கான ஒரு பின்னணியுண்டு என்பதையும் அது எவ்வாறு தமிழ்த்தேசியத்தின் பெயரால் மக்களிடையே விதைக்கப்பட்டு, சிங்களவர் என்றாலே நம் எதிரிகள் என்ற ஒரு மனநிலையை பெரும்பாலான தமிழ் மக்களிடையேபரவச் செய்தது என்பதையும் கதையின் உரையாடல்களில் கதாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.**

மிக மென்மையான காதல் ஒன்று முன்னை நாள் தமிழ்ப் போராளிக்கும் ஒரு சிங்கள இராணுவ வீரனின் விதவை மனைவிக்கும் இடையே ஏற்படுவதை எவ்வாறு அந்தத் தமிழ்ப்போராளியின் சகோதர, சகோதரிகள் மூர்க்கமாக எதிர்க்கிறார்கள் என்பதை இக்கதைபேசுகிறது.

இது வெறுமனே ஏற்படும் இன எதிர்ப்பல்ல. அதற்கான ஒரு பின்னணியுண்டு என்பதையும் அது எவ்வாறு தமிழ்த்தேசியத்தின் பெயரால் மக்களிடையே விதைக்கப்பட்டு, சிங்களவர் என்றாலே நம் எதிரிகள் என்ற ஒரு மனநிலையை பெரும்பாலான தமிழ் மக்களிடையேபரவச் செய்தது என்பதையும் கதையின் உரையாடல்களில் கதாசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். நாட்டின் பொருளாதார நெருக்கடி, போரின் நீண்ட கால பின்விளைவுகள், சீர் குலைந்த அரசியல் தளம் என அவ்வளவையும் புறம் தள்ளி இவ்வாறான தனிப்பட்ட, சாமானிய மக்களிடையேயான உறவுகள் இன, மொழி, மத வித்தியாசமற்றுத் தோன்றுவது மனித நேயத்தின் மீதான நம்பிக்கையைப் பலப்படுத்துகிறது.

பாரந்தாங்கிகள் கதையினூடாக, சாதாரணமாக தமிழ்ச் சமுதாயத்தில் நடைமுறையில் இருக்கின்ற, எழுதப்படாத விதிகளான சமுதாயக் கட்டுமானமும் அதன் எதிர்பார்ப்புகளும் எவ்வாறு ஒரு தனிநபர் வாழ்வைக் குலைத்துப் போடுகிறது என்பது பேசப்படுகிறது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற ஒரு குடும்பத்தில் சகோதரிகளுக்குத் திருமணம் ஆகாமல் தனக்கு ஒரு வாழ்வைத் தேடிக் கொள்ள முடியாமல் சமூகத்திற்காய் பயந்து வாழும் ஒரு தனி மனிதன் பற்றியது. சிறந்த நட்பு ஒன்று தன்னாலான அறிவுரைகள், உதவிகளைச் செய்தும் கூட அவற்றால் பெரிதாக மாற்றம் ஒன்றும் ஏற்படாமல், இறுதியில் காலம் சென்று திருமணம் செய்து குறுகிய காலத்தில் நோய் வாய்ப்படுவதோடு கதை முடிந்து விடுகிறது.

காலம் காலமாக வழக்கில் இருக்கும் ஒரு விடயம் தான் கருப்பொருள் என்பது மனதில் சற்றே ஆயாசத்தை எழுப்புவதாக இருக்கிறது. விளிம்பு நிலை மக்களின் சாபக்கேடுகளில் ஒன்று தான் இங்கு கதையாகிறது. இவை எப்போதுமே சமூகத்தில் பேசப்பட்டோ அல்லது அனுபவங்களின் மூலமோ அறிந்த ஒரு விடயம் தான். இருந்தாலும் கதையை இறுதிவரை வாசிக்கத் தூண்டும் மொழிநடை இக்கதைக்கு சிறிது பலம் சேர்க்கிறது. இக்கதையின் கரு எவ்வாறு ஒரு சமுதாய மாற்றத்தை அல்லது வாசகர்களின் மனங்களில் ஒரு முற்போக்குச் சிந்தனையை விதைக்கப் போகிறது என்பது ஒரு கேள்வியாகத் தொக்கி நிற்கிறது.

'பறையொலி' ஆழமாக வேரூன்றி, மக்களிடையே ஊடுருவி வாழ்ந்து கொண்டிருக்கும்

யாழ்பாணத்து சாதீயச் சிந்தனையும் அதன் சார்பில் ஒடுக்கப்பட்ட மக்களின் உள, உடல் வலிகளை வெளிப்படுத்தும் தீண்டாமையும் பற்றியது.

காலம் காலமாக மேட்டுக்குடி மக்களின் நிகழ்வுகளுக்கு அழைக்கப்பட்டு, அவர்களது தேவைகளை நிறைவு செய்து வாழ்ந்து வரும் விளிம்பு நிலை மக்களை அவர்கள் எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதும், அதனை உடைத்தெறிய முற்படும் இளம் தலைமுறையின் அறச்சீற்றமும் இங்கு பறையொலியாய்க் காதுகளை ஊடுருவிச் செல்கிறது.

சமூகத்தில் பல தளங்களிலும் நடந்து கொண்டிருக்கின்ற பல விடயங்களைக் கண்கூடாகப் பார்த்த ஒருவர் எழுதியதைப் போன்று இச்சிறுகதைகள் இருப்பது, வாசிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் இலகுவாக இருப்பதோடு, பல கதைகள் வாசகர்கள் மத்தியில் விழிப்புணர்வு தரும் தன்மையோடும் இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மனித நேயம், இன நல்லிணக்கம், மக்கள் மத்தியில் சமத்துவம் பேண வேண்டிய அவசியம், புரிந்துணர்வு, பொருளாதாரத் சீர்கேடுகள், அரசியல் ஆதாயம் தேடும் நில உடமையாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்களை மென்மேலும் சுரண்டும் மேற்குடி மக்கள், பழமைவாத சமூகக் கட்டுமானமும் அதன் எதிர்பார்ப்புகளும் என பல்வேறு அரசியலைப் பேசும் இப்பறையொலி சொற்சிக்கனத்தோடும் படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சில கதைகளில் சொல்லப்பட்டிருக்கின்ற கருப்பொருட்கள் ஒற்றுமையுள்ளவையாய் இருப்பதை நூல் ஆசிரியர் தவிர்த்திருந்திருக்கலாம். உதாரணமாக, குழம்புச் சோறு என்கின்ற கதையில் வரும் அண்ணன் கதா பாத்திரமும், காலம் தின்ற வாழ்வில் வரும் தேவி பாத்திரமும் தமது இளமைக்காலத்தில் தாம் செய்த தகாத செயல்களுக்கு காலம் கடந்து மனம் வருந்தும் பாத்திரங்களாக வருவது ஒரே கருத்தைக் கொண்ட இரு வேறு கதைகளை வாசிக்கும் மன நிலையைத் தோற்றுவிக்கிறது.

அதேவேளையில், ஏற்கனவே குறிப்பிட்டபடி மேலும் ஒரு சில விடயங்களை நூல் ஆசிரியர் தவிர்த்திருந்தால் இச்சிறுகதைகள் மேலும் மேம்படுத்தப்பட்டிருக்கும்.

குறிப்பாக, சில பழமைவாத எண்ணங்கள், பெண்கள் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்ற சமூகத்தின் எதிர்பார்ப்பே பரமனின் எதிர்பார்ப்பாகவும் இருப்பது போன்ற விடயங்களோடு, பல கதைகளிலும் பரமன் என்ற பெயரே முக்கிய கதாபாத்திரமாகவும் வருவது கதை சொல்லிக்கும் கதை மாந்தர்களுக்குமிடையேயான இடைவெளியைக் குறைக்கின்றது. இதனால் நூல் ஆசிரியரே பரமனாகவும் இருந்து தன் எண்ணங்களை மட்டுமே முன் வைப்பது போன்ற ஒரு பிராக்ஞை ஏற்படுகிறது.

ஆண் மையப் புனைவு வெளியிலிருந்து விலகி, ஒரு பெண் கதாபாத்திரத்தினூடாகவும் சில விடயங்களைப் பார்க்கின்ற போது அங்கு சமத்துவமான உரிமைகளுக்கும் எண்ணங்களுக்கும் இக்கதைகள் வழி சமைத்து மேலும் வீரியமாக்கப்பட்டிருக்கும் என்றே தோன்றுகிறது.

சில சொல்லாடல்கள் சில கதைகளில்த் தவிர்க்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும் பல உரையாடல்களினூடே மறைக்கப்பட்டிருக்கும் பல நுண்ணுர்வுகள் இக்கதைகளுக்குப் பலம் சேர்கின்றன.


இக்கதைகளில் அநேகமானவை புலத்தில், நமது சமூகத்தில் வழமையாக நடக்கின்ற, சமகாலப் பிரச்சனைகளை மையமாக வைத்து படைக்கப்பட்டிருக்கின்றன.

இருந்தாலும் கூட அது யாவரும் அறிந்த பொது உண்மை என்பதால், இவை சாதாரண வாசகர்களின் மனம் செல்லும் பொது வழிப்பாதையாகிறது . இதிலிருந்து சற்று விலகி, வித்தியாசமான ஒரு பார்வையை நூல் ஆசிரியர் வைத்திருந்தால் இக்கதைகள் இன்னும் மேம்பட்டிருக்கும்.

எது எப்படியோ தற்போதைய நமது நாட்டுச் சூழலில், கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களைத் தொட்டு எடுத்து சொல்லியிருக்கிறார் ஆசிரியர். அவர் தொடர்ந்தும் சமகாலச் சஞ்சலங்களை மொழிச்செறிவோடும் இலக்கியச் செறிவோடும் தருவார் என நம்புவோம்.

நல்ல விமர்சகர்கள் எப்போதும் ஒரு நல்ல கலையை எதிர்பார்ப்பதாலேயே விமர்சிக்கிறார்கள் என்ற புரிதல் இங்கு அங்கீகரிக்கப்படும் என்று நம்புகிறேன்.

**மனித நேயம், இன நல்லிணக்கம், மக்கள் மத்தியில் சமத்துவம் பேண வேண்டிய அவசியம், புரிந்துணர்வு, பொருளாதாரத் சீர்கேடுகள், அரசியல் ஆதாயம் தேடும் நில உடமையாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்களை மென்மேலும் சுரண்டும் மேற்குடி மக்கள், பழமைவாத சமூகக் கட்டுமானமும் அதன் எதிர்பார்ப்புகளும் என பல்வேறு அரசியலைப் பேசும் இப்பறையொலி சொற்சிக்கனத்தோடும் படைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.**




# சாநிழல்

## கே. டானியல் அவர்களின் சாநிழல் ரொரண்டோ நிகழ்வு குறித்த சிறு குறிப்பு

*தோழர். கே.டானியல் அவர்களின் 'சா நிழல் நூல் வெளியீடு 30 செப்ரம்பர் 2023இல் ரொரண்டோ நகரில் நடைபெற்றது. அதனைத் தேடகம் அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்தனர். சூசை மார்க் அவர்கள் நிகழ்விற்குத் தலமை தாங்கினார். நிகழ்வில் சிவா, வி. ரி இளங்கோவன், தர்சன். லிங்கம் ஆகியோர் உரையாற்றினார்கள்.*

*ஈழம் கடந்து வந்த சாதியப் பின்புலத்தையும், அது தொடர்ந்தும் எதிர்கொண்டு வரும் ஆதிக்க மனோநிலையின் கொடூரங்களையும், தொடர்ந்து வரும் தலைமுறைகளும் வடிவம் மாறாது எதிர்கொள்ள நேரிடும் அவலத்தைக் கணக்கிடவும் அது குறித்து உரையாடவும் இவ்வாறான கூட்டங்கள் வழிகோல வேண்டும்.*

*கொடுமையான காலத்தைத் தமது அரசியல் அறிதலுடன் கோபம் கொண்டும் கேலி செய்தும் எழுதிக் கடந்தவர்களில் தோழர். டானியல் அவர்களும் ஒருவர். அவர் பங்கு கொண்ட போராட்டங்கள், முரண்பட்டுக் கொண்ட கருத்து நிலைகள், அதனை எழுத்தில் முன்வைத்து நின்ற பதிவுகள், அவற்றையெல்லாம் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் வழிகள், அக்காலத்தில் இருந்து மாற்றமடையாது நகரும் இன்றைய நமது சமூக நடைமுறைகள், இதனை எதிர்கொள்ள இன்றைய தலைமுறையினருடன் எவ்வாறு கைகோர்ப்பது என்ற உரையாடல்கள் இவ்வாறான நூல் வெளியீடுகள் மூலம் உரையாடப்பட வேண்டும். இந்த சமூகத்தின் சாதிய மனோபாவத்திற்கு எதிரான ஒரு உரையாடல் நிகழவேண்டும்.*

*ஆனால் வழமையான ஒரு நூல் வெளியீட்டையும் மீறி உரையாடல்களைச் செவிமடுக்கமுடியாதபடி எழுந்து வெளியே சென்று விடவேண்டும் என்ற மனநிலையைத் தோற்றுவித்த நிகழ்வு இது. இவ்வாறுதான் நிகழ்வைப் பொதுப்படச் சொல்லிவிடமுடியும். இதுகுறித்து மேற்கொண்டு யாராவது கருத்துச் சொன்னால் அதனை விளக்கமாகச் சொல்ல வரலாம். விபரம் இந்தச் சிறுபதிவில் தேவையற்றது.*

*ஆனாலும்,தோழர் டானியல் அவர்களுடன் சேர்ந்து பயணித்த*

**கற்சுறா**

கொடுமையான காலத்தைத் தமது அரசியல் அறிதலுடன் கோபம் கொண்டும் கேலி செய்தும் எழுதிக் கடந்தவர்களில் தோழர். டானியல் அவர்களும் ஒருவர். அவர் பங்கு கொண்ட போராட்டங்கள், முரண்பட்டுக் கொண்ட கருத்து நிலைகள், அதனை எழுத்தில் முன்வைத்து நின்ற பதிவுகள், அவற்றையெல்லாம் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் வழிகள், அக்காலத்தில் இருந்து மாற்றமடையாது நகரும் இன்றைய நமது சமூக நடைமுறைகள், இதனை எதிர்கொள்ள இன்றைய தலைமுறையினருடன் எவ்வாறு கைகோர்ப்பது என்ற உரையாடல்கள் இவ்வாறான நூல் வெளியீடுகள் மூலம் உரையாடப்பட வேண்டும். இந்த சமூகத்தின் சாதிய மனோபாவத்திற்கு எதிரான ஒரு உரையாடல் நிகழவேண்டும்.

பலரை உச்சரித்த அனைத்துப் பேச்சாளர்களும் அவரோடு இணைந்து பயணித்த, அவரோடு முரண்பட்ட, அவரையே எதிர்த்து நின்ற என்.கே. ரகுநாதன் அவர்களது பெயரை ஒருமுறையேனும் உச்சரித்துவிடாத தூய்மை வாதம் கொண்டவர்களாக அனைத்துப் பேச்சாளர்களும் இருந்தார்கள். வரலாற்றை வரலாறாகப் பதிவிட்டுப் போகமுடியாத தூய்மைவாதப் பேச்சாளர்கள் இவர்கள்.

அவர்கள் இருவரும் இணைந்து செயற்பட்டதும் முரண்பட்டதும் அதனை எழுத்துக்களில் முன்வைத்ததும் வரலாறு. ஆனால் அந்த வரலாற்றில் இருந்து எதையும் பேசாது தவிர்ப்பது என்பதுவும் அடுத்த தலைமுறைக்கும் அழகல்ல. ஆனால் உங்களைப் பார்த்து இனிவரும் தலைமுறையும் இருக்கும் என்று நீங்கள் யோசிக்கக் கூடாது.

உங்களுடைய கசடுத்தனம் உங்களுடனேயே முடியவேண்டும் என்று விரும்புகிறேன். இதனை நீங்கள் அடுத்த தலைமுறைக்கும் கடத்திவிடக் கூடாது என்றும் வேண்டுகிறேன். சமூகத்தில் உரையாடல்கள் நிகழவேண்டும். நீங்கள் அறுதியிடுவது போலான மறதி உரையாடல்களை இந்த சமூகம் கைவிட்டுச் செல்லவேண்டும்.

உண்மையில் ஈழத்தின் மிகப்பெரிய ஆளுமைகளான கே. டானியலையும் என்.கே.ரகுநாதன் அவர்களையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தாது நாம் அந்தக் காலத்தின் கதைகளைப் பேசமுடியாது. ஆனால் நீங்கள் அனைவரும் அன்று பேசிய கதைகள் அப்படியானதல்ல. நீங்கள் சமூகத்தின் அசைவியக்கத்திற்கு அநியாயம் செய்கிறீர்கள். நீங்கள் மறந்து போனீர்கள் என்ற கதைகள் இனியும் செல்லுபடியாகாது. நீங்கள் யாவரும் ஒரு கருத்தியலை முன்நிறுத்திய உரையாடலுக்குத் தயார் இல்லை. அதனையே இன்றைய ‘சா நிழல்‘ நிகழ்வு முன்நிறுத்தி இருந்தது. இதில் முதியோர் இளையோர் என்ற பேதமில்லை. ஆனால் இதன் போக்கில் இனியும் நிகழ்வுகளைச் செய்யாதீர்கள். காலமும் உழைப்பும் வீண்.




உங்களுக்கு என்.கே.ரகுநாதம் தொகுப்பில் தோழர் ந. ரவீந்திரன் எழுதிய ஒரு பதிவின் சிறு பகுதியை வாசிப்பிற்காகத் தருகிறேன். இந்த நேர்மை சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் கதை சொல்லிகளுக்கும் பேச்சாளர் களுக்கும் சிறிதேனும் இருக்க வேண்டும். இனிவரும் கூட்டங்களை கொஞ்சமேனும் தற்குறித் தனங்களை விடுத்து நிகழ்த்துவோம். பேசுவோம்.

‘யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்துகொழும்பில் வாழ்ந்த போது ஆளுமைமிக்க செயற்பாட்டு வீச்சினைவெளிப்படுத்தியிருந்தவர் ரகுநாதன். சிறுகதைகளை எழுதியதோடு தனது இரண்டாவது தொகுப்பினையும் வெளியிட்டு சாகித்யப் பரிசினையும் பெற்றிருந்தார். அப்போதுதான் தலித் இலக்கிய முன்னோடி டானியல் எனும் விவகாரம் பெருமளவில் பேசுபொருளாகியிருந்தது. தேசிய கலை இலக்கியப் பேரவை சார்பில் அந்தக் காலத்தில் ரகுநாதனை

**உண்மையில் ஈழத்தின் மிகப்பெரிய ஆளுமைகளான கே. டானியலையும் என்.கே. ரகுநாதன் அவர்களையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்தாது நாம் அந்தக் காலத்தின் கதைகளைப் பேசமுடியாது.**

கொழும்பு வீட்டில் சந்தித்துப் பேசியிருந்தோம். தலித் இலக்கிய முன்னோடி விவகாரத்தை நான் அதிகம் பேசி வந்த அன்றைய நிலையில் அது குறித்து நேரடியாக எதுவும் தெரிவிக்காத போதிலும் தனது வாழ்வில் நடைமுறையாக்கிக் கொள்ளாத விடயங்களை வெறும் புகழுக்காக எழுதுகிறவர்களை எவ்வகையில் கொண்டாட இயலும் என்ற கேள்வியை எழுப்பியிருந்தார்.

டானியலுக்கு எதிராக வெளிப்படையாகப் பேசி வந்தார். வேறு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்ட போது எழுத்தாளரது வாழ்வும் எழுத்தும் வேறுபட்டமையக் கூடாது என்பதனைப் பகிரங்க விவாதமாக ஆக்கிக் கொண்டார். அவரது நியாயமான கோபம் பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதிலும் விமர்சனங்களை மேவிய போற்றுதலை டானியல் தொடர்ந்து பெற்று வந்தார். அத்தகைய சூழலில் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தவர் இறுதிக் காலத்தில் டானியல் பற்றி நிதானப்பட்டு மதிப்பார்ந்த பக்கங்களைப் பேசுபவராக ஆகியிருந்தார்.‘

*ந.ரவீந்திரன்.*

இது ஒரு உதாரணத்திற்கான சிறு பகுதி மட்டுமே. இந்தக் கட்டுரையை நீங்கள் முழுமையாக வாசிக்க வேண்டும். அப்பேதாவது உங்கள் பார்வைக் குறைவு அறிந்து தெரியமுடியும். அதற்கு முதலில் நமது தற்குறித்தனங்களை ஓரம்கட்டி வைத்துவிட்டுச் சிந்திக்கத் தெரிய வேண்டும்.



ஒரு காதலனாக இருப்பது
என்பது...

அப்படி ஒன்றும்
சுலபமான விடயம் இல்லை!

”””””

நெஞ்சு மயிர் தெரிய
திறந்த சேர்ட்டோடு
அதிவேகக் கார் மீது
அலட்சியப் பார்வையோடு
சாய்ந்திருக்கும் காதலனை...

தொடை தெரியும்
நீண்ட வெல்வெட் ஆடையோடு
வெட்டுகள் தெரியும் மார்பு
முதுகில் அழுத்த
தோளில் கை வைத்து
கிறக்கத்தோடு பார்க்கும்
நீண்ட கால் காதலி எல்லாம்...

விளம்பரங்களில் மட்டும் தான்!

”””””

செலுத்துகின்ற அன்பு
உண்மையானது என்பதை
அடிக்கடி நிரூபிக்க
வேண்டியிருக்கிறது.

நம்புகிறவர்களுக்கு
நிரூபிக்க வேண்டியதில்லை.

நம்பாதவர்களுக்கு
எதைச் சொன்னாலும்
நம்பப் போவதில்லை.

இருந்தாலும்...

சத்தியப் பிரமாணம் செய்யும்
அரசியல்வாதி மாதிரி,
அடிக்கடி ஒப்புக்காகவேனும்
சொல்லித் தொலைக்க வேண்டி
இருக்கிறது.

”””””

டீன் ஏஜ் கடந்த வயதிலும்...

ஒரு காதலனாக இருப்பது
என்பது
அப்படி ஒன்றும்
இன்பம் தரும் விடயம் இல்லை!

ஹை செல்லம்!
சாப்பிட்டியா செல்லம்?
தூங்கியிட்டியா செல்லம்?

குழந்தைத்தனமான
கொஞ்சல்கள்
கோமாளித்தனமாக
இருக்கின்றன.

‘பேசாமல்
சாப்பிட்டிட்டு படடி!’
என்றாலும்...

‘உனக்கு என்னோட கதைக்க
விருப்பம் இல்லை’ என்று
தொடங்கி...

**ஜோர்ஜ் இ.**

‘என்னில அன்பு இல்லை!’
என்பதில் தான்
வந்து முடிகிறது.

திரும்பவும்...

புனிதப் புத்தகம்
செல்போன் மீது ஆணையாக
சத்தியப்பிரமாணம்...

‘இன்பத்திலும் துன்பத்திலும்
நோயிலும் சுகத்திலும்
உனக்குப் பிரமாணிக்கமாக...!’

”””

செல்போன் யுகத்தில்...

ஒரு காதலனாக இருப்பது
என்பது
அப்படி ஒன்றும்
கிளுகிளுப்பான விடயம்
இல்லை.

அழைப்புகளுக்கு
உடனே பதில் சொல்லாவிட்டால்
‘கடலை போடுறியோ?’ என்ற
கேள்விக்கும்,

பேசிக் கொண்டிருக்கும் போது
யாராவது இடையில் வந்தால்...

‘எவ அவ?’ என்ற கேள்விக்கும்

நம்பத் தகுந்ததான விடைகள்
உடனே மனதில்
தோன்றி விடுவதும் இல்லை.

மாசில்லா உண்மைக் காதல் மீது
இன்னுமா சந்தேகம் என்று
கோபம் கொள்ளுவதா?...

இந்த மூஞ்சிக்கு
இன்னொருத்தி கிடைப்பாள்
என்று
நினைப்பதையிட்டு
பெருமைப்படுவதா?...

என்பதிலேயே குழப்பம் வந்து
விடுகிறது.

”””

பேஸ்புக் காலத்தில்...

ஒரு காதலனாக இருப்பது
என்பது
அப்படி ஒன்றும்
மகிழ்ச்சிகரமானது இல்லை.

எவரோ வந்து போட்டுப் போன
பின்னூட்டத்திற்கும்...

எதற்காகவோ போட்ட
விருப்புக் குறிக்கும்

விளக்கம் சொல்வதில்

காதல் இன்பத்தில் பெரும்பகுதி
கரைந்து விடுகிறது!

”””

ஒரு நல்ல காதலனாக இருப்பது
என்பது...

அப்படி ஒன்றும்
நிம்மதி தரும் விடயம் இல்லை.

கேட்கப்படுகின்ற அதே
கேள்விகளை
திரும்பிக் கேட்கவும்
முடிவதில்லை.

என்னுடைய கேள்விகள்
தெய்வீக காதலை
சந்தேகிப்பதாகவும்...

தன்னுடைய சந்தேகம்
‘தனக்கே ஆக்கும்’ உரிமை
பற்றியதாகவும்
முடிந்து விடுகிறது.

”””

தர்க்க ரீதியாக சிந்திக்கும்...

ஒரு காதலனாக இருப்பது
என்பது
அப்படி ஒன்றும்
அறிவுபூர்வமான விடயம் இல்லை!

‘உனக்கு என்னில அன்பு
இல்லை!’

‘உனக்கு என்னில சந்தேகம்!’

‘நியாயமான சந்தேகத்திற்கும்
அப்பால்’
தர்க்கரீதியாக
எந்த நீதிமன்றத்திலும்
நிருபிக்க முடியாத கேள்விகள்.

சதா குற்ற உணர்வை
உருவாக்கும்
குரூர எண்ணம்
கடலை போட விடாமல்
தடுக்கும் என்ற
நம்பிக்கையாகவோ,
முன்னெச்சரிக்கையாகவோ
இருக்கலாம்!

”””

ஒரு காதலனாக இருப்பது
என்பது

அப்படி ஒன்றும்
ரோமான்டிக்கான விடயமாக
இருப்பது இல்லை!

அன்று பாடசாலையில் நடந்த
ஏதோ ஒன்றை
தாய்க்குச் சொல்லியாக
வேண்டும் என்று
மூச்சிரைக்க ஓடி வந்து
மூச்சு விடாமல் ஒப்புவிக்கிற
குழந்தை போல...

கதைக்கின்ற போதுகளில்
எல்லாம்
என்னை வாய் திறக்க விடாமல்
மூச்சு விடாமல் சொல்லி
முடிக்கிற
எல்லாவற்றையும் கேட்டுச்
சகித்துக் கொள்ள
வேண்டியிருக்கிறது.

காதலுக்கு
முகரக்கட்டை
தேவைப்படுகிறதோ என்னவோ,
அசாத்திய பொறுமை
தேவைப்படுகிறது!

”””

இந்த அனாவசிய தலையிடிகளால்
தான்
நான் காதல் பக்கமே
தலை வைத்துப் படுப்பதில்லை!




# பத்து விருப்புக் குறியும் பதினைந்து நிமிடப் புகழும்

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

The river I step in, is not the river I stand in.




தாயகம் வெளிவந்த அந்தக் காலத்தில், ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்னால், இதைப் பற்றி கியூறியஸ் ஜி பத்திகளில் எழுதியிருக்கிறேன். ரொறன்ரோவில் உள்ள பிரபலமான குயீன் வீதியின் கிழக்குப் பகுதியில், ரொறன்ரோ நகரைப் பிரிக்கும் நதிகளில் ஒன்றான டொன் நதியைக் கடக்கும் இரும்புப் பாலம் ஒன்றின் முகப்புப் பகுதியில் இந்த வார்த்தைகள் நூறு வருடங்களுக்கு முன்னால் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கிரேக்க தத்துவவியலாளரான Heraclitus உதிர்த்த தத்துவம் ஒன்றின் இன்னொரு வடிவம் அது.

'நீங்கள் ஒரு நதியில் இரண்டு முறை இறங்க முடியாது.'

ஓடிக் கொண்டே இருப்பது நதி.

கால் வைத்த நீங்கள் அங்கேயே நின்றிருப்பீர்கள்.
நதி எங்கோ போய் விட்டிருக்கும்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்று அடிக்கடி பேஸ்புக் வாழ் மேதாவித் தத்துவவியலாளர்கள் மொக்கைப் பதிவு போடுவது இந்த அர்த்தத்தின் அடிப்படையில் தான்.

ஆனால், மாற்றமே காண முடியாத ஒன்று உண்டு.

உலகம் எங்கோ போய் விட்டிருக்க...

இன்னமும் அதைத் தெரிந்து கொள்ளாமல், நாற்பது வருடங்களுக்கு முன்னால் வைத்த நிறைவே(ற்)ற முடியாத கோரிக்கை ஒன்றை வைத்துக் கொண்டு, இன்றைக்கும் ஜெனிவாவில் கொடி பிடித்தால், ஐ.நா தீர்வு வாங்கித் தரும் (அல்லது தர வேண்டும்!) என்று நம்புகிற யாழ்ப்பாணிச் சிந்தனை தான் அது.

எந்த irresistible force க்கும் அசைந்து கொடுக்காத immovable object அது.

யாழ்ப்பாணிக்கு மாற்றம் என்பது அனந்தி, கஜேந்திரன், விக்னேஸ்வரன், சுமந்திரன், கரி ஆனந்தசங்கரி என்று அவ்வப்போதெல்லாம் மாறி, தற்போதைக்கு சனல் போரும், அசாத் அலியும் மட்டும் தான்.

நாளைக்கு இன்னொன்று கிடைக்காமலும் போகாது!

ஏதோ ஒன்று அகப்படத்தான் செய்யும்.

ஆனால், ஜெனிவாக் காவடியும், புலிக் கொடியும், அத்தோடு குலுக்கப்படும் உண்டியலும் என்றைக்குமே மாறாது.

""""

பேஸ்புக் கூட அப்படித் தான்.

ஓடிக் கொண்டே இருக்கும்.
நீங்கள் கரையில் நின்றபடி கல் எறிந்து கொண்டிருப்பீர்கள். நதி எங்கோ போய் விட்டிருக்கும்.

நான் அடிக்கடி சொல்வது போல, பேஸ்புக்கில் எல்லாமே 'இந்த வார ஸ்பெஷல்!' தான்.

வானொலிகளில் வரும் 'இன்றைய மார்க்கட் நிலவரம்' 'மரக்கறி விலைகள்' மாதிரி!

எந்தப் பரபரப்பின் ஆயுளும் ஒரு வாரத்திற்கு மேல் இருந்ததில்லை.

தாங்களும் கருத்துச் சொல்லா விட்டால், 'கள்ள மௌனம் சாதிப்பதாக' குற்றம் சாட்டப்படக் கூடும் என்ற எண்ணமோ? அல்லது தங்களுடைய திரு நா மொழிவுக்காய் உலகமே காத்திருப்பதான நினைப்போ?

கருத்துக் கந்தசாமிகள் தவறாமல் இந்த ஒவ்வொரு நிகழ்வும், கருத்துக்களும் பற்றித் தங்களுடைய நிபுணத்துவத்தைப் பறை சாற்றித் தொலைக்க வேண்டியிருக்கிறது.

இதனால், பங்குச்சந்தையில் தினசரி வாங்கி விற்கும் day traders போல, சதா கண்ணுக்குள் எண்ணெய் விட்டபடி, உலகின் சகல நிகழ்வுகளும் பற்றிய தங்கள் சீரிய சிந்தனைகளை, பதினைந்து நிமிடத்திற்கு ஒரு பதிவாகப் போட்டு, பத்து விரல்களுக்குள் அடங்கக் கூடிய எண்ணிக்கையிலான விருப்புக் குறிகளையும், தங்கள் பதினைந்து நிமிடப் புகழையும் பெற்று, புளகாங்கிதத்தையும் பிறவிப் பெரும்பயனையும் அடையும் மேதாவிகள் தொல்லை சொல்லி மாளாது.

அந்தப் பதிவுகளை எல்லோரும், அவர்கள் உட்பட, அடுத்த வாரம் மறந்தே விடுவார்கள்.

மனுஷின் கவிதைகள் மாதிரி.

அவரே மறந்து போய், 'இதை நான் எங்கே எழுதியிருந்தேன் என்று பார்த்துச் சொல்ல முடியுமா?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அவருடைய கவிதை ஏதோ அவரால் மட்டும் எழுதக் கூடியதானதாகவும் இல்லை.

காதல் வயப்பட்ட எந்த juvenile ம் அவற்றைப் போன்ற கவிதைகளை எழுதி விட முடியும்.

அந்த விடலைகள் என்ன, அட, நானே அதை விடச் சிறந்ததாக காதல் கவிதைகளை எழுதி விட முடியும்.

ஆனால் அது யாரை நோக்கியது என்று ஆண்களும், தங்களை நோக்கியதாக இருக்குமோ? என்பதில் பெண்களுமாக, துப்புத் துலக்குவதில் தங்கள் தூக்கத்தைத் தொலைக்கக் கூடும் என்பதால் அந்த பாவங்களை எல்லாம் நான் அனாவசியமாகச் செய்வதில்லை.

தற்போது செயற்கை நுண்ணறிவிடம் கேட்டால், Piss You! என்றதொரு காதல் கவிதைத் தொகுதியையே தந்து, காதலை ஏற்க மறுத்தோரைக் கடுப்பு ஏற்றவும் கூடும்.

அதிகமாக ஈன்று தள்ளினால், பன்றியினால் தன் பிள்ளைகளைக் கூட அடையாளம் காண முடியாது!

இதெல்லாம் கிடக்க, இப்படித் தான் அடுத்த வாரம் பரபரப்பைக் கிளப்ப ஒருவரும் தான் இல்லாவிட்டாலும், 'இடைவிடாத இன்பத்தை வழங்கும்' சீமானோ, நித்தியானந்தாவோ, தங்கள் நாக்கினால் என்றாலும் இன்பத்தை வழங்கிக் கொண்டிருப்பார்கள்.

போதாக்குறைக்கு, foot in the mouth disease ஆல் பாதிக்கப்பட்டிருக்கும் 'பத்தாயிரம் புக்குப் படித்த' அண்ணாமலையோ, வன்மத்தை உமிழும் எச்.ராஜா போன்ற சங்கிப் பார்ப்பனர்களோ!?

ஒரே வித்தியாசம் அண்ணாமலை மன்னிப்புக் கேட்பதில்லை.

இப்படி சீமான், எச்.ராஜா, அண்ணாமலை போன்றவர்களின் அரசியல் இருப்புக் கூட, சமூக

**அந்தப் பதிவுகளை எல்லோரும், அவர்கள் உட்பட, அடுத்த வாரம் மறந்தே விடுவார்கள்.
மனுஷின் கவிதைகள் மாதிரி.
அவரே மறந்து போய், 'இதை நான் எங்கே எழுதியிருந்தேன் என்று பார்த்துச் சொல்ல முடியுமா?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.
அவருடைய கவிதை ஏதோ அவரால் மட்டும் எழுதக் கூடியதானதாகவும் இல்லை.**

**காதல் வயப்பட்ட எந்த juvenile ம் அவற்றைப் போன்ற கவிதைகளை எழுதி விட முடியும்.
அந்த விடலைகள் என்ன, அட, நானே அதை விடச் சிறந்ததாக காதல் கவிதைகளை எழுதி விட முடியும்.**

**ஆனால் அது யாரை நோக்கியது என்று ஆண்களும், தங்களை நோக்கியதாக இருக்குமோ? என்பதில் பெண்களுமாக, துப்புத் துலக்குவதில் தங்கள் தூக்கத்தைத் தொலைக்கக் கூடும் என்பதால் அந்த பாவங்களை எல்லாம் நான் அனாவசியமாகச் செய்வதில்லை.**

வலைத்தளங்களின் புண்ணியத்தால் தான் சாத்தியமாகியிருக்கிறது.

வழமையான பெரும் ஊடகங்கள் மட்டுமே இன்றைக்கும் இருந்திருந்தால், அவ்வப்போது ஜூனியர் விகடனில் கிடைக்கும் கழுகார் கிசுகிசு தவிர, இவர்களுக்கு எந்த விளம்பரமும், பரபரப்பு ஏற்படுத்தும் வசதியும் கிடைத்திருக்காது.

இன்றைய யூடியூபர்களாலும், 'செய்த காரியத்தைப் பார்த்தீர்களா?' இணையத் தளங்களாலுமே எத்தனையோ அரசியல்வாதிகளும் சினிமா நடிகர்களும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்... பேஸ்புக் மக்கள் மனதில்!

இவை இல்லாதிருந்தால், இவர்கள் எல்லாம் மறக்கப்பட்டிருப்பார்கள், அல்லது வெறும் பெட்டிச் செய்திகள் தான்...

இலக்கியவாதிகள் பத்திரிகைகளின் உதவி ஆசிரியர்களைக் கவனிக்க வேண்டிய விதத்தில் கவனித்துக் 'கைக்குள் போட்டுக்' கொண்டு தங்கள் புத்தகங்கள் பற்றிய பெட்டிக் குறிப்புகள் போடுவிப்பது போல!

அதை பேஸ்புக்கில் பகிர்ந்தே ஒரு வாரம் பரபரப்பை ஏற்படுத்தலாம்.

ஆக, அரசியல், இலக்கியம், விஞ்ஞானம், உளவியல் என்று சகல துறைகளிலும் புலமை வாய்ந்த நிபுணர்கள் எல்லாம் பேஸ்புக்கில் இருக்கிறார்கள்.

தற்கொலைகளுக்கு உளவள ஆலோசனை வழங்கக் கூட ஆளுக்கு குறைச்சல் இல்லை.

விவசாயத்தில் புலமை வாய்ந்தவன் நான் ஒருவன் மட்டும் தான் போலிருக்கிறது.

உள்ளிகள், கள்ளிகள் பற்றி எல்லாம் படம் போட்டபடி!

இப்படி, எல்லாத் துறைகளிலுமான நிபுணர்கள் ஒரே கூரையின் கீழ் சேவை வழங்கும் ஒரு இடமாகத் தான் பேஸ்புக் இருக்கிறது.

**கண்ணில் படுகிற எல்லாம் பற்றியும் கருத்துச் சொல்வதும் தமது கடமை என்று நினைக்கும் பல கருத்துக் கந்தசாமிகள் பேஸ்புக்கில் இருக்கிறார்கள்.**
**பலர் தமது இருப்பைக் காட்டுவதற்கான வழியாக இதைக் கருதுவதால், இந்த 'அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடுவதில்லை!'.**
**மற்ற பலர், தங்களை மேதாவிகளாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள். தங்களுடைய நிபுணத்துவத்தைக் காட்டுகிறோம் என்று அடித்து விட்டுக் கொண்டே இருப்பார்கள். அதற்கான அடிப்படையாக அறிவு இருப்பதுமில்லை.**
**யாழ்ப்பாணி அரசியல் புல நாய்வாலர்கள் மாதிரி!**
**சும்மா அடிச்சு விட வேண்டியதுதான்.**
**வாயைப் பிளந்தபடி கேட்கும் கூட்டம், அதையே றிப்பீட் பண்ணும்.**
**'47 நாடுகள் சேர்ந்து சதி செய்த' கதை மாதிரி.**

இப்படியாக ஒரு வாரத்தோடு ஒரு பரபரப்பு முடிய, இன்னொன்று வந்து சேரும்.

இதற்கு நான் இன்னொரு உதாரணம் அடிக்கடி சொல்வதுண்டு.

ஊரில் வீடுகள் வீதிகள், ஒழுங்கைகளுக்கு அப்பால், தோட்டங்களுக்கு நடுவில், இருக்கும்.

வீட்டில் நாய் படுத்திருக்கும்.

அதற்கு றோட்டில் எவர் போனாலும், குரைப்பதும், துரத்துவதும் தனது முழுநேரத் தொழில் என்ற நினைப்பில் தான் இருக்கும்.

சைக்கிள் போகும். விட்டுக் கலைக்கும்.
காலைத் தூக்கி பாரில் வைத்து, சர்க்கஸ் காட்டிய சைக்கிள்காரர் கிழுவை வேலிக்குள் கிடப்பார்.

மற்றப் பக்கம் வண்டில் சந்தைக்குப் போகும்.

சைக்கிளை விட்டு வண்டிலைத் துரத்திக் குலைக்கும். வண்டிலில் தொங்கும் வாழைக் குலைத் தண்டையோ, பின்னால் தொங்கும் குத்துக்கட்டையையோ கடிக்கவும் வக்கில்லை.

எதிர்ப்புறமாய் கார் போகும். வண்டில் மறந்து போகும். இப்போது கார்.

இப்படி எதிரும் புதிருமாய் வருகின்ற எல்லாவற்றையுமே, மாறி மாறி கலைத்துக் குரைத்துக் கொண்டே இருக்கும்.

போற வாறதை எல்லாம் பார்த்துக் குரைப்பது தனது கடமை என்பது போலத் தான், கண்ணில் படுகிற எல்லாம் பற்றியும் கருத்துச் சொல்வதும் தமது கடமை என்று நினைக்கும் பல கருத்துக் கந்தசாமிகள் பேஸ்புக்கில் இருக்கிறார்கள்.

பலர் தமது இருப்பைக் காட்டுவதற்கான வழியாக இதைக் கருதுவதால், இந்த 'அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடுவதில்லை!'.

மற்ற பலர், தங்களை மேதாவிகளாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள். தங்களுடைய நிபுணத்துவத்தைக் காட்டுகிறோம் என்று அடித்து விட்டுக் கொண்டே இருப்பார்கள். அதற்கான அடிப்படையாக அறிவு இருப்பதுமில்லை.

யாழ்ப்பாணி அரசியல் புல நாய்வாலர்கள் மாதிரி!

சும்மா அடிச்சு விட வேண்டியதுதான்.

வாயைப் பிளந்தபடி கேட்கும் கூட்டம், அதையே றிப்பீட் பண்ணும்.

'47 நாடுகள் சேர்ந்து சதி செய்த'

கதை மாதிரி.

இந்த மேதாவிகளின் மனக்குறை எல்லாம், புரபைல் படம் மாற்றும் பெண்களுக்குக் கிடைக்கும் விருப்புக் குறிகளின் அளவு தங்களுக்குக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கமாகத் தான் இருக்கும்.

இதெல்லாம் போதாதென்று, தங்களுக்கு அங்கீகாரம் கிடக்கவில்லையே என்று புலம்பும் இலக்கியக் கூட்டம்.

அதில் உள்ள சுவாரஷ்யம், நம்பர் வண்கள் முதல், பேஸ்புக் கவிஞர்கள் வரைக்கும், ஒட்டுமொத்தமான புலம்பலாக அது இருப்பதுதான்.

'உங்களை யாரடா அங்கீகரிக்க வேண்டும் என்கிறீர்கள்?
நீங்களே உங்களை விட, நல்லா எழுதும் ஒருவரை மனம் நிறைந்து பாராட்டுவதேயில்லை. அதற்குள் எதுக்கடா இந்தப் புலம்பல்?' என்று யாரும் கேட்பதுமில்லை.

வைரவருக்கு வாய்த்த நாய் மாதிரி, இவர்களுக்கு ஒரு நட்பு வட்டம்.

அல்லக்கைக் கூட்டம்.

பதிவை வாசிக்காமலேயே விருப்புக் குறியோடும், 'அமைதியில் இளைப்பாறுக!'வுடனும், நதி போல ஓடிக் கொண்டே இருக்கும்.

புரபைல் படம் மாற்றினாலேயே, 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்!' பொறிப் பறக்கும்.

The river you step in, is not the river you stand in.

கும்பலுக்கு எல்லாமே வேடிக்கை தான்.

எனக்கு இந்தக் கும்பலே வேடிக்கை தான்.

பேஸ்புக் புத்திஜீவி யாரைக் கேட்டாலும், மேற்குலகின் மீடியாக்கள் பற்றி, இழுத்து முழக்குவார்கள்.

**வைரவருக்கு வாய்த்த நாய் மாதிரி, இவர்களுக்கு ஒரு நட்பு வட்டம்.**

**அல்லக்கைக் கூட்டம்.**

**பதிவை வாசிக்காமலேயே விருப்புக் குறியோடும், 'அமைதியில் இளைப்பாறுக!'வுடனும், நதி போல ஓடிக் கொண்டே இருக்கும்.**

**புரபைல் படம் மாற்றினாலேயே, 'பிறந்த நாள் வாழ்த்துக்கள்!' பொறிப் பறக்கும்.**

**கும்பலுக்கு எல்லாமே வேடிக்கை தான்.**

**எனக்கு இந்தக் கும்பலே வேடிக்கை தான்.**

மேற்குலகின் மீடியாக்களின் நோக்கமே பணம் சம்பாதிப்பது தான்.

உலகின் எல்லா மீடியாக்களும் போலவே!

அதற்கு இன்றைய மாலைச் செய்தியில் என்ன பரபரப்பு இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம்.

ஆப்கானிஸ்தான் பற்றி இப்போது யாரும் வாசித்திருக்கிறீர்களா?
பான்ஜீர் பள்ளத்தாக்கைத் தலிபான் கைப்பற்றிய பின், அகமட் ஷா மசூத்தின் மகன் தலைமையிலான குழுவுக்கு என்ன நடந்தது என்பதை நானும் தான் அறிய முடியாமல் இருக்கிறேன்.

ஜப்பானில் அணு உலை வெடித்த பின்னால், அந்த அணுக்கழிவு நீருக்கு என்ன நடந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அதெல்லாம் தற்போது 'உடைக்க முடியாத' செய்திகள்.

எந்தப் பயனும் இல்லை.

அந்த நேரப் பரபரப்பில் விற்க முடிந்தது.

ஜப்பானிய அணு உலை வெடிப்பின் போது, சிஎன்என்னில் பூகம்பம் பற்றி விவரணம் செய்து கொண்டிருந்தவர், பூமி அதிர்வின் after shocks ஐ விட, before shocks பற்றித் துள்ளித் துள்ளி விவரித்துக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு மணித்தியாலமும்.

இப்படி, ஓடிக் கொண்டிருக்கும் உலகம்.
அதில் ஓடிக் கொண்டே இருக்கும் மனிதர்கள்.

சமூக வலைத்தளங்களில் சதா கிடக்கும் அவர்கள் கவனத்தைக் கொஞ்ச நேரம் கைக்குள் வைத்திருக்க எது கிடைக்குமோ, அதை வைத்துப் பரபரப்புத் தேட வேண்டும்.

அதற்குச் சில நேரங்களில் மேற்குலகுக்கு கிம் கார்டாஷியான் தேவை.

நம்ம பக்கம் சீமான் போதும்!

இப்படி, பெரு ஊடகங்கள் போலத் தான், சமூக ஊடகங்களும் அடங்கிப் போகிற அந்த வாரப் பரபரப்போடு காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கின்றன.

அந்தப் பரபரப்பும் தொலைக்காட்சிகளின் பிரேக்கிங் நியூஸ்கள் போல, சமூக ஊடகங்களின் மீம்களாக சொற்ப ஆயுளோடு தங்கள் உயிரைத் தற்கொடை செய்து கொள்கின்றன.

ஏதோ ஒரு வருடம் கழித்து பேஸ்புக் நினைவூட்டினால் ஒழிய, எழுதியவருக்கோ, வாசித்தவருக்கோ மனதில் அந்தச் செய்திகள் எந்த சலனத்தையும் ஏற்படுத்துவதுமில்லை.

பேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் எந்த விதமான ஆழமான சமூகப் பார்வைக்கும் விவாதத்திற்குமான தளமாகவும் ஒருபோதும் இருந்ததில்லை.

பணம் கொடுத்துப் பெறும்

பாலின்பம் போல, கண நேரச் சுகிப்புத் தான்.

திருவிழாவில் போட்ட கடை போல, ஆளாளுக்கு ஒரு கடையை வைத்துக் கொண்டு கல்லாக் கட்ட வேண்டியது தான்.

அடித்து மோதும் சனத் திரள்.
அதில் பெரும்பான்மை, வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ள வரும் இளவட்டங்கள்!
இப்போது முதுவட்டங்களும் தான்!

தங்கள் வியாபாரத்தைப் பார்ப்பதைத் தவிர, கடை விரித்த யாவாரிமாருக்கு மற்றக் கடைகளில் உள்ளதைப் பார்க்க நேரம் இருக்காது.

தங்களுடைய வியாபாரமே இலையான் கலைக்கும் போது, இதற்குள் மற்றவர்களைப் பார்ப்பவதாவது?

புத்தகத் திருவிழாவில் கழியறைக்குப் போனால், கையெழுத்து வாங்க வந்த வாசகன் 'மிஸ் யூ!' என்று போய் விடக் கூடும் என்ற பயத்தில், தம் பிடித்துக் கொண்டிருக்கும் இலக்கியவாதிகள் மாதிரி!

வாடிக்கையாளருக்கும் திருவிழா முடிய கடைகள் இழுத்து மூடப்படும் என்பது தெரியும். வாங்கும் பொருட்களுக்கான உத்தரவாதமும் திருவிழா முடியக் கிடையாது என்பதும் தெரியும்.

திருவிழா இரவுகளில், பத்து ரூபாயோடு பற்றைகளுக்குப் பின்னால் கிடைக்கும் கணநேரச் சுகிப்புத் தான்!

இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம்!
உறுஞ்ச உறுஞ்ச உச்சம் வரை இன்பம்!

இலங்கையில் கோத்தபாயாவை 'விட்டுக் கலைத்த' அரகலயப் போராட்டம் என்ன நடந்தது?

'மோடி திரும்பிப் போ!', 'ஆழ்ந்த அனுதாபங்கள்' எல்லாமே அற்ப ஆயுள் கொண்ட வெறும் fads தான்.

அவை சமூக மாற்றத்திற்கான எந்தப் போராட்டத்தையும் புரட்சியையும் எங்கள் பக்கத்தில் ஏற்படுத்தி விடப் போவதில்லை.

மேற்குலகில் கொஞ்சம் வித்தியாசம்.

பெரிய ஊடகங்களும், சமூகத் தலைவர்களும், சிந்திக்கத் தெரிந்தவர்களும் இதில் கலந்து கொள்ளும்போது மக்கள் அபிப்பிராயத்தைத் திருப்ப முடியும்.

வட அமெரிக்காவை விட, ஐரோப்பாவில் மக்களைக் கிளர்ந்தெழுந்து வீதிக்கு வர வைக்க முடியும்.

குறைந்த பட்சம் அடுத்த தேர்தலில் ஆட்சி கவிழ்க்கவாவது முடியும்.

எங்கள் சமூகங்களில் அவ்வாறான ஊடகங்களோ, சமூகத் தலைவர்களோ, சிந்திக்கத் தெரிந்தவர்களோ இல்லை.

அதிலும் நம்ம யாழ்ப்பாணிச் சமூகம் படுத்துக் கிடந்தே பகிஷ்கரிப்புப் புரட்சி செய்யும் சமூகம்.

**புத்தகத் திருவிழாவில் கழியறைக்குப் போனால், கையெழுத்து வாங்க வந்த வாசகன் 'மிஸ் யூ!' என்று போய் விடக் கூடும் என்ற பயத்தில், தம் பிடித்துக் கொண்டிருக்கும் இலக்கியவாதிகள் மாதிரி!**

**வாடிக்கையாளருக்கும் திருவிழா முடிய கடைகள் இழுத்து மூடப்படும் என்பது தெரியும். வாங்கும் பொருட்களுக்கான உத்தரவாதமும் திருவிழா முடியக் கிடையாது என்பதும் தெரியும்.**

**திருவிழா இரவுகளில், பத்து ரூபாயோடு பற்றைகளுக்குப் பின்னால் கிடைக்கும் கணநேரச் சுகிப்புத் தான்!**

**இழுக்க இழுக்க இறுதி வரை இன்பம்!**
**உறுஞ்ச உறுஞ்ச உச்சம் வரை இன்பம்!**

அடுத்த நாள் பத்திரிகையில் 'ஹர்த்தால் பெருவெற்றி!'.

பத்துப் பேர் சேர்ந்தால் 'பேரணி!'.

'இந்தப் படை போதுமா?'.

அதுதான் திலீபன் பேரணி பத்துப் பேர் கொண்ட கும்பலிடம் வாங்கிக் கட்டியது.

ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு தளமாக பேஸ்புக் இல்லாதிருப்பதற்கான அடிப்படைக் காரணமே, பேஸ்புக் என்பது ஒரு நடுவர் (Moderator) இல்லாத விவாதக் களம் என்பது தான்.

எந்த உத்தியோகபூர்வமான கூட்டமாக இருந்தாலும், அதற்கான ஒரு தலைமை இல்லாமல் நடத்த முடியுமா? தலைவர் என்று எவரும் இல்லாமல், பொலிட்பியூரோ வட்டமேசை மாநாடு நடத்தி விட முடியுமா?

எந்த இலக்கியக் கூட்டத்தையாவது, 'சென்ட்ரல் கொமிட்டி' வைத்து நடத்த முடியுமா?

எல்லாருமே சமன் தானே என்று தன் வழியே கூட்டங்கள் நடந்து முடிந்து விடுவதில்லை.

கிடைத்த மைக்கைக் கொடுக்க மறுத்து 'அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல்' கூட்டம் கூடிய நோக்கத்தையே மறந்து தன்னைப் பற்றி நீட்டி முழக்குவோர்...

கூட்டத்தில் சத்தம் போட்டுக் கேள்வி கேட்டு ஆதிக்கம் செலுத்த முனைவோர்...

வடை, டீ மேசைக்கு அருகில், கூட்டத்தோடு சம்பந்தமில்லாமலும், அதில் கூடியிருப்போர் பற்றி அலட்டிக் கொள்ளாமலும், பெரும் சத்தமாக இலக்கிய விவாதம் செய்தபடியிருக்கும் இலக்கிய ஆர்வலர்கள்...

(என்னை அதற்குள் பெரும்பாலும் காணலாம். ஆனால் நான் அங்கே நின்று கொண்டு சத்தம் போட்டு இலக்கிய விவாதம் செய்து கவனத்தைத் திசை திருப்புவதில்லை.

க்கும். எனக்குச் சபை நாகரீகம் தெரியுமாக்கும்!)

இவர்களையெல்லாம் கட்டி மேய்க்க, ஒரு புஹாஹா 'தலைமை ஒருங்கிணைப்பாளர்' இருந்தே ஆக வேண்டும்.

இல்லாவிட்டால், ஆட்கள் வெளியேறி விட்டாலும், முன்னே 'ஓஃப்' பண்ணிக் கிடக்கும் கமெரா, அந்த வரலாற்றுக் கணத்தைப் பதிவு செய்து, உலகெங்கும் நேரலையில் ஒளிபரப்புவதை, 'வீட்டுக்கு வீடு கைபேசிகளுக்கு முன்னால் உட்கார்ந்து' பார்வையிட்டுக் கொண்டிருக்கும் ரசிகப் பெருமக்களை ஏமாற்றி விடக் கூடாது என்று இந்த ஆளுமைகள் எல்லாம் தங்கள் பேருரையை நிகழ்த்தி முடிக்காதிருப்பார்கள் அன்றோ!?

இப்படி, பேஸ்புக்கில் தர்க்க ரீதியானதும் ஆரோக்கியமானதுமான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்ய முடியாதபடிக்கு, 'கூச்சல் போடும்' சபை குழப்பிகளுக்கு நம் சமூகத்தில் என்றைக்கும் தட்டுப்பாடும் இருந்ததுமில்லை.

சமூக நீதி பற்றியும், உண்மைகள் பற்றியும் கருத்துச் சொல்ல வரும் எவரையும், எந்த வித தர்க்க ரீதியான நியாயங்களையும் முன்வைத்து விவாதிக்க வக்கின்றி, வெறும் கூச்சலிட்டே விரட்டக் கூடிய அளவில் தான் இன்றைய சமூக வலைத்தளங்கள் இருக்கின்றன.

துரோகி ஆக்கப்பட்டு விடுவோமே என்ற பயம் தான் இன்றைக்கும் யாழ்ப்பாணிகளுக்கு கருத்துச் சொல்ல நினைக்கும் எவருக்கும் இருக்கிறது.

இதனால் தான், எங்களுக்கு திலீபன் காந்தியாக வந்து

**இந்த கோமாளிகள் ஒரு புறம் என்றால், எங்கள் கருத்துக் கந்தசாமிக் காமெடி பீஸ்கள் இன்னொரு புறம்.**

**இவர்களுக்கு எந்த விதமான ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்துக்கும் பயம். வசமாக மாட்டிக் கொண்டு வாங்கிக் கட்ட வேண்டி வரும் என்பதால்.**

**சரக்கே இல்லாமல் யாவாரம் பண்ணி, தங்களைப் பெரிய ஆட்களாகக் காட்டிப் பீலா விட, பேஸ்புக் மணிச் சாமான்.**

**பதினைந்து நிமிடத்திற்கு ஒரு பதிவு போடலாம்.**

**பத்து லைக் கூடக் கிடைக்கா விட்டால் என்ன? பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்து விடுகிறதே!?**

அவதரித்திருக்கிறார்.

உண்ணாவிரதம் இருப்பது தான் காந்தி ஆவதற்கான தகுதி என்றளவுக்கு சிந்தனை மேம்பட்ட படித்த யாழ்ப்பாணிச் சமூகம்.

உயிரோடு போராளிகளை எரியும் டயர்களுக்குள் தூக்கி எறிந்த வெறியாட்டத்துக்குள் கொலைவெறியோடு அலைந்து போட்டுத் தள்ளிய ஒரு கொலைகாரனை 'உலகத்துக்கே அகிம்சையைப் போதித்த போதிசத்துவன்' என்று அடிச்சுச் சத்தியம் பண்ணும் சமூகத்தில், ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றமும் சிகையும்!

எப்படி கற்றறிந்தவர்களை எல்லாம் புலித் தலைமை போட்டுத் தள்ளியதோ, அண்ணையின் துவக்குக்குப் பயந்த படிச்ச யாழ்ப்பாணிகள் எல்லாம் 'அண்ணை, அடிச்சுப் பறிப்பார்' என்று அண்ணையின் காலடியைப் போற்றிப் பாடினார்களோ, அதைப் போல இன்றைக்கும் இந்த 'சபை குழப்பிகள்' தங்களையும் துரோகிகள் என்று விடுவார்களோ என்ற பயத்தில், பேஸ்புக்கில் திலீபனையும், மற்ற யாழ்ப்பாணிகளையும் சுத்தி காலில் விழுந்து வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவன் அணுஅணுவாக செத்துக் கொண்டிருந்ததை, வரிசையில் நின்று வேடிக்கை பார்த்த கும்பல்!

உங்களையும் பார்த்துக் கொண்டிருக்கும்.

ஜெயலலிதாவின் காலில் விழுந்த அமைச்சர்கள் மாதிரி, நீங்களும் விழாவிட்டால் துரோகி தான்!

எனவே, எல்லாரையும் சுத்திக் காலில் விழ வேண்டியது தான்.

தலைவர் வரப் போகிறார் என்று ஊரே தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கும்போது, அந்த ஊரை நீங்களும் சுத்த வேண்டியது தான்.

காலில் விழ அம்மா இல்லாமல் போனால் என்ன?

சின்னம்மா உண்டு!

தன்மான, ரோஷம் இல்லாமல் காலில் விழுவதும், நக்குவதும் தான் முடிவு என்றான பின்னால், அது யாருடைய காலாக இருந்தால் தான் என்ன?

பிரபாகரன் இல்லாது போனால் என்ன?
ஒரு விக்னேஸ்வரனோ, கஜேந்திரனோ கிடைக்காமலா போனது?

இந்த கோமாளிகள் ஒரு புறம் என்றால், எங்கள் கருத்துக் கந்தசாமிக் காமெடி பீஸ்கள் இன்னொரு புறம்.

இவர்களுக்கு எந்த விதமான ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்துக்கும் பயம். வசமாக மாட்டிக் கொண்டு வாங்கிக் கட்ட வேண்டி வரும் என்பதால்.

சரக்கே இல்லாமல் யாவாரம் பண்ணி, தங்களைப் பெரிய ஆட்களாகக் காட்டிப் பீலா விட, பேஸ்புக் மணிச் சாமான்.

பதினைந்து நிமிடத்திற்கு ஒரு பதிவு போடலாம்.

பத்து லைக் கூடக் கிடைக்கா விட்டால் என்ன?
பதினைந்து நிமிடப் புகழ் கிடைத்து விடுகிறதே!?

வாசித்த புத்தகம், எங்கோ படித்த மேற்கோள், புத்திஜீவிகள் என்று காட்டிக் கொள்வதற்கான ஸ்டொக் வார்த்தைகள்...

கர்ப்பிணி ஆக்கப்பட்ட மனைவிமார்கள் எல்லாம் மாய்ந்து மாய்ந்து வீட்டு வேலை செய்ய, ஆடுகளை மேயவிட்டபடி, மரநிழலில் உட்கார்ந்தபடி சர்வதேச அரசியல் பேசும் சோமாலிய நாடோடிகள் மாதிரி, எந்த அடிப்படை அறிவும் இல்லாமல் எதைப் பற்றியும் கருத்துச் சொல்லலாம்.

'இங்க வாடா! வந்து உதைச் சொல்லு, பாப்பம்!' என்றாலும் கேட்காத மாதிரிப் போய்க் கொண்டே இருப்பார்கள்.

'அடிக்க மாட்டம்டா! வாடா!' என்றாலும்!

'உள்ளுக்க வர விட்டு அடி நடக்கும்' என்று தெரிந்திருக்கக் கூடும்!

அவர்களுக்கு என்று ஒரு அல்லக்கைக் கூட்டம் இருக்கும்.
'செமண்ணே!', 'பின்னிட்டீங்கள்ணே!'.
ஒரே புல்லரிப்பும் கிளுகிளுப்புமாய், சுய இன்பம் தான்!
இந்தச் சுத்திஜீவி மொழியில் சொல்வதாயின், 'ஆர்கசம்' தான்.

அந்தப் பத்து அல்லக்கைகளின் சமூகம் தான் இவர்களின் வலைத்தள உலகம்.

இவர்களின் வலைக்குள் அகப்பட்ட அவர்களைப் பரஸ்பரம் குஷிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

எந்தத் தர்க்கரீதியான விவாதங்களுக்கும், கருத்துப் பரிமாற்றங்களுக்கும் தயாராக இல்லாமல், தங்களைப் பற்றி எழுப்பப்பட்ட நியாயமான கேள்விகளுக்குக் கூட, துணிந்து பதில் கொடுக்க வக்கில்லாமல், தங்கள் பதிவுகளில் அனுங்கிக் கொண்டு முணுமுணுத்து மொட்டையாக எதையாவது எழுதிவிட்டு, 'பார், உவருக்குக் குடுத்திருக்கிறன்' என்று அந்த 'ஆர்கசம்' அடைவதோடு, அவர்களின் கருத்துப் பரிமாற்றம் முடிவுக்கு வரும்.

'பின்னி எடுத்திட்டீங்கண்ணே!' என்று எங்கோ முன் பின் தெரியாத அல்லக்கை ஒன்று பின்னூட்டம் போடும்.
பெரும்பாலும், அது அவர்களின் பேக் ஐடிக்களில் ஒன்றாகவே இருக்கும்.

இந்தக் கும்பலின் வேடிக்கைகளைப் பார்க்கும் போது, எனக்கு எந்தக் காலத்திலேயோ படித்த ஜூனியர் விகடன் செய்தி ஒன்று தான் ஞாபகம் வரும்.

ஜெயலலிதா காலத்தில் ஏதோ வேட்பாளர் அறிவிப்போ, எதுவோ கட்சி அலுவலகத்தில் ஆதரவாளர்கள் திரண்டு நின்றிருக்கிறார்கள்.
அறிவிப்பு வந்தபாடில்லை.
சும்மா சேர்ந்த கும்பல் இல்லைத்தான்.
தானாகச் சேர்ந்த கூட்டம் அன்றோ!

பொழுது போகாமல் பெரு விவாதம் தொடங்கியிருக்கிறது.

**பின்னி எடுத்திட்டீங்கண்ணே!' என்று எங்கோ முன் பின் தெரியாத அல்லக்கை ஒன்று பின்னூட்டம் போடும்.**

**பெரும்பாலும், அது அவர்களின் பேக் ஐடிக்களில் ஒன்றாகவே இருக்கும்.**

வாத்தியாருடன் அதிகம் நடித்தது ஜெயலலிதாவா? சரோஜாதேவியா?

விவாதத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் வாத்தியார் காலத்திலேயே பால் குடிகளாக இருந்திருக்கக் கூடியவர்கள் தான். தற்போதைய நடிகர்களின் கட்டவுட்டுகளுக்கு பால் ஊற்றுகிறவர்களின் வயதை விடக் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம்.

நடுவர் இல்லாத விவாதம் தானே!?

'ஜெயலலிதாவுடன் பெருமளவு படங்களும், சரோஜாதேவியுடன் அதிகளவு படங்களும் நடித்திருக்கிறார்' என்று வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக விவாதத்தை ஆப்படித்து முடிவுக்கு கொண்டு வர, நீதி வழங்கும் சாலமோன் ஆப்பையாக்களும் இல்லை.

இதையெல்லாம் தூர இருந்து கவனித்துக் கொண்டிருந்த பெரிசு ஒன்று இச் சிறியார்களின் சிறுமையும், அறியாமையும் கண்டு, மனம் நொந்து வெந்து, தாள முடியாமல், வேகமாக வந்து, இவர்களை நேரடியாகக் கூடப் பார்க்காமல், இவர்களுக்குக் கேட்கக் கூடிய தூ ரத்தில் நின்று, 'ஜெயலலிதாவோட ... படம், சரோஜாதேவியோட .... படம், கே.ஆர்.விஜயாவோட ... படம், மஞ்சுளாவோட ... படம், லதாவோட ... படம்' என்று புள்ளிவிபரங்களை ஒப்புவித்து விட்டு, தன் பாட்டிலேயே போய்க் கொண்டிருந்ததாம்.


இப்படியாக(ன), அறிவாளிகள் எல்லாம் தங்களுடைய புலமையை வெளிப்படுத்தி, எங்களை எல்லாம் அறிவுப் பேரொளியில் ஞானம் பெற வைக்கும் களமாக, நாங்கள் வாழும் காலத்திலேயே எங்கள் சமூகத்தில் ஊடகமாக பேஸ்புக் வந்து சேர்ந்திருப்பது, எங்கள் முற்பிறவிகளான ஏழேழு ஜென்மங்களில் நாங்கள் செய்த பெருந்தவங்களின் பயன் அன்றி, வேறேது!?

அ










# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**
**என்ற வார்த்தையைத்**

**தேடுங்கள்...**
**கண்டடைவீர்கள்!**

# (ெ)மகா அல்பம்:

தாயகம் சுவடிகள்

## The Ultimate Remix

சிறுகதை

**தாயகம் இணையத் தளத்தில் எழுதியது.**

சித்தப்பாவுக்கும் எனக்கும் எப்படி சம்பந்தம் வந்தது என்ற மர்மம் என்னால் இன்னமும் துலக்கப்பட முடியாமல் இருக்கிறது. இத்தனைக்கும் இவர் ஒன்றும் என் அப்பாவின் தம்பியுமல்ல, என் சின்னம்மாவின் புருஷனும் அல்ல. யாரோ ஒருவனுக்கு சித்தப்பா ஆனதால், எனக்கும் எனது றூம் மேட்கள் உட்பட அனைவருக்குமே அவர் சித்தப்பா ஆகி விட்டார்.

நாங்கள் பிரமச்சாரிய விரதம் பூண்டிருந்த காலங்களில் பிரதி சனிதோறும் எங்கள் றூமில் நடைபெறும் தீர்த்தத் திருவிழாவில் கலந்து கொள்கின்ற மெய்யடியார்களில் இவரும் ஒருவர்.

என் றூம்மேட்கள் எல்லாருமே கர்ண பரம்பரை.. சாப்பாடு, குடி விசயத்தில் கர்ணன் போல் கொடை வள்ளல்கள். இதனால் அவர்களின் எல்லா நண்பர்களும் அவர்களின் நண்பர்களும் அந்த நண்பர்களின் நண்பர்களும் என திருவிழா கோலாகலமாக நடைபெற்ற நாட்கள் ஒன்றில் வந்து சேர்ந்தவர் இவர். இவர் எங்களோடு ஒட்டிக் கொண்டது பற்றி பல்வேறு கர்ணபரம்பரைக் கதைகள் அவ்வப்போது காதில் விழுந்தாலும் யாரும் அதை உறுதி செய்ய முயன்றதில்லை.

ஒருநாள் பியர் கேசை தோளில் சுமந்து எலிவேட்டரில் வந்த நண்பர்களோடு.. இரவில் மீன் வாங்கி வரும் போது தனிப்பனையடியில் இருந்து தொத்தி வந்து சேர்கின்ற கொத்திப் பிசாசு மாதிரி.. பின்னால் இவர் வந்ததாகவும், இவர் யாரையோ தேடி வந்திருப்பதாக எல்லாருமே நினைத்திருக்க.. யாரோ நீட்டிய ஒரு பியருடன் போதை ஏறி பிதற்றத் தொடங்க..

'பாவம் மனிசன், பமிலி பற்றி வொறீஸ்' என்று எல்லாருமே அனுதாபப்பட்டு இன்னொரு போத்தலைத் தூக்கிக் கொடுக்க.. வந்திருந்த யாரோ ஒருவன் தனக்கு தெரிந்த ஒருவனின் சித்தப்பா இவர் என்று சொன்னது முதல்.. இவர் எங்கள் எல்லோருக்குமே சித்தப்பா ஆனது மட்டுமன்றி.. அடுத்த சனிக்கிழமைகளில் உரிமையுடன் போன் அடித்து 'என்ன மாதிரி.. இண்டைக்கும் பார்ட்டியோ' என்று கேட்டு ஆஜராகி வந்தவர்.

பாவம் மனிசன்.. எல்லோரும் குடிக்கும்போது வந்து குடிச்சு சாப்பிட்டுப் போகட்டுமன் என்ற பரிதாபம் எல்லோருக்குமே.. ஆனாலும் ஒரு பியர் குடிச்சவுடன் அழத் தொடங்குகின்ற ஜாலம் மட்டும் எனக்கு நீண்ட நாட்களாகவே சந்தேகமாகத் தான் இருந்தது. எல்லோருக்கும் வெறி ஏறியவுடன்.. போத்தல் போதாமல், களவாக விற்கின்ற கடைகளில் போய் வாங்குவதற்காக கலக்சன் நடக்கும் நேரமாகத் தான் சித்தப்பாவுக்கு 'பமிலி பற்றிய வொறீஸ்' வருவது பற்றிய என் சந்தேகத்தை நாகரிகம் கருதி நான் வெளியில் விடவில்லை.

எங்களை ஏதோ முட்டாள்களாக்குவதாக அவர் பெருமைப்பட விடக்கூடாது என்பதில் எனக்கு இருந்த உறுதியில் ஒருநாள்.. பெடியள் போத்தல் வாங்க கலக்சன் தொடங்க.. 'மச்சான் என்னத்துக்கடா இந்த கலக்சனைத் தொடங்கிறியள், சித்தப்பாவல்லோ பமிலியைச் சாட்டி அழத் தொடங்கப் போறார்' என்று நான் கடிக்க..

அன்று மட்டும் அழாமல்.. அடுத்த முறை எல்லோரும் சுற்றி இருப்பதை உறுதி செய்து கொண்ட பின்னால், பெரும் சத்தமாக கலக்சனுக்கு ஐந்து டொலரைக் கொடுக்க.. அதை பிடுங்கி சித்தப்பாவின் கையில் வைத்து 'சித்தப்பா உந்தக் காசுக்கு வாங்கிறதை விட நீங்கள் கூடக் குடிக்கிறியள், நீங்களே வைச்சுக் கொள்ளுங்கோ, நீங்கள் எங்கட சமறியில் குடிச்சதாகவே

www.thayagam.com
தாயகம்

**ஜோர்ஜ் இ.**

இருக்கட்டும்' என்று சொன்னது றூம்மேட்களுக்கு ஒருமாதிரி இருந்தாலும் அடுத்த நாள் வெறி முறிந்த பின்னர் நான் கொடுத்த கொள்கை விளக்கத்தில் எல்லாருமே அமைதியானார்கள்.

'நாங்கள் வாங்கியிருந்தால் நானும் காசு போட்டுத்தான் பியர் வாங்கினனான் என்று இவர் வாழ்நாள் முழுவதும் சொல்லிக் கொண்டிருப்பார்' என்ற வாதத்தை எல்லோருமே ஆமோதித்தார்கள்.

இருந்தாலும் அடுத்த முறை மனிசன் வராதே என்று கவலைப்பட்டவர்கள் எல்லாம் மானரோசம் இல்லாமல் மனிசன் பல்லிளித்துக் கொண்டு வந்ததால்.. 'இனியென்ன.. சூடு சுரணை இல்லாதவரைப் பேசி என்ன' என்று.. அவ்வப்போது வெறி ஏறுகின்ற தருணங்களில் கடிக்க எதுவுமில்லாத போது ஓசிக்குடிகாரர்கள் பற்றி தாங்களும் கடித்துக் கொண்டார்கள்.

சித்தப்பா பற்றிய விபரங்களும் யாருக்கும் பெரிதாக தெரிந்ததில்லை. யாரோ பெடியன்களுடன் எங்கோ இருக்கிறார், எங்கோ றெஸ்ரோறன்றில் வேலை செய்கிறார் என்ற செவிவழிச் செய்திகள் தவிர வேறு எதுவும் எவருக்கும் தெரியாது. காலப் போக்கில் பார்ட்டிக்கு வருகின்ற பெடியன்களின் பணமுடைக்கு 'தெரிஞ்ச இடத்தில வட்டிக்கு குடுக்கினம், விருப்பம் எண்டால் எடுத்துத் தரலாம்' என்று சிலரைக் கடனாளிகளாக்கியதில் அவர்களைக் காண வருவதாகக் கூறி சனிக்கிழமைகளில் அவர் முன்னறிவிப்பில்லாமலே ஆஜராகத் தொடங்கியதும் சிங்கன் பற்றிய விசயங்கள் எனக்கு வெளிக்கத் தொடங்கியது.

கூட இருந்த பெடியன்களிடம் வாடகைக்கும் சாப்பாட்டுக்கும் கடன் சொல்லி.. பின்னால் ஒருநாள் சொல்லாமல் கொள்ளாமல் பெட்டி படுக்கைகளுடன் மாயமாய் மறைந்ததாகவும்..

அரசாங்க குடியிருப்பு ஒன்றில் இடம் எடுத்து.. அரச உதவிப் பணத்துடன் களவாக றெஸ்ரோறன்றில் வேலை செய்வதாகவும் ஊருக்குள் பலருக்கு வட்டிக் கொடுத்து எக்கச்சக்கமான காசு வெளியில் இருப்பதாகவும் சில தகவல்கள் கசிந்திருந்தன.

பசியால் வாடும் ஏழை எளியவர்களுக்கு இலவசமாய் உணவுப் பொருட்கள் கொடுக்கும் 'உணவு வங்கி' பக்கமாக கண்டதாக சொன்னவர்களும் உண்டு.

மயிந்தி என்ற அழைக்கப்படும் மகேந்திரன் என்ற மெய்யடியான் தன் அக்காவுக்கு கலியாணம் என்று 'எல்லோரும் வரவேணும்' என்று பார்ட்டியில் கூறியதைக் கேட்டு தன்னையும் உள்ளடக்கி, பமிலி பற்றிய வொறீஸ் இல்லாமல் விஸ்கி குடித்து.. வீடியோ முன்னால் அன்பளிப்பாக என்வலப்பைக் கொடுத்து… மறுமுறை.. சுவரில் பட்டு திரும்பிய பந்தான செக்கை மயிந்தி எல்லோர் முன்னாலும் கொடுக்க.. வாங்கி கூச்ச நாச்சமின்றி வாங்கி பொக்கட்டில் போடுகின்ற வித்தை சித்தப்பாவினால் தான் முடியும்.

எவ்வளவோ பணமிருந்தும் பரிதாபத்தை உண்டு பண்ணும் பரதேசிக் கோலத்துடன் அல்ப புத்தி வேலைகள் செய்வதைப் பார்க்கும் கோபம் வந்தாலும் It#s all in their heads என்ற என்னுடைய மகாதத்துவத்துக்கூடாகத் தான் பார்க்கத் தோன்றியது.

மனிதனுடைய வாழ்வு அவனுடைய தலைக்குள் இருக்கும் சிந்தனையின் வெளிப்பாடு தான்.

அதாகப்பட்டது..

வேண்டாம்… இதை விளங்கிக் கொள்ள நீங்கள் இரண்டு பியர் அடிச்சிருக்க வேண்டும்..

பின்னர் குடும்பம் வந்ததாகவும் அவர்களை 'இமிக்கிரேஷனுக்கு கூட்டிப் போக ஆள் வேண்டும்' என்று றூமில் இருந்த சந்திரனைக் கேட்க.. அவன் 'உவன் தான் ஃப்பிறீயாய் இருக்கிறான்' என்று என்னை மாட்டி விட… சித்தப்பாவின் குடும்பத்துக்கே நான் வேண்டப்பட்டவன் ஆக வேண்டிய நிர்ப்பந்தம்.

அந்தக் காலத்தில் இப்போது மாதிரி டிறெக்டரிகளில் லிஸ்டிங் போடும் குடிவரவு ஆலோசகர்கள், பத்திரிகைகளில் விளம்பரம் போட்டு வெல்பெயர் எடுத்துக் கொடுக்க காசு அறவிடும் சமூகசேவை ஸ்தாபனங்கள் எல்லாம் இருந்ததில்லை.

இங்கிலிஸ் தெரிந்த எல்லோருமே சக அகதிகளுக்கு செய்யும் உதவியாகத் தான் செய்து வந்த காலம்..

கேஸ் எழுதுவது முதல் வெல்பெயர் அலுவலகம் கூட்டிப் போவது வரை.. இப்போது அது பெரிய இண்டஸ்றி. காசைக் காட்டாவிட்டால் உங்களுக்காக ஒரு நாயும் குலைக்காது..

மூத்த மகனும் மகளும் மனிசியும் ஊரிலிருந்து வந்து அசல் பட்டிக்காட்டான் பட்டணம் பார்க்க வந்த தோற்றத்தில், பேந்தப் பேந்த அல்லது மலங்க மலங்க முழித்துக் கொண்டு.. அசல் சோமாலிய அகதிகள் கணக்கில் இருந்தார்கள்… மூக்குச்சளி வழிய, எலும்பும் தோலுமாய், இலையான் மொய்க்காத குறையாக.. வெள்ளை காலுறைகளும் பாவாடை சட்டையுடனும்..

முதல் நாள் போய் வந்ததும்.. சித்தப்பாவுக்கு ஒரு மகள் இருந்த விசயத்தை எங்கோ கேள்விப்பட்ட கூட்டம் 'மச்சான், சரக்கு எப்படி' என்று ஆவலோடு ஜொள்ளு வடிக்க.. இருந்த கடுப்பில்..

'மிளகாய், மிளகு மாதிரி' என்று வர்ணிக்க… 'அவ்வளவு காரமான சிவப்போ' என்று புல்லரிக்க..

'சீ.. செத்தல் மிளகாய் மாதிரி உடம்பு, மிளகு மாதிரி நிறம்' என்றதும் தான் கூட்டம் நிம்மதிப் பெருமூச்சு விட்டது. இல்லாவிட்டால் நான் கிளப்பிக் கொண்டு போயிருப்பேன் என்ற மாதிரி..

பமிலி வருவதாகக் கூறி சனிக்கிழமைகளில் நகர்வலம் வந்து கராஜ் சேல்களில் வாங்கிக் குவித்த சமையலறை உபகரணங்கள்,

லைட்டுக்கள், தளபாடங்கள், குளிரூட்டிகள் எல்லாம் வீட்டை நிறைக்க... இரட்சணிய சேனைக் கடைகளை நவீன சந்தைகள் என்று புலுடா காட்டி, ஒரு டொலர் உடுப்புகளையும் 'ஐயோ, சிலோன் காசுக்கு எழுபது ரூபா' என்ற அன்ரியின் ஆட்சேபனையையும் மறுத்து.. உடுப்புகளையும் வாங்கிக் குவித்து.. சித்தப்பாவின் பமிலி லைஃப் கனடாவில் ஆரம்பித்தது.

குடும்பம் ஆனதால் மூன்று படுக்கையறை வீடு வேண்டும் என்பதற்காகவும் 'வெல்பெயர் கூட காசு தரும்' என்பதற்காகவும் நீண்ட நாள் பிரிவுத் துயரை அடக்கி வைத்திருந்த 'காய்ஞ்ச மாடு கம்பில் விழுந்து' குடும்பம் பெருத்தது. புதிதாய் தோன்றிய மூன்று குஞ்சு குருமான்களுக்கு நானும் மாமாவாகி.. வேண்டியோ வேண்டாமலோ இழுபட வேண்டியதாகியும் விட்டது.

சித்தப்பாவின் அன்ரி ஒரு அடுத்த மர்மம். உந்த மனிசன் இப்படி ஒரு மனிசியை எங்கே தேடிப் பிடித்தது என்று. அப்படி ஒரு ஜோடிப் பொருத்தம். பழந்தமிழ்ப் பண்டிதர்கள் எல்லாம் சொன்னது மாதிரி பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதை மாதிரி இல்லை.. வைரவருக்கு வாய்ச்ச நாய் மாதிரி.. சிங்கனுக்கு சிங்கி 'ஊறுகாயும் சோறும் போல சேர்ந்து வந்த மாஜாலத்தை' என்னால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.

வந்து கொஞ்ச நாளிலேயே சீட்டுக்கு ஆள் பிடித்து அதற்குள் இவரும் சேர்வார் தானே என்று என் காதுபடுகிற மாதிரி கதையும் விட்டு சீட்டுச் சேர்ப்பதற்குள் நான் கழுவின மீனில் நழுவின மீன் ஆனேன்.. 'அன்ரி என்ன நான் வேலையில்லாமல் திரியிறன்..'

இங்கிலிஷ் சுட்டுப் போட்டாலும் வராத அன்ரி அந்த பில்டிங்கில் வசிக்கும் கத்திச் சா எனப்படும் சோமாலிய கதீஜா, 'கத்திறன்' எனப்படும் ஸ்பானிய கத்தரின், அராபிய சேக்குகளின் அந்தப்புரத்தில் இடுப்பை ஆட்டி மயக்கும் அழகிகள் பாணியில்.. வேக வைக்கும் வெயிலிலும் கறுப்புத் துணியால் உடலை மூடி கண்களை மட்டும் வெளியே காண்பிக்கும் ஏதோ ஒரு 'ஸ்தான்' நாட்டுப் பெண், வெல்பெயர் காரியின் தொல்லை தாங்காமல் இங்கிலிஸ் படிக்க போன இடத்தில் சந்தித்த 'ரின் மீன் சம்பல்' எனப்பட்ட தியன் மின் சியான்பாவோ என்ற 'சப்பட்டை' உட்பட்ட இங்கிலிஷ் சுட்டுப் போட்டாலும் வராத மல்ட்டிக்கல்ச்சரல் மாதர் குல மாணிக்கங்களை சீட்டுக்கட்டு ராணிகள் ஆக்கிய சூட்சுமமோ, வட்டிக்குக் காசு வாங்கி பரிதாபமாய் செத்துப் போன சிதம்பரியின் சாம்பல் சூடு ஆறி, மனைவியின் கண்ணீர் வற்றுமுன்பாகவே, துக்கம் விசாரிக்கும் சாட்டில் போய் 'எப்படியாவது வட்டியையாவது மாதம் மாதம் தரப்பாருங்கோ, நாங்கள் காசு வாங்கித் தந்தவே எங்கட கழுத்தை நெரிக்கினம்' என்ற மனிதாபிமானமோ, யாரிக்குரிய முதல் மாதச் சீட்டை வட்டிக்கு விட்டு வட்டிக்காசில் சீட்டைக்கட்டி 'ஆறை நூறு' ஆக்குகின்ற சாமர்த்தியமோ.. அன்ரியைத் தவிர வேறு யாரால் தான் முடியும்?

இவ்வாறாக சித்தப்பாவின் வட்டி வியாபாரம் ஒரே கூரையின் கீழ் சீட்டுக்கட்டுடன் விஸ்தரிக்கப்பட்டது. வட்டிக்கு வாங்கி சுத்தித் திரிபவர்களை உடுப்பு உரியிற மாதிரி ஏக வசனத்தில் 'என்ன காசை வாங்கிப் போட்டு ஒளிச்சுத் திரியிறீர்' என்று பேசி.. சீட்டுக்காசுக்கு முதல் திகதி அடித்து நித்திரையால் எழுப்பி என்று அன்ரி ரெலிபோனில் பிசியாய் இருந்ததால் 'இனி எங்க சமைக்கிறது' என்று சித்தப்பா இரவுகளில் றெஸ்ரோறன்றில் மிஞ்சிய சாப்பாடுகளைக் கொண்டு வரும் வரைக்கும் எல்லோருமே பார்த்துக் கொண்டிருக்கும் நிலையும் வந்தது.

வேலையால் வரும் சித்தப்பாவும் நம்பிக்கைக்கு பங்கம் வராமல் கொண்டு வந்த சாப்பாட்டை மேசையில் வைத்து விட்டு, ஜக்கட்டைக் கழற்றும் போது, மந்திரவாதி முயல் எடுத்த மாதிரி உள்ளேயிருந்து வெங்காயமோ, நுண்ணிய சீனிப்பக்கட்டுக்களோ எடுப்பார்.

அன்ரியின் வெற்றிகரமான தாக்குதல்களில் தற்காலிக பின்னடைவை ஏற்படுத்திய விசயம் அந்த பேர்த்டேப் பார்ட்டி தான். அதுகூட சித்தப்பா தன்னுடைய கிறவுண்ட் வேர்க்கை சரியாக செய்ததால் தான் வெற்றிகரமாக பின்வாங்க வேண்டி ஏற்பட்டது.

யாரோ கூப்பிட்ட பேர்த்டேப் பார்ட்டியில் நிறைந்த சனத்தையும் கைமாறிய என்வலப்புகளையும் கண்டு வாயூறி... தெரிந்தவர், தெரியாதவர் எல்லாருக்கும் குஞ்சுவின் பேர்த்டேக்கு டெலிபோன் அடித்து சொல்லி, 'உவர் தம்பிக்கும் சொல்லுங்கோ, ஒரு நூறு டொலர் எண்டாலும் கொண்டு வந்து போட மாட்டாரே' என்று என் காதுபட சித்தப்பாவுக்கு சொல்லி, ஹோலும் வாடகைக்கு எடுத்து கொண்டாடிய கொண்டாட்டத்துக்கு.. சித்தப்பா யாருக்கும் எதுவும் கொடுத்து வைத்திருக்காததாலும், அவருக்கு கொடுத்தாலும் திரும்பி கிடைக்காது என்பதாலும், அன்ரியின் கஸ்டமர் றிலேஷன்ஸ் பற்றி ஊரில் இருந்த நன்மதிப்பு காரணமாகவும் பலர் காய் வெட்டி விட்டார்கள்.

நானும் 'சித்தப்பா, சொன்னா நம்ப மாட்டியள், வாற வழியில' என்று பச்சைப் பொய் ஒன்றை அவிழ்த்து விட்டேன். மயிந்தியின் அனுபவம் காரணமாக றூம்மேட்டுக்களும் போகவில்லை.

முடிவில் வந்திருந்த கொஞ்சப் பேரும் 'டொலர் கடையில பொம்மையை வாங்கிப் போட்டு, வந்து திண்டுட்டுப் போகுதுகள்' என்ற அன்ரியின் திட்டுதலுக்கு ஆளாகி.. குழந்தையை வாழ்த்த வைத்த கொண்டாட்டம் எல்லோரையும் வைது தீர்ப்பதில் முடிந்தது. மிஞ்சிய சாப்பாட்டை முழு பிரிட்ஜையுமே ஃப்ரீஸர் ஆக்கி அடுத்த ஒன்றரை மாதத்தை அன்ரி சமாளித்ததில் தற்காலிக பின்னடைவு

வெற்றிகரமான பின்வாங்கலானது.

அந்தப் பின்னடைவிலிருந்து மீண்ட மாதிரி கொஞ்ச நாளில் தங்கம் ஜொலிக்க நெஞ்சைத் திறந்து சிங்கன் சித்தப்பா சங்கிலிகளுடன் வலம் வந்தார். விசாரிக்கப் போக.. 'என்னடா, உழைச்ச காசை அனுபவிக்க வேணும் தானே' என்று சித்தப்பா தத்துவம் பேச.. இதென்னப்பா, பட்ட மரத்தில பால் வடியுது என்று நான் பிரமித்துப் போக.. அன்ரி நகை அடைவு பிடிக்கும் பிஸினஸ் தொடங்கிய விசயம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியில் வந்தது.

அடிக்கடி போய் வந்தாலும் அந்த அப்பாட்மெண்ட் வாசம் தான் என்னால் ஜீரணிக்க முடியாதிருந்தது.

கதவைத் திறந்ததுமே சகாராவுக்கு மேலும் கீழுமான ஆபிரிக்க சமையல்களுடன் எங்கள் தென்னாசிய, தென்கிழக்காசிய நறுமணங்களும் தேனோடு சேர்ந்த தெள்ளமுதமாய் மூக்கைத் துளைக்கும் ஒரு வித அழுகிய மீன் மணத்தில்..

ஏதோ திருநீற்றுப் பொட்டலங்களை வியாபாரம் செய்து கொண்டு, உள்ளே போய் வருவோர் பற்றி எந்த கரிசனையும் இல்லாமல் வழிமறிந்து நிற்கும் கரிபியன் நந்திகள். மஞ்சள் ரேப் சுற்றிய எச்சரிக்கை அறிவிப்புகள், விளக்கு மின்னும் பொலிஸ் வாகனங்கள், சிகரட் கேட்டு வியாபாரத்திற்கு வழி பண்ண முனைந்து, முடியாத போது படுதூஷணத்தினால் அர்ச்சித்து வழி அனுப்பும், பற்கள் விழுந்து எலும்பும் தோலுமான பகல் இரவு பாராத பருவராணிகள் எல்லாம் கடந்து.. சிறுநீர் கழித்த எலிவேட்டர்களில் மாங்கொட்டை விளையாடிய கணக்கில் காலை வைத்து தாண்டவமாடி வீட்டுக்குள் போய் சேர்ந்து சோபாவில் அமர..

மனுநீதி கண்ட குலோத்துங்கன் ஆட்சியில் புலியும் மானும் சேர்ந்து விளையாடிய கணக்கில் கரப்பானும் எலிகளும் சுதந்திரமாக ஒளித்து விளையாடி மகிழும். வீட்டிலே உட்கார்ந்திருக்க.. அடுத்தடுத்த வீடுகளில் இருந்து நான்கெழுத்து தூஷண வார்த்தைகளும் அவித்த பன்றி மணமும் சரளமாக தென்றலோடு தவழ்ந்து வரும்.

குளிர்காலமோ, வெயிற் காலமோ அளவுக்கு அதிகமாய் சூடும் குளிரும் கராஜ் சேலில் வாங்கிய ஹீட்டர், ஏ.சி புண்ணியத்தில் உடம்பை வாட்டும். திருவிழாக் கோலமாய் லைட்டுக்கள் ஒருபுறம்.. சித்தப்பா பெருமிதமாய் 'கரண்ட் என்ன நம்மடயா?' என்ற கேள்வியில் பூரிப்பார்.

பேஸ்மெண்டில் உள்ள வாஷிங் மிஷினில் ஒன்றரை டொலரை மிச்சம் பிடிப்பதற்காக.. பாத்ரூம் சிங்கில் போட்ட உடுப்புகள் கிழமைக்கணக்கில் புளித்து மணக்க.. தண்ணீர் ஆறாய் பெருகும்..

பார்த்தால் றெஸ்ரோறன்ரில் இருந்து கிளப்பி வந்த பெரிய டொய்லட் பேப்பர் றோல் கட்டாய் பாத்ரூமில் கிடக்கும்.

ஏதோ கதியில்லாதவர்கள் வேறு வழியின்றி இவ்வாறான சூழலில் வாழ்வது இயலாமை என்று இரக்கப்படலாம். ஆயிரம் ஆயிரமாய் காசையும் வைத்துக் கொண்டு இவ்வாறான வாழ்வை தெரிந்து கொள்பவர்களை என்ன என்பது?

அங்கே தான் என்னுடைய மகாதத்துவமே வருகிறது..

It#s all in their heads>

இப்படித்தான் வாழ வேண்டும் என்று முடிவு செய்த கூட்டம்..

மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு சில நூறு டொலர்கள் மிச்சம் கிடைத்திருக்கக் கூடும். எதற்கு இவர்கள் செலுத்துகின்ற விலை?

பிள்ளைகளுக்காக என்று பிள்ளைகளைக் கவனிக்க நேரமில்லாமல், பணத்தைச் சேர்த்து அந்தப் பிள்ளைகளே அந்தப் பணத்தினால் சிதைந்து போவது தானா?

எவ்வளவுதான் ஒட்டியுறவாடினாலும் நான் என்றைக்குமே வாய் நனைக்க விரும்பியதில்லை. அருவருப்பு மட்டும் அல்ல.. எப்படி சமாளித்தேனாம்?

அதற்குத் தான் அவர்கள் வழி வைப்பதில்லையே.. தம்பி சாப்பிட்டுத்தான் வந்திருப்பார்.. என்றதன் பின்னால் எங்கே தேனீர் கிடைக்கும்?

இருந்தாலும் முன்ஜாக்கிரதையாக ஒரு கோக் டின்னை வாங்கி பாதி குடித்து ஏப்பம் விட்டு 'நான் சாப்பிட்டுத்தான் வந்திருக்கிறேன்' என்று உறுதி செய்து கொள்வதற்குள் ஒரு குருமான் அதைப் பறித்துப் போய் விடும். எங்கள் றூமில் வந்து மூக்கு முட்டத் திண்டு குடித்த சித்தப்பா ஒருநாள் பியர் குடித்த குறையில் என்னைக் கண்டதும் போத்தலை சோபாவிற்கு பின்னால் மறைத்தது எனக்கு வெட்கமாகக் கூட இருந்தது.

கையும் களவுமாய் பிடிபடும் நேரங்களிலும் 'ஐயோ, நீ பிந்திப் போனாய், இப்ப தான் இந்த கடைசி போத்தலை எடுத்தனான்' என்பார் சித்தப்பா.

இப்போதெல்லாம் அடிக்கடி சித்தப்பா வீட்டுக்கு போக காரணங்கள் இருந்தது. வெள்ளைக்காரன் தேத்தண்ணியைக் குடுத்து தேயிலை வாங்கப்பண்ணிய கணக்காக, வட்டியும் சீட்டுமாக றூ ம்மேட்டுக்கள் சிலரை கடங்காரர் ஆக்கியதில், அன்ரிக்குப் பயத்தில் 'உவன் தான் அடிக்கடி அங்க போறவன்' என்று என்னிடம் காசைத் தந்து விட, காசைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக நானும் அடிக்கடி போக... என்று வேண்டியோ வேண்டாமலோ உறவு வளர்ந்தது.

இருந்தாலும் இரண்டு பேருமே எனக்கு அடிக்கடி தூண்டில் போட்டுக் கொண்டு தான் இருந்தார்கள். காசு ஏதும் தேவையோ என்று அடிக்கடி அக்கறையாய் விசாரித்து, 'தெரிஞ்ச இடத்தின்' காருண்யம் பற்றி சொன்னார்கள். கனடாவில் நிதி வளர நெறி சீட்டு மட்டும் தான் என பைனான்சியல் அட்வைஸ் செய்தார்கள்.

'அன்ரி, எனக்கு காசு தேவையெண்டா, பிரெண்ட்ஸ் இருக்கிறாங்கள், அடிச்சால்.. பாங்கில போடவோ, கொண்டு வந்து தரவோ எண்டு கேப்பாங்கள். வட்டியும் இல்லை, குட்டியும் இல்லை' என்று விலாசம் காட்டப் போக.. 'அப்படியெண்டால் ஒரு பத்து வாங்கித் தாருமன் உமக்கு எண்டு சொல்லி' என்று ஆர்வமாய் விழுந்தடிக்க..

'அன்ரி, சனம் உப்படிச் சொல்லி வாங்கி தாங்கள் வட்டிக்கு குடுக்குது' என்றதுடன் தெரிந்த பழமொழிகளையும் இழுத்து விட.. உறவுக்குப் பகை கடன்... அந்தக் கதையும் முடிந்தது.

'மூத்தவன்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட மகனும் 'பிள்ளை' எனப்பட்ட மகளும் நாகரிகம் அடைந்து சரளமாக ஆங்கிலமும் தமிழும் மாறி மாறி பேசியபோது ஆச்சரியப்பட்டவன் நான்.

'நல்ல பிள்ளையாயிருங்கோ, கெட்டிக்காரராயிருங்கோ' என்று புத்திமதியும் சொல்லி 'பிள்ளையள் இங்கை வந்து படிச்சு நல்லா வந்திடும்' என்ற என் நினைப்பை முதலில் மாற்றியவன் மூத்தவன்.

ஐயங்கார் வேட்டி கட்டிய மாதிரி.. உரிந்து விழும் பாணியில் முழங்கால் வரை தொங்கிய காற்சட்டையும், எம்.ஜி.ஆரின் கீறிய மீசை மாதிரி கோடு போட்ட தாடியும், கன்னப்பக்கமாய் அரிந்து மேலே மாடு சூப்பிய பனங்கொட்டைக் கணக்கில் நிமிர்ந்து நிற்கும் மயிருடன், நம்பியார் கழுத்தில் கட்டியிருந்த லேஞ்சியை தலையிலும் கட்டி.... ஒதுக்குப்புறக் கிராமங்களில் புதிதாய் சைக்கிள் வாங்கி, மின்னும் லைட் பூட்டி, றிம் துடைக்க தும்புப் பந்தும் வைத்து பனை வடலிகளுக்குள்ளால் எம்.ஜி.ஆர் படம் பார்க்கப் போகும் கும்பல் போல...

குரோம் றிம்முடன், அட்டை மாதிரி நிலத்தோடு உரசும் கார்களில் ஆங்காங்கே லைட் பூட்டி விலாசம் காட்டி..

மழை பெய்த பின்னால் யாரோ மண்டையைப் போட்டதற்காக எங்கோ மூலைகளில் இருந்து ஒலிக்கும் பறை மேளம் போன்ற இசை தெருவெல்லாம் அதிர.. ஆபிரிக்க வழித் தோன்றல்களை பெருமையுடன் கொப்பியடித்து.. கவச குண்டலங்கள் அணிந்த கர்ண பரம்பரையினருடன் சந்தியில் கண்ட போது....

அவன் கண்களைப் பார்க்கும் போதே கொஞ்சம் பயமாகத் தான் இருந்தது.

அப்படியொரு போதையினால் வந்த மோனநிலை... 'தம்பி கெதியில் முன்னுக்கு வந்திடுவான்' என்ற எண்ணம்... அதாவது ஏதாவது ஒரு பேப்பரில் முன்பக்கத்தில் விரைவில் வருவான் என்ற நம்பிக்கை நீண்ட காலம் வீண் போகவுமில்லை.

செத்தல் மிளகாய் தோற்றத்தில் இருந்த மகளுக்கும் மலிவான பாலும் அப்பிள்பழங்களும் தந்த உபயத்தில் ஆங்காங்கே சதை வைக்க.. தங்கச்சிக்காரியிடம் இரவல் வாங்கிப் போட்ட மாதிரியாக வயிற்றுக்கு மேலே ஏடாகூடமான இடத்திலிருந்து திரிசங்கு மாதிரி மேலோ கீழோ போக மறுத்து.. 'கறந்த இடம் நாட கண்ணை' அலையவிட்டு தொங்கி நின்ற ரீசேட்டும், இடுப்பு வரையும் ஏற மறுத்து அடம்பிடித்து ஏடாகூடமான இடங்களில் தரித்து நின்ற, அந்தக் காலத்தில் ஸ்டைல் என்று நினைத்து போட்டு விலாசம் காட்டியதற்காக இன்றும் நாங்கள் வெட்கப்படும் பெல்பொட்டமும் காலோடு ஒட்டி பிதுங்கி... 'பேதை மட நெஞ்சங்களை பிறந்த இடம் நாட' வைக்க..

தொப்புளில் வளையாபதியுடன் வலம் வந்த போது.. குமர் கரை சேரப் போகுது என்ற நம்பிக்கையும் வீண் போகவில்லை.

பிறகு ஒருநாள் குண்டலகேசி ஒன்றுடன் காரில் தொங்கிக் கொண்டு போனதைக் கண்டதுடன் 'சித்தப்பாவுக்கு இனி சீதனம் மிச்சம்' அல்லது 'அன்ரிக்கு வெல்பெயர் கூடக் கிடைக்க ஒரு சிங்கிள் மதர் கிடைக்கப் போகிறது' என்ற நிம்மதியும் சந்தோசமும் சேர்ந்து வந்தது.

இந்த விசயங்களையெல்லாம் வீட்டில் சொல்லி முன்னெச்சரிக்கை செய்திருக்கலாமே என்று நலன்விரும்பிகள் கேட்பது நியாயம் தான்.

'எங்கடை பிள்ளையளை நாங்கள் அப்படி வளக்கேலை' என்று சண்டைக்கு வந்தால் நான் என்ன சொல்ல முடியும்?

அடுத்தவர் விசயத்தில் அனாவசியத் தலையிடா என் கொள்கை சறுக்க காரணமானது ஒரு நாள்.. குஞ்சும் குருமானும் ஒரு நாள் நுள்ளுப்பிராண்டி, கிள்ளுப்பிராண்டிய போது பச்சைத் தூசணங்களை அனாயாசமாக பயன்படுத்திய போது தான் அந்தக் குழந்தைகளுக்கான தார்மீகக் கடமை எனக்கு உறைத்தது.

அன்றிலிருந்து காதை முறுக்கி பிடரியில் போட்டு இருத்தி எழுப்பி.. கதைகள் சொல்லி.. ஹம்பேர்கர் லஞ்சம் கொடுத்து லைபிரரிக்கு கூட்டிச் சென்று.. என்று இதெல்லாம் செய்யக் கிடைக்காத என் மருமக்கள், பெறாமக்களை நினைத்து செய்யும் எண்ணம் வந்தது. என்னைக் காணும் போதெல்லாம் ரிவியை நிறுத்தி.. ஹோம் வேர்க் கொப்பிகளைக் கொண்டு வந்து.. தங்கள் பெரூமைகளை அளந்து.. கிட்டத்தட்ட என் கண்காணிப்பில் குஞ்சும் இரண்டு குருமான்களும் உலவின.

இதுவரை நாள் மூத்தவன் என்று ஒருமையில் அழைத்த சித்தப்பா திடீரென்று மரியாதை கலந்து 'மூத்தவரைக் காணேலை' என்று பவ்வியமாக விசாரித்ததன் மர்மத்தை குருமான் அவிழ்த்தது. நேரம் கெட்டு வந்தவனை ஊர்க்கணக்கில் மிரட்டப் போக, பொக்கட்டில் இரூந்த துப்பாக்கியை எடுத்து ஜேம்ஸ் பொன்ட் கணக்கில் துடைத்ததில் சித்தப்பாவின் மகன் 'மகர்' ஆனான்.

ஒருநாள் எலிவேட்டரில் ஒரு காலைத் தூக்கி தில்லைத் தாண்டவம்

ஆடும் போதே கேட்ட அன்ரியின் கூக்குரல் கேட்டு 'சித்தப்பா போய்ச் சேர்ந்திட்டாரோ' என்ற பதட்டத்தில் ஓடிப் போக... 'ஐயோ, அவனை பொத்திப் பொத்தி வளர்த்தனே, கூடாத கூட்டம் சேராதை என்று சொன்னேனே' என்று அன்ரி தலையில் அடித்து ஒப்பாரி வைக்க.. துப்பாக்கிகள், போதைப் பொருட்கள் சகிதம் கும்பலோடு கோவிந்தாவான மகனை.. குடிவரவு, வெல்பெயர், பைனான்சியல் பிளானிங், திருமண புரோக்கர், காப்புறுதி, காப்புறுதி நட்டஈடு, வீடு மூவிங், மோட்கேஜ் வசதிகள் எல்லாவற்றையும் ஒரே பிரீஃப் கேசினுள் வைத்து சேவை செய்யும் சட்ட ஆலோசகர் மூலமாக இருபது செலவழித்து.. சித்தப்பா மீட்டு வந்தார்.

செங்களம் ஆடி சிறை மீண்ட செம்மல் என்னைக் கண்டதும், நான் அடிக்கடி சொல்கிற 'நல்ல பிள்ளையாயிரு, கெட்டிக்காரனாயிரு' என்ற ஆலோசனைகளை கேட்கவில்லையே என்ற குற்ற உணர்வு காரணமாகவோ என் கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டது. அதன் பின்னால் இரண்டு கிழமைக்கு அன்ரி அழுதது மகனுக்காக இல்லை, மண்ணாய் போன உண்ணாச் சொத்தான இருபதிற்காகவும் என்றும் புரிந்தது.

பிள்ளைகளை வளர்க்க சரியான சூழல் இதுவாக இல்லாததால், வீடு வாங்கலாமே என்று வாயை வைச்சுக் கொள்ளாமல் சித்தப்பாவுக்கு ஆலோசனை சொல்லப் போக.. ஒருநாளும் இல்லாமல் 'இளம் பிள்ளையள், சமைச்சுத் தர ஆக்களில்லை' என்று எனக்காக வடையும் சுட்டு, குஞ்சு குருமான்களுக்கும் கொடாமல்.. 'ஏன் பிள்ளை வெக்கப்படுகிறாய்? கொண்டு போய் குடன், அவர் எங்கட பிள்ளை தானே' என்று தள்ளி விட்டு.. சித்தப்பாவும் அன்ரியும் நெருக்கமாய் உட்கார்ந்து 'நீர் சொன்னது உண்மை தான், பிள்ளையளின்ரை படிப்பு இங்க இருக்க கெடுகுது' என்றதற்கு.. ஒட்டுண்ணி வெல்பெயர்க் கூட்டத்தை அடக்க வந்த அரசாங்கத்தின் கெடுபிடிதான் காரணம் என்று புரிந்தாலும் 'நீர் நம்பிக்கையான பிள்ளை, ஒண்டுக்கை ஒண்டு, உம்மட பேரில வாங்குவம் எண்டு யோசிக்கிறம்' என்றதும் அடி வயிற்றில் இடி விழுந்தது.

'சித்தப்பா நல்ல ஐடியா தான், ஆனால் என்ர கிறடிட் நாறிப் போய் கிடக்கு, ஒழுங்காக காசுகள் கட்டாமல்.. வங்குரோத்து அடிச்சுப் போட்டு பாத்துக் கொண்டிருக்கிறன்' என்று கூசாமல் பொய்யும் சொல்லி.. 'துணை போனாலும் பிணை போகக் கூடாது' என்ற தெரிந்த பழமொழியைச் சொல்லாமலும்.. இந்தியானா ஜோன்ஸ் கணக்கில் மயிர்க்கூச்செறிந்து திகிலூட்ட தப்பி வந்த அனுபவம் மறக்க முடியாதது.

நான் உள்ளேயிருக்கும் போது கூச்சல் போட்டு ஊரைக் கூட்டி 'என்ரை பிள்ளையை ஏமாத்திப் போட்டான்' என்று தலையில் கட்ட முயற்சி நடக்கக் கூடும் என்றும், அதற்கு சுற்றம் சூழ உள்ள அக்கம் பக்கம் 'உவர் தான் அடிக்கடி உங்க வந்து போறவர்' என்ற நற்சான்றுப்பத்திரம் தரக்கூடும் என்ற எண்ணத்திலும், தன் மூதேவியை கடத்திச் சென்ற ராவணன் என்று குண்டலகேசி தன் வானர சேனையுடன் வந்து என்னைத் துவம்சம் செய்யக் கூடும் என்ற பயத்திலும், சிறை மீண்ட செம்மறி தன் பட்டி பரிவாரங்களுடன் வந்து முட்டிக்கு முட்டி தட்டி, குண்டுக் கட்டாய் கட்டிக் கடத்திச் சென்று ஷொட்கன் வெடிங் எனப்படும் 'துப்பாக்கி முனைத் திருமணத்தில்' மாப்பிள்ளையாக்கக் கூடும் என்ற பீதியிலும் பஜார் பக்கம் தலை காட்டாமலும், 'வயித்தில குடுத்திட்டு மாறியிட்டான்' என்ற கதை வரக் கூடாது என்பதற்காக மொன்றியல் போகாமல், தெரிந்தவர்களுக்கு தலைக் கறுப்பைக் காட்டி, தொலைபேசித் தொடர்புகளைத் தொடர்ந்து 'நான் இங்கே தான் இருக்கிறேனாம்' என்று கொண்டும் மூன்று மாதம் இரண்டு வேலை என்ற சாட்டில் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டி ஏற்பட்டது.

பின்பொரு நாளில்.. காரின் பின்புறக் கண்ணாடியில் சீறும் புலியின் தலையை ஒட்டிய புலிகேசி ஒன்றில் கழுத்தில் பஸ் தரிப்பு நிலையத்தில் மகள் தொங்கி நின்று ஆலிங்கனம் செய்ததைக் கண்ட பின்பு தான் 'இனியென்ன, குண்டலகேசியாச்சு, புலிகேசியாச்சு' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டு.. பெண் மீட்புப் போராட்டத்தில் குண்டலகேசி குண்டடிபட்டு விழுப்புண் தாங்க.. தன் previous brushes with the law காரணமாக 'பொலிசாருக்கு ஏற்கனவே தெரிந்தவரும், நிலையான விலாசம் இல்லாதவருமான' புலிகேசி still at large என்று நாடளாவிய பிடிவிறாந்துடன் தலைமறைவாக.. வழமையாக றொறன்ரோவில் நடப்பதால் எந்த ஆச்சரியமும் இல்லாத இந்தச் செய்தி ஆங்கிலப் பத்திரிகையொன்றின் பின்புறப் பக்கம் ஒன்றில் புலிகேசியின் 'முற்புறத் தோற்றம், பக்கப்புறத் தோற்றங்களுடன்' சிறு செய்தியாக வெளிவந்திருந்தது.

இனத்திற்கு பெருமை சேர்க்கும் இச்செய்தியை போட்டால், தங்கள் தலைக்கு ஆபத்து என்ற கணக்கில் தமிழ் பத்திரிகைகளும் இது பற்றி வாய் திறக்கவில்லை. இருந்தாலும் 'ஆயுதம் தாங்கியிருக்கக் கூடிய' 'dangerous offender' புலிகேசி சட்டத்தரணியுடன் சென்று சரணடையும் வரை என் அஞ்ஞாதவாசம் கலையவில்லை.

வனவாசம் முடிந்து குஞ்சுகுருமான்களைப் பார்க்கப் போன போது.. தவக்களை கணக்கில் முகப் பொலிவோடு, ஊரிலிருந்து கொஞ்சக் காலத்திற்கு முன்பு வந்திருக்கக் கூடிய ரிஷிகேசி ஒன்று உட்கார்ந்திருக்க.. 'பிள்ளை வெட்கப் படாமல் கொண்டு போய் கோப்பியைக் குடு.. அவர் ஒண்டுக்க ஒண்டு தானே' என்று அன்ரி தள்ளி விட்ட பிள்ளை கொண்டு வந்த கோப்பியை விட்டு, நாறின மீனைப் பூனை பார்த்த கணக்கில் பிள்ளையைப் பார்த்துக் கொண்ட ரிஷிகேசி பரிதாபமான சிரிப்பு

ஒன்றை உதிர்த்துக் கொண்டு.. 'அண்ணை வந்து கனகாலம் போல, வேலை எங்க றெஸ்ரோறன்ரோ, பக்ரறியோ' என்றது.

'மவனே, கலியாண ஆசை இருக்கிறது நல்லது, எதுக்கும் பிள்ளைக்கு தகப்பன் ஆர் எண்டதை தெரிஞ்சு வைச்சுக் கொள்' என்று மனதால் திட்டி.. 'கிடைச்சால் சொல்லிறன்' என்று 'வேலை ஏதும் எடுக்கலாமோ' என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.

யார் இந்த ரிஷிகேசி என்ற மர்மம் தீர்வதற்கு முன்னால்.. 'இவர் என்னோட றெஸ்ரோறன்ரில வேலை செய்யிறார்' என்று சித்தப்பாவும், 'ஊரில எல்லாரும் ஒரு மாதிரியே, நல்ல மனிசரும் இருக்கினம் தானே' என்று அன்ரி குத்தல் கதை சொன்ன போதும்.. யாராவது இளிச்சவாயன் கிடைத்தால் தலையில் மிளகாய் அரைக்கும் யாழ்ப்பாணப் பாரம்பரியத்திற்கு இன்னொரு வரலாற்று வெற்றி கிடைத்து விட்டது என்ற எண்ணம் வந்தது.

பாவம், பையன், வீடு அவன் பேரில்.. வெல்பெயர் இனி காலாகாலத்திற்கும் இல்லை.

'வீடு வாங்கியிட்டம், பேஸ்மெண்டுக்கு இவர் வருவார்தானே' என்று வழமை போல் என் அனுமதியில்லாமல் என்னைச் சேர்த்த அன்ரிக்கு.. 'ஊரில பங்கருக்க கிடந்தது காணும்' என்று சொல்ல.. 'பரவாயில்லை, இவரோடு மேல றூமில இருக்கலாம்' என்று ரிஷிகேசியுடனான அதிகாரப் பரவலாக்கத்துக்கு அன்ரி முன் வைத்த இடைக்காலத் தீர்வை நிராகரிக்க.. இன்னும் பொய் சொல்ல வேண்டி ஏற்பட்டது...

'அன்ரி, நான் சரியான குப்பையன், வீடு துப்புரவாய் வைச்சிருக்கிறேலை என்று அம்மா நெடுக திட்டுறவா'.

'அவ்வளவு கனக்கா டவுண் போடேலை' என்ற 'பெரிய ஒண்டரை' எனக்கு அதிர்ச்சியைத் தந்தாலும், மீதி மூன்றரைக்கும் மோட்கேஜ் கட்டுவது இவர்களுக்கு கஷ்டமாக இருக்காதோ என்று மனம் அங்கலாய்த்தது. வீடு மூவ் பண்ண வான் வாடகைக்கு எடுக்க உதவிக்கு வரச் சொல்லி.. அங்கே வைத்து வான் வாடகைக் காசை என் தலையில் மாட்டி விட சித்தப்பா எடுத்த முயற்சிக்கும், பின்னர் பெற்றோல் அடித்த காசு கொடுக்க 'பொக்கட்டுக்க ஒரு பத்து டொலர் இல்லையோ' என்ற கேள்விக்கும் 'ஐயோ, சித்தப்பா, ஜக்கட்டை மாறிப் போட்டுக் கொண்டு வந்திட்டன், வொலட் என்னட்டை இல்லை' என்று பச்சைப் பொய் சொல்லி..

இனிமேல் வாழ்நாளில் பயன்படுத்த மாட்டாத கழிவுப் பொருட்களையெல்லாம் எறிய மனமின்றி.. 'காசு குடுத்து வாங்கினது, எறியக் கூடாது, பிறகு உதவும் தானே' என்ற காரணம் காட்டி அன்ரி வீட்டுக்குக் கொண்டு போக.. எனக்கும் ரிஷிகேசிக்கும் நாரி முறிந்தது.

பாவம் ரிஷிகேசி.. அசைவுள்ள தன் ஒரே ஆதனமான ட்ரவலிங் பாக்குடன் அன்ரி வீட்டில் குடிபுகுந்தான்.

பேஸ்மெண்டில் வாடகைக்கு யாரோ சேர்த்து விட்ட குடும்பம் அன்ரி கொண்டு வந்த கழிவுப் பொருட்களுடன் பேஸ்மெண்டை 'குறை நினைக்காமல்' பங்கு போட்டது.

அன்ரியின் மாஸ்டர் பிளான்படி கேட்டரிங், கடைகளுக்கு சிற்றுண்டி வினியோகம் மெதுவாக ஆரம்பிக்க.. இதற்கு உதவும் என்றும் மிஞ்சிய நேரத்தில் மூவிங் செய்யலாம் என்றும் ஒரு பழைய வானை யாரோ சித்தப்பாவின் தலையில் கட்டினார்கள். வானுக்குள் நீண்ட காலமாய் இருந்த ஜூஸ் பெட்டிகள் பற்றிய மர்மத்தை சித்தப்பாவே அவிழ்த்தார். 'வீட்டில வைச்சால் சின்னனுகள் குடிச்சு முடிச்சிடுதுகள்'. உண்மை.

றெஸ்ரோறன்றில் இருந்து கொண்டு வந்திருந்தால்.. 'நம்மடயா' என்று பூரித்திருப்பார்.

காசு கொடுத்து வாங்கியது.. அளவு சாப்பாடு நடக்கிறது.

இதற்குள் சித்தப்பா பக்ரறி வேலை ஒன்று எடுத்ததற்கு வெல்பெயர் அலுப்பு காரணமாக செப்பரேட் அடித்ததும் 'பொஸ்ஸிற்கு என்னை விட விருப்பமில்லை' என்று றெஸ்ரோறன்ட் வேலையைத் தொடர்ந்தற்கு காரணம் அந்த டொய்லட் பேப்பரும் சீனிச்சரைகளும் என்பது எனக்கு வடிவாகத் தெரியும்.

இரண்டு மூன்று மாதத்தில் சண்டையைக் கிளப்பி.. பேஸ்மன்ட் சனம் கலைபட்டுப் போனது..

கரண்ட், காஸ், தண்ணீர் பில் கூடிப் போச்சு, சும்மா லைட் போடுகினம், நெடுக குளிக்கினம் என்ற அன்ரியின் குற்றப்பத்திரிகைக்கு காரணம் மொத்தம் நாற்பது டொலர் அதிகரிப்புத் தான். அடுத்த குடும்பம் வந்து சேர மூன்று மாதம் பிடிக்க... சுமார் இரண்டாயிரம் டொலர் கைநழுவிப் போனது.

போய்க் கொஞ்ச நாளிலேயே வாசலெல்லாம் பாத்திரங்கள் பரவிக் கிடக்க.. சமையலறைச் சுவரெங்கும் எண்ணெய் பாணியாகி.. அரசாங்கக் குடியிருப்பின் நறுமணத்திற்கு அன்ரி வீட்டைக் கொண்டு வந்து சேர்த்தா. இப்போது இது பிடிக்காமல் பேஸ்மன்ட் கூட்டம் நழுவ.. இன்னொரு மூவாயிரம் துண்டு விழுந்தது, அடுத்த குடும்பம் வரும்வரை ஓடுப்பட்டுத் திரிய வேண்டிய நிலை.

கொதிக்கும் வெயிலில் வீடு புழுங்கி அவிய.. கேட்டரிங் சமையல் வெக்கையுடன் குழந்தைகள் மூச்சுத் திணறி வெந்து போனாலும், கரண்ட் பில் கூடும் என்ற அச்சத்தில் ஏ.சியை அன்ரி ஓன் பண்ண விடவேயில்லை.

'ஊரில என்ன ஏ.சி பூட்டியே இருந்தனாங்கள்?', மரம், செடி சூழ இருந்து நிழல் தர வழியில்லாததால் பிள்ளைகள் வெளியில் போகவும் முடியவில்லை.

'மூத்தவர்' தந்திரமாக தன் கேர்ள் பிரண்டுடன் எங்கோ பேஸ்மென்ட்டுக்கு மூவ் பண்ணி

விட்டார். அன்ரிக்கு அது பெரிதாக பாதிப்பில்லை. அவன் இருந்த போதும் காசு ஒன்றும் தந்ததில்லை, அவனுடைய இடத்தில் யாரையாவது வாடகைக்கு வைத்தால் காசு வரும் என்ற எண்ணத்தில்.

அவனைச் சிறை மீட்க இருபது செலவழித்த கோபம் இன்னமும் இதயத்தின் மூலையில் இருந்தது எனக்குத் தெரியும்.

கேட்டரிங் வேலைகளுக்கான மாவை அவிக்க, 'கரண்ட் போய் விடும்' என்று, அப்பாட்மெண்டில் குடியிருந்த தூ ரத்து உறவினர் வீட்டுக்கு மாவைச் சுமந்து அவிக்கப் போகும் போது குஞ்சுகுருமான்களையும் மறக்காமல் கூட்டிச் செல்லும் அன்ரி.. அவர்களை அங்கே குளிப்பாட்டி, கார் பிடித்து கீரிமலைக்கு குளிக்கப் போன கணக்காக... நீர் சேமித்து மீண்டு வருவார்...

'மார்க்கமாக' வீடு வாங்கியதுதான் முன்பு போல அடிக்கடி போய் வரவும் முடியாமல் போனதற்கான காரணம் அல்ல. வாஷ்ரூமுக்கு போகும் போது வாசலில் காத்திருப்பதும், வெளியே வந்ததும் எனக்கு முன்பாகவே பாய்ந்தடித்து லைட்டை அணைப்பதும், ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கி சோபா என்று அதற்கு அழுக்குப்பிடித்த பெட்சீட் ஒன்றால் மூடிச் சுற்றிக் கட்டி பிள்ளைகளை உட்காரவும் விடாமல் துரத்துவதும், சித்தப்பா என்னைக் கண்டதும் 'அட நிலத்தில இருக்க குளிர்மையாய் இருக்கு' என்று என்னை இழுத்தி உட்கார வைப்பதும் விருந்தோம்பல் பற்றி அசௌகரியங்களை ஏற்படுத்தின.

தன் பழைய கம்பியூட்டரை எறியப் போன நண்பனிடம் 'இங்க கொண்டு வா, குழந்தையள் பாவிக்கும்' என்று குளிர் கையைக் குத்தும் வின்ரரில் நண்பனின் காரையும் உதவி கேட்டு கொண்டு போய் இறக்க.. வெளியேயுள்ளதை விட, வீடு குளிர்ந்தது. கம்பியூட்டரைக் கண்டு துள்ளியோடி வந்த குழந்தைகள் சுற்றி வளைத்து கட்டியணைக்க.. 'உதுக்கு கனக்க கறண்ட் செலவாகுமல்லோ' என்று அன்ரி ஆட்சேபித்தார். 'என்ன வீடு சரியாக் குளிருது?' என்ற கேள்விக்கு 'நாங்கள் தான் குறைச்சு வைச்சிருக்கிறம், காஸ் பில் கூடிப் போச்சு' என்று சித்தப்பா மூலையிலிருந்து முனகினார், தலைக்கு தலைப்பாகை கட்டி, கம்பளிப் போர்வைகளுடன் காலுறைகளுடன் கூடிய காலை சோபாவில் வைத்தபடி.

'மாமா, அம்மா ரீவி பாக்க விடுறாவில்லை' என்ற குருமானுக்கு.. 'படிக்கிற பிள்ளையளுக்கு என்ன நெடுக ரிவி?' என்று நான் நியாயம் சொல்ல.. 'இல்லை, கறண்ட் வீண் எண்டு படிக்கவும் விடுறாவில்லை' என்று மற்ற குருமான் விளக்கம் தந்தது. நான் தேடிய குஞ்சு 'அம்மா, வெங்காயத்தை உரிச்சுப் போட்டு விளையாடட்டாம்' என்று கண் கலங்க விளக்கம் தந்தது. 'இண்டைக்கு கலியாண நாள், நிறைய ஓடர்' என்று அன்ரி பெருமைப்பட்டார்.

'மாமா, நாங்கள் அப்பாட்மென்ட்டுக்கு போகப் போறம்' என்ற குஞ்சுகுருமான்களை காரணம் கேட்க.. 'அங்க போனால் தான் அப்பா நம்மடயா எண்டு எல்லாம் செய்ய விடுவார். இங்க ஒண்டும் செய்ய விடுகினமில்லை' என்று குழந்தைகள் விளக்கம் சொல்லின.

புளோரசன்ட் லைட்களுக்கு மாற்றினால் கரண்ட் செலவு குறையும், ஆனால் சித்தப்பாவுக்கு றெஸ்ரோறன்டில் 'நம்மடயா' இலவசமாய் வரும் குமிழ் பல்புகளை விட விருப்பம் இருக்காது.

அதிக நீர் விரயமாக்கும் டொய்லட்டை எறிந்து நீர்ச் சிக்கன டொய்லட்டுக்கு காசு செலவிட அன்ரிக்கு விருப்பம் இருக்காது, நகர சபையில் போனால் தண்ணீர் செலவைக் குறைக்கும் வழிமுறைகளை பதினைந்து டொலர்களுக்கு வாங்கலாம், குளியறையும் சமையலறையும் பெருமளவு நீர் விரயத்தை குறைக்கும் போன்ற உண்மைகள் இருவருக்குமே தெரியாது, மூலையில் பிள்ளையுடன் நெருங்கி உட்கார்ந்து ரிஷிகேசி கதகதப்புத் தேடிக் கொண்டிருந்தது. பிள்ளை பூரிப்பாக இருந்ததில்.. சித்தப்பா சில மாதங்களில் பேரனைக் காணும் சாத்தியம் புரிந்தது. பேஸ்மண்டில் தண்ணீர் பெருகுவதாக நிலக்கீழ் வாசிகள் சொன்னதில்.. போய்ப் பார்க்க.. குளிரில் உறைந்த நீர் பனிக்கட்டியாகி விரிந்து செப்புக் குழாய்களைப் பிரித்த விசயம் புரிந்தது. உடைத்துப் பிரித்துச் செய்வதற்கு வரக் கூடிய செலவுகள் பற்றிய என் அறிவை நான் வெளிக்காட்ட விரும்பாமல் வாயை மூடிக் கொண்டேன்.

'சித்தப்பா, பெடியன் காருக்க பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்று சொல்லி, குஞ்சுகுருமான்களுக்கு முத்தம் கொடுத்து மீண்டு வரும் போது 'அண்ணை, கலியாணத்துக்கு வந்திடுங்கோ' என்று ரிஷிகேசி பணிவுடன் சொன்னது. 'குண்டலகேசியும் புலிகேசியும் சிறையில் இருந்து வந்தால் உன் ஆயுளுக்கு பங்கம் ஏற்படலாம்' என்று 'தீர்க்காயுஸ் மான் பவ' என்று வாழ்த்தி வெளியே வந்தேன்.

எனக்கு எல்லாமே இருட்டாக இருந்தது. ஐந்து லட்சத்துக்கு வீடு வாங்கி, ஐம்பது ரூபா பில்லுக்காக வாழ்வை மாற்றியமைக்கும் இந்த மனிதர்கள் பற்றி..

ஐயாயிரம் ரூபா சோபாவுக்காக ஐந்து வயதுக் குழந்தைகளில் ஆசைகளை தகர்க்கும் புத்தியை..

மண்ணும், பொன்னும், பெண்ணுமான ஆசைகள் தலைக்குள் ஏறி தாண்டவம் செய்யும் மனித வாழ்க்கை பற்றி புரிந்து கொள்ள..

மனம் போல் வாழ்க்கை என்ற பழமொழிகளை உள்ளடக்கிய It#s all in their heads என்ற என் தத்துவத்தை புரிந்து கொள்ள.. உங்களுக்கு இப்போது இரண்டு பியர் தேவைப்படாது.

எனக்குத் தான் இரண்டு பியர் அடிக்க வேண்டும் போல தோன்றியது.